# மகாபாரதச் சுருக்கம்

## சபாபருவம்



61
061

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
பெசன்ட் நகர், சென்னை-90

# மகாபாரதச் சுருக்கம்

இரண்டாவது

# சபா பருவம்

(பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது)

உரையாசிரியர் - பதிப்பாசிரியர் :
பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்,
M.A. (Hist.), M.A. (Tamil), L.T., P.O.L.,
Dipl. Geog. Vidvan.
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
விவேகானந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4.
(U.G.C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090.

1984

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய
வெளியீடு எண் — 87

முதற்பதிப்பு 1984 — 1000 பிரதிகள்

(C) மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர், சென்னை-600 090

விலை : ரூ. 18

Published with the Financial Assistance
of the Government of India,
Dept. of Edn. and Culture, New Delhi.

Printed at Sudha Printers, Royapettah, Madras-600 014.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| Introduction | ... | i-iii |
| பதிப்பாளர் குறிப்பு | ... | iv-vi |
| முகவுரை | ... | vii-viii |
| நூல் | ... | 1-198 |
| இராயசூயயாகச் சருக்கம் | ... | 1-64 |
| சூதுபோர்ச் சருக்கம் | ... | 65-198 |
| அபிதான சூசிகையகராதி | ... | 199-206 |
| அரும்பதவகராதி முதலியன | ... | 207-230 |
| சில அருந்தொடர்கள் | ... | 231-232 |
| செய்யுண் முதற்குறிப்பகராதி | ... | 233-239 |

# Introduction

Man is considered to be paragon of animals. He is undoubtedly the apex of creation. In apprehension he is like a God. But all these things will carry no weight unless he realises the goal of life. That goal of life can be determined only if he has recourse to "Shastras" or codes of law. These codes are to be found in the Vedas, Smrithis, Itihasas and Puranas. But to go through all these texts in a life-time is a herculean task and hence if one takes into his head to go through the Itihasas alone it is tantamount to have gone through all the scriptural texts mentioned above. These Itihasas are two in number, the Ramayana and the Mahabharata.

Our Bharat is the Punya Bhoomi which produced these to monumental works. The Ramayana is by Valmiki and the Mahabharata by Vyasa. Both are sages of a high order. Of the two, Vyasa is considered to be Vishnu incarnate; c.f. "Vyasaya Vishnu rupaya Vyasa rupaya Vishnave". His work, the Mahabharata consists of nearly a lakh of slokas, divided into eighteen 'Parvas'. The amanuensis for this colossal work is none other than Vinayaka, the Lord of 'the Ganas'. This work includes the Bhagavat Gita in Bhishma Parva and the Vishnu Sahasranama Stotra in the Anusasanika Parva. Hence the sanctity of the work is emphasised in more ways than one. Though, apparently, the work seems to deal with the history and lives of the Kings of the Kuru dynasty who carried an internecine war resulting practically in total annihilation, yet it contains the panacea for all the evils in this world, guiding us at the same time in the right path to face the problems of life which may arise in diverse situations.

## SABHA-PARVA

This is the second of the eighteen Parvas. This consists of two Sargas the Rayasuya Yaga sarga and Sudupor sarga. The first deals with the Rayasuya Yaga celebrated by Dharmaputra at the instance of Narada, who conveyed the wish of Pandu, who was then residing in the world of Yama.

Some of the important episodes dealt with in this sarga are as follows :- The killing of Jarasanda, the 'dig-vijaya,' made by the four Pandava brothers, the performance of the Rayasuya yaga for seven days, the assemblage of all kings at the Yaga, the bestowal of "agra-puja" to Lord Krishna, Sisupala's, tirade against Krishna, Sisupala Vadha, Durvasa's curse given to Dwarapalakas at Vaikunta, Dhuryodhana's delusion on seeing the court - hall erected by Mayan and the subsequent loud laughter at Dhuryodhana in despise by Bhisma and Draupadi.

The second sarga deals mainly about the play at dice between Dharmaputra and Sakuni, resulting in utter defeat and humiliation of the Pandavas culminating in the tragic and pathetic situation of Draupadi being unrobed by the villainous Duschathana as per the injunctions of his equally venomous brother Dhuryodhana.

The evil machinations of the trickster Sakuni, the patience evinced by Dharmaputra, the appeal of Draupadi in the court-hall, the dumb silence of the elders undergoing mental agony at the same time at the behaviour of Duschathana are to be noted in this sarga. Draupadi's total surrender to Lord Krishna's grace resulted in her garments becoming inexhaustible. Thus saved of modesty and honour, she made a vow that she would not tie her dishevelled hair until she hears the victorious drum-beat, after the severance of the heads of Dhuryodhana and Duschathana.

Similar vows were made by the others as well. Bhima vowed that he won't drink water by his hand till he killed Dhuryodhana and his brothers numbering hundred. Arjuna vowed to kill Karna, Nakula vowed to kill Uluha, the son of Sakuni and Sahadeva vowed in turn to kill Sakuni. In the replay of dice Dharmaputra won and he was able to free himself and others from bondage. At last, under the definite understanding that the five brothers had to live for twelve years in the forest with Draupadi and spend one year in concealment to take their kingdom back, they repaired to the forest. Should any one be found out during those days of concealment then they should again go to the forest to do as they had done first. With these stipulations Dharmaputra went to the forest followed

by his wife and brothers. This in short, is the substance of Sabha Parva.

The work of writing a Commentary on all the Parvas of the "Mahabharatha Curukkam" was enjoined on me by the authorities of Dr. U. Ve. Swaminatha Iyer Library and I am grateful to them for this honour conferred on me. By the grace of the Mahamahopadyaya Dakshinatya Kalanidhi Dr. Iyer and by the benign benediction of my esteemed Guru, Sri. U. Ve. V. M. Gopalakrishnamachariar, the modern Patanjali, I ventured to write this explanatory commentary. I have given the meaning for words, their explanation, the grammatical peculiarities, the kind of prosody used in the course of the composition, and the rhetoric set like gems now and then.

My thanks are due to Sri K. Subramania Iyer, Honorary curator of Dr. U. Ve. S. Iyer Library and to his associate Sri. S. Balasaranathan for the encouragement they have given me. In fine, I express my gratitude to the Sudha Printers, Royapettah, Madras for their excellent co-operation.

Triplicane,
Madras-5.
10-4-1984.

**C. Jagannathachariar**
Commentator & Editor

## பதிப்பாளர் குறிப்பு

மனத்துள்ளான் மாகடல்நீ ருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன்—சினத்துச்
செருநருகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன்
வருநரகம் தீர்க்கும் மருந்து.

(மூன்றும் திருவந்தாதி)

வியாசமுனிவரால் இயற்றப்பெற்றதும், அளவிடற்கரிய சிறப்புக்களைத்தன்னகத்தே கொண்டுள்ளதுமான **மகாபாரதம்** சகல சாத்திர நுட்பங்களையும் தன்னகத்தே கொண்டது. உலகிலுள்ள பல கதைகளுக்கும் மூலமாக மகாபாரதம் உள்ளது.

தேவர்கள் நான்கு வேதங்களை ஒரு தட்டிலும், பாரதத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தார்கள். உபநிஷத் பாகங்கள் அடங்கிய நான்கு வேதங்களைக் காட்டிலும் பாரதம் அதிகச் சிறப்புடையதாக விளங்கிற்று. அன்றுமுதல் உலகில் **மகாபாரதம்** என்ற பெயர் பெற்றது.

"புராகில ஸுரை: ஸர்வை: ஸமேத்ய துலயா த்ருதம்
சதுர்ப்ய: ஸரஹஸ்யேப்ய: வேதேப்யோஹி அதிகம்யதா ||

ததாப்ரப்ருதி லோகேஸ்மிந் மகாபாரதம் உச்யதே
மகத்வேச குருத்வேச த்ரியமாணம் யதோ அதிகம் ||

மகத்வாத் பாரவத்வாச்ச மகாபாரத முச்யதே
நிருத்தமஸ்ய யோ வேத சர்வபாபை: ப்ரமுச்யதே ||

சரித்திரம், தருமம், ஞானம், நீதிகள், முதலியவை அடங்கிய ஒப்பற்ற கருவூலமாகத் திகழ்கின்றது. மகாபாரதம் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்றது. பகவத் கீதையும், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வளவு சிறப்புவாய்ந்த மகாபாரதம் பதினெட்டுப் பருவங்களையுடையது. இந்தப் பதினெட்டுப் பருவங்களையும் ஒருவன் ஐயந்திரிபறக் கற்றுணர்ஞல் சிறந்த பண்டிதனாகவும், நீதிமானாகவும், சிறந்த அறிவாளியாகவும் விளங்குவான் என்பதில் எட்டுணை ஐயமும் இல்லை.

வில்லிபுத்தூரார் நாரிகேள பாகத்தில் தமிழில் இயற்றியுள்ளார். நல்லாப்பிள்ளை என்பவர் வியாசரை அநுசரித்துப் பாடியுள்ளார். பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்னும் புலவர் பாரதநூலை வெண்பா யாப்பில் இயற்றியுள்ளார். '' மகாபாரதச் சுருக்கம் '' என்னும் இந்நூலின் ஆசிரியர் இன்னுர் என்று தெரியவில்லை யாயினும் நூலின் அமைப்பு வியாசபாரதத்தைத் தழுவியே செல்கின்றது.

ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி என்பவர் ''மறைந்துபோன தமிழ் நூல்கள்'' என்னும் நூலில் வத்சராசன் என்பவர் பாரதம் என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐயரவர்கள் பல அரிய நூல்களை மனஞ்சரியாது துருவித்துருவி ஆராய்ந்து வெளியிட்டார்கள். ஐயரவர்கள் தாம் சேகரித்த நூல்களைப் படித்துத் திருத்தமும் செய்து வைத்துள்ளார்கள். அவ்வாறு வைத்துள்ள நூல்களுள் ''மகாபாரதச் சுருக்கம்'' என்னும் இந்நூலும் ஒன்ருகும். அவருடைய பொற்காலத்தில் நிறைவேருமல் இருந்ததை அவர்கள் பெயரால் திருவான்மியூரில் இயங்கிக் கொண்டிருக்கும் நூல்நிலையம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

நூல்நிலையத்தை நன்கு பரிபாலித்துவரும் **திருமதி. ருக்மிணிதேவி** அவர்கள் ஊக்கத்தினுலும், ஆக்கத்தினுலும் பாரதத்தில் இரண்டாவதாக உள்ள **சபா பர்வம்** வெளிவருகின்றது.

'' மகாபாரதச் சுருக்கம் '' என்னும் இந்நூலைப் பதிப்பிக்க 19-ஆம் எண்ணுள்ள சுவடி ஒன்றேயுள்ளது. அதனைத் திருவெண்ணெய்நல்லூர்த் தமிழ்ப் புலவர் திரு. வடிவேல் முதலியார் அவர்கள் சுவடியிலிருந்து பிரதி செய்துள்ளார்கள்.

இந்நூலினைப் பதவுரை, விசேடவுரையுடன் வெளியிட வேண்டும் என்று எண்ணி, **திரு. C. ஜெகந்நாதாசார்யர்** அவர்களை அணுகிக்கேட்டபொழுது, அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு பாடல்களைச் சீர்பிரித்துப் பதவுரை, விசேடவுரை முதலிய வற்றை எழுதி அச்சிற்குக் கொடுத்து தாமே 'ப்ரூப்' திருத்தியும் கொடுத்து வருகின்ருர்கள்.

**திரு. C. ஜெந்நாதாசார்யர்** அவர்கள் சிறந்த தமிழ்ப்புலவர் : சொல்லின் செல்வர், வரலாற்று ஆசிரியர்; ஆங்கில மொழியிலும் சிறந்த பாண்டித்யம் பெற்றவர். மேலும், அவர் சுவாமி வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் அவர்களுடைய மாணக்கர். விவேகானந்தா கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகப் பல்லாண்டு பணியாற்றி ஓய்வு பெற்றும் இடைவிடாது தமிழ்த் தொண்டு செய்து

வருகின்ருர். அன்னுருக்கு நூல்நிலையத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்குவெளிவர ஊக்கம் அளித்த நூல்நிலைய நிர்வாகக் கமிட்டித் தலைவர் திரு. குகன் அவர்களுக்கும், ஐயரவர்கள் பேரரும், நூல்நிலையக் கௌரவப் பாதுகாவலருமான திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும் நன்றி.

இந்நூலினை நன்கு அச்சிட்டுக் கொடுத்த சுதா அச்சக உரிமையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றி.

மத்திய அரசு இந்தப் பதிப்பு வெளிவருவதற்கு ஓரளவு மானியம் அளித்தமைக்கு நன்றி.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப் பிரிவு
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

சென்னை-90
15-4-1984

# முகவுரை

அருந்தமிழன்பர்காள் !

பாருக்குள்ளே நல்லநாடு இந்தப் பாரதநாடு. இதன் பண்டைச் செல்வங்கள் ஈடு இணையற்ற வேதஸ்மிருதி இதிகாச புராணங்கள். இவற்றுள் இதிஹாஸ புராணங்களே அனைவரும் ஓதியும் கேட்டும் அறிதற்கு ஏற்றனவாம். இதிகாசம் என்பது-உபதேச பரம்பரையில் வந்த பழைய சரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பல கிளைக் கதைகளோடு புணர்த்து விரித்துக் கூறும் நூலாகும். அங்ஙனமுள்ளவை இராமயணமும் பாரதமுமே என்பது அனை வர்க்கும் உடன்பாடாகும்.

பாரதம் பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது அவற்றுள் இரண்டாவது இந்தச் சபாபருவமாகும். இந்தப் பருவம் இரண்டு சருக்கங்களைக் கொண்டமைந்தது. அவை இராயசூயயாகச் சருக்கம், சூதுபோர்ச் சருக்கம் என்பன. முதலது 65 செய்யுட்களைக் கொண்டது; இரண்டாவது 140 செய்யுட்களைக் கொண்டது. எனவே மொத்தம் சபா பருவம் 205 செய்யுட்களாகும்.

இவைகளுக்கு உரை யெழுதும் பணியை மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையத்தார் அடியேனுக்கு இட்டனர். ஐயரவர்கள் ஆசியின் பலமும் அடியேனுக்கு ஞானாசிரியரான உரை யாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமா சார்யர் ஸ்வாமி அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரை யெழுதச் சமைந்தேன். ஸ்வாமியவர்கள் வில்லிபாரதம் முழுமைக்கும் சீரியவுரை கண்ட மகான். அவர் திருவடிவாரத்தில் பயின்ற வனாதலின், அவர் அடிச்சுவட்டினைப் பின்பற்றி உரையெழுதத் துணிந்தேன்.

இதனுள் பல அரியவிடயங்கள் இலக்கண நுணுக்கங்கள், உரை விசேடங்கள், கதைக் குறிப்புக்கள் முதலியன காட்டியுள்ளேன். மற்றும், பயில்வோர்க்குப் பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் அபிதான சூசிகையகராதி, அரும்பதவகராதி முதலியன, அருந் தொடர்கள், செய்யுண்முதற் குறப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய சுதா பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும், அடியனை இந்நற்பணியிற் கூவியேவல் கொண்ட ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர், கௌரவப் பாதுகாவலர், ஐயர் நூல்நிலையம் அவர்களுக்கும் என்றும் நன்றியறிதலுடையேன்.

திருமகள் கொழுநனுன திருமால் தனது சரிதையாகிய இப் பாரதத்தில் அடியேனுக்கு மனம் பதியுமாறு செய்து இந்நூலின் சபாபருவத்திற்கு நல்லுரை வெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத் தோன்ருத் துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்திலீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,
சி. ஜெகந்நாதாசார்யர்
உரையாசிரியர்-பதிப்பாசிரியர்,

ருத்ரோத்காரி ௵
பங்குனி மீ

## இரண்டாவது

# சபா பருவம்

ஸபா பர்வம் என்பது வடமொழித் தொடர். அது திரிந்து சபா பருவம் என வந்துள்ளது. சபையினது சம்பந்தமான பருவம் என்று ஆரும் வேற்றுமைத் தொகை; சபையின் விஷயமான பருவ மென்பது கருத்து. இனி, இரண்டனுருபும் பயனுமுடன்றொக்க தொகையாக, சபையைப் பற்றிய பருவம் எனினும் அமையும்.

காண்டவவனத்து எரியினின்று தப்பிவந்த மயன் பாண்டவரது இந்திரப்பிரத்த நகரில் அவர்க்காக ஒரு சபா மண்டபத்தை அமைத்துக் கொடுத்தான், அந்தச் சபா மண்டபத்திலும், அத்தினு புரத்தில் துரியோதனுதியர் சிற்பிகளைக் கொண்டு அமைத்த சபா மண்டபத்திலும் நிகழ்ந்த செயல்களைக் கூறும் பாகம் என்பது பொருள். அவ்விரு மண்டபங்களிலும் முறையே நிகழ்ந்த செயல்கள் பாண்டவர்களது இராசசூய யாகமும், தருமபுத்திரனுடன் சகுனி சூது பொருதலும் ஆகும். ஆனது பற்றி, இந்தப் பருவம்—இராய சூய யாகச் சருக்கமும், சூது போர்ச் சருக்கமுமாக இரண்டு உட் பிரிவுகளையுடையது. அவற்றுள்

## முதலாவது

# இராயசூய யாகச்சருக்கம்

பாண்டு மன்னவன் யமலோகத்திலிருந்து நாரத மகரிஷி மூல மாகச் சொல்லியனுப்பியபடி தருமபுத்திரன் இராயசூய யாகத்தைச் செய்து முடித்த செய்தியைக் கூறுகின்ற பாகமென்பது பொருள். ராஜ ஸூயம் என்ற வடமொழி, இராயசூயம் என விகாரப்பட்டது. இந்த யாகத்தின் பெயர்க் காரணம்;— அரசனுல் சோமலதையைப் பிழிந்து செய்யப்படுவது என்றும், ராஜா என்னும் பெயருள்ள சோமலதை நொருக்கப்படுவதென்றும் காணலாம். இந்த யாகம் எல்லா அரசர்களையும் வென்று அவர்களிடங் கொண்ட பொருளைச் செலவிட்டுச் செய்வதொரு பெரு வேள்வி. இராயசூய யாகச் சருக்க மென்ற தொடர் - இரண்டனுருபும் பயனும் தொக்க தொகை, இராயசூய யாகத்தினது சம்பந்தமான சருக்கமென்று விரித்தால் ஆரும் வேற்றுமைத் தொகையாம்.

## வேறு

### 1. தெய்வ வணக்கம் - கிருஷ்ணஸ்துதி.

தாங்கரிய பூபாரந் தவிர்த்திடுவான்
வசுதேவன் றவத்தி ஞரம்
ஓங்கு முலைத் தேவகிபா லுற்பவித்து
நந்தன்மன துவகை பூப்ப
ஆங்கவனி லசோதை வளர்த் தளிப்பவளர்ந்
தாயரகத் தளையும் பாலும்
பூங்கரத்தாற் கரந்தருந்திப் பொதுவியர்முன்
நடித்தவன்ருள் போற்றி வாழ்வாம்.

இது - காப்புச்செய்யுள். சருக்கந்தோறும் பெரும்பாலும் தனியே கடவுள் வணக்கங் கூறுவானேனென்னின், நூல் ஒன்றே யாயினும் சருக்கங்கள் பொருளால் வேறுபடுதலாலும், நூலின் முதலிடை கடைகளிற் கடவுள் வாழ்த்துக் கூறுதல் மிகவும் மங்கலமாதலாலும், கல்விக்குப் பயன் கடவுளைவணங்குதலே யாதலாலும் இவ்வாறு கூறினர் என்க,

(இதன் பொருள்) தாங்கு அரிய பூபாரம் தவிர்த்திடுவான்-(பூமி தேவியால்) தாங்க முடியாத சுமையைப் போக்கித் துன்பம் போக்கிடும் பொருட்டு, வசுதேவன் தவத்தின் - (யதுகுலத்து) வசுதேவர் செய்த தவப்பேற்றின் பயனுக, ஆரம் ஓங்கு முலை தேவகி பால் உற்பவித்து - முத்தாரம் சிறந்து விளங்குகின்ற பருத்துயர்ந்த கொங்கைகளைக் கொண்ட தேவகியினிடத்துக்கருப்பத்தில் தோன்றி (பிறந்து), (பின்பு) நந்தன் மனது உவகை பூப்ப - நந்தகோபனது மனம் மகிழ்ச்சி கொள்ளும்படி, அவன் இல் - அவனது மனையிலே, அசோதை வளர்த்து அளிப்ப வளர்ந்து - யசோதைப் பிராட்டியார் (தனது மகன் போல) வளர்த்துக் காப்பப் பெரியவனுக வளர்ந்து, ஆயர் அகத்து - இடைச்சியர் மனைதோறும், அளையும் பாலும் - வெண்ணெயையும் பாலையும், பூங்கரத்தால் கரந்து அருந்தி - தனது அழகிய கைகளால் திருடி மறைத்து உண்டு, (உண்ட களிப்பினுல்), பொதுவியர் முன் - அந்த இடைச்சியர் முன்னிலையிலேயே, நடித்தவன்-நடனஞ் செய்தவனுகிய கிருஷ்ணனின், தாள் போற்றி-திருவடிகளைத் தோத்தரித்து, வாழ்வாம் - நல்வாழ்ச்சி பெறுவோம்; (எ.று:)

வேண்டிய பயன்களை வேண்டியவாறே பெறுவிக்கின்ற தவம் போல, கிருஷ்ணன் பாண்டவர்கட்கு வேண்டிய பயன்களை அருள் செய்வதற்கென வசுதேவனுக்குத் தேவகி பால் தோன்றினனுதலின்

'வசுதேவன் றவத்தின் தேவகி பாலுற்பவித்து' என்ருர். முல்லை நிலம் குறிஞ்சிக்கும் மருதத்துக்கும் இடையிலுள்ளதனுல் அந்நடுநில மான முல்லை நிலத்தில் வாழ்கிற சாதியார்க்கு இடையரென்றும் பொதுவரென்றும் பெயர்களாயின. இடை, பொது, நடு என்பவை — ஒரு பொருளன. எனவே, இடைச்சியர் "பொதுவியர்" எனப் பட்டனர். ஆங்கு-அசை,

இது முதற் பதினறு கவிகள்-பெரும்பாலும் முதல் நான்கு சீரும் காய்ச்சீர்களும் மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

### 2. பாண்டவர்கள் முன்னிலையில் மயன் வந்து ஒன்று சொல்லத் தொடங்குதல்.

வேற்சென மே செயன் கேட்டு வியந்துமுனி
  வனைப்பணிந்து மீட்டு மைவர்
மேற்செயலெற் குரைத்தியென வினவ வைசம்
  பாயனனும் விளம்பு வான்மை
போற்படிவத் தவர்கள்கா புகுந்தடவி
  கனற்களித்தப் புதுமை நால்வர்
பாற்புகன்றங் கவருடனே பயின்றிடும்போ
  தெய்திமயன் பணிந்து சொல்வான்.

(இ.ள்) வேல் செனமேசெயன் - வேலாயுதத்தை யேந்திய வீரனுகிய ஜனமேஜயமகாராசன், கேட்டு - ஆதி பருவ நிகழ்ச்சி களை யெல்லாம் கேட்ட பின், வியந்து - அதிசயித்து, முனிவனைப் பணிந்து - வைசம்பாயன முனிவனை வணங்கி, மீட்டும் - மறுபடி யும், ஐவர் மேற்செயல் எற்கு உரைத்தி எனவினவ.-பாண்டவரைவர் மேற்கொண்ட செயல்களைப் பற்றி எனக்குச் சொல்வீராக என்று கேட்டுப் பிரார்த்திக்க, வைசம்பாயனனும் —, விளம்புவான் - (மேல் நடந்த நிகழ்ச்சிகளைச்) சொல்லத் தொடங்கினுன் ; மை போல் படி வத்தவர்கள் - அஞ்சனம் போல் கருநிறம் படைத்த சரீரத்தையுடைய கிருஷ்ணர்ச்சுனர்கள், கா புகுந்து - சோலை புகுந்து, அடவி - காண்டவ வனத்தை, கனற்கு அளித்து - அக்னிதேவனுக்கு உண வாகக் கொடுத்து, அப்புதுமை - அந்தப் புதிய அதிசயச் செயலை, நால்வர்பால்புகன்று - ஏனைய தருமன் வீமன் நகுலசகதேவர் களிடத்துச் சொல்லி, அங்கு - அவ்விந்திரப்பிரத்தத்து, பயின்றிடும் போது - தங்கியிருந்தபொழுது, மயன் எய்தி - மயன் என்ற அசுர சிற்பி வந்து, பணிந்து-(அவர்களை) வணங்கி, சொல்வான்-சொல்லத் தொடங்கினுன் ; (எ.று) - அவன் சொன்னதை மேலைக் கவியிற் காண்க.

நால்வர் - தொகைக் குறிப்பு. (2)

### 3. மயன் சொன்ன வார்த்தை.

ஆருயிரெற் களித்தநுமக் கரசியற்றுஞ்
சவையொன்றிங் கமைக்கின் றேனிப்
பாருயிர்முற் புரந்தவிட பருவனெனு
நிசாசரர் கோன் பகைவர் தம்பாற்
போருஞற்றித் திறைகொண்ட பொலிமணிகள்
விந்துவெனும் பொய்கை வைத்தான்
சீருடையம் மணிகொணர்ந்தாற் செய்பணிக்கிங்
குதவுமெனச் செப்பி னானே.

(இ.ன்) எற்கு - எனக்கு, ஆர் உயிர் அளித்த - அரிய பிராண ஹைக் கொடுத்துதவிய, நுமக்கு - உங்களுக்காக, அரசு இயற்றும் சவை ஒன்று - அரசாட்சி செய்வதற்குத் தக்கதான ஒரு சபாமண்ட பத்தை, இங்கு-இந்த இந்திரப்பிரத்த நகரில், அமைக்கின்றேன் - செய்து தருகின்றேன்: இ பார் உயிர் -இந்தப் பூவுலகத்து உயிர்களை, முன் புரந்த - முற்காலத்துக் காத்து நின்ற, விடபருவன் எனும் நிசாசரர்கோன் -விடபருவன் என்னும் பெயருள்ள அசுர மன்னன், பகைவர் தம்பால் போர் உஞற்றி - பகைவரோடு போரிட்டு, திறை கொண்ட - (தோற்ற அந்தப்பகை மன்னர்களிடமிருந்து) கப்பமாகப் பெற்ற, பொலி மணிகள் - ஒளிவிடுகின்ற இரத்தினங்களை, விந்து எனும் பொய்கை வைத்தான் -பிந்துவென்னும் பெயருள்ள சரசில் வைத்துள்ளான் : சீர் உடை அ மணி கொணர்ந்தால் - சிறப்புப்பொருந்திய அந்த இரத்தினங்களைக் கொண்டுவந்து கொடுப்பார்களாயின், செய் பணிக்கு-நான் மேற்கொண்டு செய்ய விருக்கும் சபாமண்டபமெழுப்பும் தொழிலுக்கு, இங்கு உதவும் - இப்போது உதவியாயிருக்கும், என-என்று, செப்பினான் -சொல்லி னான்; (எ-று).

காண்டவ வனத்தில் கொடியதீயிலகப்பட்ட மயன் தக்ஷகனது மாளிகையினின்றும் ஓடி அருச்சுனனை அபயம் வேண்டி அரற்ற, அவனும் அபயங் கொடுக்க, அவன் அபயங் கொடுத்ததைக் கண்டு கிருஷ்ணன் தானும் அந்த மயன்பக்கல் கருணைசெய்ய, அவ்விருவர் நோக்கத்தையும்கண்டு அக்னியும் மயனைத் தகித்தி லனாமைபற்றி "ஆருயிர் எற்கு அளித்தநுமக்கு" என்றான். செய்ந் நன்றியறிவு காரணமாகத் தன்னாலியன்றதைக் கடமையாச் செய் வேனென்பான் "அரசியற்றுஞ் சவையொன்றிங் கமைக்கின்றேன்" என்றான். திறையாவது—வென்ற அரசர்க்குக் கீழமைந்த அரசர் கொடுக்கும் பொருள்; வென்ற அரசர் தோற்ற அரசர்களிடமிருந்து

வலியக்கவர்வனவும் திறையெனப்படும். விடபருவன்—வ்ருஷபர்வா வடசொல் விந்துவெனும் பொய்கை - பிந்துஸரஸ்: இது கைலாச கிரியின் வடக்கில் மைநாகபர்வதத்தைச்சார்ந்த இரணியசிருங்க மென்னுங் குன்றிலுள்ளது. பொய்கை—மானிடராக்காத நீர்நிலை. (3)

### 4. மயன் மண்டபம் கட்டி முடித்து வீமனுக்குக் கதாயுதத்தையும், அருச்சுனனுக்குச் சங்கத்தையும் கொடுத்தல்.

அவனுரைகேட் டுதிட்டிரனங் கறுபதினூ
றுயிராருய்த் தருள வன்னோர்
நவமணிகொண் டொருநொடியின் நல்கினரம்
மயன்சிற்ப நன்னூல் வல்லோர்
எவரும்வியந் ததிசயிப்ப வீரேழ்திங்
களிலவையொன் றியற்றி மற்றும்
பவனன்சேய்க் கொருகதையும் பற்குனனுக்
கொருசங்கும் படைத் தீந்தானே.

(இ-ள்) அவன் உரை கேட்டு-அந்தமயன் சொன்ன வார்த்தையினைக் கேட்டு, உதிட்டிரன் - தருமபுத்திரன், அங்கு-அப்போது, அறுபதினூருயிரர்-அறுபதுலக்ஷம் பேரை, உய்த்து அருள-செலுத்தியனுப்ப, அன்னோர்-அவர்கள், நவமணி கொண்டு - நவரத்தினங்களைக் கொண்டு வந்து, ஒரு நொடியில்-ஒரு மாத்திரைப் பொழுதிலே, நல்கினர்-கொடுத்தனர்: அ மயன்-அந்த மயன், சிற்ப நன்னூல் வல்லோர் எவரும்-சிற்ப சாத்திரத்தில் வல்லமை பெற்ற அனைவரும், வியந்து அதிசயிப்ப-ஆச்சரியப்பட்டுக் கொண்டாடும்படி, ஈர் ஏழ் திங்களில் - பதினான்கு மாதங்களில், அவை ஒன்று இயற்றி-சபா மண்டபமொன்றைக் கட்டி முடித்து, மற்றும்-மேலும், பவனன் சேய்க்கு - வாயுபுத்திரனாகிய வீமனுக்கு, ஒரு கதையும் - ஒரு கதாயுதத்தையும், பற்குனனுக்கு - அருச்சுனனுக்கு, ஒரு சங்கும் - ஒரு (வெண்ணிறச்) சங்கினையும், படைத்து - தானேயுண்டாக்கி, ஈந்தான் - கொடுத்தான்; (எ.று,)

நூறு ஆயிரர் - லக்ஷம் பேர், அதனை அறுபதால் பெருக்க, அறுபது லக்ஷம் பேர்: அதாவது, அறுபது நூருயிரர். மயன் கதையையும் சங்கையும் தானே படைத்துக் கொடுத்ததாக இங்குக் கூறப்பட்டுள்ளது. ஆனால் முதனூலின்படி, சத்துருகாதினியென்னும் பெயருள்ள கதாயுதமும், தேவதத்தமென்னும் பெயருள்ளதும் வருணனுடையதுமான பெரிய சிறந்த சங்கமும் விருஷபர்வா என்ற அசுர ராசனால் பகைவர்களைப் போரில் அழித்த பின்பு

பிந்துசரசில் வைக்கப்பட்டன வென்றும், அவற்றை மயன் அங்குள்ள இரத்தினப்பொதியையெடுத்துக் கொண்டு வந்தபோது உடன் எடுத்துக் கொண்டு வந்து வீமார்ச்சுனர்க்குக் கொடுத்தன னென்றும் தெரிய வருகிறது. (4)

### 5. தருமபுத்திரன் அந்த மண்டபத்திற் பிரவேசஞ் செய்ய, அங்கு நாரத முனிவன் வருதல்.

அத்தகைய பேரவையி லந்தணர்சொல்
சுபதினத்தில் அணுகி வேள்வி
முத்தநகை யொடுமிளைஞர் முராரிதமர்
பலவரசர் முனிவர் சூழச்
சத்திரநீ ழலிற்றவிசிற் றருமனிருந்
திடுமமையந் தவஞ்செய் யாழின்
வித்தகனங் கெய்தலுமவ் வேந்துபணிந்
தளித்திருக்கை வியந்திட் டானே.

(இ.ள்.) அத்தகைய பேர் அவையில்-அப்படிப்பட்ட பெரிய சபாமண்டபத்தில், அந்தணர் சொல் சுபதினத்தில்- பிராமணர்கள் குறித்துச்சொன்ன சுபநாளில், அணுகி - பிரவேசித்து, இளைஞர் - தம்பியர், முராரி - கிருட்டினன், தமர் - தமது உறவினர், பல அரசர்- பலமன்னர்கள், (பல) முனிவர் - பல இருடிகள், சூழ - (இவர்களனை வரும்) தன்னைச் சுற்றியிருப்ப, சத்திர நீழலின் தவிசில் - வெண் கொற்றக்குடையின் கீழே சிம்மாசனத்தில், வேள்வி முத்தம் நகையொடும் - திரௌபதியோடும், தருமன் இருந்திடும் அமையம் - தருமபுத்திரன் வீற்றிருக்குஞ் சமயத்தில், தவம் செய் யாழின் வித்தகன் - நாரதமுனிவர், அங்கு - அந்தச் சபாமண்டபத்துக்கு, எய்தலும் - வருதலும், அ வேந்து - அந்தத் தருமபுத்திர மகாராசன், பணிந்து - (அவரை) நமஸ்கரித்து, இருக்கை அளித்து - ஆசனம் சமர்ப்பித்து, வியந்திட்டான் - (அவர் திடீரென அங்கு வந்ததற்கு) ஆச்சரியமுற்றான்; (எ.று.)

அணுகுதல் - மண்டபப் பிரவேசஞ் செய்தல். முத்தநகை யொடும் தருமன் இருந்திடும் அமையம் என இயையும். வேள்வி முத்த நகை-யாகத்தீயினின்று உற்பவித்த முத்துப்போன்ற பற்களை யுடைய திரௌபதி என்பது பொருள். நகை - நகையையுடை யாளுக்கு ஆகுபெயர். (நகை-பல்); முத்தநகை-உவமைத்தொகை. இளைஞர் முராரி தமர் அரசர் முனிவர் - உம்மைத்தொகை. யாழின் வித்தகன் - யாழ்வாசித்தலில் வல்ல நாரதமுனிவன். "தவஞ்செய்" என்ற அடைமொழி வித்தகனோடு இயையும். (5)

**6. நாரதமுனிவன் அச்சபாமண்டபத்தைக் கொண்டாடிப்பின் தேவ சபைகளைப் பற்றிவகுத்துக் கூறத் தொடங்கி, இந்திர சபையைப் பற்றிக் குறித்தல்.**

பூசனைகொண் டியாழ்முனிவன் புரவலனைப்
பார்த்தளகா புரத்து முன்றன்
தேசவைபோ லிலதென்று செப்பவர
ரமரரவைச் சிறப்போ தென்ன
மாசறுநா ரதனுரைப்பான் வாசவன்பே
ரவையகலம் வகுக்கு நூறு
யோசனைநீட் சியுமுந்நூ றுளதுயர்ச்சி
யைந்நூறு யொளிரு மன்றே.

(இ-ள்.) யாழ்முனிவன் - நாரதன், பூசனை கொண்டு - தருமனளித்த உபசாரங்களை யேற்றுக் கொண்டு, புரவலனைப் பார்த்து - தருமராசனைப் பார்த்து, "அளகாபுரத்தும் - குபேரபட்டண மாகிய அளகாபுரியிலும் கூட, உன்றன் தேசு அவைபோல் - உன்னுடைய ஒளிமிகப்பெற்ற சபாமண்டபம் போல, இலது - (ஒரு மண்டபமும்) இல்லை", என்று செப்ப - என்று பாராட்டிச் சொல்ல, (அதனைக் கேட்ட தருமராசன்), வரர் - சிரேட்டராகிய, அமரர் - தேவர்களுடைய, அவைச்சிறப்பு - சபைகளின் சிறப்பினைப் பற்றி, ஓது என்ன - சொல்லுவீராக என்று பிரார்த்திக்க, மாசு அறு நாரதன்—குற்றமற்ற (தூயோனாகிய) நாரதமுனிவன், உரைப்பான் - சொல்லத் தொடங்கியவனாய், (முதன்முதலில்) வாசவன் - (தேவர் களுக்குத் தலைவனாகிய) இந்திரனுடைய, பேர் அவை - பெரிய சபை (மண்டபத்தை), வகுக்கும் - வகுத்துச் சொல்லினான் : அகலம் நூறும் ஓசனை - (அதன்) அகலம் நூறுயோசனை : நீட்சியும் - நீளமும், முந்நூறு உளது - முந்நூறுயோசனையுள்ளது : உயர்ச்சி - உயரமோ, ஐந்நூறுய் ஒளிரும் - ஐந்நூறு யோசனையாய் விளங்கும்; (எ.று.) அன்றே - தேற்றம்.

ஓசனை - நாற்காததூரம் : யோசனை - சுமார் பத்து மைல். மிகையுயர்வுநவிற்சியணி படக் கூறியதாக் கொள்க. தேவேந்திர சபாமண்டபம் **சுதர்மை** எனப் பெயர் பெறும். (6)

**7. இந்திர சபையின் பெருமை கூறல்.**

அச்சவையிற் குருவெள்ளி யருந்தவர்விஞ்
சையரியக்கர் அமரர் சித்தர்
மெச்சுமுருத் திரகணங்கள் வேந்தரிச்சந்
திரன்முதலாய் விளம்பும் வேந்தர்

முச்சுடர்தக் ககன்முதலாய் மொழிபவர்கள்
இருமருங்கு மொய்த்து சூழ
வச்சிரனுஞ் சசியுடனே வதிவனினி
குபேரனவை வகுப்பன் கேண்மோ.

(இ-ள்) அ சவையில் - அந்தச் சுதர்மையாம் இந்திர சபையில், குரு - பிருஹஸ்பதி, வெள்ளி - சுக்கிரன், அருந்தவர் - முனிவர், விஞ்சையர் - வித்தியாதரர், இயக்கர் - யக்ஷர், அமரர் - தேவர், சித்தர்—, மெச்சும் உருத்திரகணங்கள் - புகழ்கின்ற ஏகாதசருத்திரர், வேந்து - (அவர்கட்குத் தலைவனாகிய) உருத்திரன், அரிச்சந்திரன் முதலாய் விளம்பும் வேந்தர் - (சத்தியத்திற்கு எடுத்துக்காட்டான) அரிச்சந்திரன் முதலாகச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற மன்னர்கள், முச்சுடர் - சூரியன் சந்திரன் அக்கினி முதலாய மூன்று ஒளிகள், தக்ககன் முதலாய் மொழிபவர்கள் - தக்ஷகன் முதலாக வைத்துப் பேசப்படுகின்ற நாகர்கள், (இன்னோர்) இருமருங்கு - வலம் இடம் ஆகிய இரண்டு பக்கங்களிலும், மொய்த்து சூழ - நெருங்கிச் சூழ்ந்திருப்ப, வச்சிரனும் - இந்திரனும், சசியுடனே - இந்திராணியுடனே, வதிவன் - எழுந்தருளியிருப்பன்: இனி -, குபேரன் அவை - குபேரனது சபா மண்டபத்தை, வகுப்பன் - வகுத்துக் கூறுவேன்; கேண்மோ - கேட்பாயாக; (எ-று).

வச்சிரன் - வச்சிராயுதப் படையையுடையனாதலின் இந்திரனுக்காகியது, ஒருகால் பார்வதிமீது கண் சென்று அதனால் அக்கண் மழுங்கியதனால், குபேரன் என்று பெயர். கு-இழிவான, பேரன் - உடலுள்ளவன். (7)

8. குபேரனது சபையின் பெருமை கூறல்.

மீதுலகாள் பவனவைக்கே விளம்புமள
விளையுடைத்தாய் விளங்குஞ் சங்கத்
தாதுலர்வேள் வேதவித்தோ ரரிவையர்சா
ரணரியக்க ராரும் போற்ற
வேதமறு மிருநிதியு மிருமருங்கு
மொளிரநடு வியக்கர் கோமான்
ஆதனத்தி லிருப்பனெளி யவிழ்வருண
னவையுமித னளவே யாமால்.

(இ-ள்) மீதுலகு ஆள்பவன் - வானுலகையாள்பவனாகிய இந்திரனது, அவைக்கே - சபையினுக்கு, விளம்பும் - (மேலே)

சொன்ன, (அதே) அளவினையுடையதாய் (அகலம், நீளம், உயரம் ஆகிய) அளவினைக் கொண்டதாய், விளங்கும் சங்கத்து - அங்குக் கூடி விளங்குகின்ற கூட்டத்துள், ஆதுலர் வேள் - சிவபிரான், வேத வித்தோர் - வேதங்களில் வல்லவர்கள், அரிவையர் - பெண்கள், சாரணர் - சாரணர்கள், இயக்கர் - யக்ஷர்கள், ஆரும் போற்ற (ஆகிய) அனைவரும் துதித்துப் பாராட்ட, வேதம் அறு - விவரிக்க முடியாதபடி சிறந்த, இரு நிதியும் - சங்கநிதி, பதுமநிதியென்ற இரு நிதியும், இரு மருங்கும் ஒளிர - வலமிடப் பக்கங்களில் பிரகாசிக்க, நடு - சபையின் நடுவில், இயக்கர் கோமான் - யக்ஷர்களின் தலைவனாகிய குபேரன், ஆதனத்தில் இருப்பன் - சிம்மாசனத்தில் வீற்றிருப்பன்: (இனி) ஒளி அவிழ் வருணன் அவையும் - ஒளி வீசுகின்ற வருணனது சபையும், இதன் அளவேயாம் - இந்தக் குபேரனது சபையினளவேயாகும்; (எ-று.)

ஆதுலர் - வறியவர்; பிச்சையெடுப்போர். வேள் - தலைவன் இங்கே, சிவபிரானைப் பிச்சையெடுப்போரின் தலைவன் என்றது, அவன் பிக்ஷாடன மூர்த்தியாயிருப்பது நோக்கி. குபேரனுக்குச் சிறந்த நண்பன் இந்தச் சிவபெருமான். வேதம் - விவரிக்கை: துளைத்தல் எனினுமாம். இருநிதி - சங்கநிதி, பதுமநிதி. (8)

### 9. பிரமனது சபையின் பெருமை கூறல்.

அகலமுநீட் சியுமுயர்வு மனந்தனுங்கண்
டுரைப்பரிதா யனேகங் கோடி
பகலவர்போன் மணிவிளக்கம் பரப்புமவை
தனின்முனிவர் பாலர் வானோர்
புகலரிய மனுவாதிப் புரவலர்வாழ்த்
தெடுப்பமுனம் புகனூ லோடுஞ்
சகலகலை களுமொலிப்பச் சதுமுகன்வை
குவன்வாணி தன்னோ டம்மா.

(இ - ள்) (பிரமனது சபையின்) அகலமும் நீட்சியும் உயர்வும் - அகலமும் நீளமும் உயர்ச்சியும் ஆகிய இவற்றின் அளவினை, அனந்தனும் - ஆதிசேடனும், கண்டு - தனது இரண்டாயிரம் கண்களாற் கண்டும் உரைப்ப அரிதாய் - சொல்லுதற்கு இயலாததாய், அநேகம் கோடி பகலவர்போல் - பல கோடி சூரியர்கள் ஒருசேரப்பிரகாசிப்பது போல, மணி விளக்கம் பரப்பும் அவை தனில் - மாணிக்கங்களாலாகிய விளக்குகளின் ஒளிகளைப் பரவச் செய்கின்ற சபா மண்டபத்திலே, முனிவர் - இருடிகள், பாலர் - இளையவர்கள், வானோர் - தேவர்கள், புகல்அரிய மனு ஆதி புரவலர் - புகழ்ந்து

பேசுதற்கு அரிய மனு முதலாகிய மன்னர்கள் (ஆகிய இவர்கள்), வாழ்த்து எடுப்ப - தோத்திரங்களைச் சொல்லித் துதிப்ப, முனம் புகல் நூலோடும் - முதன்முதலாக வைத்துப் போற்றப்படும் வேதங்களோடும், சகல கலைகளும் ஒலிப்ப - எல்லாக்கலைகளும் கோஷிக்க, சதுமுகன் - பிரமதேவன், வாணிதன்னோடு - சரசுவதி தேவியோடு, வைகுவன் - (நிரந்தரமாகத்) தங்கியிருப்பன்; (எ.று) அம்மா - வியப்பிடைச்சொல்: அதிசயங் குறிக்கும்.

ஆதிசேடன் ஆயிரம் நாப்படைத்தவன்; அவனாலும் உரைப்பரிது எனச் சிறப்புக்கிளந்தவாறு. முனம் புகல் நூல் - வேதம்: அநாதியானது. கலைகள் - இதிகாச புராணங்கள் போல இன்னோரன்னவை. (9)

## 10-11. சூரியன், யமன் இவ்விருவர் சபையின் பெருமை கூறும்.

இருகவிகள்—ஒருதொடர்.

அருணனவை நீட்சியுயர் வகலமைஞ்ஞூ
றியோசனையா மதன்றன் மாண்பு
பருணிதரும் புகழ்ந்துரைக்கப் படாதினிவெஞ்
சமனவையைப் பகர்வன் கேண்மோ
பொருணனிகொண் டாலயங்கள் பொழிற்றடஞ்சத்
திரமுதலாய்ப் புகலுந் தன்மங்
கருணையுடன் செய்தவர்கள் களித்திருப்ப
நடுவிருப்பன் காலன் மன்னே.

(இ - ள்) அருணன் அவை - சூரியனுடைய சபா மண்டபத்தினது, நீட்சி - நீளம், உயர்வு - உயர்ச்சி, அகலம் - அகலம் இவற்றின் அளவு, ஐஞ்ஞூறு யோசனையாம் - ஐந்நூறுயோசனையாகும்: அதன் தன் மாண்பு - அந்த மண்டபத்தின் சிறப்பினை, பருணிதரும் - புலவர்களும், புகழ்ந்து உரைக்கப்படாது - முற்றப் புகழ்ந்து பாராட்டியுரைக்க முடியாது: இனி -, வெம் சமன் அவையைப் பகர்வன் - கொடிய யமனது சபையைப் பற்றிக் கூறுவேன் : கேண்மோ - கேட்பாயாக : நனி பொருள் கொண்டு - மிக்க செல்வத்தைக் கொண்டு, ஆலயங்கள் - கோயில்கள், பொழில்- சோலைகள், தட சத்திரம் - விசாலமான சத்திரங்கள், முதலாய்ப் புகலும் தன்மம் - முதலாகச் சொல்லப்படுகின்ற தருமங்கள், கருணையுடன் - தயையுடனே, செய்தவர்கள் - செய்த பரோபகாரர்கள், களித்து இருப்ப - மகிழ்ச்சி கொண்டு சூழ்ந்திருப்ப, காலன் - யமதேவன், (இவர்களுக்கு) நடு இருப்பன் - மத்தியில் (ஆசனத்து) வீற்றிருப்பன்; (எ.று) மன், ஓ - ஈற்றசை.

அருணன் - சூரியன். சமன் - யமன். கேண்மோ - மோ; முன்னிலையசைச் சொல், நனி - மிகுதிப் பொருளில் வரும் உரிச் சொல் - தருமஞ்செய்தவர்கள் நடுவில் தருமதேவன் வீற்றிருப்பன் என்றதால் தருமஞ்செய்தவர் யமவேதனை நீங்கிக் களிப்பர் என்பது பெற வைக்கப்பட்டது. (10)

11. செஞ்சுடர்போன் மணிவிளக்கந் திகழவையிற்
கதைபாசஞ் செங்கை யேந்தி
அஞ்சவருங் கிங்கரரோ டடற்பெறுஞ்சா
ரணரிறைஞ்ச வகத்திற் சற்றுந்
தஞ்சமில்பா தகர்த்தென்பா லொதுக்கிப்
பாண்டுமுதற் றலைவர் போற்ற
மஞ்சுருவுஞ் செஞ்சிகையு மடைபுரவி
யுமுடையோன் வதிவ னம்மா.

(இ - ள்) செம் சுடர்போல் - சிவந்த சூரியன் போல, மணி விளக்கம் - மாணிக்க விளக்குகள், திகழ் அவையில் - விளங்குகின்ற சபாமண்டபத்தில், கதை பாசம் செம் கை ஏந்தி - கதாயுதத்தையும் பாசக் கயிற்றையும் சிவந்த கையிற்கொண்டு, அஞ்சவரும் கிங்கர ரோடு - (அனைவரும்) பயப்படும்படி வருகின்ற ஏவற்காரரோடு, அடல் பெறும் சாரணர் இறைஞ்ச - வலிமை பெற்ற சாரணர்கள் வணங்க, அகத்தில் - மனத்தினில், சற்றும் - சிறிதும், தஞ்சம் இல்- ஆதரவு (பற்றுக்கோடு) இல்லாத, பாதகர் - பாவிகளை, தென்பால் ஒதுக்கி - தெற்குப் புறமாக (நரகத்தில்) தள்ளி, பாண்டு முதல் தலைவர் போற்ற - பாண்டு முதலாகிய மன்னர்கள் கொண்டாடும் படி, மஞ்சு உருவும் - கருநிற வுடம்பும், செம் சிகையும் - சிவந்த தலைமயிர் முடியும்; மடை புரவியும் - மடுத்தலையுடைய (முட்டுதலை யுடைய) எருமைக் கடாவாகனத்தையும்; உடையோன் - கொண்டி ருப்பவனாகிய அந்த யமதேவன், வதிவன் - (நிரந்தரமாகத்) தங்கியிருப்பன்; (எ.று) அம்மா - வியப்பிடைச்சொல்.

கதைபாசம் - உம்மைத்தொகை செங்கை - பண்புத்தொகை. சாரணர் - தூதுவர். தஞ்சம் - பற்றுக்கோடு: ஆதரவு காட்டுதல். தஞ்சம் (அடைக்கலம்) புகுந்தோரை ஆதரிக்காத பாவிகள் தென்பா லுள்ள நரகம் புகுவரென்பது பெறப்பட்டது. தெற்குத்திசை யமனுக் குரித்தாதலின், தன் திசையிலுள்ள நரகத் தொதுக்குவன் என்க. தான் - அசை. மஞ்சு - மேகம்: கருநிறத்தைத் காட்டி வந்தது. செஞ்சிகை - செம்பட்ட மயிர்: பண்புத்தொகை. புரவி - குதிரை: இங்கே பொதுவாக வாகனத்தைக் காட்டியது, "மடை புரவி" எனவே, யமனேறிச் செலுத்தும் வாகனமாகிய எருமைக் கடாவினைக் காட்டியது. மடை - மடுத்தல், முட்டுதல், குத்துதல். இந்த அடை யால் எருமைக்கடா என்பது தேறியது. (11)

**12. தருமபுத்திரன் தனது தந்தை பாண்டு மன்னன் யமபுரத்தில் இருத்தற்குக் காரணம் நாரதனை வினவல்.**

ஓதியவிண் ணவரவையு முனதவைக்கொவ்
வாதெனவே யுரைத்த தூய
மாதவனை யுதிட்டிரனு மன்னரிச்சந்
திரன்விண்ணு மனுவா ரீசப்
போதனவை யினும்பயின்ற புண்ணியமு
மெந்தையிம புரத்தின் மேவும்
ஏதமுமெற் கின்னதென வியம்புகென
முனியரசுக் கிசைப்ப தானன்.

(இ-ள்) ஓதிய - மேற்குறித்துச் சொன்ன, விண்ணவர் அவையும் - தேவர்களது சபாமண்டபங்களும்; உனது அவைக்கு ஒவ்வாது - உன்னுடைய சபாமண்டபத்துக்கு இணையாகா, எனவே - என்று, உரைத்த - சொன்ன, தூய மாதவனை - பரிசுத்தனான நாரத முனிவனை (நோக்கி); யுதிட்டிரனும் - தருமபுத்திரனும், மன் அரிச்சந்திரன் விண்ணும் - மன்னனாகிய அரிச்சந்திரன் இந்திரனுலகத்திலும், மனு - மனுவேந்தன், வாரீசப் போதன் அவையினும் - பிரமன் சபையிலும்; பயின்ற - தங்கும்படி நேர்ந்த, புண்ணியமும் - நற்பேறும், எந்தை - என் தந்தையாகிய பாண்டு மன்னன், இமபுரத்தில் மேவும் ஏதமும் - யமபுரமாகிய தென்புலத்தில் தங்கியிருக்கும் கேடும், இன்னது என - இன்ன காரணம் பற்றியதென்று, எற்கு - எனக்கு, இயம்புக என - சொல்லுவீராக என்று கேட்ப, முனி - நாரத முனிவன், அரசுக்கு - தருமராசனுக்கு, இசைப்பது ஆனான் - சொல்லத் தொடங்கினான்: (எ.று)

மன் - தலைவன்; அரசன். வாரிசம் - தாமரை: அது நீண்டது. வாரீசப் போதன் - தாமரைப் பூவில் எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவன். ஏதம் - குற்றம், கேடு, துன்பம், பாவம். இயம்புகென - வியங்கோளின் அகர வீறு தொகுத்தல். (12)

**13. நாரத முனிவன் தருமனை வேள்விபுரியச் சொல்லல்.**

வாசிமகம் புரிந்தயனூர் மனுபுகுந்தான்
இராசசூய மகஞ்செய் தென்று
மாசிலரிச் சந்திரனு மமரேச
நகரடைந்தா னனைய வேள்வி

காசினியி னீபுரியிற் காலனவை
தணந்துந்தை கடவு ணாதன்
தேசிலங்கு மவைபெறுவான் செய்கெனச் சொற்
றின்னுமிதைச் செப்ப லானான்.

(இ-ள்) மனு-மனுவேந்தன், வாசிமகம் புரிந்து-அசுவமேத யாகம் செய்து, அயன் ஊர்-பிரமலோகத்தை, புகுந்தான் -அடைந்தான் : என்றும் மாசில் அரிச்சந்திரனும் - எக்காலத்தும் குற்றமில்லாத (சத்தியந்தவறுத)அரிச்சந்திர மன்னனும், இராச சூய மகம் செய்து - இராசசூய யாகத்தைச் செய்து, அமரேசன் நகர்-தேவேந்திரனின் நகரத்தை, அடைந்தான் - சேர்ந்தான் : (ஆகவே) காசினியில், - இந்தவுலகத்தில், அனைய வேள்வி-அப்படிப்பட்ட (சிறந்த) யாகத்தை, நீ புரியில்-நீ செய்வாயானால்; காலனவை தணந்து - யமனது சபையை நீத்து, உந்தை - உன் தந்தையாகிய பாண்டு மன்னன்; கடவுள் நாதன் - தேவர்களின் தலைவனாகிய இந்திரனின், தேசு இலங்கும் அவை - ஒளி விளங்குகின்ற சபையில் தங்குதலை, பெறுவான் - அடைவான்: (எனவே) செய்க என சொற்று - செய்வாயாக எனச் சொல்லி, இன்னும் - மேலும், இதைச் செப்பலானான் - இதனையும் சொல்லலானான்; (எ-று) அவன் மேலும் சொன்னதை மேலைக் கவியிற் காண்க.

அயன் – அஜன் : பிரமன், (அ-திருமாலினிடத்தினின்று, ஜன்-தோன்றினவன்). அமரேசன் - குணசந்தி பெற்ற வடமொழித் தொடர். உந்தை - உன் தந்தை என்பதன் மரூஉ. கடவுள் - தேவர்கள். (13)

**14. பாண்டு மன்னன் உன்னை இராயசூய யாகஞ் செய்யச் சொல்லினனென்று நாரதன் தருமனிடம் தெரிவித்தல்.**

காலனவை புகுந்தவெனைக் கண்டுந்தை
யிராசசூயங் கடிதி னென்றன்
பாலனைக்கொண் டயர்வியெனப் பகர்ந்தனன்யான்
அஃதுரைக்கப் படர்ந்தே னென்று
சீலமுனி வரன்புகன்று சென்றதற்பின்
அச்சுதனுஞ் சிந்தை யெண்ணஞ்
சாலமுடிந் திடுமென்னத் தான்மகிழ்வுற்
றிதைத்தருமன் றனக்குச் சொல்வான்.

(இ-ள்) காலனவை புகுந்த எனை - யமனது சபையிற் சென்ற என்னை, உந்தை-உன் தந்தை, கண்டு-பார்த்து, "என்தன், பாலனைக் கொண்டு - என் புதல்வனாகிய தருமனைக் கொண்டு, கடிதின் -விரைவினிலே, இராச சுயம் அயர்வி - இராய சூய யாகத்தைச் செய்விப்பாய்", என - என்று, பகர்ந்தனன் - சொல்லினன் : யான் - நான்,

அஃது - அந்தச் செய்தியை, உரைக்க - உன்னிடம் சொல்ல, படர்ந்தேன்-வந்து சேர்ந்தேன், என்று-, சீலமுனிவரன்-நற்குண மமைந்த நாரத முனிவன், புகன்று- சொல்லி, சென்றதற்பின்- (அந்த இந்திரப் பிரத்த சபா மண்டபத்தை விட்டுப்) போயின பின்பு, - அச்சுதனும்-கிருஷ்ணனும், சிந்தை எண்ணம்-தான் மனதிற் கொண்டிருந்த எண்ணம், சால முடிந்திடும் என்ன - நன்கு நிறைவேறப்பெறும் என்று, தான் மகிழ்வுற்று - தான் சந்தோஷமடைந்து, தருமன் தனக்கு - தருமபுத்திரனுக்கு, இதை - இந்த விஷயத்தை, சொல்வான் - கூறுவானுயினன்; (எ று) அவன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

சால முடிந்திடும் - உரிச்சொற்றொடர். (14)

## 15. கிருஷ்ணன் சராசந்தனைக் கொன்ருல் யாகம் இயற்றிடுதல் எளிது எனல்.

ஆற்றிடுவா னரமேத மவனிபரை
யருஞ்சிறையி லடைத்தா னும்பர்
தோற்றிரியும் புயவலியான் ருேன்றல்சரா
சந்தனவற் றெலைப்பா ரில்லை
கூற்றவனுக் கடல்வாயு குமரனல
திலைகோறிற் கூறும் வேள்வி
நாற்றிசைவென் றியற்றிடுத னமக்கரிதோ
அமர்க்குவிடை நல்கி டென்ருன்.

(இ - ள்) சராசந்தன் தோன்றல் - சராசந்தன் என்னும் (மகத தேசத்து) அரசன், நரமேதம் ஆற்றிடுவான் - நரமேதமென்னும் யாகத்தைத்தான் செய்தற் பொருட்டாக, அவனிபரை - அரசர்களை, அருஞ்சிறையில் அடைத்தான் - பெரிய சிறைச்சாலையில் சேர்த்து வைத்தான்: உம்பர் - தேவர்கள், தோற்று-(அவனுக்குத்) தோற்று, இரியும் - பின் வாங்கி யோடிப் போகும்படி செய்யும், புயவலியான் - தோள்வலிமையுடையவன்:அவன் தொலைப்பார் இல்லை - அவனைக் கொன்ருெழிப்பவர் எவருமிலர்; அவனுக்கு - அந்தச் சராசந்தனுக்கு, கூற்று - யமனுயிருப்பவன், அடல் வாயு குமரன் அலது இலை - வலிமை பொருந்திய வீமனை யல்லாது வேருேருவரும் இலர்: கோறின்-வீமன் அவனைக் கொன்ருெழிப்பானுயின், கூறும் வேள்வி-நாரத முனிவன் சொன்ன இந்த இராய சூய யாகம், நால்திசை வென்று இயற்றிடுதல் - நான்கு திக்குக்களினும் சென்று போரிட்டுப் பகை வென்று (திக்குவிசயஞ் செய்து) பின்பு செய்திடுதல், நமக்கு அரிதோ - நமக்கு அரிய செயலாகுமோ? (ஆகாது, எளிய செயலேயாகும்): (ஆகவே தருமனை நோக்கிக் கிருஷ்ணன்), அமர்க்கு - போருக்கு, விடை நல்கிடு என்ருன் - தம்பியர்க்கு (ஆணையிட்டு) விடை கொடுத்திடுவாய் என்று கூறினுன் ; (எ.று)

நரமேதயாகம் என்பது - மனிதர்களைக் கொன்று செய்வதொரு யாகம்: நரமேதம் செய்யவேண்டுமென்ற கருத்தினால், சராசந்தன் பல அரசர்களை வலிய எதிர்த்துப் பொருது வென்று உயிரோடு பிடித்துக் கொணர்ந்து விலங்கிட்டுச் சிறைச்சாலையிலடைத்துத் தொகுத்து வைத்திருந்தனனென்க. இத்தன்மைய கொடுஞ் செயல் புரிந்துள்ள சராசந்தனொருவனைக் கொன்று வென்று அவன் பொருள்களைக் கவர்ந்து வந்தால் அநேக அரசர்களை வென்று திறை கொணர்ந்ததாகவும், துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலன தருமத்தை யநுட்டித்ததாகவும் முடிதலால் அவனைக் கொல்ல வேண்டுமென்பது கருத்து. ஆற்றிடுவான் - வானீற்று வினையெச்சம். உம்பர் - மேலிடம்; அங்குள்ள தேவர்க்கு இடவாகுபெயர். கோறல் - கொல்லுதல்: கொல் - பகுதி, தல் - விகுதி. கூறும் - பெயரெச்சம். (15)

### 16. அந்தண வடிவங் கொண்டு சென்ற மூவரையும் சராசந்தன் சந்தேகித்தல்.

சொற்றமொழிக் கிசைந்தறன்சேய் தூண்டவரிக்
கவிக்கருடத் துவசம் பெற்றோர்
நற்றவமா முனிவரராய் நாளிரண்டிற்
கிரிவிரச நகர மெய்தி
உற்றிடுங்கா வலரரசுக் குணர்த்திவிடுத்
திடவுட்போந் துபசா ரஞ்செய்
கொற்றவனுக் கினிதாசி கூறவவ
னிவர்வடிவங் குறித்துச் சொல்வான்.

(இ-ள்.) சொற்ற மொழிக்கு இசைந்து - கிருஷ்ணன் சொன்ன வார்த்தைகளுக்கு உடன்பட்டு, அறன் சேய்-தருமபுத்திரன், தூண்ட-(அமர்க்கு விடை நல்கிச்) செலுத்த, அரி கவி கருடன் துவசம் பெற்றோர்-சிங்கம் குரங்கு கருடன் இவற்றைத் தமது கொடியிலே முறையே எழுதப் பெற்றவராகிய வீமன் அருச்சுனன் கிருஷ்ணன் ஆகிய மூவரும், நல் தவ மா முனிவரராய் - நல்ல தவத்தைச் செய்த சிறந்த அந்தணர்களாய் (வடிவங்கொண்டு), நாள் இரண்டில் - இரண்டு நாட்களில், கிரிவிரச நகரம் எய்தி - (சராசந்தனது தலைநகராகிய) கிரிவிரச நகரத்தையடைந்து, உற்றிடும் காவலர் அரசுக்கு உணர்த்தி விடுத்திட-அங்குப் பொருந்தியிருந்த காவல் வீரர்கள் சராசந்த மன்னனுக்கு இவர்கள் வருகையைத் தெரியச் செய்து அனுப்பிட, உள் போந்து - அந்நகரினுட் புகுந்து, (எதிர் கொண்டு) உபசாரம் செய் கொற்றவனுக்கு-முகமன் கூறி வரவேற்ற மன்னனுக்கு, இனிது ஆசி கூற-இனிமையான வாழ்த்துக் கூற, அவன்-அந்தச்சராசந்தன், இவர் வடிவம் குறித்து-

இவர் தோற்றம் கண்டு (ஐயுற்று), சொல்வான்-கூறுவானாயினன்; (எ.று).

வடிவம் என்றது-தோள்களின் திரட்சியையும் வில்லின் தழும்பையும். வீமனுக்குச் சிங்கக்கொடி, அருச்சுனனுக்குக் குரக்குக் கொடி, கிருஷ்ணனுக்குக் கருடக் கொடி. தனது பல பராக்கிரமங்கட்கும் போரில் எளிதிற் பகைவெல்லும் திறத்துக்கும் அறிகுறியாக, வீமன் சிங்க வடிவத்தைக் கொடியிற் கொண்டனன் போலும். முனிவரராய்ச் சென்றதற்குக் காரணம் மேலைக்கவியில் விளங்கும். (16)

## வேறு

**17. தாங்கள் இன்னாரென்பதையும் அந்தணராய் வந்ததன் காரணத்தையும் கண்ணன் சராசந்தனுக்குச் சொல்லுதல்.**

முதுகுல முனிவ ரன்றுநீர் யாவர்
மொழிமினென் றுசாவமா தவன்யான்
எதுகுல மதனிற் றேன்றுயா தவனீங்
கிவர்சதா கதிமக வானும்
விதுகுல முய்யப் பயந்திடும் வீமன்
விசயனின் னகர்வளங் காண்பான்
சதுகுல மறையோ ரென்னகா வலர்க்காய்ச்
சார்ந்தனம் தேர்ந்தரு ளென்றான்.

(இ-ள்.) (சராசந்தன்) நீர்-நீங்கள், முதுகுல முனிவர் அன்று-முதற்குலத்து அந்தணர்கள் அல்லர்: யாவர் - யாவராவீர்?: மொழியின்-உண்மையைச் சொல்லுங்கள், என்று உசாவ-என்று வினவ, மாதவன்-(அதற்குக்) கிருஷ்ணன், யான் எதுகுலமதனில் தோன்றும் யாதவன் - நான் யதுவமிசத்தில் தோன்றிய யாதவனாவேன்; ஈங்கு இவர்-இங்குள்ள இந்த இருவரும், விதுகுலம் உய்ய-சந்திரவமிசம் தழைத் தோங்கும்படி, சதாகதி (யும்) மகவானும்பயந்திடும் வீமன் விசயன்-வாயுவும் இந்திரனும் பெற்ற வீமனும் விசயனுமாவர்: (நாங்கள் மூவரும்) நின் நகர் வளம் காண்பான்-உன்னுடைய கிரிவிரச நகரத்தின் வளப்பத்தைப் பார்க்கும் பொருட்டு, காவலர்க்காய் — (நின் நகர் காக்கும்) காவல் வீரர்க்கு அஞ்சி, சதுகுல மறையோர் என்ன - நான்மறையாளராகிய அந்தணர் வடிவங் கொண்டு, சார்ந்தனம் - (உட்புகுந்து) 'வந்து சேர்ந்தோம்: தேர்ந்தருள் - தெரிந்து கொள்வாயாக, என்றான் - என்று பதிலிறுத்தான். (எ.று).

நினது காவல் வீரர்க்கு முன்பு மன்னவராய் நெருங்குதல் அரிதாததால், மறையோராய்ச் சார்ந்தனம் என்றுன். மற்றும் அரசர்களாயின்; அவனனுமதி பெற்றன்றி அவனது நகரினுட் செல்லவியலாது என்றும், அவ்வரையறை முனிவர்கட்கு இல்லையென்றும் உணர்க. முதுகுலம் - நாற்பாற் குலத்துள் முன்னர் வைத்து எண்ணப்படுவது. யதுகுலம் - யது என்பவன், சந்திர வமிசத்துப் பிரசித்தி பெற்ற ஓர் அரசன் : யயாதியின் குமாரன் : குருகுலப் பூர்வீகத்துராசர்களிற் பிரதானனுன பூருவின் உடன்பிறந்தவன், யாதவன் - யதுவினது மரபிற் பிறந்த மகன் : வடமொழித் தத்திதாந்த நாமம். விது - சந்திரன். விதுகுலம் - வடமொழித் தொடர். சது - சதுர் : நான்கு. காவலர்க்கு-நான்கனுருபு பகைப் பொருளது. தேர்ந்தருள், அருள்-துணைவினை.

இதுமுதல் பத்துக்கவிகள் - பெரும்பாலும் இரண்டுநான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச் சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள் (17).

**18. வீமனைச் சராசந்தன் வலியப் போர்க்கு அழைத்தல்.**

அவ்வுரை தனைக்கேட் டழன்றுள மிருகண்
அரக்கெனச் சிவந்துயிர்ப் பெறிந்து
தெவ்வர்வெஞ் சமரிற் புறங்கொள வென்ற
திறல்சரா சந்தன்மா யனைநீ
ஒவ்வறு மதுரை விடுத்துமுன் துவரை
யுடைந்தெனக் கொளித்தவன் அசுரர்
வெவ்வலிக் குடைந்த அரிமக னிளையன்
வீமனே வெனக்கிணை பொருமின்.

(இ-ள்) அ உரைதனைக் கேட்டு - (கிருஷ்ணன் கூறிய) அந்த வார்த்தைகளைக் கேட்டு, தெவ்வர்-பகைவர்கள், வெம் சமரில் புறங் கொளவென்ற - கொடியபோரில் முதுகுகாட்டியோடும்படி வெற்றி பெற்ற, திறல் சராசந்தன் - வலிமையையுடைய சராசந்தன், உளம் அழன்று - மனங்கொதித்து, இருகண் அரக்கு என சிவந்து - இரண்டு கண்களும் செவ்வரக்கென்னும்படி சிவப்பேறி, உயிர்ப்பு எறிந்து - பெருமூச்சு விட்டு, - மாயனை - கிருஷ்ணனை [நோக்கி]; நீ-, முன் - முன்பு, எனக்கு உடைந்து - என்னிடம் தோற்று, ஒவ்வு அறு மதுரை விடுத்து - பொருந்துதலில்லாத வட மதுரையைக் கை விட்டு, துவரை ஒளித்தவன் - துவாரகாபுரிக்கு அஞ்சியோடி ஒளித்துக் கொண்டவன்; அசுரர் வெவ்வலிக்கு உடைந்த அரி - அசுரர்களது மிக்க வலிமைக்குத் தோற்றுப்பின் வாங்கிய இந்திரனுடைய, மகன் - பிள்ளையாகிய அருச்சுனனே

இளையன் - (உங்கள் மூவரிற்) சிறுவனுயிருக்கிருன்: (ஆகவே) வீமனே - வீமசேனனே, எனக்கு இணை - எனக்கு(ப் போரிடுதற்கு) நிகராவன் : பொருமின் - (அவ் வீமனைக் கொண்டு என்னோடு) போர் செய்யுங்கள் ; (எ.று.), "என்று உரைத்து" என மேலைக் கவியோடு குளகமாய்த் தொடரும்.

இதனுல், சராசந்தன், கிருஷ்ணனோடும் அருச்சுனனோடும் பொராமல் வீமனோடு போர் விரும்புதற்குக் காரணங் கூறுகின்ருன். அஞ்சினவரோடு பொருதல் அறமன்ருதலாலும், தனக்கு நிகரல்லாத இளையாரோடு போர் செய்யின் பலபராக்கிரமங்கட்குச் சிறப்பில்லை யாதலாலும், கண்ணனையும் அருச்சுனனையும் விலக்கினுன் என்க. அசுரர்க்கு அஞ்சினவன் பிள்ளையென்று அருச்சுனனை இழித்துக் கூறினுன். ஒவ்வுதல் - பொருந்துதல். இசைதல். மது என்னும் அசுரனுல் முதலில் அமைக்கப்பட்ட நகரமாதலாலும் பின்பு மது என்னும் சந்திர குலத்து அரசனுற் சீர்திருத்தி ஆளப்பட்டதனுலும், கண்ணுக்கு இனியதாயிருத்தலாலும், 'மதுரா' என்று பெயர், இங்குக் குறித்தது, வடமதுரை; யமுனு நதி தீரத்திலுள்ளது. அரி - இந்திரன், பீமன் என்ற வடசொல், வீமன் என விகாரப்பட்டது; அப்பெயர் - (பகைவருக்குப்) பயங்கரனென்று காரணப்பொருள் படும். (18)

19. இருவரும் பிரயாசைப்பட்டு மற்போர் புரிதல்.

என்றுரைத் தவனிக் கதிபனென் மகனென்
றெழின்முடி புனைந்தமர் புரிவான்
குன்றுறழ் இருதோள் கொட்டியார்த் தெதிர்ந்தான்
கூற்றெனக் காற்றின்மா மகனுஞ்
சென்றெதிர் பாய்ந்தான் இருவரு முட்டித்
திறனெலா முகில்கள்கோ ளரிகள்
ஒன்றொடொன் றெதிர்ந்த தெனவெதிர்ந் துருமி
னொலியெழ வுடற்றினர் வெருண்டே.

(இ-ள்) என்று உரைத்து - என்று (சராசந்தன்) சொல்லி, என் மகன் - என் குமாரனுகிய சகதேவன் என்பவன், அவனிக்கு அதிபன் - இப்பூவுலகத்துக்கு அரசன், என்று - என்று (யாவரும் அறியச்) சொல்லி, எழில் முடி புனைந்து - அழகிய கிரீடத்தைச் சூட்டுவித்து, (பின்பு) அமர்புரிவான் - போர் செய்யும் பொருட்டு, குன்று உறழ் இரு தோள் கொட்டி ஆர்த்து - மலைபோன்று வலிய இரு தோள்களையும் கையால் தட்டி ஆரவாரஞ் செய்து கொண்டு, எதிர்ந்தான் - எதிர்த்து நின்ருன் : காற்றின் மா மகனும் - வாயு

புத்திரனை வீமசேனனும், கூற்றெனச் சென்று - யமனென்று சொல்லும்படி போய், எதிர் பாய்ந்தான் - (அவனுக்கு) எதிரிலே பாய்ந்து விரைந்தான்: இருவரும் - வீமனும் சராசந்தனும், முட்டி - (ஒருவரோடொருவர்) தாக்கி, திறன் எலாம் - தங்கள் (யுத்தவகைத்) திறமைகளையெல்லாம், (காட்டி), (பின்னர்) முகில்கள் - மேகங்களும், கோள் அரிகள் - பற்றிக் கொள்ளுதலில் வல்ல சிங்கங்களும், ஒன்றொடொன்று எதிர்ந்ததென எதிர்ந்து - ஒன்றோடொன்று எதிரிட்டு நின்றனவென்று சொல்லும்படி எதிரிட்டு, உருமின் ஒலி எழ - இடிபோல முழக்கஞ்செய்து கொண்டு, வெருண்டு உடற்றினர் - அஞ்சும்படி மற்போர் புரிந்தனர்; (எ.று)

சராசந்தன் தன் புதல்வனுக்குப் பட்டங் கட்டிவிட்டு வீமசேனனோடு மற்போர் பொருமாறு தோளைத்தட்டி ஆரவாரஞ்செய்து கொண்டெதிர்ந்தனனென்பதாம். போரில் வெற்றி தோல்விகள் ஒரு தலையல்ல வாதலால் யாக்கை நிலையாமையைக் குறித்து, போர்க்குச் செல்லுகையிற் புதல்வர்க்கு முடிசூட்டி வைத்துச் செல்லுதல், அரசரினியல்பு; அது, அரசன் போரிலிருக்கையில் இராசாங்க காரியங்களைப் பார்த்தற்கும் ஏற்கும். 'திறனெலாம்' என்றதன் பின் ''காட்டி'' என்பது இசையெச்சம். உறழ் - உவமவுருபு (19)

### 20. மூர்ச்சையடைந்த வீமன் தெளிந்து சராசந்தனுடலைக் கிழித்து எறிய, அது ஒன்றிப் போரிடல்.

பகலிர வினுமோர் பக்கமற் சமரம்
பலவகை யினுந்தமக் கொருவர்
நிகரிலை யெனநின் றுலகமு முயிரு
நிலைகெட மலைந்திரு வோரு
மிகவிளைத் திடும்போ தனிலனோர்ந் துணர்வு
வீமனுக் கருளின னவனும்
இகலரி யெனப்பாய்ந் தவனுடல் பிளந்தங்
கெறிந்தனன் பொருந்திவந் தெதிர்ந்தான்.

(இ-ள்) ஓர் பக்கம் பகல் இரவினும் - ஒரு பட்சம் (அதாவது பதினைந்து நாட்கள்), மல்சமரம்-மற்போரை, பல வகையினும் தமக்கு ஒருவர் நிகரிலை என நின்று - பலயுத்தவகைகளினும் தங்களுக்கு வேறொருவர் ஒப்பில்லையெனச் சொல்லுமாறு எதிர்த்து நின்று, உலகமும் உயிரும் நிலைகெட மலைந்து - பூவுலகமும் அதிலுள்ள உயிர்களும் நிலைகெட்டழியுமாறு போரிட்டு, இருவோரும் - இரண்டு பேர்களும், மிக இளைத்திடும் போது - மிகவும் களைத்துச் சோர்ந்து மூர்ச்சடையும் போது, அனிலன்-வாயுதேவன்; ஓர்ந்து-(அவர்கள்)

நிலைமையையறிந்து, வீமனுக்கு-வீமசேனனுக்கு மட்டும், உணர்வு அருளினன் - அறிவு தலைப்படும்படி உணர்ச்சியூட்டினான்: அவனும் - (மூர்ச்சை தெளிந்தெழுந்த) அந்த வீமனும், இகல் அரி எனப் பாய்ந்து - பகைமேற்செல்லும் சிங்கம் என்னும்படி பாய்ந்து, அவன் உடல் பிளந்து - அந்தச் சராசந்தன் உடலைக் கிழித்து இரு பிளவாக்கி, அங்கு-அவ்விடத்து, எறிந்தனன் - வீசியெறிந்தான்; (ஆனால்) பொருந்தி - அவ்விரு பிளவுகளும் பொருந்தி ஒன்றாக உயிர் பெற்றெழ, வந்து-(அந்தச் சராசந்தன்) மீளவந்து, எதிர்ந்தான் - எதிரிட்டான்; (எ.று).

பக்கம் - பட்சம்: 'திங்களொன்றினிற்பாதி' என்றார் வில்லியும். மற்சமரம் - மல்போர்: ஆயுதமின்றி உடல்வலிமை கொண்டு செய்யும் போர். சராசந்தவதம் இரவில் நிகழ்ந்ததென்று முதனூலால் விளங்கும். வாயுதேவன் தன் மகன் மூர்ச்சையடைந்ததைப் பார்த்து, அவனுக்கு மீளவும் ப்ரஜ்ஞை வந்து தெளிவுண்டாகுமாறு அருளினன் என்றார். கிருஷ்ணன் சொற்படி வீமன் தனது தந்தையான வாயுவை மனத்திற் கொண்டு அவனது தெய்விக வலிமையைப் பெற்றுச் சராசந்தனை வதைத்தனனென்று முதனூல் கூறும். ''இகலரியெனப் பாய்ந்து'' என்றதால் - சிங்கம் யானையைப் பிளந்திடுமாறு போல, வீமன் சராசந்தனைப் பிளந்தனனென்க. சராசந்தன் உடற்கூறுகள் மீண்டும் பொருந்தியமை ஜரை என்னும் கிராம தேவதையின் அருளாலென்க. (20)

**21. உடற்பிளவுகளை மாறியிடும்படி கிருஷ்ணன் குறிப்பிக்க, வீமன் அங்ஙனமே செய்தல்.**

மீளமுன் னையினு மெழுமடங் காக
விறலின்மற் சமர்புரிந் திபமேல்
ஆளியா மெனப்பாய்ந் தவனுடல் பிளந்தங்
கச்சுதன் காட்டிய குறிப்பால்
நீளடி முடியைச் செவ்வையி னிடாமல்
நிலமிசை மாறியிட் டண்ட
கோளமும் பிளக்க வார்த்தனன் வாயு
குமரன்மொய்ம் பமரரும் வியந்தார்.

(இ-ள்) மீள - மறுபடியும், முன்னையினும் - முன் மற்போரிட்டதைக் காட்டிலும், எழுமடங்காக - ஏழு மடங்கு பெருகும்படி, விறலின் - பராக்கிரமத்தோடு, மல் சமர் புரிந்து - மற்போரிட்டு, இபம் மேல் - யானையின் மேலே, ஆளியாம் என பாய்ந்து - சிங்கம் (பாய்வது) போலே பாய்ந்து, அவன் உடல் பிளந்து - அந்தச் சராசந்தனுடைய உடலைக் கிழித்து இரு பிளவாக்கி, அங்கு - அப்போது,

அச்சுதன் காட்டிய குறிப்பால் - கிருஷ்ணன் செய்து காட்டியதோர் வகையினால் (அவன் குறிப்பித்த விஷயத்தை யுணர்ந்து கொண்டு), நீள் அடி முடியைச் செவ்வையின் இடாமல் - காலையும் தலையையும் நீண்ட வகையில் செவ்வனே கிடக்கும்படி யிடாமல், நிலம் மிசை - பூமியின் மேல், மாறி இட்டு - (தலையும் காலும்) மாறுபட (அவ்வுடற் கூறுகளை) இட்டு, அண்ட கோளமும் பிளக்க ஆர்த்தனன் - உலக வுருண்டையின் மேன்முகடும் பிளவுபடும்படி ஆரவாரித்தான்: (அப்போது) வாயுகுமரன் மொய்ம்பு - வீமசேனனது வலிமையினை, அமரரும் வியந்தார் - தேவர்களும் அதிசயித்துப் பாராட்டினர்; (எ.று).

இங்கு நிகழும் வெற்றி தோல்விகட்கு ஏற்ப, வீமனுக்குச் சிங்கத்தையும், சராசந்தனுக்கு யானையையும் உவமை கூறினர். கிருஷ்ணன் ஒரு கோரையையெடுத்து வீமன் காண இரு கூருக் கிழித்து அவ்விரு பாதியையும் அடிநுனி மாறி இட்டுக் குறிப்பிக்க, அக்கருத்தை அச்செயலினால் வீமன் குறிப்பாக வுணர்ந்து சரா சந்தனுடற் கூறுகளை அங்ஙனம் தலையும் காலும் மாறுபடும்படி இட, அவை முன்போல ஒருங்கு கூடி எழ மாட்டா தொழிந்தன வென்க. அச்சுதன் - ஆச்ரிதர்களை நழுவவிடாதவன்: இடமறிந்து இச்சொல் இட்ட நயம் ஓர்க. (21)

**22. இது முதல் மூன்று கவிகள்—அருச்சுனன் வினவ, கிருஷ்ணன் சராசந்தனது வரலாற்றைக் கூறுதல்.**

கேசவன் றனைப்பார்த் தருச்சுனன் இவன்மெய்
கிழித்ததொன் றுயது மீட்டும்
பூசலிற் பிளந்து மாறியிட் டதற்பின்
பொன்றது முரையெனத் துவரை
வாசனு மொழிவான் அசுரர்தங் குலத்தி
னமரத னெனும்பெய ருடையோன்
மாசறு சண்ட கவுசிக முனியை
மகவிலை யருள்கெனப் பணிந்தான்.

(இ-ள்) அருச்சுனன்—கேசவன் தனை பார்த்து - கிருஷ்ணனைப் பார்த்து; இவன் மெய் கிழித்தது ஒன்றுயதும் - இவனது உடம்பைப் பிளந்த கூறுகள் ஒன்றுகச் சேர்ந்ததும், மீட்டும் - மறுபடியும், பூசலில் பிளந்து - போரில் கூறுபடுத்தி, மாறியிட்டதற்பின் - காலும் தலையும் மாறிப் பூமியிலிட்டபின், பொன்றதும் - அவையொன்றுது இறந்தொழிந்ததும், உரை - (என்ன காரணம் பற்றியெனக்) கூறு வாய், என - என்று வினவ, (அதற்கு) துவரைவாசனும் - துவாரகா

புரிவாசனுகிய கிருஷ்ணனும், மொழிவான் - (அந்த விவரத்தைக்) கூறுபவனுனுன்: அசுரர் தம் குலத்தின் - அசுரர்களின் வமிசத்திலே, அ - அந்த (பிரசித்தி பெற்ற), மாரதன் எனும் - பிருகத்ரதன் என்னும், பெயருடையோன் - பெயரைத் தரித்தவன், மாசறு-குற்ற மற்ற, சண்ட கவுசிக முனியை - சண்ட கௌசிக மகா முனிவனை (நோக்கி), மகவு இலை - எனக்குப் புத்திரப் பேறு இல்லை: அருள்க- அப்பேறு உண்டாகும்படி கிருபை செய்தருள்க, என - என்று வரம் வேண்டி, பணிந்தான் - வணங்கினுன்; (எ.று)

சராசந்தன் அசுராம்சமாய்ப் பிறந்தவனென்பது ஈண்டு அறிய வைத்தது. மாரதன் - மஹாரதன்: "மஹாரதன்", 'ப்ருகத்ரதன்' என்ற வடமொழிப் பெயர்களிரண்டும் பெருந்தேருடையவனென்று ஒரு பொருள் படுதல் காண்க. சந்திர குலத்துப் பூருவம்சத்தில் குரு வென்னும் அரசனது புத்திரர் மூவர். அவருள் சுதநுவென்பவனது மரபில் தோன்றியவன் உபரிசரவசு: அவன் குமாரன் இந்த ப்ருகத் ரதன் என்று அறிக. இச்சந்ததியரசர்கள் மகத தேசத்தை யாண்டு மாகதர் என்று பெயர் பெற்றனர். துவரை - துவாரகை யென்பதன் மரூஉ. அ - பிரசித்தி காட்டுவது. அருள்கென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (22)

23. அம்முனி வரனோர் மாங்கனி யளித்தான்
அதையவன் வகிர்ந்திரு வோராந்
தம்மனை வியருக் களித்தனன் அருந்தி
தாங்கிசூ லவளவள் பாதிச்
செம்மலைப் பயந்தார் மகதனெந் தெறிந்தான்
செழுநகர்ப் புறத்தவாய்க் கண்டு
வெம்மையோ டுண்பான் சரையெனு மரக்கி
விரைந்தெடுத் தனள்பொருந் தியவே.

(இ-ள்) அ முனிவரன் - அந்தச் சண்ட கௌசிக முனிவன், ஓர் மாங்கனி அளித்தான் - ஒரு மாங்கனியை (ப்பிருகத்ரதனிடம்) கொடுத்தான்: அதை அவன் வகிர்ந்து - அந்த மாங்கனியை அந்தப் பிருகத்ரதன் இருபிளவாக ஆக்கி, தம் மனைவியராம் இரு வோருக்கு - தனது மனைவியராகிய இருவர்க்கும், அளித்தனன் - (ஒவ்வொருவர்க்கு ஒரு பாதி கனி) கொடுத்தனன்: அருந்தி - அவற்றை அவ்விருவரும் உட்கொண்டு, சூல் தாங்கி - கருப்பம் தரித்து, அவளவள் பாதிச் செம்மலைப் பயந்தார் - ஒவ்வொருத்தி யும் பாதி பாதியாக ஆண் குழந்தையைப் பெற்றனர்: மகதன் -

மகத தேசத்தரசனாகிய பிருகத்ரதன், நொந்து - மனம் வருந்தி; எறிந்தான் - (தன் நகர்ப் புறத்து) எறியச் செய்தான்: (அப்பிளவுகள் இரண்டினையும்), செழுநகர்ப் புறத்தவாய்க் கண்டு - வளமுள்ள கிரிவிரச நகரத்தின் வெளியே கிடத்தலைப் பார்த்து, வெம்மையோடு - விருப்பத்தோடு, உண்பான் - தின்னும் பொருட்டு, சரை எனும் அரக்கி - ஜரையென்னும் ராட்சசி, விரைந்து எடுத்தனள் - வேகமாக வந்து கையில் எடுத்தாள்: (எடுத்தவுடன் இருபிளவுகளும்) பொருந்திய - பொருந்தி ஒன்றாயின; (எ.று)

ஓர் மாங்கனி - தனது வாசஸ்தானமாக இருக்கும் மாமரத்தின் கனி. மனைவியர் - காசி தேசத்தரசன் பெண்கள். அரக்கி - இவள் கிராம தேவதையாவள். "வெம்மை வேண்டல்" (தொல்: சொல்: உரி: 38). உண்பான் - பானீற்று வினையெச்சம். பொருந்திய - பன்மை வினைமுற்று. (23)

24. ஒன்றுபட் டிடல்கண் டதிசயித் தரக்கி
யுயிர்த்தவற் கிவன்சரா சந்தன்
என்றுரைத் தவனை நல்கின ளதனால்
இவ்வண மாயதென் றமலன்
நன்றுரைத் தன்ப னவன்றுணை தானும்
நரேசரைச் சிறைவிடுத் தவன்சேய்க்
கன்றர சுதவி யவன்பரித் தேரூர்ந்
தறன்மக னெதிர்கொள மீண்டார்.

(இ.ள்) அரக்கி - ஜரையானவள், ஒன்று பட்டிடல் கண்டு - இரு உடற் கூறுகளும் ஒன்றாகி இயைந்து உயிர் பெறக் கண்டு, அதிசயித்து - ஆச்சரியமுற்று, உயிர்த்தவற்கு - பெற்ற பிருகத்ரதனிடம், 'இவன் சராசந்தன்' என்று உரைத்து அவனை நல்கினள் - இந்த மகவு 'சராசந்தன்' எனப்படுவன் என்று சொல்லி அக் குழந்தையைக் கொடுத்தனள்: அதனால் — இவ்வணம் - இப்படி, ஆயது - (இந்த அதிசய நிகழ்ச்சி) ஏற்பட்டது, என்று — அமலன் நன்று உரைத்து - கிருஷ்ணன் விரிவுறச் சொல்லி, (பின்னர்) அன்பன் - அருச்சுனன், அவன் துணை - வீமன், தானும் - தானும் ஆக மூவரும் சேர்ந்து, நரேசரைச் சிறைவிடுத்து - (சராசந்தன் சிறையிலிட்டிருந்த) அரசர்களைச் சிறையினின்று விடுவித்து, அவன் சேய்க்கு - அச் சராசந்தன் பிள்ளையாகிய சகதேவனுக்கு, அன்று - அப்போது, அரசு உதவி - அந்த மகததேசத்து அரசாட்சியினைக் கொடுத்து, (பின்) அவன் பரித் தேர் ஊர்ந்து - அந்தச் சக தேவனது குதிரை கட்டின தேரினைச் செலுத்தி, (மூவரும்) அறன்

மகன் - தருமபுத்திரன், எதிர்கொள - (தங்களை) எதிர்கொண் டழைப்ப, மீண்டார்-இந்திரப் பிரத்த நகர்க்குத் திரும்பினர் ; (எ.று)

தன்னால் பொருத்தப்பட்டுப் பிழைப்பித்த காரணத்தால் ஜரா சந்தன் என்று பெயரிட்டு வளர்க்கும்படி அக்குழந்தையைத் தந்தை யாகிய பிருகத்ரதனிடம் கொடுத்துப் போயினள் ஜரையென்னும் கிராமதேவதை. ஜராஸந்தன் - ஜரையென்பவளாற் பொருத்தப் பட்டவன். 'அதனால் இவ்வண்ணம் ஆயது' என்றதன் தாற்பரியம்- முன் இரு பாதியாயிருந்தவை ஒன்றாகத் தெய்விகமாய் நேருக்கு நேராக வைத்துப் பொருத்தப்பட்ட உடம்பாதலால் போரிலும் பிரிந்து நேருக்கு நேராயிருந்த வளவிற் பொருந்திற்று என்றும், தலை கால்மாறி இடவே பொருந்திப் பயன்படுதற்கு வகையின்றிப் பொருந்தாது இறந்தது என்றுங் காண்க. "அரசு உதவி" என்றது- முன்னரே சராசந்தனால் முடிசூட்டப்பட்டிருந்த அரசினை உறுதிப் படுத்தியென்க. இனி, அரசர்களின் இராச்சியம் முதலிய செல்வம் யாவும் அவர்களை வென்றவர்க்கு உரியனவாய் விடுகின்ற முறைமைப் படி சராசந்தனைக் கொன்ற தமக்கு உரியனவாய் விட்ட அவனது அரசாட்சியை மீண்டும் அவன் மகனுக்கே தாம் அருளினாற் கொடுத்தல் விளங்க என்க. 'நன்று பெரிதாகும்' (தொல்: உரி: 47). வணம் - வண்ணம் என்பதன் தொகுத்தல். (24)

**25. இந்திரப்பிரத்தம் மீண்டபின் திக்குவிசயஞ் செய்தற்கு வரையறுத்தல்.**

பலவகை நிதியுங் கவர்ந்தவர் காட்டப்
பார்த்துவந் துதிட்டிரன் வியாதன்
சிலமுனி வரர்மன் னவர்பயி லவையிற்
செய்யவேள் வித்திசை வெல்வான்
நலனுறு மெனமுன் குணக்குமியான் வடக்கு
நகுலன்மேற் கிளவறெக் கணமுஞ்
செலவிடை விசயன் கேட்பவவ் வண்ணஞ்
செலுத்திமாற் றுவாரகை புகுந்தான்.

(இ-ள்) பலவகை நிதியும் - (சராசந்தனிடமிருந்து கொணர்ந்த) பல வகைப்பட்ட செல்வங்களையும், கவர்ந்தவர் - (அங்கிருந்து) கவர்ந்து கொண்டு வந்தவர்களான வீமன் முதலிய மூவரும் (இன்ன தின்னதென்று) காண்பிக்க, உதிட்டிரன் - தருமபுத்திரன், பார்த்து- அவைகளைப் பார்வையிட்டு, உவந்து - மகிழ்ந்து, - வியாதன் சில முனிவரர் மன்னவர் பயில் அவையில் - வியாசபகவான் சில முனிச்சிரேட்டர்கள் அரசர்கள் நெருங்கியிருக்கின்ற சபையில், - வேள்வி செய்ய - இராயசூய யாகத்தைச் செய்ய, திசை வெல்வான்

நலன் உறும் என - திக்கு விசயஞ் செய்தல் நன்மை பயக்கும் என்று சொல்ல, (அதனைக் கேட்டு உடனே) விசயன்-அருச்சுனன், 'முன்-எனக்கு முன் பிறந்தவனான வீமன், குணக்கும் - கிழக்குத் திசையும், யான் - நான், வடக்கு - வடக்கு திசையும், நகுலன் மேற்கு - நகுலன் மேற்கு திசையும், இளவல் - தம்பியாகிய சகாதேவன், தெக்கணமும் - தெற்கு திசையும், செல - (திக்கு விசயம் செய்து வரும்படி) போவதற்கு, விடை கேட்ப - விடை கொடுப்பீர்' எனத் தருமபுத்திரனைக் கேட்க, (அங்கிருந்த) மால் - கிருஷ்ணன், அவண்ணம் செலுத்தி - அங்ஙனமே போய் வரும்படி (நால்வரையும்) அனுப்பி, துவாரகை புகுந்தான் - (தன் நகராகிய) துவாரகைக்குச் சென்று சேர்ந்தான்; (எ.று).

திருமாலினது திருவவதார மூர்த்தியாகிய வியாசமா முனிவன் தத்துவஞானம் முதலியவற்றில் அனைவரினுஞ் சிறத்தலால், அவனைத் தலைமையாக வைத்துக் கூறினர். இராயசூயயாகஞ் செய்து ஸம்ராட் என்னும் பெரும் பெயர் பெறுதற்கு எல்லா வரசரையும் வென்று கீழ்ப்படுத்துதல் இன்றியமையாததாதலால், "வேள்வி செய்யத் திசை வெல்வான் நலனுறும்" என்றான். முன் - முன் பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். குணக்கும்+யான்—குணக்குமியான். "தன்னொழிமெய்ம் முன் யகரம் வர இகரம் துன்னியது". இந்த இகரம் அலகு பெறவில்லை. தெக்கணம் - தக்ஷிணம் என்பதன் சிதைவு. (25)

### 26. நால்வரும் திக்குவிசயத்துக்குச் செல்லல்-வீமன் கீழ்த்திசையிற் போரிடல்.

நால்வருந் தானை நாலுடன் றிசைகள்
நாலினு நாலிரண் டிபமும்
கால்வருந் திசையங் காந்திடு மரவும்
கலங்கவிண் டலம்பொடி போர்ப்பத்
தோல்வருங் கருவி முதலிய வியங்கள்
தொனிப்பச்சென் றனர்கள்வெள் ளிபத்தின்
மேல்வரு மகவான் மதிக்கக்கீழ்த் திசையில்
வீமன்சென் றருஞ்சமர் விளைத்தான்.

(இ-ள்) நால்வரும் - வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்ற நால்வரும், தானை நாலுடன் - நால்வகைச் சேனைகளுடன், திசைகள் நாலினும் - நான்கு திக்குகளிலும், நாலிரண்டு இபமும் - எட்டு யானைகளும், கால் வரும் திசை அங்காந்திடும் அரவும் - காற்று வீசுகின்ற எட்டுத் திசைகளிலும் வாயைத் திறந்து கொண்டிருக்கும் நாகங்களும், கலங்க - கலக்கமடையவும், விண் தலம் பொடி

போர்ப்ப - ஆகாயமுற்றும் சேனு தூளிகள் பரவிப் போர்க்கவும், தோல் வரும் கருவி முதலிய இயங்கள் - தோற்கருவியை முதலாகக் கொண்டு வருகின்ற வாச்சியங்கள், தொனிப்ப - ஒலிக்கவும், சென்றனர்கள் - (திக்கு விசயம் செய்யப்) புறப்பட்டுச் சென்ருர்கள்: (அவர்களுள்) வீமன்—, வெள் இபத்தின்மேல் வரும் மகவான் மதிக்க - வெள்ளானையாகிய ஐராவதத்தின் மேலேறி வருகின்ற இந்திரன் போற்றும்படி, கீழ்த் திசையில் சென்று - கிழக்குத் திசையில் போய், அருஞ்சமர் - அரிய போரை, விளைத்தான் - செய்தான்; (எ.று).

தானைநாலு - ரதகஜதுரகபதாதி. இபம் - யானை: அட்டதிக்கு யானைகளாவன-அவை கிழக்காதி முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம் எனப்படும். அட்டதிக்கு நாகங்களாவன - அவை அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகா பதுமன், வாசுகி என்பனவாம். இந்திரன் கிழக்குத் திக்குப் பாலகன். பொடி - சேனைகள் எழுப்பும் தூளி. இயங்கள் - தோற்கருவி, தொளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. (கஞ்சம் = காம்ஸ்யம்; வெண்கலம்; மிடறு - கண்டம், சாரீரம்), சென்றனர்கள் - பன்மை விகுதி மேல் விகுதி. பாம்புக்கு உணவு காற்ருகும். (26)

வேறு

**27. இதுமுதல் இரண்டு கவிகள் - வீமசேனன் திக்குவிசயஞ் செய்தலைக் கூறும்.**

வங்கங் கலிங்கங் குலிங்கமுதல்
வகுக்கும் பலதே யங்கடொறும்
பொங்கி யெதிர்ந்த நிருபர்தமை
பொருது முனைக டொறுமுருக்கி
அங்கங் கடிதாழ்ந் தபயமெனும்
அரசர் தமக்கா ருயிருதவி
எங்கும் பிணம்வீழ்ந் திடக்குருதி
யிரைக்குங் கடல்பாய்ந் திடமலைந்தான்.

(இ-ள்) வங்கம் கலிங்கம் குலிங்கம்—, முதல் - முதலாகி, வகுக்கும் - வகைப்படுத்திச் சொல்லுகின்ற, பல தேயங்கள் தொறும் - பல தேசங்களிலெல்லாம், பொங்கி எதிர்ந்த நிருபர்தமை - கோபித்து எதிரிட்ட வேந்தர்களை, பொருது - போரிட்டு, முனைகள் தொறும் முருக்கி - களங்கள் தோறும் அழித்திட்டு, (மற்றும்) அங்கு அங்கு அடி தாழ்ந்து - அந்தந்த முனைகள் தோறும் அடியில் வீழ்ந்து

வணங்கி, அபயம் எனும் அரசர் தமக்கு - "அபயம்" என்று சொல்லி வேண்டும் அரசர்களுக்கு, ஆர் உயிர் உதவி - (அவர்களது) அரிய பிராணனைக் கொடுத்துதவி, எங்கும் - எல்லா விடங்களிலும், பிணம் வீழ்ந்திட - (இறந்த) பிணங்கள் கீழ் வீழ்ந்து கிடப்ப, குருதி - இரத்த வெள்ளம், இரைக்கும் கடல் பாய்ந்திட - சப்திக்கின்ற கடலில் ஓடிப் போய்ப் பாயும்படி, மலைந்தான் - போரிட்டான்; (எ.று).

முருக்கி - முருங்கியென்பதன் பிறவினையான முருக்கு-பகுதி. 'அபயம்' என்பதற்கு - எங்களை அஞ்சாதேயென்று பாதுகாக்கத் தக்கவன் நீ என்றுவது, அஞ்சாதேயென்று உன்னால் பாதுகாக்கத் தக்கவர் நாங்கள் என்றுவது பொருள் கொள்க. அ+பயம்=அபயம்: வடமொழிச் சந்தி. இந்தச் செய்யுளில் வீமனது வென்றிச் சிறப்புக் கிளந்தபடி.

இது முதல் பத்துக் கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (27)

### 28. இதுமுதல் நான்கு கவிகள் - அருச்சுனன் வடக்குத் திக்குவிசயஞ் செய்தலைக் கூறும்.

வென்று கவர்ந்த மணிநிதியும்
வேந்தர் திறைதந் திடுநிதியும்
குன்ற மெனச் சேர்த் திபங்கண்மிசை
கொடுமா ருதிமீண் டனன்வடபாற்
சென்ற விசயன் மடங்கலெனச்
செருச்செய் திருப ரெனுமிபங்கள்
பொன்றும் படிவென் றிசைகொண்டான்
புலவோர் வின்மை புகழ்ந்திடவே.

(இ-ள்) வென்று - (கிழக்குத் திசை மன்னர்களை) ஜயித்து, கவர்ந்த - கைப்பற்றிய, மணி நிதியும் - இரத்தினங்களாலாகிய செல்வங்களையும், வேந்தர் - (கீழ்ப்படிந்த) அரசர்கள், திறைதந்திடு நிதியும் - கப்பமாகச் செலுத்திய செல்வங்களையும், குன்றம் எனச் சேர்த்து - மலைகளென்று சொல்லும்படி சேர்த்துக் குவித்து, இபங்கள் மிசை - யானைகளின் மேலே; கொடு - ஏற்றிக் கொண்டு, மாருதி - வீமசேனன், மீண்டனன் - (இந்திரப்பிரத்தத்திற்குத்) திரும்பி வந்து சேர்ந்தான்: வடபால் சென்ற விசயன் - வடக்குத் திக்கு நோக்கிச் சென்ற அருச்சுனன், மடங்கல் எனச் செரு செய்(து) - சிங்கமென்று சொல்லும்படி (வீரமாகப்) போரினைச்

செய்து, நிருபர் எனும் இபங்கள் பொன்றும்படி - (பகை) அரசர்கள் என்னும் யானைகள் இறந்தொழியும்படி, வென்று - (அவர்களை) ஜயித்து, புலவோர் - புலவர்கள், வின்மை - அவனது வில்லின் திறத்தை, புகழ்ந்திட-மெச்சும்படி, இசை கொண்டான்-கீர்த்தியைப் பெற்றான்; (எ.று)

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தியெய்துவென்ப, தஞ்செய் வினைமுடித்து" என்றது புறம். (27) மடங்கல் - சிங்கம்: பிடரிமயிர் மடங்கியிருப்பது பற்றி வந்த காரணப் பெயர். மடங்கலென - உவமை; என - உவம வுருபு. நிருபரெனும் இபங்கள் - உருவகம். வின்மை - மை விகுதி பெற்ற தொழிற்பெயர். 'செய்து' என்பது 'து' விகுதி கெட்டுச் 'செய்' என நின்றது. (28)

29. எந்தை வரையி லிமவரையி
லியாழ்கந் தருவர் கின்னரர்கள்
தந்த திறைகொண் டுயர்விந்தம்
ஏம கூடந் தனிநிடதம்
மந்த்ர கிரிமா லியநீல
வரைநீள் கந்த மாதனத்தோ
டெந்தக் கிரிக ளினுமிருப்போர்
இறைஞ்சித் திறைதந் திடவென்றான்.

(இ-ள்) எந்தை வரையில் - என் பெருமானாகிய சிவபிரானின் கைலாயகிரியிலும், இம வரையில் - இமய கிரியிலும், (இருக்கின்ற) யாழ்கந்தருவர் - யாழ்வாசித்தலில் வல்ல கந்தருவர்களும், கின்னரர்கள் - (பாடுதலில் வல்ல) கின்னரர்களும், தந்த - கொடுத்த, திறை கொண்டு - கப்பங்களைப் பெற்றுக் கொண்டு, (மேலும்) உயர் விந்தம் - பெரிய விந்தியகிரி, ஏமகூடம் - ஏமகூடமலை, தனிநிடதம்- ஒப்பற்ற நிஷதமலை, மந்த்ரகிரி - மந்தரகிரி; மாலியம் - மாலியவாந் என்னும் மலை, நீலவரை - நீலகிரி, நீள் கந்தமாதனத்தோடு - நீண்ட கந்தமாதன பருவதம் இவற்றோடு (ஒப்பவைத்து எண்ணக் கூடிய), எந்தக் கிரிகளினும் இருப்போர் - எந்த மலைகளிலும் இருக்கின்ற மன்னவர்கள், இறைஞ்சி - கீழ்ப்படிந்து வணங்கி, திறை தந்திட- கப்பங்களைச் செலுத்தும்படி, வென்றான் - ஜயித்தான் (விசயன்); (எ.று).

தாம் சிவபெருமானிடம் கொண்ட பக்தியை இவ்வாசிரியர் 'எந்தை' என்ற சொல்லால் வெளியிட்டார். இச்செய்யுளில் குறிக்கப் பட்டுள்ள ஏழுமலைகளையும் சப்தகுலகிரியென்பர். இவற்றுள் விந்திய கிரி இந்திரப்பிரத்தத்துக்குத் தெற்கிலுள்ளதாயினும் குலகிரிகளிற்

சேர்ந்ததாதலால் இங்குக் கூறப்பட்டது. விந்த்யம், ஹேமகூடம், நிஷதம், மால்யவாந், கந்தமாதநம் என்ற வடசொற்கள் விகாரப் பட்டன. விந்த்யம் - (சூரியஸஞ்சாரத்தைத்) தகைந்தது; (அகத்திய முனிவரால்) அடக்கப்பட்டது. ஹேமகூடம் - பொன்மயமான சிகரமுள்ளது. நிஷதம் - (தேவர்கள்) தங்கப் பெற்றது. மால்யவாந்- மாலையின் வடிவமுள்ளது. கந்தமாதநம் - மலர்மணத்தினால் மகிழ் விப்பது, நீலவரை - நீல நிறமானது. இங்கு, ஸப்தகுல பர்வதங் களிலுள்ளாரையும் அருச்சுனன் வென்றனன் என்றறிக. (29)

30. அண்ட மளக்கு மக மேருக்
கப்பா லணுகி யளவில்புகழ்
கொண்டங் கரசாண் டிடுமுத்தர
குருக்கள் மேன்மை யடக்கிகொலுஞ்
சண்ட வயிரங் கொளுமிவனேர்
சமர்செய் பவரியா ரெனவாண்மை
விண்டு முதலோர் துதிக்கநரன்
விசயத் தம்ப நாட்டினனே.

(இ-ள்) அண்டம் அளக்கும் மக மேருக்கு - ஆகாயத்தை அளக்குமாறு ஓங்கியுள்ள மகாமேருமலைக்கு, அப்பால் அணுகி - அப்புறத்தும் சென்று, அளவு இல் புகழ் கொண்டு - எல்லையற்ற புகழைப் பெற்று, அங்கு - அந்தப் பகுதியில், அரசாண்டிடும் - அரசாட்சி செய்து வருகின்ற, உத்தர குருக்கள் - உத்தர குருக்கள் என்னும் அரசர்களுடைய, மேன்மை அடக்கி - பெருமிதத்தை யடக்கி, விண்டு முதலோர் - தேவலோகத்து வாசிகள் முதலியோர், "கொலும் சண்டன் - கொல்லுந்தன்மையுள்ள யமனின், வயிரம் - தண்டாயுதத்தையே, கொளும் இவன்-இவன் கைக்கொள்ளும் (வீரனுவன்) : நேர் சமர் செய்பவர் யார் என - இவனுக்கு நேராக எதிர் நின்று போரிடுபவர் ஒருவருமிலர்" என்று; ஆண்மை - இவ் வருச்சுனனது வீரத்தன்மையை, துதிக்க - போற்றிப்புகழ, நரன்- அருச்சுனன், விசய தம்பம் - வெற்றித் தூணை, நாட்டினன் - (அவ் வுத்தர பூமியில்) நிறுத்தினான்; (எ.று).

ஜம்பூத்வீபத்தில் வடகோடியான குருவர்ஷத்தில் வசிக்கிற அரசர்கள் 'உத்தர குருக்கள்' எனப்பட்டனர். இவர்கள், ஜம்பூத் வீபத்தின் அதிபதியான ஆக்நீத்திர ராசனது புதல்வரொன் பதின்மரிற் குருவென்னும் அரசனது குலத்தவர். பாரதவர்ஷத்தில் சந்திர வம்சத்துக் குருவென்னும் அரசனது சந்ததியார்களான பாண்டவ துரியோதனாதியரும் குருக்களெனப்படுதலால், இந்தத் தட்சிண குருக்களினும் வேறுபாடு விளங்க 'உத்தர குருக்கள்'

என்றுரெனவும் கொள்ளலாம். மேன்மை - மேம்பாடு, பலம், பராக்கிரமம், வெற்றி, களிப்பு, செருக்கு. (30)

31. கொலைபோர் புரிகைம் மலைகோடி
குலவு மணிகண் மலைகோடி
அலைபோல் நடக்கும் பரிகோடி
ஆணிப் பசும்பொன் திரிகோடி
மலைபோ லிட்ட தேர்கோடி
வரிவில் விசயன் கொடுமீண்டான்
சிலைவே ளெழில்கொள் நகுலனுமேற்
றிசைமன் னவர்மேற் செருச்செய்தான்.

(இ-ள்) கொலை - கொல்லுந்தன்மையுள்ள, போர் - சண்டைகளை, புரி - செய்கின்ற, கைம்மலை - யானைகள், கோடி - கோடிக் கணக்கானவையாகும்: குலவு-விளங்குகின்ற, மணிகள்-இரத்தினங்களின், மலை-குவியல்கள், கோடி-கோடியாகும்: அலைபோல்-கடலினலைகளைப்போலே வரிசையாய் ஒரு சேர, நடக்கும் - நடந்து வரும், பரி - குதிரைகள், கோடி - கோடியாகும்: ஆணிப் பசும்பொன் - உயர்ந்தமாற்றுக் கொண்ட பசும் பொன்வகைகள், திரிகோடி - மூன்று கோடியாகும்: மலைபோல் இட்ட தேர்-மலைகளைப் போலே (போர்க்களத்தே) விட்டுச் சென்ற தேர்கள், கோடி-கோடியாகும்: (இவ்வாருக இவையனைத்தையும்) கொடு-உடன்கொண்டு, வரிவில் விசயன்-வரிந்து கட்டப்பட்ட வில்லையுடைய அருச்சுனன், மீண்டான் - (இந்திரப்பிரத்த நகரத்துக்குத்) திரும்பினுன்: சிலை வேள் எழில் கொள் நகுலனும் - கரும்பு வில்லையேந்திய மன்மதனின் அழகைக் கொண்ட நகுலனும், மேல் திசை - மேற்குத்திக்கிலுள்ள, மன்னவர்மேல் - அரசர்களின்மீது, செரு செய்தான் - போரைச் செய்தான்; (எ.று).

கைம்மலை - துதிக்கையையுடைய மலைபோன்ற யானை; அடையடுத்த உவமவாகுபெயர். குதிரைகளின் பிடரிமயிர் மடங்கி அலைபோலசைதலில் கடலினலைகளுக்கு உவமை. ஆணிப்பொன் - உயர்மாற்றுப் பொன். (மாற்று - தரம்) திரி-மூன்று: திரிபுரம் என்றவிடத்துப் போல. கொடு - கொண்டு: தொகுத்தல். (31)

32. **நகுலன் மேற்குத் திக்குவிசயஞ் செய்து வரல்.**

மதியா தமர்செய் மன்னவரை
வாளு டாளத் தானேவி
துதியா டரசர் தமதாவி
தொலையா தருளி திறைதந்த

நிதியா டகவெற் பெனக்கொண்டு
நெடுநீ ரனிகத் தொடுதுவரா
பதியா தவனைப் பணிந்துறையும்
பதிவந் தடைந்தான் பரிவல்லோன்.

(இ-ள்) பரிவல்லோன் - அசுவசாத்திரத்தில் வல்லவனான நகுலன், மதியாது - தன்னைப் பொருட்படுத்தாமல், அமர்செய் - போர்க்கு வந்து சண்டையிட்ட, மன்னவரை - அரசர்களை, வானுடு ஆள ஏவி - (இறக்கச் செய்து) சுவர்க்கத்தையாளும்படி யனுப்பி, (போரில்மடி வித்து என்றபடி) (பின்னர்) துதி ஆடு அரசர் தமது ஆவி தொலை யாது அருளி - தன்னைப் பணிந்து போற்றுகின்ற மன்னர்களது உயிரை வாங்காது (அவர்கட்கு) அருள் செய்து, (உயிரோடு விடுத்து என்றபடி), திறை தந்த நிதி அவர்கள் கப்பமாகச் செலுத்திய திரவியங்களை, ஆடகவெற்பு என கொண்டு - பொன்மலை யான மேருமலை என்று சொல்லும்படி பெற்றுக்கொண்டு, நெடு நீர் அனிகத்தொடு - மிக்க பெருஞ்சேனையோடு வந்து, துவராபதி யாதவனைப் பணிந்து - துவாரகாநகரிலுள்ள கண்ணபிரானை வணங்கி, (பின்பு) உறையும் பதி வந்து அடைந்தான் - தனது வாழிடமாகிய இந்திரப்பிரத்த நகரத்தை வந்து சேர்ந்தான் (எ.று).

வானுடாள ஏவி - பிறிதினவிற்சியணி. தான் - அசை. ஆடு - ஆடுதல் : செய்தல். ஆடகவெற்பு - மேருமலை : திறைப்பொருட் டொகுதியின் மிகுதியும் ஒளியுந்தோன்ற அதற்குப் பொன்மலையான மகா மேருகிரியை உவமை கூறினர். துவாரகாபுரி மேற்றிசையி லிருப்பதால் அங்கு வீற்றிருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணனைப் பணிந்து வந்தான் நகுலன் என்க. நகுலன் அசுவ சாஸ்திரத்தில் வல்லவ னென்பதை "வாம்பரிவடிவும் உரைதகு சுழிகளும் ஒளியும், பற்றிய நிறனும் கந்தமும் குரலும் பல்வகைக் கதிகளும் பிறந்த, சொற்றகு நிலனும் ஆயுவும் உணர்வேன் துயருறுபிணிகளும் தவிர்ப்பேன்" என்று விராடராசனை நோக்கி அவன் கூறியதால் உணரலாம் : (வில்லி பாரதம் : விராட : நாடு கரந்துறை : செ : 23). (32)

**33-36. இதுமுதல் நான்கு கவிகள்-சகதேவன் தெற்குத் திக்குவிசயஞ் செய்ததைக் கூறும்.**

தென்பாற் சாதே வன்சென்றத்
திசைமன் னவர்தஞ் செருக்கடக்கி
அன்பா லவர்தந் திடுந்திறைகொண்
டணுகி நீல னிடத்தவனூர்

தன்பாற் காவற் பெறுந்தழலோன்
தளங்கள் கொளுவத் தான்வெகுளா
துன்பாற் றியவத் தழலின்மிசை
தொடுத்தான் பிறையம் பவித்தானே.

(இ-ள்) சாதேவன் - சகாதேவன், தென்பால் சென்று-தெற்குத் திக்கினிடமாகச் சென்று, அ திசை மன்னர் தம் செருக்கு அடக்கி - அந்தத் திக்கிலுள்ள அரசர்களின் கர்வத்தையொடுங்கச் செய்து, (பின்னர்) அன்பால் - நட்போடு, அவர் தந்திடும் திறை கொண்டு - அம் மன்னர்கள் கொடுத்திடும் கப்பங்களைக் கொண்டு, (பிறகு) நீலனிடத்து அணுகி - நீலனென்னும் அரசனிடத்தை நெருங்கி, அவனூர் தன்பால் காவல் பெறும் தழலோன் - அவன் தலைநகராகிய மாஹிஷ்மதி யென்னும் பட்டணத்தைக் காத்துவருகின்ற அக்னி தேவன், தளங்கள் கொளுவ - தன் படைகளைச் சுட்டெரிக்க, தான் வெகுளா - தான் மிகவும் கோபித்து, துன்பு ஆற்றிய அ தழலின் மிசை - வருத்தத்தை மிகச் செய்த அந்த அக்னிதேவன் மீது, பிறை யம்பு தொடுத்தான் – அர்த்த சந்திர பாணங்களைத் தொடுத்து விடுத்து (அதன் மூலம்), அவித்தான் - அவனை அடக்குவித்தான்; (எ.று).

சகாதேவன் தென்திசையிலே பல மன்னரையும் வென்று பெருந்திரளான திறைப்பொருளை வாரிக்கொண்டு நீலனென் பானுடைய மாகிஷ்மதி நகரத்துக்குப் பொரச் சென்றான்: அந்த நகரத்துக்கு அக்னிதேவன் காவலாதலால், சகாதேவன் பொர வந்த போது அந்த அக்கினி, சகாதேவன் சேனைகள் யாவும் மயங்கும் படி புகையோடியங்கிச் சுட்டெரிக்க; அர்த்த சந்திரபாணங்களால் சகாதேவன் அவனை அடக்கினான் என்றவாறு. பிறையம்பு - பிறைச் சந்திரன் போல வளைவான நுனியையுடைய அம்பு: சந்திரன் போல அக்னியின் வெப்பத்தைத் தணிக்கும் தன்மையுள்ள அம்பு என்க. வெகுளா - செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினை யெச்சம். தொடுத்தான் அவித்தான் - முற்றெச்சம். (33)

34. செருக்கங் கழிந்தவ் வழன்முனியாய்ச்
செம்ம லெதிர்வந் தனனிறைநீ
எரிக்கும் வகையா தெனவழலோன்
இறைவன் றவமும் தன்வரமும்
உரைக்கும் பொழுதாங் கவனீலன்
உதவுந் திறைகொண் டுயர்விந்தக்
கிரிக்கங் கொருசா ரெழுகலிங்கங்
கெடுமா றுழக்கித் திறைகொண்டான்.

(இ-ள்) அ அழல் - அந்த அக்னிதேவன், அங்கு - அப்போது அவ்விடத்து, செருக்கு அழிந்து - தன் பெருமிதம் ஒழிந்து, முனியாய் - ஓர் அந்தணனாய், செம்மல் எதிர் வந்தனன் - சகாதேவனுக்கு எதிரே வந்து நின்றான்: (அவனை நோக்கி) இறை - தலைவனாகிய, நீ—,எரிக்கும் வகை யாது என - என் சேனைகளைச் சுட்டெரித்த விதமென்னை என்று (சகாதேவன்) கேட்க, அழலோன் - அக்னிதேவன், இறைவன் தவமும் - அரசனாகிய நீலனது தவத்தைப் பற்றியும், தன் வரமும் - தான் அவனுக்குக் கொடுத்த வரத்தைப் பற்றியும், உரைக்கும் பொழுது - சொல்லும் போது, அவன் - அச் சகாதேவன், நீலன் உதவும் திறைகொண்டு - நீலராசன் கொடுத்த கப்பங்களைக் கொண்டு; (பின்னர்) விந்தக் கிரிக்கு அங்கு ஒருசார் - விந்தியமலையினது ஒரு பக்கத்தைச் சார்ந்த, எழு கலிங்கம் - ஏழு வகைக் கலிங்க தேசங்களையும், கெடுமாறு - (போரில்) அழியுமாறு, உழக்கி - கலங்க வடித்து, திறை கொண்டான் - திறைப் பொருள்களை (அவ்வரசர்களிடம்) பெற்றுக் கொண்டான்; (எ.று).

அக்னிதேவன் நீலராசனது குமாரியினிடம் மிக்க காதல் கொண்டு அவளைப் பலவாறு அநுசரித்து விடாது தொடர்தலை யுணர்ந்த அந்நீலராசன் அக்கன்னிகையை அந்தண வடிவங் கொண்ட அக்னிதேவனுக்கு அளிக்க, அவளை மணஞ்செய்து கொண்ட அனற்கடவுள், அவ்வரசனது வேண்டுகோளின்படி வரமளித்து அங்கேயேயிருந்து அந்நகரத்தை வெல்ல வருபவர்களை யெரித்து வருகின்றனனென்ற வரலாற்று விவரத்தை முதனூலிற் காணலாம். மற்றும் அந்த அக்னிதேவன் கட்டளையால் நீலராசன் சகாதேவனையெதிர்கொண்டு உபசரித்துத் திறை கொடுத்தனனென முதனூல் கூறுகின்றது. கலிங்கமென்று பெயர் கொண்ட தேசம் ஒன்றல்லவென்றும், அவற்றில் ஒன்று ஏழுபகுப்புடையதென்றும் கூறுப. (34)

35. நலங்கொள் சென்னி கொங்கர்கன்னி
நாட்டோர் திறைகொண் டுயர்பொதிய
விலங்க லணுகிச் சாதேவன்
வீமன் புதல்வன் கடோற்கசனை
இலங்கைத் திறைகொண் டடைதியென
ஏவ அவன்போந் தரக்கரெலாங்
கலங்கப் பொருது வீடணன்பாற்
கவர்ந்தான் றிறைகள் கொணர்ந்தானே.

(இ-ள்) நலங்கொள் - பல நன்மைகளையும் கொண்ட, சென்னி- சோழவரசர், கொங்கர் - கொங்க நாட்டரசர், கன்னி நாட்டோர் - பாண்டிய நாட்டரசர், (இவர்களிடமிருந்து) திறை கொண்டு - திறைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, உயர் பொதிய விலங்கல் அணுகி - உயர்ந்துள்ள பொதிய மலையைச் சேர்ந்து (அகத்தியரை வணங்கி), சாதேவன் - சகாதேவன், வீமன் புதல்வன் கடோற் கசனை - வீமசேனனது புத்திரனாகிய கடோற்கசனை, 'இலங்கைத் திறை கொண்டு அடைதி' என ஏவ - இலங்கைத் தீவிலே சென்று (அங்குள்ள அரசர்களிடமிருந்து) திறைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு வா என்று கட்டளையிட்டு அனுப்ப, அவன் - அந்தக் கடோற்கசன், போந்து-சென்று, அரக்கர் எலாம் கலங்கப் பொருது- அங்குள்ள அரக்க வீரர்களெல்லாரும் மனங் குழம்பும்படி சண்டை யிட்டு, வீடணன்பால் - அவ் விலங்கைக்கரசனாகிய வீடணனிடத்தி லிருந்து, திறைகள் - கப்பப் பொருள்களை, கவர்ந்தான் - பெற்று, கொணர்ந்தான்-கொண்டு வந்து (சகாதேவனிடம்) சேர்ப்பித்தான்; (எ.று)

சென்னி - தலை; சோழராசனுக்குச் 'சென்னி' என்பது தலைமைப் பற்றி வந்த பெயரெனப்படும். பாண்டிய நாட்டுக்குக் ''கன்னிநாடு'' என்று பெயர் வந்ததன் காரணம் — கன்னியா குமரியெனப்படும் நதியையுடைமை. அன்றியும், மலயத்துவச பாண்டியனது மகளாய்ப் பிறந்தவளும் உமாதேவியின் அவதாரமு மாகிய தடாதகையென்று பெயர் பெற்ற மீனாட்சியம்மையென்ற கன்னிகையினால் ஆளப்பட்டமையென்றுங் கூறுவர். சகாதேவன் பொதியமலையையணுகியது - அகத்தியமாமுனிவரை வணங்கி அவரது ஆசிபெற என்க;

அரக்கரிடம் திறைவாங்குதற்கு அரக்கி பெற்ற பிள்ளையை யனுப்புதல் தகுதியென்ற கருத்தினால், கடோற்கசனை வரவழைத்துச் செய்தி கூறியனுப்பினான். கடோற்கசன் (வீமன் மகன்) தன்னை வேண்டிய காலத்து நினைக்கும்படியாகவும், அங்ஙனம் நினைத்த மாத்திரத்திலே தான் வந்து உதவுவதாகவும் பாண்டவர்க்கு வாக்கு தத்தஞ் செய்து போயினனாதலின், அங்ஙனமே இப்பொழுது சகாதேவன் நினைத்த அளவிலே வந்தனனென்றறிக. கடம்+ உத்கசன்=கடோத்கசன்: குணசந்தி பெற்ற பெயர். வீடணன் - விபீஷணன் என்பதன் சிதைவு. விபீஷணன் - பயங்கரனல்லாதவ னென்றும், (பகைவர்க்கு) மிகவும் பயங்கரனென்றும் காரணப் பொருள் பெறும்; இராவணனுக்குப் பின் ராக்ஷசராசனாகிய இவன் ஏழுசிரஞ்சீவியருள் ஒருவனென்றறிக. கவர்ந்தான் கொணர்ந்தான்- முற்றெச்சம். (35)

36. தன்னுற் கவர்ந்த மணிநிதியும்
தமையன் புதல்வன் கவர்மணியும்
பன்னுன் கென்னும் பொற்பனையும்
பரமோர் ஞானி கொடுமீண்டான்
பின்னேர் கொணர்ந்த திறைநோக்கிப்
பெட்புற் றியாகம் புரிந்திடுவான்
மன்னுந் தருமன் நிருபர்முனி
வரர்மா யனுக்குந் தூதுய்த்தான்.

(இ-ள்) தன்னுல் கவர்ந்த - தான் போரிட்டுக் கைக்கொண்ட, மணிநிதியும் - இரத்தின திரவியங்களையும், தமையன் புதல்வன் - தனது அண்ணனுகிய வீமனின் பிள்ளையான கடோற்கசன், கவர் - கவர்ந்து கொண்டு வந்த, மணியும்-இரத்தினங்களையும், பன்னுன்கு என்னும் பொற்பனையும் - பதினுன்கு என்னும் எண்ணிக்கையைக் கொண்ட பொன்மயமான பனைமரங்களையும், பரம் ஓர் ஞானி - மேலான தத்துவத்தை ஆராய்ந்தறிந்த ஞானியாகிய சகாதேவன், கொடு மீண்டான் - தன்னுடன் கொண்டு இந்திரப்பிரத்த நகருக்குத் திரும்பி வந்தான்: மன் ஆம் தருமன் - அரசனுகிய தருமபுத்திரன், பின்னேர் கொணர்ந்த திறை நோக்கி - தனக்குப் பின்பிறந்த தம்பியராகிய நால்வரும் (நாற்றிசையினின்றும்) கொண்டு வந்த திறைப் பொருள்களையெல்லாம் கண்ணுற் கண்டு, பெட்புற்று - களித்து விருப்பங் கொண்டு, யாகம் புரிந்திடுவான் - ராசசூய யாகத்தைச் செய்ய முனைந்தவனுகி, (அதற்காக), நிருபர் - (பிற) அரசர்கள், முனிவரர் - முனிச்சிரேட்டர்கள் இவர்களோடு மாயனுக்கும் - கண்ணபிரானுக்கும், தூது உய்த்தான் - செய்தி சொல்லி வரத் தூதுவர்களையனுப்பினுன்; (எ.று)

பதினுன்கு பொற்பனைமரங்களைக் கடோற்கசன் விபீடணனிட மிருந்து பெற்றுக் கொண்டான் என விவரம் அறிக. இந்தப் பனை மரங்கள் யாகத்தில் தோரணக் கம்பமாக நாட்டுதற்கு உரியனவாம் என்பதை முதனூலாலறிக. பொன் - அழகிய எனினுமாம். பன்னுன்கு - பதினுன்கு என்பது சிதைவுற்றது. பரம் - மேலான தத்துவம்: இறைவனே (ஈசுவரனே) எல்லாமும் என உணர்தல் சகாதேவன் தத்துவ ஞானத்திலும் சோதிடவுணர்ச்சியிலும் தேர்ந்தவனுதலால் 'ஞானி' எனப்பட்டான். இவன் ஞானி யென்பதை, மேல் கிருட்டினன் தூது போனவிடத்திலும், பாரதப் போர்க்கு முகூர்த்தம் வைத்துக் கொடுத்தவிடத்திலும் காணலாம் தூது - உயர்திணைப் பொருள் தரும் அஃறிணைச் சொல். (36)

## வேறு

**37. முனிவர்கள் அரசர்கள் முதலிய பலரும் வந்து சேர, பாண்டவர் அனைவரையும் வரவேற்றுக் கண்ணனை எதிர்கொள்ளச் செல்லுதல்.**

ஒற்றர்சென் றுரைப்ப வேத
முரைத்தவன் முதலா யுள்ள
நற்றவ முனிவர் வேதர்
நானிலத் தரசர் மற்றோர்
உற்றன ரவர வர்க்கங்
குபசரித் துதிட்டி ரப்பேர்
பெற்றவ னனுச ரோடெம்
பிரான்றனக் கெதிர்கொண் டானே.

(இ-ள்) ஒற்றர் சென்று உரைப்ப - (தருமன் விடுத்த) தூதுவர்கள் போய்ச் செய்தி சொல்ல, வேதம் உரைத்தவன் முதலாய் உள்ள நல் தவ முனிவர் - வேதங்களை வகுத்த வியாசர் முதலாகிய நல்ல தவத்தைச் செய்த முனிவர்கள், வேதர் - பிராம்மணர்கள், நானிலத்து அரசர் - பூவுலகத்து மன்னர்கள், மற்றோர் - பிற சனங்கள் அனைவரும், உற்றனர் - (இந்திரப்பிரத்த நகருக்கு) வந்து சேர்ந்தனர்: அங்கு - அந்நகரினிடத்து, அவரவர்க்கு - அவரவர் வரிசைக்குத் தகுந்தபடி, உபசரித்து - வழிபாடுகள் செய்து, (பின்பு) உதிட்டிரப் பேர் பெற்றவன் - தருமபுத்திர ராசன், அனுசரோடு - தன் தம்பியர் நால்வரோடும், (சென்று) எம்பிரான் தனக்கு - கண்ணபிரானை, எதிர் கொண்டான் - எதிர்கொண்டழைத்து வந்தான்; (எ.று)

வேதம் வகுத்த வியாசனை 'உரைத்தவன்' என்றது, உபசார வழக்குப்பற்றி. உதிட்டிரன் = யுதிஷ்டிரன் : போரில் நிலையாக நிற்பவன் என்று காரணப் பொருள்படும். தனக்கு - தன்னை: உருபு மயக்கம் : இனி, "பிரான்றனை யெதிர்கொண் டானே" என்றுமிருக்கலாம்.

இதுமுதற் பத்துக் கவிகள் -பெரும்பாலும் முதற் சீரும் நான்காம் சீரும் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழி நெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். இவற்றில் மூன்று ஆருஞ்சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (37)

**38. கண்ணன் வீதியிற் செல்ல அவனழகு கண்டு மாதர்கள் மயங்கி நிற்றல்.**

வாரணத் தேறி வெள்ளை
வண்ணனோ டெய்து மெங்கள்
நாரணன் வரவு கேட்டு
நாரியர் புனைந்து கொண்டு
தோரண மறுகுற் றன்னோன்
சுந்தரம் விழியா னோக்கிப்
பூரண களபக் கொங்கை
புளகெழ மயங்கி னாரே.

(இ-ள்) எங்கள் நாரணன் - எங்களது பெருமானாகிய கண்ண பிரான், வாரணத்து ஏறி - யானைமீது ஏறிக்கொண்டு, வெள்ளை வண்ணனோடு - வெண்மை நிறமுடைய பலராமனோடு, எய்தும் வரவு கேட்டு - (இந்திரப்பிரத்த நகரினை) அடைந்த வருகையைக் கேட்டறிந்து, நாரியர் - பெண்கள். புனைந்துகொண்டு - தங்களை அலங்கரித்துக் கொண்டு, தோரணம் மறுகு உற்று - தோரணங்கள் கட்டப்பட்ட வீதியில் வந்து நின்று, அன்னோன் - அந்தக் கண்ண பிரானுடைய, சுந்தரம்-அழகினை, விழியால் நோக்கி-கண் படைத்த பயனாகக் கண்டு, (காதலெழ அதனால்) பூரண களபக் கொங்கை-பருத்த சந்தனம் பூசப்பெற்ற தனங்கள், புளகு எழ-மயிர்க் கூச்செரிய, மயங்கினர்-செயலொழிந்து நின்றார்கள்; (எ-று.)

சுந்தரம்-அழகு. கொங்கை புளகெழல்-காமத்தால் தோன்றும் மெய்ப்பாடு. (38)

**39. கண்ணன் பாண்டவர்களுடன் குந்தியின் மாளிகை சேர்ந்து வணங்கிப் பின் வேத்தவை புகுதல்.**

தன்னெழில் நோக்கி மாதர்
தனித்தனி மதன னம்பால்
இன்னலுற் றுருகி வாழ்த்த
எதிர்கொள்பாண் டவரைப் புல்லி
அன்னவர்க் கன்னை யிற்புக்
கடிபணிந் தடியிற் றாழுங்
கன்னியர் தம்மை வாழ்த்திக்
கண்ணன்வேந் தவையிற் புக்கான்.

(இ-ள்.) மாதர்-பெண்கள், தன் எழில் நோக்கி - கண்ணனுகிய தனது அழகினைப் பார்த்து, தனித்தனி-ஒவ்வொருத்தியாக, மதனன் அம்பால்-மன்மத பாணத்தால், இன்னலுற்று - துன்பமடைந்து, உருகி-நெஞ்சு இளகி, வாழ்த்த-வாழ்த்து மொழிகளைக் கூருநிற்ப, கண்ணன் - கண்ணபிரான், எதிர்கொள் - தன்னையெதிர்கொண் டழைக்க வந்த, பாண்டவரைப் புல்லி-பாண்டவரைவரையும் கட்டித் தழுவி, (பின்னர்) அன்னவர்க்கு அன்னை இல் புக்கு - அவர்களின் தாயாகிய குந்தி தேவியின் மாளிகையினுட்புகுந்து, அடிபணிந்து— (தனக்கு அத்தையாகிய) அவளது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, (பின்) அடியில் தாழும் கன்னியர் தம்மை-தன்னுடைய பாதங்களில் பணிந்து வணங்கும் (திரௌபதி, சுபத்திரை போன்ற) மகளிரை, வாழ்த்தி-ஆசீர்வதித்து, வேந்தவையில்-இராச சபையில், புக்கான்-புகுந்தான். (எ-று.)

அன்னவர்க்கு அன்னை-நான்கனுருபு, முறைப்பொருளது. (39)

**40. கண்ணனுக்குத் தருமன் திறை நிதி காட்ட அவன் மகிழ்ந்து நிற்ப, அப்போது அவ்வேள்விக்குச் சில வேந்தர் வருதல்.**

அறைமுர சுயர்த்தோ னுங்கே
  யனுசர்கொண் டடைந்த பற்பற்
றிறைநிதி காட்ட நோக்கிச்
  சீதரன் மகிழ்ந்தான் வைகைத்
துறைவன்றன் புதல்வி யோடுஞ்
  சுதனெடுந் துருப தேயன்
பொறையுடை விராடன் குந்தி
  போசரு மடைந்திட் டாரே.

(இ-ள்) அறை முரசு உயர்த்தோன் - அடிக்கப்படுகின்ற முரசு எழுதப் பெற்ற கொடியை யுயரத் தூக்கிய தருமபுத்திரன், ஆங்கே - அப்போது, அனுசர் கொண்டு அடைந்த பல்பல் திறை நிதி காட்ட - தனது தம்பியர் நால்வரும் (திக்குவிசயஞ் செய்து) கவர்ந்து கொண்டு வந்து சேர்ந்த பல விதமான திறைப்பொருள் களாலாகிய செல்வத்தைக் காண்பிக்க, சீதரன் - கண்ணபிரான் கண்டு, மகிழ்ந்தான் - சந்தோஷமடைந்தான்: (இஃது இங்ஙனுக), வைகைத் துறைவன் - பாண்டிய மன்னனுகிய சித்திரவாகனன், தன்புதல்வியோடும் சுதனெடும்-தன் புத்திரியாகிய சித்திராங்கதை

யோடும் தன் பிள்ளையாகிய பப்புருவாகனனோடும், (வந்து சேர), (மற்றும்) துருபதேயன் - துருபதராசனும், பொறையுடை விராடன் - பொறுமை மிக்க விராடராசனும், குந்திபோசரும் - குந்திபோச மன்னரும், அடைந்திட்டார் - வந்து சேர்ந்தார்கள்; (எ.று)

வைகை பாயும் பாண்டிய நாட்டு மன்னனாதலின், 'வைகைத் துறைவன்' என்றது. (40)

41. சராசந்தன் மகனான சகதேவன், துரியோதனாதியர், சித்திரரதன் முதலியோர் அவ்வேள்விக்கு வருதல்.

படுசரா சந்தன் சேயும்
பாந்தள்கே தாதி யோரும்
அருகடற் றானை யோடு
மடைந்தனர் மாயன் றன்பால்
சுடுசர முணர்ந்தன் றீந்த
துரகமைந் நூற்றி னோடும்
இடுபணி மவுலி சித்திர
விரதன்கொண் டெய்தி னானே.

(இ-ள்) படு - இறந்த, சராசந்தன் - சராசந்தனது, சேயும் - மகனாகிய சகதேவனும், பாந்தள்கேது ஆதியோரும் - சர்ப்பக் கொடியையுடைய துரியோதனன் முதலியோரும், அடுகடல் தானை யோடும்-(போரிற் பகைவரைக்) கொல்லுகின்ற கடல் போற்பரந்த சேனைகளோடும், மாயன் தன்பால் - கண்ணபிரானிருந்தவிடத்தே; அடைந்தனர் - வந்து சேர்ந்தனர்: (இஃது இங்ஙனாக) சுடுசரம் உணர்ந்து - ஆக்நேயாஸ்திரத்தைப் பற்றி (அருச்சுனனிடமிருந்து) உபதேசம் பெற்று அறிந்து, அன்று-அந்தநாளில், ஈந்த - (கற்றதற்கு ஈடாக அந்த அருச்சுனனுக்குக்) கொடுத்த, துரகம் ஐந்நூற்றினோடும்- ஐந்நூறு குதிரைகளோடும், மவுலி இடு பணிகொண்டு-தலையிலே தரிக்கின்ற ஆபரணமாகிய கிரீடத்தையும் கொண்டு, சித்திரவிரதன்- சித்திரரதன் என்னுங் கந்தருவன், எய்தினன் - வந்து சேர்ந்தான்; (எ.று)

சராசந்தன் மகன் சகதேவன், கண்ணன் வீமன் அருச்சுனன் என்பவர்களது அருளைப் பெற்று அரசனாய்ச் சிறந்தனனாதலின், அவன் வந்தமை கூறப்பட்டது. அவனோடு சராசந்தனால் சிறையி லிடப்பட்டுப் பின்பு கண்ணனால் சிறைவீடு செய்யப்பட்ட மன்னர் களும் அவ்வேள்விக்கு வந்தனரென்பதையும் கொள்க. கண்ணன்

அவர்களை விடுதலை செய்தபோது ''இனி நீவிர் யுதிட்டிரன் செய்யும் இராயசூய யாகத்துக்கு வந்து உதவுவீராக'' என்று நியமித்து விடையளிக்க, அதன்படியே வந்தனரென்க. இனி ''விசயன் றன்பால்'' என்று பாடங் கொள்ளின், அஃது மேல் வருவனவற்ருேடு நன்கு இயையும். சித்திரரதன் வரலாற்றை முன்னரேயே ஆதி பருவத்தில் ''சித்திரரதச் சருக்கத்தில்'' காணலாம். ஆக்கிநே யாஸ்திரம் கற்றதற்கு ஈடாக ஐந்நூறு குதிரைகளைக் கொடுப்பதாக வாக்களித்தபடியே சித்திரரதன் இப்போது அருச்சுனனுக்குக் கொடுக்க அவற்றைக் கொணர்ந்தான் என விவரம் கொள்க. பாந்தள் - பாம்பு, கேது - கொடி. அடுதானை - வினைத்தொகை. கடற்ருனை – உவமைத் தொகை. (41)

42. சனத்தொகை திரண்டு வர யாகசாலை வகுத்து வேள்வி தொடங்குதல்.

தொடுகடன் மணலின் மிக்க
தொகைபெறுஞ் சனர்வந் தெங்கும்
இடமற நெருங்கி வைக
விருக்குசொல் வண நாற் றிக்கும்
விடையொடு கலுழன் கோட்டி
விதித்தசா லையினீ டோவா
தடமுர சிரைப்ப வேள்வி
சமைத்திடத் தொடங்கி ளுரே.

(இ-ள்) தொடுகடல் மணலின் மிக்க - தோண்டப்பட்ட கடல் மணலினும் மிகுதியான, தொகை பெறும் - எண்ணிக்கையைப் பெற்ற, சனர் - மாந்தர்திரள், வந்து - இந்திரப்பிரத்த நகர்க்கு வந்து, எங்கும் இடம் அற நெருங்கி வைக - எப்பக்கமும் சிறிதும் இடமில்லாதபடி நெருக்கிக் கொண்டு தங்கியிருப்ப,— (அப்போது), இருக்கு சொல் வணம் – வேதத்திற் கூறியுள்ளபடி, நால்திக்கும் - நான்கு பக்கங்களிலும், விடையொடு - ரிஷபமென்னும் நான்கு செங்கற்களோடு, கலுழன் கோட்டி - கருடாகாரமாக ஓமகுண்டத் தைச் செய்து, விதித்த சாலையின் - அமைத்த யாகசாலையில், நீடு ஓவா தட முரசு இரைப்ப - பெரிதாக ஓழியாது பெருமுரசு ஒலிப்ப, வேள்வி சமைத்திட தொடங்கினுர் - யாகஞ்செய்தற் பொருட்டு ஆரம்பித்தார்கள்; (எ.று)

கடல் மணலின் மிக்க தொகை - உயர்வுநவிற்சி. இருக்கு - வேதம். வணம் - வண்ணம் என்பதன் தொகுத்தல். விடை -

ரிஷபம்: எருது. இங்கே 'வ்ருஷப' என்ற சொல்லை யுட்கொண்ட மந்திரத்தைச் சொல்லி, கருடவடிவின் அமைந்த ஓமகுண்டத்தின் நான்கு புறத்திலும் அமைக்கப்படுகிற நான்கு செங்கற்களைக் காட்டும். இந்தச் செங்கற்கள் ''வ்ருஷபேஷ்டகா'' எனப் பெயர் பெறும். கலுழன் - கருடன் என்ற வடசொல்லின் சிதைவு. கலுழன் கோட்டுதலாவது - அக்னிக்கு ஆதாரமான வேதிகையை, சிறகு களையும் புச்சத்தையும் பரப்பிக் கொண்டு கீழ்நோக்காகக் கிழக்கு முகமாயுள்ள கருடப் பறவையின் வடிவமாகக் கட்டியமைத்தல், இது கருடசயநமெனப்படும். சாலை - யாகசாலை மண்டபம். தடமுரசு - உரிச்சொற்றொடர். சமைத்தல் - இயற்றுதல், செய்தல். தொடுகடல் - வினைத்தொகை. ஓவா - ஓவாது என்ற வினையெச்சம் ஈறு கெட்டது. (42)

**43. திரௌபதி வேள்விக்கோலம்பூண, தருமபுத்திரன் தன் தம்பியர் முதலியோர்க்கு அந்தயாகத்திற் செய்யவேண்டுந் தொழில்களை நியமித்தல்.**

தெரிவையர் நெய்யிட் டாட்டி
திருவுடைக் கலன்கள் சாந்தம்
மருமலர் புனைந்த பின்துரோ
வதியொடு மரியைக் கங்கை
தருபவன் றனைத்தாழ்ந் தெய்துஞ்
சனர்க்குப சாரஞ் செய்வான்
உரியவர் தம்மைக் கூவி
யுதிட்டிர னுரைக்கின் றானே.

(இ-ள்) தெரிவையர் - தோழிப் பெண்கள், நெய் இட்டு ஆட்டி- எண்ணெய் தேய்த்து ஸ்நாநஞ் செய்வித்து, திரு உடை கலன்கள் சாந்தம் மருமலர் புனைந்த பின் - மங்கலகரமான ஆபரணங்கள் சந்தனம் வாசனையுடைய பூக்கள் இவற்றைக் கொண்டு அலங்காரஞ் செய்வித்த பின்பு, துரோவதியொடு - (அங்ஙனம் வேள்விக் கோலங் கொண்ட) திரௌபதியுடன், யுதிட்டிரன் - தருமபுத்திரன், அரியை - கண்ணபிரானையும், கங்கை தருபவன் தனை - வீடுமனையும், தாழ்ந்து - பணிந்து வணங்கி, (பின்) எய்தும் சனர்க்கு உபசாரம் செய்வான் - (வேள்வி காண) வரும் மக்களுக்கு வழிபாடுகள் செய்யும் பொருட்டு, உரியவர் தம்மைக் கூவி - தம்பிமார் போன்ற உரிய சுற்றத்தவரையழைத்து, உரைக்கின்றான் - சொல்லலாயினான்; (எ.று).

துரோவதி - திரௌபதியென்பதன் சிதைவு. கண்ணபிரானை முதலில் வணங்கியது என்னென்னில் - யஜ்ஞ மூர்த்தி, யஜ்ஞபதி, யஜ்ஞாங்கன், யஜ்ஞவாஹநன், யஜ்ஞசாதநன் என்பவை முதலாகப் பலவாற்றால் தான் கூறப்படும்படி யாகத்துக்குப் பலவகையாலும் உரிமை பூண்ட முழுமுதற் கடவுளான திருமாலின் திருவவதார மூர்த்தியாதலால். அதன் பின்பு வீடுமனை வணங்கினது, அவன் பெரிய பாட்டனாதலால். (43)

44. தருமன் நியமித்த தொழில்கள் கூறும்.

போனகம் வீமன் சாந்தம்
பொருவிலர்ச் சுனன டைக்காய்
மாநகு லன்சா தேவன்
வரம்பிலா நிதிகண் மன்னர்
கோனரு டான தியாகங்
கொடையுடைக் கன்ன னல்கு
வானர சுரைத்தா னந்த
வணமவர் வழங்கி னாரே.

(இ-ள்) வீமன் - வீமசேனன், போனகம் - உணவையும், பொரு இல் அர்ச்சுனன் - ஒப்பற்ற அருச்சுனன், சாந்தம் - சந்தனத்தையும், மா நகுலன் சாதேவன் - சிறந்த நகுல சகதேவர்கள், அடைக்காய் - வெற்றிலை பாக்குகளையும், மன்னர்கோன் - துரியோதனன், வரம்பிலா நிதிகள் - அளவற்ற செல்வங்களையும், கொடையுடை கன்னன் - கொடுக்குந் தொழிலில் புகழ்பெற்ற கர்ணன், அருள் தானம் - தயையோடு கூடிய தானத்தையும், தியாகம் - தியாகத்தையும், நல்குவான் - வழங்கும் பொருட்டு, அரசு உரைத்தான் - தருமபுத்திரன் கூறி நியமித்தான்; அவர் - அங்ஙனம் நியமிக்கப்பட்டவர், அந்த வணம்-(அந்தத் தருமன்) கூறியபடியே, வழங்கினார் - (கூடியுள்ள சனங்களுக்கு) கொடுத்தார்கள்; (எ.று)

சமையற்கலையில் வல்லவனாதலாலும், சுவையுடையடிசில் உண்பதில் பேருக்கங் கொள்பவனாதலாலும் வீமனைப் போனகம் வழங்குந் தொழிலில் நியமித்தான். சாந்தம் - பிறவாசனைத் திரவியங்களுக்கும் உபலட்சணம். அடை - வெற்றிலை; காய் - பழுக்காய், பாக்கு. தனரேகை படைத்தவனாதலின் துரியோதனனை நிதிகளுக்கு நியமித்தான்: லோபம் சிறிதுமின்றி வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுக்கும் வண்மையிற் கர்ணன் சிறந்தவனாதலால், தானமும் தியாகமும் அவன் வசத்தில் ஒப்பிக்கப்பட்டன. தானம்-சற்பாத்திரங்களிலே கொடுத்தல் என்றும், தியாகம் - வரையறையின்றிப்

பலர்க்குங் கொடுத்தல் என்றும் வேற்றுமையறிக: முன்னது புண்ணியக் கொடையென்றும், பின்னது புகழ்க் கொடையென்றும் கூறப்படும். வரம்பிலா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நல்குவான் - வானீற்று வினையெச்சம். (44)

45. தருமபுத்திரனும் திரௌபதியும் யாகவேதிகையில் வீற்றிருந்து சடங்குகளைச் செய்யத் தருமபுத்திரன் ஏழுநாள் ஓமஞ் செய்தல்.

அருந்தவ முனிவர் தம்மை
யறன்மக னிறைஞ்சி வேள்வி
வருந்திரு வலத்தில் வைக
மறைச்சடங் குள்ள தெல்லாந்
தெரிந்துமுக் கனல்வி ளக்கிச்
சேணுல கும்பர் வந்தங்
கிருந்தவி யருந்த நல்கி
எழுபக லோமஞ் செய்தான்.

(இ-ள்) அறன்மகன் - தருமபுத்திரன், அருந்தவ முனிவர் தம்மை இறைஞ்சி - அரிய தவத்தைச் செய்துள்ள முனிவர்களை வணங்கி, (பின்பு)வேள்வி வரும் திரு-ஓமாக்கினியினின்று தோன்றிய திரௌபதியானவள், வலத்தில் வைக - தனது வலப்பக்கத்தில் வீற்றிருக்க, மறைச் சடங்கு உள்ளது எல்லாம் தெரிந்து - வேத சாத்திர விதிப்படியுள்ள சடங்குகளையெல்லாம் செய்து, முக்கனல் விளக்கி - மூன்று வகை அக்கினிகளையும் ஜ்வலிக்க வைத்து, சேண் உலகு உம்பர் வந்து - வானுலகத்துத் தேவர்கள் (அழைக்க) வந்து, அங்கு - அந்த யாகசாலையிடத்து, இருந்து - எழுந்தருளியிருந்து, அவி அருந்த நல்கி - ஹவிஸாகிய உணவை அவர்கள் (திருப்தி கரமாக) உண்ணும்படி கொடுத்து, எழு பகல் - ஏழு நாள், ஓமம் செய்தான் - ஓமம் பண்ணினான்; (எ.று)

'அருந்தவமுனிவர்' என்றது, ஓமாக்கினியை வளர்த்தற்கு உதவியாகிற ப்ரஹ்மா அத்வர்யு உத்காதா ஹோதா முதலிய வைதிகர்களையும் உளப்படுத்தும். மறைச்சடங்கு - பரிஸ்தரணம் போன்றவை. முக்கனல் - காருகபத்தியம், ஆகவநீயம், தக்ஷிணாக்நி என்ற மூவகை வைதிகாக்கினிகள். இந்த அக்னிகள் பொருந்திய ஓம குண்டங்கட்கு அருகில் திரௌபதியைத் தன் வலப்பக்கத்தி லிருக்க வைத்தான் தருமன் என்க. தேவர்களையுத்தேசித்து

அக்னியில் மந்திர பூர்வமாக ஆகுதி செய்யப்படுகிற ஹவிசை அந்தத் தேவர்கள் அக்னிதேவன் மூலம் பெற்று உண்டு திருப்திப் படுகின்றனர் என்பது வழக்கு. அவி - தேவருணவு. உள்ள தெல்லாம் - ஒருமைப்பன்மை மயக்கம். முக்கனல்-மூன்ருகியகனல்: பண்புத்தொகை. பகல் - தினத்திற்கு இலக்கணை. (45)

### 46. தருமபுத்திரன் யாகமுடிவில் தானங்கள் வழங்கி, அவபிருத ஸ்நானஞ் செய்து, கண்ணபிரானை யடிபணிதல்.

தலம்புரி தவத்திற் ருேன்றுந்
    தருமனத் தழலை முக்கால்
வலம்புரிந் திறைஞ்சித் தானம்
    வழங்கிநீ ராடி வேள்வி
நலம்புரி முனிவர்க் கெல்லா
    நல்கிசோ டசதா னங்கள்
சலம்புரி கஞ்சன் றன்னைத்
    தடிந்தவ னடியிற் ருழ்ந்தான்.

(இ-ள்) தலம்புரி தவத்தில் தோன்றும் தருமன் - நிலவுலகத்தவர் செய்த தவத்தின் பயனுகத் தோன்றிய தருமபுத்திரன், அ தழலை - அந்த ஓமாக்கினியை, முக்கால் வலம் புரிந்து - மூன்று தரம் பிரதக்ஷிணஞ் செய்து - இறைஞ்சி - (அதனை) நமஸ்கரித்து, தானம் வழங்கி - (அந்தணர்க்கும் பிறர்க்கும்) தானங்கள் கொடுத்து, நீராடி - மங்கல ஸ்நானஞ் செய்து, (பின்) வேள்வி நலம்புரி முனிவர்க்கு எல்லாம் - யாகபூர்த்தி செய்து வைத்த இருடிகளெல்லார்க்கும், சோடச தானங்கள் நல்கி - பதினுறு வகையான பொருள்களைக் கொடுத்து, (பின்னர்) சலம்புரி கஞ்சன் தன்னை - வஞ்சனை செய்கின்ற (மாமனுகிய) கம்சனை, தடிந்தவன் - கொன்றவனுகிய கண்ண பிரானின், அடியில் தாழ்ந்தான் - திருவடிகளில் பணிந்து வணங்கினுன் ; (எ.று).

யாகமுடிவில் அதன் பூர்த்திக்கு அறிகுறியாகச் செய்கிற மங்கள ஸ்நானம் 'அவபிருதம்' எனப்படும். சோடசம் - பதினுறு. சோடச தானம் - பதினுறு வகையான கொடை: இனி, சோடச உபசாரங் களைக் குறிப்பதாகக் கொள்ளினுமாம். (46)

வேறு

**47. அக்கிரபூசைக்கு உரியவர் யாரென்று தருமன் வீடுமனை வினவ, அவர் வியாசனைக்கேட்க, வியாசன் கண்ணனுக்குக் கொடுக்கவென அதற்கு அனைவரும் உடன்பட, சிசுபாலன் மாறுபடுதல்.**

தருமனதி சுதனைபணிந் தக்கிர பூசை
தபனன்மதி கனன்மரபு தன்னிற் றேன்றும்
அரசருளியார்க் கியற்றுவதென் றுசாவ வன்னேன்
அருமறைவியா தனைக்கேட்ப வவன்மாற் காற்றென்
றுரைசெய்பொழு தெவருமவ்வா றுஞற்ற னன்றென்
றுரைத்தனரம் மொழிக்காற்ரு துள்ளங் கன்றி
இருவிழிசேந் துருத்தவையோர் திடுக்கிட் டேங்க
எந்தைதனைச் சிசுபாலன் இகழ்வ தானன்.

(இ-ள்) தருமன் - தருமபுத்திரன், நதிசுதனை - கங்கா புத்திரனாகிய வீடுமனை, பணிந்து - நமஸ்கரித்து, தபனன் மதி கனல் மரபு தன்னில் தோன்றும் அரசருள் - சூரியகுலம், சந்திரகுலம், அக்னிகுலம் இவற்றில் தோன்றுகின்ற மன்னர்களுக்குள், அக்கிர பூசை - முதற் பூஜை, யார்க்கு இயற்றுவது - எவருக்குச் செய்வது, என்று உசாவ - என்று கேட்க, அன்னேன் - அவ் வீடுமன், அரு மறை வியாதனை கேட்ப - அறிதற்கரிய வேதங்களை வகுத்தருளிய வியாசபகவானைக் கேட்க, அவன் - அவ் வியாசன், மாற்கு - திருமாலாகிய கண்ணபிரானுக்கு, ஆற்று என்று – செய்வாயாக என்று, 'உரைசெய் பொழுது-சொன்ன போது, எவரும்-எல்லோரும், அவ்வாறு உஞற்றல் - அப்படியே செய்தல், நன்று என்று - நல்ல தாகுமென்று, உரைத்தனர் - கூறினர்: (அப்போது) சிசுபாலன் - (சேதி நாட்டரசனாகிய) சிசுபாலன், அ மொழிக்கு ஆற்ருது - அந்த வார்த்தை பொறுக்காமல், உள்ளம் கன்றி - மனங் கொதித்து, உருத்து - கோபித்து, இருவிழி சேந்து - இரண்டு விழிகளும் சிவந்து, அவையோர் - (அங்குக் குழுமியிருந்த) சபையினேர், திடுக்கிட்டு ஏங்க - நடுக்கமுற்று இரங்கும்படி, எந்தைதனை - எம் பெருமானாகிய கண்ணபிரானை, இகழ்வது ஆனன் - பழிப்பதற்குத் தொடங்கினன் : (எ.று). அவன் பழித்த வகையினை மேலைச் செய்யுட்களிற் காண்க.

நதிசுதன் - ஆரும் வேற்றுமைத்தொகை: இனி, நதிக்குச் சுதன் என முறைப்பொருளில் வந்த நான்காம் வேற்றுமையாக

விரிப்பினுமாம், நதி கங்காதேவியாதலின். தபனன்மதிகனல் - உம்மைத்தொகை. ராஜபுத்திரர்களும் (Rajputs), சளுக்கியர்களும் (Chalukyas) அக்னிகுலத்தைச் சேர்ந்தவர் எனப்படுவதை ஈங்கு நினைக. அக்கிர பூசை - முதற்பூஜை. எந்தை - ஆசிரியரின் பக்தி தெரிப்பது. 'அரசருளியார்க்' - துன்னிய இகரம் அலகு பெற்றிலது.

இது முதல் பதினன்கு கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களாகவும் ஏனைய நான்கும் மாச்சீர் களாகவும் வந்த எண்சீராசிரியவிருத்தங்கள். (47)

**48-49. இரண்டு கவிகள்-சிசுபாலன் கண்ணனைக் குறித்துப் பலவாறு நிந்தித்தல்.**

இரவிமுத லியமரபி னரசர்க் காற்ரு
தியற்பூசை யிடையனுக்காற் றிடுவா
னெண்ணுங்
கருமமிக நன்றிவருண் முதன்மை நாடிற்
கவுரவர்நா யகனிருப்பக் காப்பை நாடில்
அரசரிலெண் ணிலரிருப்ப மூப்பை நாடில்
அடல்வசுதே வன்னிருப்ப வந்த ணர்க்குள்
பெரியவர்நா டுறிலாசா னிருப்ப வியாதன்
பேசியவா றழகென்னப் பின்னுஞ் சொல்வான்.

(இ-ள்) இரவி முதலிய மரபின் அரசர்க்கு - சூரியன் (சந்திரன், அக்னி) முதலாகிய வமிசத்தின் அரசர்களுக்கு, ஆற்ருது - செய் விக்காமல், இயற்பூசை-முதற் பூஜையை, இடையனுக்கு ஆற்றிடு வான் எண்ணும் - (பசு - மேய்க்கும்) ஆயனுக்குக் கொடுக்கும் படியாக நினைக்கும், கருமம்-காரியம், மிகநன்று-மிகவும் நன்ருயிருக் கிறது : (நன்றன்று என்றபடி) : இவருள் - இங்குக் கூடியிருக்கின்ற அவையோருள், முதன்மை நாடில்-எல்லாவற்றினும் முதலாயிருக்குந் தன்மையை ஆராய்ந்து பார்ப்பின், கவுரவர் நாயகன் - துரியோதன மகாராசன், இருப்ப-(இங்கே) வீற்றிருக்க, (இனி) காப்பை நாடில் - காக்குந்தன்மையின் சிறப்பினை ஆராய்ந்து பார்ப்பின், அரசரில் எண்ணிலர் இருப்ப - எண்ணற்ற பல மன்னர்கள் (இங்கே) எழுந்தருளியிருப்ப, மூப்பை நாடில்-வயது முதிர்ந்த பெரியோரை ஆராய்ந்துபார்ப்பின், அடல் வசுதேவன் இருப்ப-வலிமை பெற்ற வசுதேவர் (இங்கே) வந்திருப்ப, அந்தணர்க்குள்'பெரியவர் நாடுறில்- பிராமணர்களுக்குள் பெருமைவாய்ந்தவரை ஆராய்ந்து பார்ப்பின், ஆசான் இருப்ப-துரோணசாரியன் எழுந்தருளியிருப்ப, வியாதன்- இந்த வியாசமுனிவன், பேசியவாறு அழகு-சொன்ன விதம் மிகவும் அழகாயிருக்கின்றது: (அழகிதன்று என்றபடி) என்ன-என்று கூறி, பின்னும் சொல்வான்-மேலும் கூறலானன்; (எ.று).

'இருப்ப' என்ற வினையெச்சம் நான்கு முறையடுக்கிப் 'பேசிய வாறு' என்பதனோடு இயையும். 'மிகநன்று', 'பேசியவாறு அழகு' என்பன பிறகுறிப்புவகையால் 'நன்றன்று', 'அழகன்று' என்ற பொருளைக் காட்டும். (48)

49. மாதுலனா கியகஞ்சன் றன்னைக் கொன்றான்
மாமுலைப்பா லருத்தவரு மாதைச் செற்றான்
மீதுலகாள் பவன்பூசை தானே கொண்டான்
வெற்பெடுத்திந் திரசால வித்தை செய்தான்
ஆதுலங்க கோற்குடுவை கொண்டு மேய்த்தான்
ஆய்ச்சியரா லளைக்கரந்துண் டடிகள் பட்டான்
ஈதுலகோ ரியாரறியா ரிவனைப் பூசித்
திடிலரச ரரசாக்க மிசையென் னாமே.

(இ-ள்) (இந்தக் கண்ணன்) மாதுலனாகிய கஞ்சன் தன்னை-தன் மாமனாகிய கம்சனை, கொன்றான் - வதைத்தான்: மாமுலைப்பால் அருத்த வரும் மாதை - சிறந்த முலைப்பாலைக் கொடுத்தூட்ட வந்த பூதனை யென்ற பெண்ணை, செற்றான் - அழித்தான்; மீதுலகு ஆள்பவன் பூசை-தேவலோகத்தையாள்பவனாகிய இந்திரனுடைய பூசனையை, தானே கொண்டான்-(அவனுக்கில்லாதவாறு செய்து) தானே ஏற்றுக்கொண்டான் : (அவ் விந்திரன் வெகுண்டு மழை பொழிந்த காலத்து) வெற்பு எடுத்து-கோவர்த்தனகிரியைத் தூக்கிக் குடையாகப் பிடித்து, இந்திரசால வித்தை-மாயவித்தை, செய்தான்; ஆ - பசுக்கள்; துலங்க - நன்கு வளர்ந்து விளக்கமுறும்படி, கோல் குடுவை கொண்டு - கொம்பும் (கழியும்) சிறுபானையும் உடன் கொண்டு (கானஞ்சேர்ந்து), மேய்த்தான்:—அளை-வெண்ணெயை, கரந்து உண்டு - மறைமுகமாகத் திருடியுண்டு, ஆய்ச்சியரால் - இடைச்சியரால், அடிகள் பட்டான்-(மத்தினால்) அடிகள்பட மொத்துண்டான் : ஈது-இத்தகைய (இவனது) இழிசெயல்களை, உலகோர் யார் அறியார் - உலகத்தில் அறியாதவர் எவர் ? (அனைவரும் அறிவர்) : இவனை - இப்படிப்பட்ட நீசனை, பூசித்திடில்-முதற் பூஜை கொடுத்துக் கௌரவித்தால், அரசர் அரசு ஆக்கம் இசை என் ஆம்?- அரசர்களது அரசாட்சி, செல்வம், புகழ் இவை என்ன ஆகும் ? (பழுதுபடுமே); (எ.று).

'உதிரம் உறவறியும்' என்பதனையும் மறந்து சொந்த மாமனையே கொன்றான்; பெற்ற தாய் வடிவு கொண்டு உளமுருகிமார்போடணைத்து மிக இனிய பால் கொடுத்தவளை அப்பாலை மாத்திரம் உண்ணாது உயிரையும் உண்டு ஒழித்தது தகுதியோ? எனச் சிசுபாலன் கண்ணனை இகழ்ந்தவாறும்: இரக்கமின்றி இளமையிலேயே பெண்கொலை செய்தவனென்க. இந்திரபூசைக்குப் பிரதியாகப்

பர்வதபூசையைச் செய்விக்கச் சொல்லி, அங்ஙனமே இடையர்கள் பர்வத பூசை செய்து வரும்போது, தான் ஒரு தேவதாரூபமாய் அந்தக் கோவர்த்தன கிரியின் சிகரத்தின் மேல் வீற்றிருந்து அந்தக் கோபாலர்கள் இட்ட பலிகளையெல்லாம் தான் அமுது செய்தான். இங்ஙனம் பூசையையிழந்ததனாற் கோபமுற்ற இந்திரன் பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் இடையர்க்கும் இடைச்சியர்க்கும் அழிவு செய்யும்படி மேகக் கூட்டத்தையேவி இடைவிடாத பெருங்காற்று மழையைப் பொழிவித்தபோது, கண்ணன் கோவர்த்தன மலையை யெடுத்துக் கன்று காலிகளையும் இடையர்களையும் ஏழுநாள் காத்து நின்றான்: இதனை, 'மாயவித்தை செய்தான்' என்று சிசுபாலன் பழித்தான். கோல் - பசுக்களை மேய்க்கும்போது அங்குமிங்கும் ஓடாதபடி மறிப்பதற்கு ஓச்சும் கழி கொம்பு. குடுவை - சிறுபானை: சோறு எடுத்துப்போய் உண்பதற்காவது. என் ஆம் - பிறகுறிப்பு. அரசாக்கம் இசை - உம்மைத்தொகை. (49)

### 50. நிந்தித்த சிசுபாலனைத் தருமன் சாந்தப்படுத்த முயல, வீடுமன் தருமனை யதட்டுதல்.

என்றுபல வெம்மொழிசொற் றவையை நீங்கி
எழுந்தகல்பா தகன்கைபிடித் தியல்ஞானத்தை
யன்றிகுலம் பொருளோநங் குலஞ்செய் புண்யத்
தரியேநம் மினிலொருவ னானன் பூசை
நன்றியற்ற லர்ம்வெகுளி யொழிதி யென்று
நவின்றதரு மனையுரப்பி நதிசேய் சேதி
மன்றனைப்பார்த் திடையன்றான் பெறுவான் பூசை
மறுத்திடவல் லவருளரோ மண்ணி லென்றான்.

(இ-ள்) என்று பல வெம் மொழி சொற்று - என்று பல கொடிய நிந்தனை வார்த்தைகளைச் சொல்லி, அவையை நீங்கி - சபையை விட்டு நீங்கி, எழுந்து அகல் பாதகன் கைபிடித்து - எழுந்து வெளி யேற முயன்ற பாவியினது கையைப் பிடித்து நிறுத்தி, (தருமன்) இயல் ஞானத்தையன்றி குலம் பொருளோ - பொருந்திய மேலான அறிவைப் பார்ப்பதன்றி (ஒருவன்) பிறந்த குலத்தைப் பார்ப்பது மதிப்புடைத்தாகுமோ? (ஆகாது): நம் குலம் செய் புண்(ணி)யத்து- நமது க்ஷத்திரியகுலம் செய்த நற்பயனால், அரியே - திருமாலே, நம்மினில் ஒருவன் ஆனான் - நம்மவரோடு ஒருவனாக எண்ணும்படி அவதரித்துள்ளான்: (ஆகவே) நன்று பூசை இயற்றலாம் - நன்றாக அக்கிர பூசை செய்யலாம்: வெகுளி ஒழிதி-கோபத்தைத் தவிர்வாய்,

என்று—, நவின்ற தருமனை - சொல்லி (ச்சாந்தப்படுத்த முயன்ற) தருமனை, நதிசேய் - வீடுமன், உரப்பி - அதட்டி, (பின்பு) சேதி மன்தனைப் பார்த்து - சேதிநாட்டரசனாகிய சிசுபாலனை நோக்கி, 'இடையன்தான் பூசை பெறுவான் - ஆயனாகி மாடு மேய்த்த கண்ணன்தான் முதற் பூசை பெறப் போகிறான்: மண்ணில்-இந்தப் பூலோகத்தில், மறுத்திட வல்லவர் உளரோ - இதனை மறுத்து நிறுத்த வல்லமையுடையவர்கள் இருக்கின்றார்களோ? (இலரே), என்றான் - என்று கூறினான்; (எ.று).

கண்ணன் க்ஷத்திரிய சாதியில் உயர்ந்த சந்திர குலத்திலே வசுதேவன் மகனாய்த் தேவகி வயிற்றிற் பிறந்திருந்தும், தாழ்ந்த இடையர்சாதியில் நந்தகோபன் மனையில் அவன் மகனாக யசோதை வளர்க்க வளர்ந்தது மாத்திரத்தைக் கொண்டு, அவனைச் சிசுபாலன் இடையனென்ன இகழ்ந்தான் என்பது அறிய வேண்டுவது.

உரப்புதல் - வாயால் அதட்டுதல்: மன் - அரசன். ஒழிதி - முன்னிலை வியங்கோள் வினைமுற்று. உளரோ - ஓகாரம் எதிர்மறை. (50)

**51. சிசுபாலன் வீடுமன்மேல் போர்க்குவர, வீமன் அச்சிசுபாலன்மேல் பொர எழல்.**

ஆயிடைவீ டுமனைவெகுண் டடல்வில் வாங்கி
அமர்க்கெழுந்தான் சிசுபால னவன்மேற் கங்கை
சேயிகலி யெதிர்ந்திடலும் தருமன் வேள்வி
செய்யுமிடத் தமர்பொருதல் செவிதோ வென்று
தூயபிதா மகனைவிலக் கினனச் சேதி
தோன்றலர சரைநோக்கித் தொறுவன் வஞ்ச
மாயமதற் குள்ளாய தழகென் றார்த்தான்
மற்றவன்மே லழன்றெழுந்தான் வாயு மைந்தன்.

(இ-ள்) ஆயிடை - அந்தச்சமயத்தில், வீடுமனை - பீஷ்மனை, வெகுண்டு - கோபித்து, அடல் வில் வாங்கி-வலியவில்லை வளைத்து, சிசுபாலன்—, அமர்க்கு எழுந்தான் - போருக்குப் புறப்பட்டான்; அவன் மேல்—, கங்கை சேய் - வீடுமன், இகலி - மாறுபட்டு, எதிர்ந்திடலும்-எதிர்த்து வரவும், தருமன்-தருமபுத்திரன் (இதனைக் கண்டு), வேள்வி செய்யும் இடத்து-யாகம் செய்கின்ற சாலையிடத்து, அமர் பொருதல் - போரிடல், செவிதோ - செவ்வியதோ (பொருந்தாதே), என்று - என்று கூறி, தூய பிதாமகனை விலக்கினன் - புனிதனான பாட்டனாகிய வீடுமனை (ப்போரிடாதவாறு) தடுத்து

நிறுத்தினான்: (இஃது இங்ஙனுக), அ சேதி தோன்றல் - அந்தச் சிசுபாலன், அரசரை நோக்கி-(கூடியிருந்த) மன்னர்களைப் பார்த்து, "தொறுவன் - இடையனுடைய, வஞ்சம் மாயம் அதற்கு - மாய வஞ்சனைக்கு, உள்ளாயது - நீவிரனைவரும் ஆளாகியது, அழகு - நேரிது ! (நேரிதன்று)" என்று-என்று கூச்சலிட்டு, ஆர்த்தான் - ஆரவாரித்தான்: (அப்போது) வாயு மைந்தன் -வீமசேனன், அவன் மேல்-அந்தச் சிசுபாலன் மீது, அழன்று - கோபித்து, எழுந்தான்- போர் செய்ய எழுந்தான்; (எ.று).

தொறுவன் - இடையன். அழகு - பிறகுறிப்பு வகையால் அழகி தன்று என்ற பொருளது. செவி - செவ்வி என்பதன் இடைக்குறை. ஆ + இடை = ஆயிடை: சுட்டுநீண்ட விடத்து, யகரம் தோன்றிற்று. "தூக்கிற் சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே" என்பது விதி (நன்: உயிரீற்று: 13) (51)

**52-53. இரண்டு கவிகள் ஒருதொடர் : சிசுபாலன் வரலாறு கூறி வீடுமன் வீமனைப் போரிடாதவாறு தடுத்தல்.**

வதைத்திடுவ னெனக்கதைகொண் டெழுந்தோன் றன்னை
மறித்துபிதா மகனுரைப்பான் வரத்தாற் றீயோன்
உதித்திடுநாட் கண்மூன்றுங் கரநான் கோடும்
உதித்தனன்கண் டுயிர்த்தவர்துன் புறும்பே ரதும்பர்
விதித்தபகை வரிலொழியு மென்றூர் அத்தை
விறன்மகவைத் தம்முனெடும் விழைவிற் காண்பான்
மதுத்துளவோன் புகவொருநாள் மகவை யன்னுள்
மருகன்கை கொடுத்ததிக மறையக் கண்டாள்.

(இ-ள்) வதைத்திடுவன் - கொன்று போடுகிறேன், என - என்று கூவி, கதை கொண்டு - கதாயுதத்தைக் கையிற் கொண்டு, எழுந்தோன் தன்னை - எழுந்த வீமனை, பிதாமகன் - பாட்டனாகிய வீடுமன், மறித்து - தடுத்து, உரைப்பான் - சொல்வதானான்: தீயோன் - தீமையேயுருவாய சிசுபாலன், வரத்தால்-வரபலத்தால், உதித்திடும் நாள் - பிறந்த காலத்தில், கண் மூன்றும் கரம் நான் கோடும் உதித்தனன்-மூன்று கண்களோடும் நான்கு கைகளோடும் பிறந்தனன்: (அப்போது) உயிர்த்தவர் - பெற்ற தாய் தந்தையர், கண்டு - பார்த்து, துன்புறும் போது - வருத்தப்படும் போது, உம்பர் - தேவர், (அசரீரியாக) 'விதித்த பகை வரில் - இவனைக் கொல்லுதற் கென விதிக்கப்பட்டுள்ள பகைவன் வருவானாயின், ஒழியும் என்றூர் -

மிகையாயுள்ள ஒரு கண்ணும் இரண்டு கைகளும் மறைந்தொழியும்' என்றார்: (இஃது இப்படியாக) மதுதுளவோன் - தேன் சொரியும் துளபமாலையைத் தரித்த கண்ணபிரான், அத்தை விறல் மகவை - தனக்கு அத்தை முறையினளாகும் சுருதசிரவை என்பவளுடைய வலிய புதல்வனாகியஇக் குழந்தையை, தன் முன் ஓடும் - தனக்கு அண்ணனாகிய பலராமனோடும் வந்து, விழைவிற் காண்பான் - விருப்பத்தோடு காண்பதற் பொருட்டு, ஒரு நாள் - ஒரு தினம், புக - (அத்தை மனையில்) புக, அன்னாள் - அந்தச் சுருதசிரவை; மருகன் கை கொடுத்து-தனது மருமான் கையில் கொடுக்க, (அவன் அக்குழந்தையைத் தன் மடியில் வைத்துக் கொள்ள), அதிகம் மறைய கண்டாள் - மிகையான ஒற்றைக் கண்ணும் இரண்டு கைகளும் மறைந்து போகக் கண்டாள்; (எ.று).

சிசுபாலன் - வசுதேவனது உடன்பிறந்தவளும் அதனாற் கண்ணனுக்கு அத்தையும் சேதிதேசத்து அரசனாகிய தமகோஷனுக்குப் பத்தினியுமான சுருதசிரவையென்பவளுடைய மகன். எனவே இவனை உயிர்த்தவர்—தமகோஷனும் சுருதசிரவையும். இவன் பிறந்தபொழுது மூன்று கண்களையும் நான்கு கைகளையுமுடையவனாய்க் கழுதைக் குரலாற்புலம்பி ஆரவாரித்தான்; அதனையுணர்ந்த தாய்தந்தையர் 'இதுஎன்' என்று அஞ்சிக்கலங்கி இவனைக் கைவிடுவதாகக் கருதுகையில், அசரீரியாக "யாரால் இவனுக்கு மரணமோ அவன் இவனை மடியில் வைத்துக்கொள்ளுகையில் இவனது கைகளிரண்டும் நெற்றிக் கண்ணும் மறையும்" என்று வாக்கு எழுந்தது: அவ்வாறே பலரும் எடுத்துக்கொள்ள மறைபடாத கைகளும் கண்ணும், கண்ணபிரான் வந்து எடுத்தவளவிலே மறைபட்டன: அதனால் இவனைக் கொல்பவன் கண்ணனே என்று தாய் அறிந்தாள். அவள் கண்ணனை இரந்து கேட்ட வேண்டுகோளை மேலைச் செய்யுளிற் காணலாம். முன் - முன் பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். அதிகம்-மிகை: மிகையான பொருளுக்கு ஆகுபெயர். (52)

53. புத்திரனுக் கிகலிவனென் றகங்கொண் டைய!
புதல்வன்செய் பிழைநூறு பொறுத்தி யென்றுங்
கத்தையிரந் திடமருக னை மாயோன்
அவ்வணந்தந் துளனதனு லபவா தங்கள்
இத்தனையென் றெண்ணுகின்றான் பொறுநீ சீற்றம்
இனஞ்சிலபோ தெனப்பனகே திசைப்ப வீமன்
உத்தமன்சொற் படிநின்றான் சேதி வேந்தங்
குருத்துபல வசைமீட்டு முரைத்தார்த்
திட்டான்.

(இ-ள்) புத்திரனுக்கு - தனது பிள்ளையாகிய சிசுபாலனுக்கு, இவன் இகல் என்று-இந்தக் கண்ணன் பகைவனுவனென்று, அகங்கொண்டு - மனத்தினில் எண்ணி, அத்தை - சுருதசிரவை, ஐய!— பெரியோனே! புதல்வன்செய் பிழை நூறு பொறுத்தி என்று - என் பிள்ளை செய்கின்ற தவறுகளில் நூறுவரை நீ பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று, ஆங்கு-அப்போது, இரந்திட - கெஞ்சி வேண்டிக்கொள்ள, மருகனுன மாயோன் - மருமாணுகிய கண்ணனும், அவ்வணம் - அங்ஙனமே (அத்தை வேண்டியபடியே) தந்துளன் - வரம் தந்துள்ளான் : அதனுல்—,அபவாதங்கள் இத்தனை என்று எண்ணுகின்ருன் - பழிச்சொற்கள் இத்தனை எண்ணிக்கைகள் ஆயின என்று எண்ணிக் கொண்டிருக்கிருன் : (ஆகையால்) இனம் சிலபோது நீ சீற்றம் பொறு-இன்னும் சிலநேரம் நீ கோபிக்காது பொறுத்திருப்பாயாக : என - என்று, பனை கேது இசைப்ப - பனைமரத்தின் வடிவமெழுதிய கொடியையுடைய வீடுமன் சொல்ல, வீமன்—,உத்தமன் சொற்படி நின்ருன் -மேலோனுகிய வீடுமன் சொன்னபடியே போரொழிந்து நின்ருன் : அங்கு- அப்போது, சேதி வேந்து-சிசுபாலன், உருத்து-கோபித்து, மீட்டும்- மறுபடியும், பல வசை உரைத்து-பல பழிச்சொற்களைக் கூறி, ஆர்த்திட்டான்-ஆரவாரித்தான் : (எ.று).

தன் மகனுகிய சிசுபாலனைக் கொல்பவன் கண்ணனே யென்று அறிந்த சிருதசிரவை "யாது செய்யினும் என் மகனைக் கொல்லலாகாது" என்று கண்ணனை வேண்ட அந்த அத்தையின் நன்மொழிக்கு ஒருசார் இணங்கிய கண்ணன் "இவன் எனக்கு நூறு பிழை செய்யுமளவும் இவன் பிழையை நான் பொறுப்பேன்" என்று கூறியருளினுன். பின்பு சிசுபாலன் தனக்குக் கண்ணன் சத்துருவென்பதை இளமையிலேயே அறிந்து, அப்பெருமானிடத்து அளவிறந்த வயிரங்கொண்டிருந்தனன் என்று ஈண்டு அறியவேண்டிய விவரம். வீடுமன் பனைக்கொடியோன். (பனைக்கொடியோன் என்ற பெயர் பலராமனுக்கு வழங்குமிடமுமுண்டு). (53)

### 54. கண்ணனும் சிசுபாலனும் தேரிலேறிப்போர் தொடங்க, இருவர் படைகளும் போரிற்கலத்தல்.

மன்னவையின் மைத்துனன்புன் மொழிக ளெண்ணி
மாறுென்றும் புகலானுய் மதுத்து ழாயோன்
தன்னெடுந்தேர் புகுந்தவனை நோக்கி யென்னைச்
சாற்றியபுன் மொழியினிலை சமர்செய் தோர்வேம்
என்னவெகு ளலுஞ்சேதி பதிசீற் றத்தோ
டெஞ்சிலன்றேர் புகுந்தனன்மற் றிருவ ருந்தந்
துன்னனிக மொன்றினெடொன் றெதிர்ப்பச் சங்கந்
துவைப்பமுர சிரைப்பசமர் தொடங்கி ஞரே.

(இ-ள்) மன் அவையில் - இராசசபையில், மைத்துனன் புன் மொழிகள் எண்ணி - மைத்துனனாகிய சிசுபாலன் கூறிவரும் அற்ப பழிச்சொற்களைக் கணக்கிட்டு, மது துழாயோன் - தேன் பெருகும் திருத்துழாயைச் சூடும் கண்ணபிரான், மாறு ஒன்றும் புகலானாய் - பதிலொன்றும் சொல்லாதவனாய், தன் நெடும் தேர் புகுந்து - தனது பெரிய தேரின் மேல் ஏறிக்கொண்டு, அவனை நோக்கி - அந்தச் சிசுபாலனைப் பார்த்து, "என்னைச் சாற்றிய - என்னைப் பழித்த, புன் மொழியின் நிலை - அற்ப மொழிகளின் உண்மை நிலையினை, சமர்செய்து - நாம் இருவரும் போரிட்டு, ஓர்வேம் - உணர்வோம்", என்ன - என்று கூறி, வெகுளலும் - கோபித்தவுடன், சேதிபதி - சிசுபாலன், எஞ்சிலன் - குறையாதவனாய் (மிஞ்சியவனாய்), சீற்றத் தோடு - மிக்க கோபத்தோடு, தேர் புகுந்தனன் - தனது தேரில் போரிட ஏறிக்கொண்டான்: மற்று - பின்பு, இருவரும் - இரண்டு பேரும், தம் - தங்களது, துன் அனிகம் - நெருங்கிய சேனைகள், ஒன்றினொடு ஒன்று எதிர்ப்ப - ஒன்றோடொன்று மோதிக் கொள்ள, சங்கம் துவைப்ப - சங்க வாத்தியங்கள் ஊதி முழங்க, முரசு இரைப்ப - முரசங்கள் பேரொலியெழுப்ப, சமர் தொடங்கினர் - போரைத் தொடங்கினார்கள்; (எ-று),

அத்தை மகனை 'மைத்துனன்' எனல் வழக்கு. சிசுபாலன் நூறு பிழை செய்யுமளவும் பொறுத்தருள்வதாக அவனது தாய்க்கு வாக்குதத்தஞ் செய்திருந்ததற்கு ஏற்பக் கண்ணபிரான் அவனது தூஷண வாக்கியங்களை யெண்ணித் தொகையிட்டுக் கொண்டே வந்து அவை நூற்றுக்கு மேற்பட்ட பின்பு பொறுக்கமாட்டாதவனாய் யாதொன்றும் பேசாமல் அவனையழிக்கக் கருதிப் போர்க்கு எழுந் தனன் என்றார். இவ்வாறு கண்ணபிரான் சிசுபாலனது நூறு பிழை களைப் பொறுத்தருளியது பற்றியே "பிழை நூறும் சான்றோர் பொறுப்பர்" என்ற நீதி வாக்கியம் வழங்கலாயிற்றென்ப. "க்ரியா கேவலம் உத்தரம்" என்றபடி வாயினாலொன்றுஞ் சொல்லாமற் காரியத்திலே வல்லமை காட்டுதல் பெரியோரியல்பாதலால், கண்ணன் வேறொன்றும் புகலானாகித் தேர்மேற்கொண்டான். எஞ்சுதல் - குறைதல், சுருங்குதல். எஞ்சிலன் புகுந்தனன் - முற்றெச்சம், (54)

### 55. இருவரும் செய்த போர்த்திறம்.

கற்றபல விஞ்சைதிறந் தம்மிற் காட்டிக்
கந்துகத்தே ரொடுதேர்போய் கதுவ வோட்டிச்
சொற்றுசவு ரியங்கடனு வாங்கி நாணி
தொனிபடுத்தி யனேகவிதத் தொடைக ளேவி

வெற்றியுமெய்த் தலுமின்றிச் சமமாய் வெம்போர்
வெற்பொடுவெற் பெதிர்ந்ததென வெகுண்டு
வான்பால்
உற்றசுர ரதிசயிப்ப வுயிர்கள் யாவும்
உகமுடிவோ வெனவயிர்ப்ப வுடற்றி னூரே.

(இ-ள்) (இருவரும்) கற்றபல விஞ்சை திறம் - தாங்கள் தேர்ந்த பல போர்வித்தை வகைகளை, தம்மில் காட்டி - தங்களுக்குள்ளே காட்டிக் கொண்டு, கந்துகத் தேரோடு - குதிரைகள் கட்டிய தேரோடு, தேர் போய் கதுவ - மற்ரெரு (பகைத்) தேர் போய் முட்டும்படி, ஓட்டி-செலுத்தி, சவுரியங்கள் சொற்று - வீர வாதங்கள் பேசி, தனு வாங்கி - வில்லை வளைத்து; நாணி தொனிபடுத்தி - நாண்கயிற்றினுல் டங்காரவொலி தெறித்தெழுப்பி, அநேக வித தொடைகள் ஏவி - பல விதமாக அம்புகளைத் தொடுத்து விடுத்து, வெற்றியும் எய்த்தலும் இன்றி - வெற்றியும் இளைப்புற்றுத் தோல்வியும் இல்லாமல், (இருவரும்) சமமாய் -ஒரு நிகராக, வெம்போர் - கொடிய போரை, வெகுண்டு - கோபித்து, வெற்பொடு வெற்பு எதிர்ந்தது என - மலையோடு மலை மோதினுற் போலே, வான்பால் உற்ற சுரர் அதிசயிப்ப - ஆகாயத்திலே (போரைக் காணவந்து) பொருந்திய தேவர்கள் வியக்கும்படியும், உயிர்கள் யாவும் உக முடிவோ என அயிர்ப்ப - ஜீவராசிகளெல்லாம் யுகாந்தகாலப் பிரளயமோ என்று சந்தேகிக்கும்படியும், உடற்றினுர்-செய்தார்கள்; (எ.று)

கந்துகம் - குதிரை. சவுரியம் - சௌரியம்: வீரம்: பிரதாபம். 'சொற்று' என்றதால், வீரப்பிரதாப வார்த்தைகள் பேசி யென்றபடி, தொடை - அம்பு. வெகுண்டு சமமாய் வெம்போர் ... அதிசயிப்ப அயிர்ப்ப உடற்றினுர் என இயையும். வெற்பொடு வெற்பெதிர்ந்த தென - இல்பொருளுவமை. தேவர்கள் விமானங்களிலேறிப் போர் காணுதற்கு வானத்திலே வந்திருப்பர் என்று கூறுவது மரபு. காட்டி, ஓட்டி, சொற்று, வாங்கி, படுத்தி, ஏவி - என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'உடற்றினுர்' என்ற முற்ருேடு முடிந்தன. (55)

**56. சக்கரத்தாற் சிசுபாலனைத் தலை துணிக்க, அவனது உயிர் கண்ணபிரானது திருவடியிற் சேர்தல்.**

இருவருமிவ் வணமிகல்செய் திடும்போ தும்பர்
ஏற்றிடுவான் பாவிதனை யெந்தை யெண்ணிப்
பொருவருமஞ் சக்கரத்தாற் சென்னி கொய்தான்
பொன்றினன்மெய் நின்றெழுந்தோர் பொலியுஞ்
சோதி

வெருவருமா லுயிர்க்குலமெண் டிசைவா னோடி
விமலனடிக் கமலமலர் மேவிற் றியாருங்
குருவருமச் சோதியெழுந் தரிதாள் சேர்ந்த
கொள்கையுணர்ந் தாச்சரியங் கொண்டார்
மன்னே.

(இ-ள்) இ வணம் - இந்தப்படியாக, இருவரும் - கண்ணனும் சிசுபாலனும், இகல் செய்திடும்போது - போர் செய்யும்போது, பாவி தனை - பாதகனாகிய சிசுபாலனை, உம்பர் ஏற்றிடுவான் - மேலுலகத்துக்கு அனுப்புமாறு, எந்தை - எம்பெருமானாகிய கண்ணபிரான், எண்ணி - நிச்சயித்து, பொருவு அரும் - ஒப்பற்ற, அம் சக்கரத்தால் - அழகிய சக்கராயுதத்தால், சென்னி - அவன் தலையை, கொய்தான் - அறுத்தான்; பொன்றினன் - இறந்தவனாகிய சிசுபாலனது, மெய் நின்று - உடம்பிலிருந்து, பொலியும் ஓர் சோதி எழுந்து - விளங்குகின்ற ஒரு ஒளி எழுந்து, உயிர்க்குலம் வெருவருமாறு - உயிரினங்கள் அஞ்சி நடுங்கும்படி, எண் திசை வான் ஓடி - எட்டுத்திக்குக்களிலும் வான வழியாகப் (பிரகாசிப்பித்துக் கொண்டு) ஓடி, (மீண்டு), விமலன் அடிக் கமலமலர் - கண்ணபிரானது தாமரைப்பூப் போன்ற மெல்லிய திருவடிகளை, மேவிற்று - அடைந்து சேர்ந்தது : யாரும் - (அங்குக் கூடியிருந்த) அனைவரும், குரு வரும் அ சோதி - நிறம் பொருந்தி வருகின்ற அந்த ஒளியானது, எழுந்து - மேலெழுந்து, அரி தாள் சேர்ந்த கொள்கை உணர்ந்து - திருமாலாகிய கண்ணபிரானின் திருவடியினைச் சேர்ந்த முறைமையைக் கண்டறிந்து, ஆச்சரியம் கொண்டார் - வியப்புற்றார்கள்; (எ.று) மன், ஓ - ஈற்றசை.

சாபநிவிருத்திபெறுதற்குரிய காலம் குறுகியிட்டதனால் 'உம்பர் ஏற்றிடுவான் எண்ணினன்' எம்பெருமான் என்க. அரிதாள் சேர்ந்தது என்றதால் - எம்பெருமானது திருவடியே வீடாயிருக்கு மென்ற கோட்பாடு இங்கு விளங்குகின்றது. பொன்றினன் - வினையாலணையும் பெயர். அடிக்கமலமலர் - உருவகம். மேவிற்றியாரும் குற்றியலிகரம். குரு - நிறம். "குருவும் கெழுவும் நிறனாகும்மே" என்றது தொல்காப்பியம். (சொல். உரி. 5) (56)

**57-59. இதுமுதல் மூன்று கவிகள்—ஒரு தொடர் : வியாச முனிவன் கூறிய சிசுபாலன் பழைய வரலாறு.**

வானதிதந் தவன்றருமன் முதலோர் மாயோன்
மாண்புபுகழ்ந் தவ்வொளியிவ் வரதன் பாதத்
தானவதி சயங்கேட்ப வியாதன் சொல்வான்
அமலனடித் தொழுதிடுவா னணிவை குந்தம்

போனதுரு வாசமுனி நெறிவி டாத
புகற்றுவார பாலகரைப் புவியிற் ரேன்ற
தானழன்று சபிப்பவஃ துணர்ந்து மாயோன்
சாபமொழி நாள்வினவத் தவத்தோன் சொல்
வான்.

(இ-ள்) வான்நதி தந்தவன் - வீடுமன், தருமன்—,முதலோர் - முதலியவர்கள், மாயோன் - கண்ணபிரானின், மாண்பு - மகிமைச் சிறப்புக்களை, புகழ்ந்து – பாராட்டிப் பேசி, (பின்பு) அ ஒளி - அந்தச் சோதியானது, இ வரதன் பாதத்து ஆன அதிசயம் கேட்ப - இந்த ஸ்ரீகிருஷ்ணனின் திருவடியில் சேர்ந்த ஆச்சரியத்தைப்பற்றிக்கேட்க, வியாதன் - வியாச பகவான், சொல்வான் - கூறத் தொடங்கினான்:

"அமலன் அடி தொழுதிடுவான் - குற்றமற்றவனான திருமாலின் திருவடிகளைத் தரிசித்துத் தொழும்பொருட்டு, அணி வைகுந்தம் போன துருவாசமுனி - அழகுபொருந்திய வைகுண்டத்திற்குச் சென்ற துருவாசமுனிவன், நெறி விடாத - தனக்கு உள்ளேபோக வழிவிடாது தடுத்த, புகல் துவாரபாலகரை - ஜயவிஜயர் என்று சொல்லப்படுகின்ற வாயில்காவலாளரை, தான் அழன்று - தான் கோபித்து, புவியில் தோன்ற சபிப்ப - பூமியில் பிறக்கும்படி சாபமிட, அஃது உணர்ந்து - அதனை யறிந்து, மாயோன் - திருமால், சாபம் ஒழிநாள் வினவ - (அவர்களது) சாபநிவிருத்திநாள் எப்போது எனக் கேட்ப, தவத்தோன் - அந்தத் துருவாசமுனிவன், சொல்வான் - கூறலானான்; (எ.று).

மாயோன் - கண்ணபிரான், திருமால் என்ற இரு பொருளிலும் ஈண்டு வந்துள்ள நயம் ஓர்க. 'மதியாதவன்கதிர் மின்மினி போலொளிர் வைகுந்தம்' ஆதலின், 'அணி வைகுந்தம்' என்றது. வைகுந்தம் = வைகுண்டம்: விஷ்ணுலோகம். "சாபத்தாலும் சாபமொழிதன்னால் வளருந்தவத்தாலும், கோபத்தாலும் பேர் படைத்த கொடிய முனிவன் துருவாசன்" என்னும்படி அம் முனிவன் மிக்க முன்கோபியாதலால், நெறிவிடாத துவாரபாலகரை உடனே சபித்தான். தவத்திற் சிறந்து ஆற்றலாற் பெரியரான முனிவர்கள் சபித்த சாபம் அவர்கள் தாமே நிவிருத்தி செய்தாலன்றி முழுமுதற் கடவுளாலும் நீக்கவொண்ணாது என்பது இங்கு "மாயோன் சாபம் ஒழிநாள் வினவ' என்ற விடத்து விளங்கும். வியாதன் சொல்லியது 'அமலனடித் தொழுதிடுவான்' (57) என்பதுமுதல் 'ஓர்ந்திடுமின்', (59) என்பதுவரையுள்ள சிசுபாலன் வரலாறு. (57)

58. அன்பரெனி லேழுபவத் திகலென் மூன்றில்
அணுகுவருன் பதமென்ன அமலன் கேளா
துன்புறுமற் றிருவரைநும் முளம்யா தென்ன
தொழுதிகலான் முப்பவத்திற் றுன்னு மாறு
நின்பதந்தந் தருளெனமா தவனவ் வண்ண
நேர்ந்திட்டா னசுரர்களாய் நிலத்தில் வந்து
வன்பிரணி யஞ்னிரணி யாக்க னாக
மருவுழிமா லாளரியாய் வதைத்தான் மன்னோ.

(இ-ள்) அன்பர் எனில்-அன்பையுடைய பக்தர்களெனில், ஏழு பவத்து - ஏழு பிறப்புப் பிறந்தும், இகல் என் - பகைமையுடைய விரோதிகளெனில், மூன்றில் - மூன்று பிறப்புப் பிறந்தும்; உன் பதம் அணுகுவர் - உமது திருவடியைச் சேர்வர், என்ன - என்று (துருவாச முனிவன்) கூற, அமலன் - திருமால், கேளா - கேட்டு, மற்று - பின்பு; துன்புறும் இருவரை-வருத்தமடைந்த துவாரபாலகர் இருவரையும், 'நும் உளம் யாது' என்ன - உங்களது கருத்து எது? என்று வினவ, (அவர்களிருவரும்) தொழுது - அத் திருமாலை வணங்கி, இகலான்-பகைவராகும் முகத்தான், முப் பவத்தில்-மூன்று பிறப்பெடுத்தே, துன்னுமாறு-வைகுந்தத்து வந்து சேருமாறு, நின் பதம் தந்தருள் என - உமது திருவடியைத் தந்தருள்வீராக என்று பிரார்த்திக்க, மாதவன் - இலக்குமிக்கு நாயகனாகிய திருமாலும், அ வண்ணம்-அப்படியே, நேர்ந்திட்டான்-வரங்கொடுத்தருளினான்: (அதன்படியே) நிலத்தில் - பூவுலகத்தில், அசுரர்களாய் வந்து - இராக்கதர்களாய்ப் பிறந்து, வன்பு இரணியன் இரணியாக்கன் ஆக மருவுழி - வலிமைமிக்க இரணியகசிபு இரணியாக்ஷன் என்ற பெயர் களைப் பெற்று வாழுங்காலத்தில், மால் - திருமால், ஆளரியாய் - நரசிங்கமூர்த்தியாய் அவதரித்து, வதைத்தான்-கொன்றருளினான்; (எ.று) மன், ஓ - ஈற்றசை.

நரசிங்கமூர்த்தியாய் இரணியகசிபுவைக் கொன்றதை எடுத்துக் கூறினது, வராகமூர்த்தியாய் இரணியாக்ஷனைக் கொன்றதற்கும் உபலக்ஷணம், ஏழுமுறை அன்பராய்ப் பிறந்து சாபந்தொலையக் கருதுகின்றீரோ? மும்முறை பகைவராய்ப் பிறந்து சாபந் தொலையக் கருதுகின்றீரோ ? இவ்விருவகையில் நும் விருப்பம் யாது ? என்று வினவினான் திருமால். அதற்கு, அன்பராய்ப் பிறப்பதானால் ஏழு பிறப்பு எடுக்கவேண்டியதனாலும், அன்பராய்ப் பிறந்தால் விரைவில் அழிவு நேராததலின் காலம் நீட்டிக்கு மாதலாலும், அவர்கள் அன்பராய்ப் பிறத்தற்கு உடன்பட்டிலர். மும்முறை பகைவராய்ப் பிறந்து அப்பிறப்புத் தோறும் விரைவில் அத்திருமால் கையாலழிந்து வீடுபெறலாமென்பது அவர்களுட்கோள்.

என் -'என்னில்' என்பதன் ஈற்றழிவு, கேளா - உடன்பாட்டெச்சம். உளம்-கருத்து, முப்பவம் - பண்புத்தொகை, மா தவன் - மா-இலக்குமிக்கு, தவன் - கணவன் எனத் திருமாலைக் காட்டிற்று. ஆளரி-நரவரி : நரசிங்கம் : இந்த அவதாரம் முதல் யுகமான கிருத யுகத்தில் நிகழ்ந்தது. (58)

59. இலங்கையர சவனிளவ லான போதங்
கெந்தையிரா கவனுய்வந் திறுத்தான் இம்மை
விலங்கல்புயச் சிசுபாலன் கஞ்ச னாக
மேவினரோர்ந் திடுமினென வியாதன் கூறத்
துலங்குமுடி மன்முதலோர் முனிவர் மற்றோர்
துளவோன்மாண் பினைவியந்து துதித்தார் மாலும்
நலங்கிளர்பூ சனைமுனிவர்க் காற்று கென்ன
நடத்தினனவ் வணந்தரும னயந்தங் கம்மா.

(இ-ள்) இலங்கை அரசு-இலங்கைக்கு அரசனாகிய இராவணனாகவும், அவன் இளவல்-அவனுக்குத் தம்பியாகிய கும்பகர்ணனாகவும், (இருவரும்) ஆனபோது - பிறப்பெடுத்தபோது, அங்கு - அந்தப்பூவுலகத்து, (திரேதாயுகத்தில்) இராகவனாய் வந்து-ரகு குலத்தில் இராகவனென்ற பெயரோடு அவதரித்து, இறுத்தான்-அவ்விருவரையும் அழித்தான்; இம்மை இந்தத் துவாபரயுகத்தில் பூவுலகில், விலங்கல் புயம் சிசுபாலன் - மலைபோன்ற திண்ணிய தோள்களையுடைய சிசுபாலனாகவும், கஞ்சனாக - கம்சனாவும், மேவினர் - வந்து பிறந்திருக்கின்றனர் : ஓர்ந்திடுமின் - நீவிர் அறிந்துகொள்ளுங்கள்'', என-என்று, வியாதன் கூற - வியாசமுனிவன் கூறி முடிக்க,— துலங்கு முடி மன் முதலோர்-விளங்குகின்ற கிரீடத்தையணிந்துள்ள தருமன் முதலாய அரசர்கள், முனிவர் - இருடிகள், மற்றோர் - மற்றுமுள்ள மாந்தர்கள், (அனைவரும்) துளவோன் மாண்பினை - திருத்துழாய் மாலையைத் தரித்த கண்ணபிரானின் மாட்சிமையை, வியந்து-அதிசயித்துப் பாராட்டி, துதித்தார் - தோத்திரஞ் செய்தார்கள் : மாலும் - திருமாலாகிய கண்ணபிரானும், (தருமனை நோக்கி) நலம் கிளர் பூசனை - நன்மை பயக்கின்ற உபசார வழிபாட்டினை, முனிவர்க்கு ஆற்றுக என்ன - இருடிகளுக்குச் செய்வாயாக என்று கட்டளையிட, அவ்வணம்-அப்படியே, தருமன்-தருமபுத்திரராசனும், அங்கு - அவ்விடத்து அப்போது, நயந்து - விரும்பி, நடத்தினன் - (பூஜோபசாரங்களைச்) செய்தான்; (எ.று) அம்மா - வியப்பிடைச்சொல்.

இராகவன்—இராமன்: ரகுகுலத்தில் தோன்றியவன்: தத்தி தாந்தநாமம். விலங்கல்புயம்—உவமைத்தொகை. ஓர்ந்திடுமின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று. "அமலனடித் தொழுதிடுவான்" (57) என்று தொடங்கி, "ஓர்ந்திடுமின்" (59) என்றது வரை வியாதன் கூற்று. மன் - மன்னர். ஆற்றுகென்ன — வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (59)

**60. முனிவர்களும் கண்ணனும் பிற வேந்தரும் தத்தம் இடஞ்சேரத் துரியோதனாதியர் மட்டும் தங்கியிருத்தல்.**

ஆசிபுகன் றருந்தவர்தம் விபினஞ் சார்ந்தார்
அருங்கிளையோ டூர்புகுந்தான் அமலன் மற்றும்
பேசியமத் திரன்றுருப தேயன் மச்சர்
பெருமாஞ தியவரசர் பெயர்ந்தார் ஆடு
மாசுணகே தவனிளைஞர் மாமன் கன்னன்
மாநகரெய் தாமலவண் மருவ வைவர்
ஏசினிலம் புரந்திடுநாள் நிகழ்ந்த பான்மை
இறைவ! கேள் எனமுனிவ னிசைப்ப தானுன்.

(இ-ள்) அருந்தவர் - இருடிகளெல்லாரும், ஆசி புகன்று - ஆசீர்வாதங்கள் சொல்லி அநுக்கிரகித்து, தம் - தங்களுடைய, விபினம் - தபோவனங்களை, சார்ந்தார் - அடைந்தார்கள்: அமலன் - கண்ணபிரான், அருங்கிளையோடு - அரிய தமது சுற்றத்தவரோடு, ஊர் புகுந்தான் - (தனது) துவாரகாபுரியை அடைந்தான் : மற்றும் - மேலும், பேசிய - சொல்லப்படுகின்ற, மத்திரன் - சல்லியன், துருபதேயன் - துருபதராசன், மச்சர்பெருமான் - விராடன், ஆதிய அரசர் - முதலோரான மன்னர்களும், பெயர்ந்தார் - (தத்தம் நகர்) போய்ச் சேர்ந்தார்கள்: (ஆனுல்) ஆடு மாசுணகேது - அசைகின்ற பாம்புக்கொடியையுடைய துரியோதனன், அவன் இளைஞர் - அவனது தம்பியர், மாமன் - சகுனி, கன்னன் - கர்ணன் (இவர்கள் மட்டும்) மாநகர் எய்தாமல் - தமது நகராகிய அத்தினபுரிக்குத் திரும்பிவாராமல், அவண் மருவ - அங்கேயே (இந்திரப்பிரத்த நகரில்) தங்கியிருப்ப, ஐவர் - பாண்டவர்கள், ஏசில்-இகழ்தலில்லாத படி (அனைவரும் புகழும்படி), நிலம் புரந்திடும் நாள் - பூமியைக் காத்துவரும் நாளில், நிகழ்ந்த - நடந்த, பான்மை - விருத்தாந்தத்தை, இறைவ! - ஜனமேஜயனே! கேள்-கேட்பாயாக, என-என்று, முனிவன் - வைசம்பாயனன், இசைப்பதானுன் - கூறலாயினுன்; (எ.று). - அவன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

விபினம் - காடு, தபோவனம்: வடசொல். கிளையோடு - பல ராமன் முதலியோரோடு. (60)

வேறு

### 61. தருமபுத்திரன் சம்பிரமத்தோடு வீற்றிருத்தல்.

முனிவர்புடை மொய்ப்பபுர வலரடியி றைஞ்சதுதி
மொழியவிர வலர்ம திகுடை
வனிதையர் நிழற்றகவ ரித்தொகைய சைப்பவிசை
வரிசையினி யம்ப வமரர்
பனிமலரு குப்பவிளை யோர்கள்புடை நிற்பதுரு
பதன்மகளொ ருப்பு றமுற
மனுகலைக ளிப்பகல ஞெளிதரவ வைக்கணிறை
மணிகொடவி சுறுமி டையினே.

(இ-ள்) முனிவர் - இருடிகள், புடைமொய்ப்ப - பக்கங்களில் நெருங்கிச் சூழவிருப்ப, புரவலர் - மன்னர்கள், அடி இறைஞ்ச - தனது பாதங்களில் வணங்க, இரவலர் - யாசிப்போர்; துதி மொழிய- தோத்திரங்கள் சொல்லித் துதிப்ப, வனிதையர் - அழகிய பெண்கள், மதிகுடை நிழற்ற - சந்திர வட்டக் குடையைப் பிடிக்க, கவரித் தொகை அசைப்ப - சாமரைக் கற்றைக்ளை வீச, (மற்றும்) இசை - பாடல்களை, வரிசையின் - முறைமை வழுவாதபடி, இயம்ப - பாட, (அதுகண்டு) அமரர் - தேவர்கள், பனிமலர் - குளிர்ந்த மலர்களை, உகுப்ப - வானிலிருந்து சொரிய, இளையோர்கள் - தம்பிமார்கள் நால்வரும், புடை நிற்ப - பக்கங்களில் நின்று கொண்டிருப்ப, துருபதன் மகள் - திரௌபதி, ஒரு புறம் உற - ஒரு பக்கத்தில் (வலப் பக்கத்தில்) பொருந்தியிருப்ப, மனுகலை - மனு தர்ம சாத்திரம், களிப்ப - மகிழ்ச்சியடைய, கலன் ஒளிதர - (பூண்டிருந்த) ஆபர ணங்கள் ஒளிவிட்டு விளங்க, (இவ்வளவு சம்பிரமத்தோடு) அவைக் கண் - சபாமண்டபத்தினிடத்து, நிறை மணிகொள் தவிசு - நிறைய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற சிம்மாசனத்தில், உறும் - (தருமன்) எழுந்தருளியிருக்கும், இடையின் - சமயத்தில்; (எ.று) ''அரவ முயரிய நிருபன்... செலா'' என மேலைக் கவியோடு குளகமாய் இயையும்.

இனி, 'அவைக்கண்—, இறை - அரசனாகிய தருமன், மணி கொள்தவிசு இடையின் உறும்' என முற்றுக்கிப் பொருள் கொண்டு

முத்தகச் செய்யுளாகக் கருதலுமாம்: அஞ்ஞான்று, இடை - ஏழனுருபாகும். வனிதையர் செயல் - நிழற்றல், அசைத்தல், இயம்பல் மூன்றுமாகும். மனு கலை களித்தல்-மனுதர்ம சாத்திரத்தின் முறை பிறழாது தருமன் நாடு காத்தலால். கொள் + தவிசு = கொடவிசு: ''ணளமுன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே'' என்றது நன்னூல்.

இதுமுதல் சருக்க முடியும்வரையுள்ள ஐந்து கவிகள் - பெரும் பாலும் முதலைந்து சீர்கள் காய்ச்சீர்களாகவும் கடையிரண்டு சீர்கள் மாச்சீர்களாகவும் வந்த எழுசீராசிரியச் சந்த விருத்தங்கள். (61)

### 62. துரியோதனன் மயன் கட்டிய சபாமண்டபத்தின் அழகுகண்டு மதிமருண்டமை கூறும்.

அரவமுய ரியநிருப னனுசர்சவு பலனிரவி
யருள்குமர னருகு றசெலா
தருமனரி தவிசினுற மயனருள வைப்பெருமை
தனையுளம தித்து வருபோ
தொருபுடைப ளிக்கைபுன லெனவரைது கிற்கைகொடு
மொருபுடையு றுப்பு னலினை
மருவியப ளிக்கெனவ தற்கணடி வைத்துமவ
மதிகொடுந ஊைந்து ளனரோ.

(இ-ள்) அரவம் உயரிய நிருபன் - பாம்புக் கொடியையுயரத் தூக்கிய துரியோதனராசனுனவன், அனுசர் - தனது தம்பியர்கள், சவுபலன் - சகுனி, இரவி அருள் குமரன் - சூரிய புத்திரனுன கர்ணன், (இவர்கள்) அருகு உற - நெருங்கிப் பக்கத்தில்வர, செலா- சென்று, தருமன் அரிதவிசின் உற - தருமன் சிம்மாசனத்தில் எழுந் தருளியிருப்பவும் (அவனை மதியாது), மயன் அருள் அவைப் பெருமைதனை உளம் மதித்து - மயனுகிய அசுர சிற்பி நிர்மாணித்த சபாமண்டபத்தின் சிறப்புக்களை மனத்தில் வைத்துப் பாராட்டி, வரு போது - வருகின்ற சமயத்தில், ஒருபுடை பளிக்கை - ஒருபக்கத்தில் பளிங்கினுல் தொழில் செய்யப்பட்டிருந்த இடத்தை, புனல் என- (உண்மையான) தாமரைத் தடாகம் என்று, வரை - எண்ணி, துகில் கைகொடும் - தனது உடையைக் கையினுல் தூக்கிக் கொண்டு சென்றும், (பின்பு), ஒருபுடை உறும் புனலினை - ஒரு பக்கத்தில் உள்ள உண்மையான தாமரைத் தடாகத்தை, மருவிய-அமைக்கப் பட்ட, பளிக்கு என - பளிங்கினுலமைந்த வெற்றிடமென்று கருதி,

(மயங்கிச் சென்று), அதற்கண் அடி வைத்து - அத் தடாகத்து நீரில் அடியை வைத்து விழுந்து, நனைந்து - துகில் நனையப் பெற்றும், அவமதிகொடு - (பிறரால்) அவமதிக்கப்பட்டு, உளன் - இருந்தான்; (எ.று). அரோ-ஈற்றசை.

செலா - உடன்பாட்டு வினையெச்சம். 'உற' என்பதன் பின் உம்மை தொக்கது. இச்செய்யுளில் மயக்கவணி காண்க. (62)

### 63. தருமன் துரியோதனுதியர்க்குப் பற்பல சிறப்புக்கள் ஈந்து விடை கொடுத்தல்.

குலவுமுடி சென்னிவளை யாதவன்வ ளைந்துமிகு
குறைவினொ டெதிர்ந்தி டுதல்கண்
டுலகுடைய றன்குமர னருகுறவ ழைத்தவனை
யொளிர்தவிசி ருத்தி முகமன்
பலசொலிம ணிக்கலனொ டறுவையிர தங்களிறு
பரிவயவர் பற்பல கொடுத்
தலகிலத ளித்துதுணை வர்க்குமுன தத்திநக
ரணுகென விடுத்து ளனரோ.

(இ-ள்) குலவு - விளங்குகின்ற, முடி - கீரிடத்தைத் தரித்த, சென்னி-சிரசை, வளையாதவன்-(யார்க்கும்) தாழ்த்தியறியாதவனுன துரியோதனன், வளைந்து - (அவமதிப்பினுல்) தலை தாழ்ந்து, மிகு குறைவினொடு - மிக்க வருத்தத்தோடு, எதிர்ந்திடுதல் கண்டு - எதிரே வருதலைப்பார்த்து, உலகு உடை அறன்குமரன் - இந்தப் பூமியைத் தனதாகவுடைய தருமபுத்திரன், அவனை - அந்தத் துரியோதனனை, அருகுற அழைத்து - கிட்டே வரும்படி யழைத்து, ஒளிர் தவிசு இருத்தி-பிரகாசிக்கின்ற ஆசனத்தில் எழுந்தருளச் செய்து, முகமன் பல சொலி - உபசார வார்த்தைகள் பலவற்றைச் சொல்லி, மணிக் கலனொடு - இரத்தினங்கள் இழைத்த ஆபரணங் களோடு, அறுவை-ஆடைகள், இரதம்-தேர்கள், களிறு-யானைகள், பரி-குதிரைகள், வயவர் - காலாட் படையினர், பற்பல கொடுத்து - மிகுதியாகக் கொடுத்து, துணைவர்க்கும் - (கூட வந்த) தம்பியர் முதலியவர்க்கும், அலகு இலது அளித்து-அளவற்ற பொருள்களையும் கொடுத்து, (துரியோதனனை நோக்கி) உனது அத்திநகர் அணுக என-உன்னுடைய அத்தினபுரத்திற்குச் செல்க என்று (அன்புடன்) சொல்லி, விடுத்துளன் - விடை கொடுத்தனுப்பினுன்; (எ.று) அரோ - ஈற்றசை.

முதலடியில், துரியோதனன் வணங்காமுடி மன்னன் என்றது. இரதம் களிறு பரி வயவர் - நாற்படைகள். (63)

**64-65. இரண்டு கவிகள்—ஒருதொடர்: துரியோதனன் வழிதெரியாது திகைத்துமுட்டிக்கொள்ள, அது கண்டு வீமனெடு திரௌபதி இகழ்ச்சி செய்துசிரிக்க, அவன் வெட்கப்பட்டுத் தன் நகர் மீளல்.**

நீதிநிரு பன்விடைகொ டேகுமர வத்துவசன்
நேர்வழியை யாடி யெனவிட்
டோதுமொளி வட்டநெறி யாமெனபு குந்துமுடி
யுந்துகள்ப டச்சி ரமதை
மோதுபொழு தூதைமக னேடுகைபு டைத்தழலின்
மொய்குழன கைக்கு நிலவின்
சோதியின வன்வதன வாரிசமு கிழ்ந்திதய
சோர்வினெடு நாணு மளவில்.

(இ-ள்) நீதி நிருபன் விடைகொடு - தருமராசனிடம் விடை பெற்றுக்கொண்டு, ஏகும் - செல்கின்ற, அரவத்துவசன் - துரியோதனன், நேர்வழியை - சரியான வழியை (மயங்கி), ஆடி என விட்டு - கண்ணுடி (பளிங்கு) எனத் திகைத்துப் போகுதலை விடுத்து, (அதற்கு மாருக) ஓதும் ஒளிவட்டம் - (எல்லாராலும்) பேசப்படுகின்ற கண்ணுடியை, நெறியாம் என புகுந்து - சரியான வழியாகும் என்று கொண்டு செலப்புகுந்து, (அதனுல்) முடியும் துகள்பட - கிரீடமும் சிதறித் தூளாகும்படி, சிரமதை மோது பொழுது - தலையை முட்டிக்கொண்டபோது, ஊதை மகனேடு - காற்றின் மகனுகிய வீமசேனனேடு, அழலின் மொய்குழல் - ஓமாக்னியினின்று தோன்றிய திரௌபதி, கைபுடைத்து - கையைத் தட்டிக்கொண்டு, நகைக்கு - சிரிக்கும் சிரிப்புக்கு, (அச் சிரிப்பினெழுந்த) நிலவின் சோதியின் - நிலாவொளியினுல், அவன் வதன வாரிசம் முகிழ்ந்து - அந்தத் துரியோதனனின் முகமாகிய தாமரை கூம்பி வாடி, இதய சோர்வினெடு - மனத்தளர்ச்சியோடு, நாணும் அளவில் - வெட்கப்படும் சமயத்தில்; (எ.று) 'இகழ்ச்சி புரியும்' என மேலைக்கவியிற்குளகமாய் இயையும்.

ஆடி, ஒளி வட்டம் - கண்ணுடி. நேர்வழியும் கண்ணுடிபோலே பளபளக்கப் பிரதிபலித்தமையால் எது வழி எது கண்ணுடி என அறியாது திகைத்தபடி. இதில் மயக்கவணி காண்க. நிலவொளிக்குத் தாமரை குவிதல் இயற்கை. திரௌபதியின் பல்லினின்று எழுந்த புன்சிரிப்பொளிக்கு நிலவின் சோதி உவமை கூறப்பட்டதெனக் கொள்க. வதனவாரிசம் - உருவகம். (64)

65. அம்பகமி லற்குமக றந்தையினெ ழிந்துகொள
லாமெனவி கழ்ச்சி புரியும்
வம்புமுலை யோடுகதைத் தம்பியைத்தெ ழித்துதரு
மன்மகன டற்ப ரிவலோன்
தம்பியைவி டுப்பநெறி சென்றவன்றெ ரிப்பகிளை
தன்னொடிறை நாண்ட லை(க்)கொளா
தும்பிநக ருற்றனனு திட்டிரனெ ழுந்தரிவை
துணைவரொட கங்கு றுகினான்.

(இ-ள்) "அம்பகம் இலற்கு மகன் - கண்ணில்லாத குருடர்க்கு மகன் (இவன்) : தந்தையின் ஒழிந்து-தந்தையினின்று நீங்கும்படி, (அவன் சொத்தினை), கொளலாம் - இவன் கைக்கொள்ளுதலும் ஏற்றதே", என - என்று, இகழ்ச்சி புரியும்-ஏசுதலைச் செய்யும், வம்பு முலையோடு - திரௌபதியுடன், கதை - மிகைபடப் பேசுகின்ற, தம்பியை - வீமசேனனை, தருமன் மகன் - தருமபுத்திரன், தெழித்து- அதட்டி, (பின்பு) அடல் பரிவலோன் தம்பியை விடுப்ப - வலிமை யுடைய குதிரைகளைப் பற்றிய சாத்திரத்தில் வல்ல நகுலனுக்குத் தம்பியாகிய சகதேவனை (வழிகாட்டி வருமாறு) அனுப்ப, சென்று - (அங்ஙனமே) போய், அவன் - அந்தச் சகதேவன், நெறி தெரிப்ப - சரியான வழியைக் காட்டித்தர, இறை - துரியோதனன், கிளை தன்னொடு - தன் தம்பியர் முதலாய சுற்றத்தோடு, நாண் தலைக் கொளா - வெட்கம் மீதூரும்படி, தும்பிநகர் உற்றனன் - அத்தின புரியை அடைந்தான்; உதிட்டிரன் - தருமபுத்திரன், எழுந்து- ஆசனத்தினின்று எழுந்து, அரிவை துணைவரொடு - திரௌபதி யோடும் தம்பியர் நால்வரோடும், அகம் குறுகினான் - தன் மாளிகை யினுள் சென்றான்; (எ.று).

அம்பகம்-கண். தந்தையின் சொத்து பிள்ளைக்கு உரியது என்ற தகுதி காட்டியிகழ்ந்தபடி. தந்தையாகிய திருதராட்டிரன் பிறவிக் குருடன் என்பது நினைக. கதைத்தல் - மிகுதிபடப் பேசுதல், இனி, கதை - சத்ருகாதிநி என்ற கதையையுடைய, தம்பி - வீமன் எனினு மாம். தெழித்தது - தகுதியின்மை பற்றி. மன்னனும் அண்ணன் முறையாகுமவனுமாகியவனை யிகழ்ந்தது தவறு என்று சுட்டிக் காட்டியபடி. பரிவலோன்-நகுலன்: அசுவ சாஸ்திரத்தில் வல்லவன். நாண் + தலைக்கொளா - நாண்டலைக்கொளா : "ணளமுன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே" என்றது நன்னூல். கொளா-கொண்டு: உடன்பாட்டு வினையெச்சம். தும்பி - அத்தி : (யானை) : தும்பிநகர்- அத்தினபுரி : பரியாயச் சொல். அரிவை துணைவரொடு - 'ஒடு', பிரித்துக் கூட்டப்பட்டது. (65)

இராயசூய யாகச்சருக்கம் முற்றிற்று.

## இரண்டாவது

# சூதுபோர்ச் சருக்கம்

துரியோதனனது தூண்டுதலாற் சகுனியுடன் தருமபுத்திரன் ஆடிய சூதாட்டத்தைக் கூறும் பாகமென்று பொருள். படைகளைக் கொண்டு செய்யும் போரில் வெற்றிதோல்விகளால் இராச்சியத்தைப் பெறுதலும் இழத்தலும் நிகழ்தல்போல, காய்களைக்கொண்டுசெய்யும் இச்சூதாட்டத்திலும் வெற்றிதோல்விகள் காரணமாகப் பொருள்களைப் பெறுதலும் இழத்தலும் நேர்வதனால் சூதாட்டத்தைப் போராக உருவகப்படுத்தி "சூதுபோர்" என்றார். சூதுபோர்-சூதாகியபோர் என இருபெயரொட்டுப்பண்புத்தொகை; நெடிற்றொடர்முன் அல்வழியில் வலிஇயல்பாயிற்று. போர்ச்சருக்கம்-போரைக் கூறுஞ்சருக்கம் என இரண்டனுருபும் பொருளுந் தொக்க தொகை: போரினது சம்பந்தமான சருக்கம் என விரித்தால், ஆறும் வேற்றுமைத்தொகையாம். "யரழமுன்னர்க்கசதப" என்ற சூத்திரத்தின்படி, ரகரத்தின் முன் வேற்றுமையில் வலிமிக்கது.

வேறு

**1. மறுநாள் துரியோதனனது சபையில் சகுனி, கர்ணன் தம்பியர் வந்து சேர்தல்.**

மகமுடிந் ததற்பின் னோர்நாள்
　　மயன்சபை விநோத நோக்கிப்
புகுமுழி யரிவை மூரற்
　　புரிந்தவ மதித்த துன்பம்
அகமதை யீர வூர்போந்
　　தல்லொழிந் துதயத் தண்ணல்
சகுனிவெய் யவன்சேய் பின்னோர்
　　தம்மொடு மவையி லானன்.

(இ-ள்) மகம் முடிந்ததற்பின் - இராயசூயயாகம் முடிந்தபின்பு, ஓர்நாள் - மறுநாள், மயன்சபை விநோதம் நோக்கி - மயன்

நிர்மாணித்த சபாமண்டபத்தின் அதிசயங்களைப் பார்த்துக் கொண்டே, அண்ணல் புகும் உழி-துரியோதனன் உள்ளே புகுந்து சென்றபோது, அரிவை-திரௌபதியானவள், மூரல்புரிந்து-சிரிப்புச் சிரித்து, அவமதித்த துன்பம்-இகழ்ந்து ஏசிய துயரம், அகமதை-தனது உள்ளத்தை, ஈர - பிளக்க, (வருந்தி) ; ஊர்போந்து - அத்தினபுரி சேர்ந்து, அல் ஒழிந்து உதயத்து - இரவுநீங்கியபின் உதயகாலத்து, சகுனி—, வெய்யவன் சேய் - சூரியபுத்திரனான கர்ணன், பின்னோர் - தம்பியர்கள், தம்மொடு - இவர்களோடு, அவையில் ஆனான் - சபைக்கு வந்துஅமர்ந்தான் ; (எ-று).

அல்-இருட்டு : இரவு. வெய்யவன் - சூரியன்.

இதுமுதல் இருபத்தொரு கவிகள் - பெரும்பாலும் ஒன்றுநான் காஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். இவற்றில் மூன்று ஆருஞ்சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (1)

**2. துரியோதனன் கவலையுடன் இருக்க, பிறரும் அறியும்படி கர்ணன் ஒன்று சொல்லத் தொடங்குதல்.**

மன்னவன் விதுரன் கங்கை
  மகன்குரு முதலி னோரும்
இன்னவா றுணர்வான் நண்ப
  னிதயமோர்ந் தைவர் பெற்ற
பன்னரு மகமும் வாழ்வும்
  பாரினி லியாரே பெற்றார்
அன்னவர்க் கினியா ரொப்பென்
  றங்கர்கோ னுரைசெய் தானே.

(இ-ள்) மன்னவன்-திருதராட்டிரன், விதுரன்—, கங்கைமகன்-வீடுமன், குரு - துரோணன், முதலினோரும் - முதலானவர்களும், இன்னவாறு உணர்வான் - இன்ன நிகழ்ந்தது என்று தெரிந்து கொள்ளும்பொருட்டு, அங்கர்கோன் - கர்ணன், நண்பன் இதயம் ஓர்ந்து - சிநேகிதனாகிய துரியோதனனுடைய மனக்கவலையை யறிந்து, ஐவர்பெற்ற - பஞ்சபாண்டவர்கள் பெற்றுள்ள, பன்னரு மகமும் வாழ்வும்-சொலற்கரிய வேள்விச்செல்வமும் (அதனாலாகிய) செல்வ வாழ்க்கையும், பாரினில் - இப்பூவுலகில், பெற்றார் யாரே (அவர்களைப்போலப்) பெற்றுத்திகழ்பவர் யாவருளர்: (ஒருவருமிலர்): அன்னவர்க்கு-அந்தப் பாண்டவர்களுக்கு, இனி ஒப்பு யார் என்று-இனி நிகராவார் யாவர்? (ஒருவருமிலர்) என்று, அங்கர் கோன்-கர்ணன், உரைசெய்தான்-சொல்லிமுடித்தான் ; (எ-று).

முன்னுளில் இராயசூயயாகஞ் செய்து முடித்த அரசர்கள் பலருளராயினும்; மயனுற்கட்டி யமைக்கப்பட்ட மண்டபச்சிறப்பும், வீமன்முதலிய தம்பியர் திக்விசயஞ்செய்து கொணர்ந்த திறைப் பொருட்சிறப்பும், வியாசன் கண்ணன் முதலியோர் உடனிருந்து யாதோரிடையூறுமின்றி வேள்வியை இனிது முடித்த மேன்மையும் முதலியனவாகப் பலவகை மேம்பாடுகள் தருமபுத்திரன் செய்த யாகத்தில் மிக்கிருந்தனவாதலால், அதுகண்டு பொருமை கொண்ட கர்ணன் அவ்வாறே பொருமை கொண்டிருந்த தன் நண்பன் துரியோதனன் சார்பாகப் "பன்னரு மகவும் வாழ்வும் பாரினில் யாரே பெற்றுர்?" என்று கூறினுன். உணர்வான் - வானீற்று வினையெச்சம். இதயம் - கருத்துக்கு இலக்கணை. (2)

3. சகுனி வார்த்தையும், துச்சாசனன் வார்த்தையும் கூறும்.

அங்கர்கோன் மொழியும் வேந்த
      னகமுமொன் ருய தோர்ந்து
மங்கிசைச் சகுனி சிங்கம்
      வரைக்குகை யொடுங்கு மாஞல்
வெங்கயம் விடுமோ வென்ன
      வேந்துபின் துச்சா சனன்
கங்குலே விலக்கு மேனுங்
      கதிர்முனிந் திலங்கா தென்ருன்.

(இ-ள்) அங்கர்கோன் மொழியும் - கர்ணன்கூறிய வார்த்தைகளும், வேந்தன் அகமும் - துரியோதனனின் மனக்கருத்தும், ஒன்ருயது ஓர்ந்து - ஒன்றுபட்டிருப்பதை நினைந்து, இசை மங்கு சகுனி - புகழ்நீங்கிய சகுனிமாமன், சிங்கம் வரைக்குகை ஒடுங்கு மாஞல் - சிங்கமானது மலைக்குகையினுள்ளேயே ஒடுங்கிக்கிடக்கு மாஞல், வெம் கயம் விடுமோ - கொடிய யானையானது சும்மா விருக்குமோ ; (அதனைத் தாக்குமே!) என்ன-என்று சொல்ல, வேந்துபின் - துரியோதனன் தம்பியாகிய, துச்சாசனன்—, இந்து - சந்திரன், கங்குலே - இருட்டை, விலக்குமேனும் - போக்கினுலும், கதிர்முன் - சூரியனுக்கு முன்பு, இலங்காது - விளங்காது மங்கும், என்ருன் - என்று கூறினுன் ; (எ-று).

தக்க சாதனங்களைப் பெற்றிருத்தலால் தருமபுத்திரனை வலியழித்து இருந்த இடந்தெரியாது அடக்கவல்ல நீ இவ்வாறு அடங்கியிருந்தால், தருமபுத்திரன் உன்னுடைய தகுதிதெரியாது

உன்னிலும் மேம்படுகின்ருனென்னும் பொருள்பட நிற்றலால் **பிறிதுமொழிதலணியாம்.** தன் மருமகனுன துரியோதனனை மனத் தளர்வின்றி உற்சாகமடைவிக்கவும், தான் செய்யுஞ் சூதுவழியால் தருமனைக்கெடுக்குமாறு துரியோதனனைத் தன்வழியே இசை விக்கவும் கருதி, தருமனை யானையென்று தாழ்த்தியும், துரியோ தனனைச் சிங்கமென்று சிறப்பித்தும் இங்ஙனம் சகுனி முகமன் கூறினனென்க.

துச்சாசனன் - இராக்காலத்திலே நட்சத்திரக் கூட்டங்களினி டையிற் சந்திரன் ஒளிமிக்குத் தோன்றினுலும் பகற்காலத்தே சூரியனெருவனுக்குமுன் ஒளி மழுங்குதல்போல, தருமபுத்திரன் பல சிற்றரசர்களிடையில் மிக்க மேம்பாடுபெற்று விளங்கினுலும் ராஜ ராஜனுன துரியோதனனுகிய உனக்கு முன்னே சிறிதும் மேன்மை பெற்று விளங்கான் என்று கூறினன், இதுவும் **பிறிதுமொழித லணியாம்.** நாம் அடங்கியிருக்கிற இச்சமயத்தில் தருமபுத்திரன் சிறப்புற்று விளங்கினுலும், நாம் வெம்மையோடு எழுமிடத்து அவன் அடங்கியேவிடுவனென்ற குறிப்பு, இது.

பின் - பின்பிறந்தவனுக்குக் காலவாகுபெயர் - 'துச்சுவாதன்' என்று பாடங் காண்கின்றது. 'கங்குலே விளக்குமேனும்' என்ற பாடத்திற்கும் இதுவே பொருள். (3)

**4. இரண்டு கவிகள்—ஒரு தொடர் : துரியோதனன் வார்த்தை.**

துணைவனீ துரைப்பக் கேட்டுச்
சுயோர்தன னவையோர் கேட்ப
மணிமுடி யைவர் வாழ்தல்
மனம்பொரு துரைப்பா னும்பர்
அணிகெழு சிறப்புச் செய்ய
அருந்தவர் வேள்வி செய்யப்
பணிசெய வரச ரென்ன
பாக்கியந் தருமன் செய்தான்.

(இ-ள்) துணைவன்-தம்பியாகிய துச்சாதனன், ஈது உரைப்ப- இங்ஙனம்கூற, கேட்டு - அதனைக்கேட்டு, சுயோதனன் - துரியோ தனன், அவையோர் கேட்ப-சபையோர் நன்கு கேட்டறியும்படி, ஐவர் - பஞ்சபாண்டவர், மணிமுடி வாழ்தல் மனம் பொருது- இரத்தினங்கள் பதித்தகிரீடங்களோடு (மகிழ்ச்சியோடு) வாழ்தலைக்

கண்டு உளம் பொறுக்காமல் வெதும்பி, உரைப்பான்.(பின்வருமாறு) கூறலானுன்: உம்பர்-தேவர்கள், அணி கெழு சிறப்பு செய்ய-அழகு, பொருந்தப் பெருமைப்படுத்தவும், அருந்தவர் வேள்வி செய்ய-முனிவர்கள் ராஜசூயயாகத்தை (வேதவிதிப்படியே தவறில்லாமல்) செய்யவும், அரசர் பணிசெய-(நிலவுலகத்து) அரசர்கள்-(தான் ஏவிய) தொழில்களைச் செய்யவும், (இவ்வாறு) தருமன்—, என்ன பாக்கியம் செய்தான்-என்ன பேறு செய்துவைத்தான்! (எ-று)

விண்ணுலகத்தவரான தேவர்களும் மண்ணுலகத்தவரான அரசர்களும் இரண்டிடத்திலுமிருப்பவரான முனிவர்களும் தரும புத்திரனது கருத்துப்படியே இராஜசூயயாகத்தை இனிது முடித்த தனுல் அத்தருமபுத்திரன் மண்ணிலும் விண்ணிலும் புகழ்படைத் துள்ளான்; 'ஸம்ராட்' என்னும் பட்டம் பெற்று விளங்குவதற்கு என்ன பாக்கியம் செய்தான் என்று மனம்புழுங்கி நின்றுன் துரியோதனன் என்க.

"உம்பர் அணிகெழு சிறப்புச் செய்ய" என்றது, யாககாலத்தில் தேவர்கள் அவ்வப்பொழுது தத்தமக்குரிய அவிர்ப்பாகங்களைப் பெற்றுப் பெருமைப் படுத்தியதைக் குறிக்கும். அருந்தவர் என்றது-நாரதர் முதலிய தேவவிருடிகளையும், வியாசன் முதலிய இவ்வுல கத்து இருடியரையும் குறிக்கும். (4)

5. தம்பியர் சூர ராஞர்
தருமனே சிலநாட் சென்ருல்
அம்புவி முழுதுங் கொள்வா
ஞதலா லவன்றன் வாழ்வை
வெம்பம ரியற்றி யாதல்
விரகினு லாதல் வெளவிற்
கொம்பிலாக் கொடிபோ லவர்
கொடியொடுங் குலைவ ரென்ருன்.

(இ-ள்) தம்பியர் - வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் ஆகிய தம்பிமார்கள் நால்வரும், சூரர் ஆனுர்-பராக்கிரமசாலிகளாய் விட்டார்கள்: தருமனே—, சிலநாள் சென்ருல்-இன்னும் சிலநாட்கள் செல்லின், (பின்னர்) அம்புவி முழுதும் - இந்த அழகிய நிலவுலகம் முற்றும், கொள்வான் - தனதாக்கிக் கொள்ளுவான் : ஆதலால்—, அவன்தன் வாழ்வை-அவனுடைய செல்வவாழ்க்கையினை, வெம்பு அமர் இயற்றியாதல் விரகினுலாதல் வெளவின்-கொடியபோரைச் செய்திட்டாதல் (அல்லது) தந்திரமான சூழ்ச்சியினுலால் (நாம்)

கவர்ந்து கொள்வோமாயின், (அப்போது) ஐவர் - அந்த ஐந்துபேரும், கொடியொடும் - தங்கள் மனைவியான திரௌபதியோடும், கொம்பிலாக் கொடிபோல் - கொழுகொம்பில்லாத கொடி (வாடி அழிதல்) போல, குலைவர் (நாளடைவில்) அழிந்துபோவர், என்றான் - என்று கூறிமுடித்தான் துரியோதனன்; (எ-று).

தருமபுத்திரனும் தலைவனுய்த் தம்பியரும் சூரராய்வருதலால், இப்பொழுதே நாம் அவர்களை வலியடக்கமுயன்றால் முடியுமேயன்றி, இன்னும் நாட்செல்லவிட்டால் அப்பாண்டவர்கள் மேலும் வலிமைமிக்கு நம்மையே யழிப்பரென்றவாறு. ஆகவே இப்போதே எந்தவகையினாலாவது அத்தருமபுத்திரனையடக்க வேண்டுமென்று துரியோதனன் தன்மனக்கருத்தை வெளியிட்டனனென்க.

ஆதல் - விகற்பப் பொருளில்வந்த இடைச்சொல். கொம்பிலாக் கொடிபோல் — உலகவழக்குப் பற்றிவந்த உவமை. கொடி - திரௌபதிக்கு உவமவாகுபெயர். (5)

**6-8. மூன்று கவிகள்—ஒரு தொடர்: துச்சாதனன் வார்த்தை: அதற்குத் துரியோதனன் உடன்படல்.**

மற்றவ னிளவல் துச்சா
 தனன்வகுத் திடுவான் வீமன்
சிற்றிடை யோடு மூரற்
 செய்தமை கண்டி லீரோ
வெற்றிகொண் மகத்தில் யாமும்
 வேந்தரி லொருவ ரானேம்
உற்றவ ரிகழ்ந்தா யற்கே
 யுதிட்டிரன் மேன்மை செய்தான்.

(இ-ள்) மற்று - பின்னர், இளவல் துச்சாதனன் - தம்பியாகிய துச்சாதனன், வகுத்திடுவான் - வகைபடுத்திக்கூறலானான்: வீமன் —, சிற்றிடையோடும் - திரௌபதியோடும், மூரல் செய்தமை - சிரிப்புச் செய்து இகழ்ந்தமையை, கண்டிலீரோ - பார்த்தீரல்லீரோ ? (பார்த்தீரே என்றபடி) : (மேலும்) வெற்றிகொள் மகத்தில் - வெற்றிகொண்டு செய்யும் ராஜசூயயாகத்தில், யாமும் - நாமும் (சிறிதும் மேன்மையின்றி) வேந்தரில் ஒருவரானேம் - வந்திருந்த பல அரசர்களுள்ளும் ஒருவராய் ஒடுங்கிக்கிடந்தோம். (பின்னர்) உற்றவர் - வந்திருந்த அனைவர்களையும், இகழ்ந்து - மதியாது, ஆயற்கே (அந்த) இடையனாகிய கண்ணனுக்கே, யுதிட்டிரன் - தருமபுத்திரன், மேன்மை செய்தான் - முதற்பூசை பெறுமாறு பெருமையையளித்தான்; (எ-று).

சிற்றிடை-திரௌபதிக்குச் சினையாகுபெயர். மூரல்-புன்சிரிப்பு; சிரிப்பு: இங்கு எள்ளல் பற்றியது: 'கண்டிலீரோ' என்றது-அங்குச் சபையிலிருந்தவர்களை நோக்கிக் கூறியது. வீமன்-பீமன்: வீம சேனனை 'வீமன்' என்றது-முதற்குறிப்பின்பாற்படும்.

செல்வத்திலும் வலிமையிலும் மிகச்சிறந்த நாம் யாகத்திற்குச் சென்றிருக்கையில், நம்மைச் சிறிதும் இலட்சியஞ் செய்யாமல் இருந்துவிட்டான்: நாமும் "தொண்ணூறோடு துவரம்பருப்பு" என்றதுபோலாயினோம். இனி, உற்றவர் - பந்துக்கள் எனினுமாம். 'இகந்து' என்றும் பாடம்: அஞ்ஞான்று, இகந்து - யாவரையும் கடந்துபோய், (ஆயற்கு மேன்மை செய்தான்) எனப்பொருள்படும். 'ஆயன்' என்று அலட்சியம் தெரிவித்தபடி. (6)

7. செய்தல்கண் டாற்று துள்ளஞ்
சீறியா ரிவனென் றெள்ளி
வைதமன் னனைக்கொல் வித்தான்
வலிகொடிவ் வுலக மெல்லாம்
எய்திட வெண்ணி வேந்த
ரியாரையுந் தன்கீ ழாக்கி
மொய்கழல் வேள்வி தன்மன்
முனிவர்க்கொண் டியற்றி னனே.

(இ-ள்) செய்தல் கண்டு - (ஆயனுக்கு மேன்மை) செய்ததைப் பார்த்து, உள்ளம் ஆற்றுது-மனம் பொருமல், சீறி-கோபித்து, இவன் யார் என்று எள்ளி - (முதற் பூசை பெறுதற்கு) இவன் என்ன தகுதியுடையன் என்று இகழ்ந்து, வைத-வசைமாரி பொழிந்த, மன்னனை-சிசுபாலனை, கொல்வித்தான் - (அந்தக் கண்ணனையே கொண்டு அவனது சக்கரப்படையால்) மாளவைத்தான்; (மேலும்) தன்மன்-இந்தத் தருமன், வலிகொடு-வலிமைகொண்டு (பலாத்கார மாக), இ உலகமெல்லாம்-இந்த நிலவுலகமுற்றும், எய்திட எண்ணி-தான் கைப்பற்றியடைய நிச்சயித்து, வேந்தர் யாரையும் தன் கீழாக்கி - எல்லா மன்னர்களையும் தன்கீழ்ப்படுத்தி, கழல் மொய் வேள்வி-தன் பாதங்களில் நெருங்கியிருக்கும்படியான இராஜசூய யாகத்தை, முனிவர்க் கொண்டு - இருடியர்களைக் கொண்டு, இயற்றினனே-செய்வித்தானன்றோ! (எ-று).

'வேந்தர்யாரையும் தன்கீழாக்கிக் கழல் மொய்க்க வைக்கும் வேள்வி' என்றதால் "ஸம்ராட்" என்னும் பட்டம் பெற்று மேன்மை

யுற்று விளங்கச்செய்யும் இராஜசூயயாகம் என்பது பெறவைக்கப் பட்டது. முனிவர்க்கொண்டு என்றவிடத்து வயிற்றெரிச்சல் தெரி வித்தபடி. வேந்தரியாரையும் - தன்னொழிமெய்ம்முன் யகரம் வந்து இகரந் துன்னிற்று. (7)

8. மாமனை யடுமால் போர்செய்
மத்திரன் றன்மேற் சென்றான்
நாமனை வரும்போய் பாண்டு
நந்தனர் கோற லாமென்
றேமனை யனையான் கூற
வேந்தலு மிசைந்து குல்லைத்
தாமனைப் பெறுமுன் கோறற்
றகும்வஞ்சத் தமரி னாதல்.

(இ-ள்) மாமனை அடு மால் - மாமனாகிய கம்சனைக்கொன்ற கண்ணன், போர் செய்-போர்செய்வதற்காக, மத்திரன் தன்மேல் சென்றான் - சல்லியன்மேற் சென்றிருக்கிறான்: (ஆகையால்) நாம் அனைவரும் போய்-நாம் எல்லோரும் சென்று, பாண்டு நந்தனர்- பாண்டுமைந்தர்களாகிய ஐவரையும், கோறலாம் என்று - கொன்று விடலாம் என்று, ஏமனை அனையான் கூற-யமனையொத்த துச்சா தனன் சொல்ல, ஏந்தலும்-துரியோதனனும், இசைந்து-உடன்பட்டு, குல்லைத் தாமனைப் பெறுமுன் - திருத்துழாய் மாலையைத்தரித்த கண்ணனைத் (தமக்கு உதவியாகப்) பெறுவதற்கு முன்னமேயே, வஞ்சத்து (ஆதல்) அமரின் ஆதல் கோறல் தகும் - சூழ்ச்சி யினாலாவது போரினாலாவது கொல்லுதல் தக்கதாகும்; (எ.று).

வேற்றிடத்திற் பகைமேற்சென்றுள்ள கண்ணன் தருமனுக்குச் சிறிதும் உதவாதாதல்பற்றி அத்தருமனை வென்று வலியடக்க இதுவே தக்க சமயமாதலால், இப்பொழுதே தருமன்மேற் செல்லவேண்டு மென்று துச்சாதனன் கூறினான் என்க. துரியோதனன் வஞ்சனை வழியினாலாவது போர்புரிந்தாவது, கண்ணன் மீண்டு வருவதற்கு முன்னமே பாண்டவர்களை வெல்லச் செல்லவேண்டுமெனக் கட்டளை கூறியவாறு. கண்ணன் மீண்டு வந்துவிட்டாற் பாண்டவர் களை வெல்வது அரிது என்பது குறிப்பெச்சம். மத்திரன் - சல்லியன்: அம்புமுனைபோலப் பகைவர்களை வருத்துபவனென்று காரணப் பொருள்படும். (சல்யம்-அம்புமுனை : உபத்திரவத்திற்கு இலக்கணை) கோறல் - தொழிற்பெயர் ; கொல்-பகுதி, தல்-விகுதி. ஏமன்-எமன் என்பதன் நீட்டல். ஏந்தல் - இகழ்ச்சிபற்றியது. ஆதல் - விகற்பப் பொருள் தருவதோர் இடைச்சொல். (8)

9. கர்ணன் வஞ்சனை வழிதகாது என, சகுனி உடன்படாமை.

என்றர சுரைப்பக் கன்னன்
யானொரு கணையாற் கொல்ல
நின்றனன் வஞ்ச மெண்ண
னெருங்கமர்க் கஞ்சி லன்றே
நன்றென்றான் சகுனி கன்ன
னாகரோ டெதிர்ந்த போதும்
வென்றிட முடியா தந்த
விறலினர் தம்மை யம்மா.

(இ-ள்) என்று அரசு உரைப்ப - என்று துரியோதனன் சொல்ல, கன்னன் - கர்ணன், யான் - நான், ஒரு கணையால் கொல்ல நின்றனன் - ஒரே ஒரு அம்பினால் (இவர்களனைவரையும்) கொல்லும்படி சித்தமாயுள்ளேன்: வஞ்சம் எண்ணல் - சூழ்ச்சியால் வெல்ல எண்ணுதல், நெருங்கு அமர்க்கு அஞ்சில் அன்றே - நெருங்கிச் செய்கின்ற போருக்குப் பயந்தாலன்றோ? (என்றான்): (அதனைக் கேட்டுச்) சகுனி—, நன்று என்றான் - (மிகவும்) நன்றாயி ருக்கிறது என்று நகைத்தான்: (நகைத்து) கன்னன் - (இந்த வீரம் பேசும்) கர்ணன், (தான் தனியேயன்றி) நாகரோடு எதிர்ந்த போதும் - தேவர்களைக் கூட்டிக் கொண்டு எதிரிட்டாலும், அந்த விறலினர் தம்மை - அந்த வலிமை மிக்க வீரர்களை, வென்றிட முடியாது - வெல்லவே இயலாது; (எ.று). அம்மா - வியப்பிடைச் சொல்.

கீழ்ச் செய்யுளில், துரியோதனன், 'வஞ்சத்தாதல் அமரினாதல் கோறல்தகும்' என்று கூறியதற்குக் கர்ணன், தன்னை மகாவீரனாகக் கருதிப் பெருமிதம் பாராட்டுபவனாதலால், 'வஞ்சனை வழியால் வெல்லக் கருதுவது அஞ்சுபவர்களின் செயலன்றோ! மகாவீரனாகிய யான் இருக்கையில், போர்வழியே சிறந்தது' என்று தனது வீரச் செருக்கினாற் கூறினன்: அதற்குச் சகுனி 'நன்று' என்றது, பிற குறிப்பு: நன்றன்று என்றபடி. "மேவரு கன்ன னன்றி விண்ணு ளோர் எதிர்ந்த போதும்" என்றார் வில்லியும்: அதற்கேற்ப ஈண்டும் உரை வகுக்கப்பட்டது. இனி, நாகரோடு - நாகாஸ்திரத்தோடு எனினுமாம். (9)

**10-11. இரு கவிகள் - ஒரு தொடர் : சகுனி சூதினாலேயே வெல்லவேண்டும் எனத் துச்சாதனனும் உடன்படல்.**

இடும்பனைப் பகனைக் கொன்றோ
னிருப்பபாண் டவரைப் போரில்
அடும்படி நினைக்கி லியானென்
னறைகுவ னரசர் கொண்டு
நடும்படி முடியா வில்லை
நரன்முனி வரனாய்க் கோட்டி
விடும்பொழு தெங்ஙன் யாமும்
வீற்றவ ணிருந்தி லேமோ?

(இ-ள்) இடும்பனை - இடிம்பனென்னும் அரக்கனையும், பகனை - பகாசுரனையும், கொன்றோன் இருப்ப - கொன்ற வீமசேனன் உயிரோடிருப்ப, பாண்டவர் ஐவரை - பஞ்சபாண்டவரை, போரில் அடும்படி நினைக்கில் - போர்க்களத்தில் (போரிட்டுக்) கொல்லும்படி எண்ணினால், யான் - நான், என் அறைகுவன் - என்ன சொல்லுவேன்: அரசர் - மன்னர்கள், கொண்டு - தம் கையிற் பிடித்து, நடும்படி - நேராக நிறுத்தும்படி (முயன்றும்), முடியா வில்லை - முடியாத (அவ்வளவு வலிய) வில்லை, நரன் - அருச்சுனன், முனிவரனாய் - ஓர் அந்தணனாய் (வேடம்பூண்டு) வந்து, கோட்டி - வளைத்து, விடும்பொழுது - (இலக்கையடித்து விழுத்த) அம்பினை விடுத்த போது, எங்ஙன்-எப்படித்தான், யாமும்-நாமும், அவண்- அந்த இடத்தில் (இலக்கை வீழ்த்த முடியாத அரசர்களுள் ஒருவராக) வீற்றிருந்திலேமோ-பெருமிதத்தோடு இருந்தோமன்றோ? (எ.று)

வலிமையிலும் கொடுமையிலும் மிக்க இடிம்பன் முதலியோரை வென்ற வீமனும், திரௌபதி கலியாண காலத்திலே பிறரால் விழுத்த முடியாத மச்ச யந்திரத்தை எளிதில் வீழ்த்தியவனான அருச்சுனனும் துணையாய் நிற்பதால் தருமனை வெல்லுதல் முடியாதென்பது சகுனி யின் கருத்து. இச்செய்யுளில், தனித்தனியே வீம அருச்சுனரது சிறப்பையெடுத்துக் கூறி, கர்ணனாலும் தருமனை வெல்ல முடியா தென்றான். இருந்திலேமோ = இருந்திலேம் + ஓ: இருந்திலேம் - எதிர்மறையிறந்த காலத் தன்மைப் பன்மை வினைமுற்று: ஓகாரம் - வினாவகையால், எதிர்மறை குறித்தது, எனவே, இருந்திலேமோ - இருந்து மான பங்கப்பட்டோமே யென்றபடி. 'எங்ஙன்' என்றதும் இக்கருத்துப் பற்றியதே. (10)

11. எத்தனைப் பலங்கொண் டாலும்
இறைவசூ தன்றிப் போரிற்
சத்திய விரதன் றன்னைத்
தான்வெல முடியா துங்கட்
சித்தமியா தென்று மாமன்
செப்பலும் இளையோ னீதே
உத்தம மென்றான் வேந்த
னுலர்ந்தநா சுரந்து சொல்வான்.

(இ-ள்) இறைவ! - அரசனாகிய துரியோதனனே!, எத்தனை பலம் கொண்டாலும் - எவ்வளவு சேனாபலங் கொண்டு நாம் எதிர்த்தாலும், சூது அன்றி - வஞ்சனையாகச் செய்யும் சூதாட்டத்தில் அல்லாமல், போரில் - சண்டையிடும் போரிலே, சத்திய விரதன் தன்னைத்தான் - மெய் பேசுதலையே விரதமாகக் கொண்டுள்ள தருமனை, வெல முடியாது - வெல்ல இயலாது: (ஆகையால்) உங்கள் சித்தம் யாது என்று-உங்களுடைய கருத்து என்ன என்று, மாமன் செப்பலும் - சகுனி கேட்டவுடனே, இளையோன் - துச்சாதனன், ஈதே உத்தமம் என்றான் - சகுனி கூறியதே சிறந்த மார்க்கம் என்றான்: வேந்தன் - (அது கேட்ட) துரியோதனன், உலர்ந்த நா சுரந்து - வறண்ட நாக்குக் குளிரப் பெற்று, சொல்வான் - கூறலாயினான்; (எ.று)

'சத்தியவிரதன்' என்பது தருமபுத்திரனுக்கு ஒரு பெயர். இரண்டாமடியில், மெய்ம்மையே வெற்றிக்குக் காரணமென்பது தொனிக்குமாறு காண்க, சித்தமியாது - 'தன்னொழிமெய்ம்முன் யகரம் வர இகரந் துன்னிற்று'. 'தருமனைப் போரினால் வெல்ல விரகில்லை' என்று துச்சாதனனும் உணர்ந்து கொண்டு, தானும் சகுனியின் வார்த்தைக்கு இணங்கிச் சூதாடுவதே எளிதில் வெல்லத் தக்க வகையென்று கூறினனென்க. பொறாமையும் கோபமுங் கொண்டு நாக்கு வறள வருந்தின துரியோதனன், சகுனியின் வார்த்தையைக் கேட்ட பின்பு, இனிமேல் பாண்டவரை வெல்லலா மென்ற எண்ணத்தினால் கவலை சிறிது மாற, நாக்கு குளிரப் பெற்றனனென்க. (11)

### 12. சகுனி தருமபுத்திரனைச் சூதாடுவிக்கும் உபாயங் கூறுதல்.

சொன்னதே புரிவல் வெல்லுஞ்
 சூழ்ச்சியா தறைதி யென்ன
மன்னகேள் சிற்பம் வல்லோர்
 மதிக்குமண் டபமொன் ருக்கி
அன்னதைப் பார்க்க வென்றிங்
 கைவரை யழைப்பித் தாடும்
பன்னிய சூதாற் செல்வம்
 பறிப்பதே யுபாய மென்ருன்.

(இ-ள்) சொன்னதே புரிவல்-(மாமனாகிய நீர்) சொன்னபடியே செய்வேன்: வெல்லும் சூழ்ச்சி யாது - (அவர்களை) செயிக்கும் தந்திரம் யாது? அறைதி - சொல்லுவீராக, என்ன - என்று வினவ, மன்ன! - அரசனே! கேள் - கேட்பாயாக: சிற்பம் வல்லோர் - சிற்ப சாஸ்திரத்தில் சிறந்த வல்லமையுடையோர், மதிக்கும் - போற்றும் படியான, மண்டபம் ஒன்று ஆக்கி-ஒரு மண்டபத்தைச் செய்வித்து, அன்னதைப் பார்க்க என்று - அந்த மண்டபத்தினழகைக் காண வேண்டுமென்று சொல்லி, இங்கு - இவ்விடத்து, ஐவரை அழைப் பித்து - அந்தப் பஞ்சபாண்டவரையும் வரவழைத்து, ஆடும் - (பொழுது போக்கென்று சொல்லி) விளையாடுகின்ற, பன்னிய சூதால் - (எல்லாராலும் விரும்பிப்) பேசப்படுகின்ற சூதாட்டத்தால், செல்வம் பறிப்பதே உபாயம் என்ருன் - (அத் தருமனது) செல்வம் முழுவதையும் கைப்பற்றுவதே சூழ்ச்சியாகும் என்று கூறினான்; (எ.று)

சொன்னது-குறிப்புவினையாலணையும் பெயர். புரிவல்-தன்மை யொருமை. அறைதி-முன்னிலை வினைமுற்று. (12)

### 13. துரியோதனன் சகுனியினுபாயத்தை விதுரனிடம் சொல்ல, அன்னான் மாறுகூறுதல்.

இதுநல னென்ருர் பின்னோர்
 இறைவனு மகிழ்ந்தான் வையம்
அதுமுழு தடைந்தான் போன்றங்
 காய்ந்துள வெண்ண மெல்லாம்

விதுரனோ டுரைத்தான் மற்றோன்
வேந்துகை யோலை சென்றால்
மதிவலார் வேண்டு மியாவும்
வழங்கிகான் புகுவ ரன்றே.

(இ-ள்) பின்னோர்-(கேட்டுக்கொண்டிருந்த) தம்பியர்கள், இது-சகுனி கூறிய உபாயமாகிய சூதாடுதலே, நலன் என்றார் - தக்கது என்று கூறினார்கள் : இறைவனும் - துரியோதனனும், வையம் அது முழுது அடைந்தான் போன்று மகிழ்ந்தான்-நிலவுலகம் முழுவதையும் தான் பெற்றவன் போலே எண்ணிக் களித்தான் : அங்கு-அந்த விடத்து, ஆய்ந்துள எண்ணம் எல்லாம் - தாங்கள் ஆலோசித்து முடிவு கட்டிய கருத்துக்களையெல்லாம், விதுரனோடு—,உரைத்தான்-சொல்லினான் : மற்றோன்—(அதனைக் கேட்ட) விதுரன், வேந்து கை ஓலை சென்றால் - திருதராட்டிரனிடத்தினின்று கையொப்பமிட்ட திருமுகம் அனுப்பினால், மதிவலார்-அறிவிற் சிறந்த பாண்டவர்கள்; வேண்டும் யாவும் வழங்கி - (நீங்கள்) விரும்புகின்ற அனைத்துச் செல்வங்களையும் கொடுத்திட்டு, (மேலும்) அன்றே கான் புகுவர்-அன்றைத்தினமே காட்டைச்சேர்வர்; (எ.று) அன்றே-தேற்றமுமாம்.

கான்புகுவர் என்றதால் - இராமபிரான் போலவே பாண்டவர்களும் தந்தை சொல்லைப் பாதுகாக்கும் தன்மையுடையரென்பது குறிப்பிற் பெறவைக்கப்பட்டது. இங்ஙனம் கூறியதனால், தருமனுக்கு எழுதவேண்டிய ஓலையில் பாண்டவர்கள் அனைத்தையும் வழங்குதலும் காட்டுக்குச் செல்லுதலும் குறிக்கவேண்டிய பொருள்களெனக் குறிப்பித்தபடியாம். தருமன் நாட்டிலேயே இருந்தால் ஒருகால் ஜனங்கள் அத்தருமன்மீது அன்புகொண்டு அவனையே அரசனாகப் பாராட்டக் கூடுமாதலால், அதற்குச் சிறிதும் இடமில்லாதபடி நாட்டை வழங்கிக் காட்டுக்குச் செல்லுதல் அவசியம் வேண்டுவதாயிற்று, சூதாடிக் கவர்தலினும் தந்தையின் ஓலை மூலமாகக் கவர்வது குற்றமற்ற வழியென்பது விதுரன் கருத்து. இஃது மேலைச் செய்யுளால் தெற்றென விளங்கும்.

வையமது, அது - பகுதிப்பொருள்விகுதி. வேண்டுமியாவும் - ''தன்னொழி மெய்ம்முன்யவ்வரின் இகரந்துன்னும்'' என்பது விதி. (13)

### 14. விதுரன் கூறியது கேட்டுத் துரியோதனன் சினந்து கூறியது.

தாதைசொன் மறுக்க மாட்டார்
தரைமுழு துனதே யாகும்
சூதினாற் கவர்ந்தா லென்றுந்
தொலைவுருப் பழியே யாமென்
றோதிய விதுரன் சொற்கேட்
டுளம்பொரு தரச னிங்கே
ஓதன மங்கே யுள்ள
மோர்மியா துயிர்த்தோர்க் கென்றான்.

(இ-ள்) (மற்றும்) தாதை சொல் - பெரிய தந்தையாகிய திருதராட்டிரன் சொல்லை, மறுக்கமாட்டார் - மீறமாட்டார்கள் : தரைமுழுதும் - நிலவுலகம் முழுவதும், உனதேயாகும் - உன்னுடைய அதீனமாகும் : (மேலும்) சூதினால் கவர்ந்தால் - (வஞ்சனையாகிய) சூதாட்டத்தினால் கைக்கொண்டால், என்றும் - எக்காலத்தும், தொலைவு உரு - நீங்காத, பழியேயாம் - பழிப்பேயாகும், என்று -, ஓதிய விதுரன் சொல் கேட்டு - சொன்ன விதுரனது வார்த்தைகளைக் கேட்டு, அரசன் - துரியோதனராசன், உளம் பொருது - மனம் பொருமல், "இங்கே ஓதனம் அங்கே உள்ளம் - இவ்விடத்தில் உணவு அவ்விடத்தில் அன்பு (உமக்கு): (ஆகவே) உயிர்த்தோர்க்கு - பெற்ற தந்தைக்கு, யாது - என்ன பயன் விளையப்போவது; ஓர்ம் - எண்ணிப் பாரும்", என்றான் — என்று (நிட்டூரமாகச்) சொன்னான். (எ.று).

"நீ எங்களிடத்திலே உணவு பெற்றிருந்தும் எங்கட்கு அநுகூல மாகப் பேசாமல் எங்களைப் பழித்தும் எதிரிகளான பாண்டவர்களைப் புகழ்ந்தும், நாங்கள் தொடங்கிய காரியத்தை நிறைவேறவொட்டாது தடைசெய்து உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்துப் பேசுவது எமக்குத் தந்தையாகிய உமக்குச் சிறிதும் தகுதியன்று" எனத் துரியோதனன் விதுரனைப் பழித்துக் கூறியவாறு, விதுரன் இராச்சியத்தை வேறு வகையாகக் கைக்கொள்ளுமாறு உபாயங் கூறியிருக்கவும், துரியோதனன் அவனை இவ்வாறு பழித்துக் கூறியது, தான் செய்யத் தொடங்கிய காரியத்தை மேன்மேலும் ஊக்கத்தோடு செய்து முடிக்கவொட்டாதபடி தடுத்தற்கு விதுரன் ஒரு வியாஜமாகக் கூறியதேயன்றித் தன்னிடத்து உள்ளூர அன்பினாற் கூறியதன்றென்று அதனைக் கருதியதனாலென்க.

'உயிர்த்தோர்க்கு யாது பயன் விளையப்போவது, ஓர்மின்' என்ற விடத்து அறியவேண்டிய விவரம் :—

எங்கள் இருதிறத்தாரிடத்தும் ஒத்த அன்பினனுயிருக்க வேண்டிய தந்தையாகிய திருதராட்டிரனைக்கொண்டு ஒரு காரணமுமின்றி இராச்சியத்தைக் கொடுத்து விடும்படி பாண்டவர்க்கு ஓலையெழுதுவித்து அவர்களது இராச்சியத்தைப் பறித்துக் கொள்ளுதல் 'திருதராட்டிரன் பட்சபாதமாக ஒருதிறத்துப் புதல்வரிடத்தினின்று இராச்சியத்தைக் கவர்ந்து மற்றொருதிறத்துப் புதல்வருக்குக் கொடுத்தான்' என்ற பெரும்பழிக்குக் காரணமாய் நிற்குமாதலால், அவ்வழி சிறந்ததாகாது எனத் துரியோதனன் விதுரன் மொழியை மறுத்து இகழ்ந்தான் என்பது. உயிர்த்தோர் - பெற்ற தந்தையாகிய திருதராட்டிரனைக் காட்டி வந்தது. யாது - பழிப்பேயுண்டாகும் என்ற குறிப்பினது. "ஓர்மின்" என்ற முன்னிலை வினைமுற்று "ஓர்ம்" எனச் சிதைந்தது. முழுது-எஞ்சாமைப்பொருள்பட வருவதோர் உரிச்சொல்: "முழுதென்கிளவி எஞ்சாப் பொருட்டே" என்பது, தொல்காப்பியம். தொலைவுரு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உள்ளம் - மனம், எண்ணம்: அன்புக்கு இலக்கணை. உயிர்த்தோர்-வினையாலணையும்பெயர். (14)

### 15. விதுரன் மனம் வருந்தித் துரியோதனனுக்கு நல்லறிவு கூறுதல்.

மைந்தன துரைவா ளீரு
 மனத்தினன் விதுரன் சொல்வான்
தந்தையர்க் குயிர்த்த மைந்தர்
 தங்களி லொருசார் பான
சிந்தையு முளதோ நீவிர்
 சேர்ந்துவாழ்ந் திடினள் ளாரும்
வந்தனை புரிவர் நம்மின்
 மாறுறின் மதித்தி டாரே.

(இ-ள்) மைந்தனது - (தனக்கு) மைந்தன் முறையாகின்ற துரியோதனனது, உரை வாள் - வார்த்தையாகிற வாளாயுதம், ஈரும் – பிளந்து வருத்துகின்ற, மனத்தினன் - நெஞ்சினையுடைய, விதுரன்—, சொல்வான் - துரியோதனனை நோக்கிச் சொன்னன்: "தந்தையர்க்கு - தகப்பன்மார்க்கு, உயிர்த்த மைந்தர் தங்களில் - தாங்கள் பெற்ற பிள்ளைகளுள், ஒரு சார்பான - பட்சபாதமான, சிந்தையும் உளதோ - மனக் கருத்தும் உண்டோ? (கிடையாது): நீவிர் - நீங்கள் இருதிறத்தாரும், சேர்ந்து வாழ்ந்திடின் - ஒரு சேரக் கூடி வாழ்வீராயின், நள்ளாரும் - பகைவரும், வந்தனை புரிவர் - உங்களை வணங்கி வழிபடுவர்: (அங்ஙனன்றி) நம்மின் - நமக்குள்ளே, மாறு உறின் - பகைமை ஏற்படுமாயின், மதித்திடார் - (நம்பகைவர்) நம்மை மதிக்கமாட்டார்கள்; (எ.று)

ஈர்தல் - அறுத்தல், பிளத்தல்; இலக்கணையால் வருத்துதலேக் குறித்தது, மனமாகிய மரத்தைக் கொடுஞ்சொற்களாகிய வாள் அறுக்க என்று கூறியதால், இது ஏகதேசவுருவகமாம். உரை வாள் - உரையாகிய வாள்: உருவகம். ஒரு சார்பான சிந்தை - பட்சபாதம்: 'ஒருபுடை வாரம்' என்ருர் வில்லியும். மாறு - மாறுபாடு, வேறுபாடு, பகைமை. (15)

**16. உறுதி சொன்ன விதுரனை நோக்கித் துரியோதனன் கூறிய நிட்டூர வார்த்தை.**

ஆதலி னுறுதி சொற்றேன்
அநுபவத் துணர்தி நண்பர்
ஓதுவ தன்றி யேலா
துனக்கென வரசு மென்பாற்
கோதுள துணர்ந்தாய் ஐவர்
கோறுவ ரடியன் செய்த
தீதெலாம் பொறுத்தி யென்றே
செங்கரம் குவித்து நக்கான்.

(இ-ள்) "ஆதலின் - ஆகையால், உறுதி சொற்றேன் - நன்மை பயக்கும் மொழிகளைச் சொன்னேன்: (ஆனல்) உனக்கு—, நண்பர் ஓதுவது அன்றி ஏலாது - சிநேகிதர்கள் சொல்லுவது தவிர ஏற்காது; (நாளடைவில்) அநுபவத்து உணர்தி - அநுபவிக்கும் போது நீயே உணர்வாய்", என - என்று விதுரன் சொல்ல, அரசும் - துரியோதனனும், என்பால் கோது உளது உணர்ந்தாய் - என்னிடத்துக் குற்றம் இருப்பதை நீ அறிந்தாய்: ஐவர் கோறுவர் - பஞ்சபாண்டவர்கள் அத்தகைய கோதுகளை அறுத்தெறிவர்: (நீதியை நிலை நிறுத்துவர் என்றபடி) : அடியன் செய்த தீது எலாம் பொறுத்தி - (உனது) அடியனுகிய நான் செய்த பிழைகளெல்லாவற்றையும் பொறுத்தருள்வாயாக, என்றே - என்று சொல்லி, செங்கரம் குவித்து நக்கான் - கை கூப்பி வணங்கி (ப்பரிகாசக் குறிப்புத் தோன்றச்) சிரித்தான்; (எ.று)

இவ்வாறு துரியோதனன் விதுரனை மேம்படுத்திச் சொல்லி வணங்கியது, பழித்தற் பொருளை விளக்குமாதலின் இது **வஞ்சப் புகழ்ச்சியணியின்** பாற்படும். நகுதல் - சிரித்தல். "எள்ளல் இளமை பேதைமை மடனென்றுள்ளப்பட்ட நகை நான்கென்ப"

என்று தொல்காப்பியத்திற் கூறிய நகைவகை நான்கனுள் இது எள்ளலாம். (எள்ளல் - இகழ்ச்சி). கோறுதல் - கொல்லுதல், போக்குதல்: இஃது முன்வந்த 'கோது' என்பதைத் தழுவி நின்றது. ஆகவே, 'என்பால் கோதுளது: ஐவர்பால் அது இல்லை' என்ற குறிப்பினது. (16)

17. விதுரன் எழுந்துபோக, துரியோதனன் மண்டபங் கட்டச் சொல்லுதல்.

அண்ணல்சொற் கொடுமைக் காற்ரு
　　தழன்றுளம் விதுர ருங்கண்
எண்ணிய சூழ்ச்சிக் குள்ள
　　மிசைவுரு தெழுந்து போனுன்
நண்ணிய நண்ப ரோடு
　　நாககே தாய்ந்த வண்ணம்
மண்ணுல கென்றுங் காணு
　　மண்டப மமைக்க வென்ருன்.

(இ-ள்) அண்ணல்-துரியோதனனுடைய, சொற் கொடுமைக்கு ஆற்ருது - கொடிய பேச்சுக்களைக் கேட்கப் பொருமல், உளம் அழன்று - மனம் கொதித்து, விதுரன்—, எண்ணிய சூழ்ச்சிக்கு - அத்துரியோதனன் நினைத்துள்ள வஞ்சனைக்கு, இசைவுருது - உடன்படாமல், ஆங்கண் - அந்த இடத்தினின்று, எழுந்து போனுன்—; (பின்னர்) நாககேது - துரியோதனன், நண்ணிய நண்பரோடு ஆய்ந்த வண்ணம் - நெருங்கிய சிநேகிதர்களோடு ஆராய்ந்து நிச்சயித்தபடியே, மண்ணுலகு என்றும் காணு மண்டபம் - நிலவுலகத்தில் இனி என்றைக்குமே அழகில் நிகர் காண முடியாத ஒரு மண்டபத்தை, அமைக்க என்ருன் - கட்டுவீராக என்று (அந்தச் சபையில் வந்திருந்த அரசர்கட்குக்) கட்டளை யிட்டான்; (எ.று)

துரியோதனனை அண்ணல் என்றது - இகழ்ச்சிக் குறிப்பினது. காணு - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (17)

18. கட்டிய மண்டபத்தின் சிறப்புக் கண்டு மகிழ்தல்.

என்னலுந் தொழிலின் வல்லோ
　　ரிமைக்குமா மணியா லும்பர்
மன்னவை தானு மொவ்வா
　　மண்டப மொன்று செய்தார்

அன்னமண் டபத்தை நோக்கி
யனுசர்மா துலனோ டண்ணல்
உன்னிய வதற்கு மேலா
யுளதென வுவகை கூர்ந்தான்.

(இ-ள்) என்னலும் - ("மண்டபம் அமைக்க") என்று கட்டளை கூறியவுடனே, தொழிலின் வல்லோர் - சிற்பத் தொழிலில் வல்ல திறலோர், இமைக்கும் மா மணியால் - ஒளிவிடுகின்ற சிறந்த இரத்தினங்களால், உம்பர்மன் -தேவேந்திரனுடைய, அவை தானும் ஒவ்வா -சபாமண்டபமாகிய சுதர்மையென்பதும் நிகராகாத, மண்டபம் ஒன்று செய்தார் - ஒரு (நேர்த்தியான) மண்டபத்தைக் கட்டி முடித்தார்கள்: அன்ன மண்டபத்தை - அத்தகைய சபாமண்டபத்தின் அழகை, அண்ணல்-துரியோதனன், அனுசர் மாதுலனோடு - தம்பியர் மாமன் சகுனி இவர்களோடு, நோக்கி - பார்த்து, உன்னிய அதற்கு மேலாய் உளது என - (நாம்) நினைத்த எண்ணத்திற்கு மேலாகவே (சிறப்பாகக்) கட்டப்பட்டுள்ளது என்று, உவகை கூர்ந்தான் - மகிழ்ச்சி மிகுந்தான் ; (எ.று).

உம்பர் - தேவர்கள்: மன் - அரசன்; எனவே, தேவேந்திரன். அவனது சபாமண்டபம் 'சுதர்மை' எனப்படும். (18)

**19. துரியோதனன் மண்டபத்தின் சிறப்பைப் பற்றித் திருதராட்டிரனிடங் கூறி, அவனைக் கொண்டு பாண்டவரை வருவிக்கத் தூதரை யனுப்ப வேண்டுமெனல்.**

உவகைகூர்ந் துயிர்த்தோன் பாற்போந்
தொளிகொண்மண் டபமொன் றைய!
நவமுறப் புரிந்தேன் பாண்டு
நந்தனர் தம்மைக் காண்பான்
இவணழைத் திடிலென் மாமன்
ஏற்றமா யாடுஞ் சூதால்
அவனியான் பெறுவ லென்றுன்
அத்தனு மகிழ்ந்து சொல்வான்.

(இ-ள்) (இங்ஙனம் துரியோதனன்) உவகை கூர்ந்து - மகிழ்ச்சி மிகுந்து, உயிர்த்தோன்பால் போந்து - பெற்ற திருதராட்டிரனிடம் வந்து, ஐய! - பெரியோய்!, ஒளிகொள் மண்டபம் ஒன்று - பிரகாசம் பொருந்திய சபாமண்டபமொன்றை, நவம் உற - புதுமையாக.

புரிந்தேன் - கட்டியமைத்தேன்: பாண்டு நந்தனர் தம்மை-பாண்டவர்களை, காண்பான் - இந்த மண்டபத்தின் அழகைக் காணும் பொருட்டு, இவண் - இந்த அத்தினுபுரத்திற்கு, அழைத்திடில் (தூதுவர் மூலம்) அழைப்பாயாஞல், (அவ்வமயம்) என் மாமன் - என்னுடைய மாமஞகிய சகுனி, ஏற்றமாய் - தன் பக்கம் ஓங்கும் படி, ஆடும் சூதால் - விளையாடுகின்ற சூதாட்டத்தால், யான் - நான், அவனி பெறுவல் - இந்தப் பூமியாட்சியைப் பெற்றிடுவேன், என்ருன் - என்று கூறினுன்: அத்தனும் - (அது கேட்டுத்) தந்தையும், மகிழ்ந்து - சந்தோஷப்பட்டு, சொல்வான் - சொல்வாஞயினுன்; (எ.று). தந்தை கூறியதை மேலைச் செய்யுட்களிற் காண்க.

நந்தனன் - மகன். மாயச்சூதில் சகுனி வல்லவஞதலின் 'மாமன் ஏற்றமாய் ஆடுஞ் சூது' என்ருன். (19)

### 20-21. இரண்டு கவிகள்-ஒரு தொடர்: அதற்குத் திருதராட்டிரன் மகிழ்ந்து கூறி, ஓலை கொடுத்து விதுரனையனுப்புதல்.

காதமர் பொருது வெல்லக்
கடவதன் றும்மால் மாமன்
சூதினுற் பெறுவான் வையந்
துணிந்ததே சூழ்ச்சி யென்றங்
கோதுநும் மிளைஞர் கூட
முஞற்றுமோர் அழகு காண்பான்
போதுவா னெனக்கிங் குள்ளம்
போந்துமீண் டிடுமி னென்றே.

(இ-ள்) உம்மால் - உங்களால், காது அமர் பொருது - மோதுகின்ற போரைச் செய்து, வெல்லக் கடவதன்று - (பாண்டவர்களைச்) செயிக்க முடியாது: மாமன் - நுமது மாமஞகிய சகுனி, சூதினுல் வையம் பெறுவான் துணிந்ததே சூழ்ச்சி - சூதாடி இவ்வுலகத்தைக் கைக்கொள்ளும்படி முடிவு செய்ததே தக்க உபாயம், என்று - என்று (திருதராட்டிரன்) கூறி, (பின்பு தருமனுக்கு ஓலைபோக்கத் துணிந்து), அங்கு - அப்போது, "ஓதும் நும் இளைஞர் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற உமது தம்பியராகிய துரியோதனுதியர், கூடம் - ஒரு மண்டபத்தை, உஞற்றும் - கட்டச் செய்து முடித்துள்ள, ஓர் - ஒப்பற்ற, அழகு காண்பான் - நேர்த்தியினைக் கண்ணுல் நேரே கண்டு அநுபவிக்கும் பொருட்டு, போதுவான் - நீ வந்து சேர்வது, எனக்கு - (உன் பெரிய தந்தையாகிய) எனக்கு,

இங்கு - இப்போது, உள்ளம் - (மிகவும் விருப்பமான) கருத்தாகும்: (ஆகவே) போந்து - இங்கே வந்து (கண்டு ரசித்த பின்பு), மீண்டிடு மின்-திரும்பி (உன் நகராகிய இந்திரப்பிரத்தத்திற்கு)ப் போகலாம்'' என்று—, (எ.று) ''ஆவணமெழுதி நல்கி'' என மேலைச் செய்யுளோடு குளகமாய் இயையும்.

உள்ளம்-மனக்கருத்து. பெறுவான்-வினையெச்சம் 'துணிந்தது' என்ற தொழிற்பெயரொடு முடிந்தது. காண்பான் – வினையெச்சம். போதுவான் - வினையெச்சம் தொழிற்பெயர்த் தன்மைப் பட்டது. (20)

21. ஆவண மெழுதி யைவர்க்
கனுசனை யழைத்து நல்கிக்
காவல வெவ்வா றேனுங்
கரைத்தவர் தமைக்கொண் டெய்தென்
றேவின னவனுந் தேரூர்ந்
தியமெழத் தானை சூழப்
பாவலர் புகழு மைவர்
பதியைநா ளிரண்டிற் சேர்ந்தான்.

(இ-ள்) ஐவர்க்கு - பஞ்சவர்க்கு; ஆவணம் எழுதி - திருமுகம் எழுதி, அனுசனை - (தம்) தம்பியாகிய விதுரனை, அழைத்து - வர வழைத்து, நல்கி - அவனிடங்கொடுத்து, ''காவல! - காத்தல் தொழிலில் வல்லவனே! எவ்வாறேனும் - எவ்வகையிலாயினும், அவர் தமைக் கரைத்து - அந்தப் பஞ்சவரை இசைய வைத்து, கொண்டு - உன்னுடன் கொண்டு, எய்து - (இங்கு) வந்து சேருவாயாக'', என்று ஏவினன் - என்று கட்டளையிட்டனுப்பினான்: அவனும் - அந்த விதுரனும், தேர் ஊர்ந்து - தேரைச் செலுத்தி, இயம் எழ - வாச்சியங்கள் முழங்க, தானை சூழ - பரிவாரமாகப் படைகள் சூழ்ந்துவர, பாவலர் புகழும் ஐவர் பதியை-புலவர்களால் புகழ்ந்து போற்றப்படுகின்ற பாண்டவரது நகரமாகிய இந்திரப் பிரத்தத்தை, நாள் இரண்டிற் சேர்ந்தான் - இரண்டு நாட்களில் அடைந்தான்; (எ.று)

கரைத்து - சொல்வன்மை கொண்டு இசையவைத்து என்றபடி. (21)

வேறு

**22. பாண்டவர் விதுரனை உபசரிக்க, அவன் தான் வந்த காரியம் கூறித் திருமுகம் ஈதல்.**

வந்த தஞ்சிறு தாதைதா
    ளன்பொடு வந்தெதிர் பணிந்தேத்தி
மைந்த ரைவருங் கோயில்கொண்
    டணைந்தபின் மதுகைவில் விதுரன்றுன்
நந்து வாழ்வின ருள்ளிய
    விரகெலாம் நவின்றிவர்க் கிசைபேணு
அந்த கன்றரு திருமுக
    மளித்தனன் அதன்பய னுணர்ந்திட்டார்.

(இ-ள்) வந்த-தம் நகர்க்கு வந்த, தம் சிறு தாதை தாள் - தம்முடைய சிறிய தந்தை முறையினரான விதுரன் பாதத்தில், அன்பொடு வந்து எதிர் பணிந்து - விருப்பத்தோடு எதிர்கொண்டு வந்து வணங்கி, ஏத்தி - போற்றி, மைந்தர் ஐவரும் - புதல்வர் முறையினரான பாண்டவரைவரும், கோயில் கொண்டு-அரண்மனையினுள் உடனழைத்துக் கொண்டுபோக, அணைந்தபின்-(அவர் அவர்களைத்) தழுவிய பின்னர், மதுகை வில் விதுரன்-வலிமையையுடைய வில்லை யேந்திய விதுரன், நந்து வாழ்வினர்-தேய்ந்தொடுங்கும் வாழ்வினை யுடையராகிய துரியோதனன் முதலியோர், உள்ளிய - நினைந்து சூழ்ந்த, விரகெலாம்-வஞ்சனையுபாயமெல்லாம், இவர்க்கு நவின்று-இவர்களிடம் சொல்லி (ப்பிறகு), இசை பேணு - புகழொடு வாழ விரும்பாத, அந்தகன் தரு திருமுகம் - பிறவிக் குருடனாகிய திருதராட்டிரன் கொடுத்தனுப்பிய செய்தியோலையை, அளித்தனன்-அவர்களிடம் கொடுத்தான்: (பெற்ற பாண்டவர்) அதன் பயன் உணர்ந்திட்டார் - அந்த ஓலையால் விளையும்பயனை யறிந்து கொண்டனர்; (எ.று).

பாண்டவர்க்கு விதுரனிடத்துள்ள பித்ருபக்தியும், விதுரனுக்கு அவர்களிடத்துள்ள புத்ரவாத்ஸல்யமும் விளங்குதல் காண்க. திருமுகம்-பத்திரிகை, ஓலை:மங்கலவழக்கு. பத்திரிகையை 'திருமுகம்' என்றல் மரபு; வடமொழியிலும், "ஸ்ரீமுகம்" எனப்படும்: சிறந்த வாயினாற்சொல்லப்படுஞ்சொற்கள் அடங்கியதென்றவாறு. தான்-அசை. பேணு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இதுமுதல் பன்னிரு கவிகள் - முதற்சீர் மாச்சீரும் இறுதிச் சீர்காய்ச்சீருமாய் இடையில் விளச்சீர்கள் நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (22)

### 23. தருமன் துரியோதனனது சூழ்ச்சியைப் பழித்துச் சூதாடுதலின் குற்றம் கூறுதல்.

அத்தன் முன்னவ னோலையும்
இளையவன் அறைந்திடு மொழிதானும்
ஒத்த பண்புணர்ந் துதிட்டிர
னுரைத்திடு முரககே துளமீதோ
எத்தி றத்தவ ரென்னினும்
பகைவிளைத் தினியநண் பதனோடும்
உத்த மச்செய லியாவையு
மொழித்துநின் றுதவுமச் சூதாமோ.

(இ-ள்) அத்தன் முன்னவன் - (தனது) பெரிய தந்தையான திருதராட்டிரன் அனுப்பிய, ஓலையும்- திருமுகவாசகமும், இளையவன் - சிறிய தந்தையாகிய விதுரன், அறைந்திடும்-சொல்லுகின்ற, மொழி தானும்-வார்த்தையும், ஒத்த பண்பு உணர்ந்து-(தம்மில்) ஒத்திருந்த தன்மையையுணர்ந்து, உதிட்டிரன்-தருமபுத்திரன், உரைத்திடும்-(பின்வருமாறு) கூறுவானாயினன்: "உரககேது உளம் ஈதோ - துரியோதனனுடைய மனக்கருத்து இப்படித்தோ ?: எத்திறத்தவர் என்னினும் - எப்படிப்பட்ட நற்குணமுடையராயினும், பகை விளைத்து - (அவர்களுக்குள்) விரோதம் உண்டாக்கி, இனிய நண்பதனோடும்-(முன்னர் அவர்களுக்குள் இருந்த) இனிமையான சிநேக பாவத்தோடும், உத்தமச்செயல் யாவையும் ஒழித்து நின்று உதவும் - சிரேட்டமான செயல்கள் எல்லாவற்றையும் போக்கி (த் தீமைக்கு) உதவுகின்ற, அ சூது ஆமோ - அந்தச் சூதாட்டமும் தக்கதோ ?" (எ.று).

சூது உத்தமச் செயல்யாவையும் ஒழிக்கும் என்பதை—"அடியும் ஆண்மையும் வலிமையும் சேனையும் அழகும் வென்றியும் தத்தம், குடியும் மானமும் செல்வமும் பெருமையும் குலமும் இன்பமும் தேசும், படியும் மாமறையொழுக்கமும் புகழும் முன்பயின்ற கல்வியும் சேர, மடியும்" என்ற வில்லிபாரதத்தாலும் அறியலாம். ஆமோ-ஓகாரம் எதிர்மறை. (23)

### 24. 'நின் கருத்தைக் கூறு' என்று விதுரனைத் தருமன் வினவ, அவன் உத்தரம் கூறுதல்.

விஞ்சு வெம்பவத் திஃதொரு
பவமெனும் வியன்மறை பிழைத்திந்த
வஞ்ச வழியினம் வாழ்வெலாங்
கவர்ந்திட வரவழைத் தனனுமும்
அஞ்சி ஞலினி யாவதென்
விதிச்செய லாம்படி யாமுந்தன்
நெஞ்சம் யாதென விதுரனு
நின்மன நேர்ந்தசெய் கெனச்சொன்ஞன்.

(இ-ள்) விஞ்சு வெம்பவத்து-மிகக்கொடிய பாதகங்களுள், இஃது-இந்தச் சூதாடுதல், ஒரு-ஒப்பற்ற, பவம்-பாதகமாகும், எனும்-என்று மொழிகின்ற, வியன்மறை-மேலான வேதவாக்கினை, பிழைத்து-பிழைபடச்செய்து, இந்த - இப்படிப்பட்ட வஞ்ச வழியில் - வஞ்சகமான சூது வழியினுல், நம் வாழ்வு எலாம் கவர்ந்திட-நமது செல்வ வாழ்க்கை முழுவதையும் கைக்கொள்ள, வரவழைத்தனன்-(நம்மை மண்டபத்தின் அழகு காண அழைப்பவன்போல) வரவழைத்துள்ளான் : நாமும் அஞ்சினுல் - நாமும் போவதற்குப் பயந்தால், இனி ஆவது என் - இனி விளைவது என்? விதிச்செயல் ஆம்படி ஆம் - விதியின் செயல் ஆனபடியாகட்டும் : (என்று நினைந்து விதுரனை நோக்கித் தருமன்) உந்தன் நெஞ்சம் யாது என - உம்முடைய மனக்கருத்து யாது என்று வினவ, விதுரனும்—, நின் மனம் நேர்ந்த செய்க-உன் மனத்தில் தோன்றும் விதமாகவே செய்வாயாக, எனச் சொன்ஞன்—; (எ.று).

சூதாடல் பெரும்பாவமென்பது வேத நூற்கொள்கை. 'நின் கருத்து யாது' என்று தருமன் வினுவியதற்கு, விதுரன் "உன் விருப்பத்தின்படியே செய்" எனக் கூறி முடித்தது - ஐவரை அழைத்து வரும்படி தூது வந்த தான் அதற்கு மாருகத் தன் கருத்தை நேரே சொல்வது, தன்னைத் தூதனுப்பிய திருதராட்டிரனுக்குத் தான் வஞ்சனை செய்ததாய் முடியும் என்று கருதியதனுலென்க. (24)

## 25. வீமசேனன் கூறுதல்.

அன்று நஞ்சமிட் டலைநதி
　　விழுத்தினுன் அரக்ககங் கொளுவித்தான்
இன்று வவ்விநம் வாழ்வெலாங்
　　கவருவா னெண்ணியே யழைப்பித்தான்
என்றும் வஞ்சனை செய்பவன்
　　அவன்றனண் பினையொரீஇ அமராடிக்
கொன்ற போதலாற் கிடைக்குமோ
　　வரசெனக் கூறினன் கதைவல்லோன்.

(இ-ள்) அன்று - (நீர் விளையாட்டு நிகழ்த்திப் பின் உண்ட) அந்த இளமைப் பருவத்திலேயே, நஞ்சமிட்டு - விஷத்தையூட்டி, அலைநதி - அலைபாயுங் கங்கா நதியில், விழுத்தினுன் - (பிணித்துத்) தள்ளினுன் (அந்தத் துரியோதனன்): (மற்றும்) அரக்கு அகம் கொளுவித்தான் - அரக்கு மாளிகையைத் தீயிட்டுக் கொளுவச் செய்தான்: இன்று - இன்றைக்கோ, நம் வாழ்வு எலாம் வவ்வி கவருவான் எண்ணியே - நம்முடைய செல்வ வாழ்க்கையனைத்தையும் பறித்துக் கைப்பற்ற நினைத்தே, அழைப்பித்தான் - அழைத்திருக்கின்ருன்: என்றும் வஞ்சனை செய்பவன் - எக்காலத்தும் கபட சூழ்ச்சியே செய்பவன்: (ஆதலின்) அவன்றன் நண்பினை ஒரீஇ - அவனுடைய நட்பினை நீக்கி, அமர் ஆடி - போரிட்டு, கொன்ற போது அலால் - கொன்ருலல்லது, அரசு கிடைக்குமோ - நம்முடைய அரசு நம்முடையதாகுமோ?, என - என்று, கதை வல்லோன் - வீமசேனன், கூறினன் - சொன்ருன்; (எ.று).

முதலிலே என்னைக் கொல்லுமாறு ஆற்றிலே நஞ்சிட்டு விழுத்தினுன்: பிறகு நம்மெல்லோரையுமே கொல்லுமாறு நாம் வாழ்ந்த அரக்குமனையில் தீயிடச் சூழ்ச்சி செய்தும், இப்போதும் நம் செல்வ வாழ்க்கை முழுவதையும் பறிக்கும் வகையாக மண்டபமென்ற வியாஜம் வைத்து அழைத்தும், கேட்டிற்கே மேன்மேற் பல படியாகத் துரியோதனன் முயல்கின்ருனுதலால், அவனுக்கு இப்பொழுது சிறிதும் இடங்கொடாமல் அவனைக் கொன்ருல்தான் நாம் நம் அரசு நிலைத்து உயிர்தப்பிப் பிழைக்கலாமென வீமன் தனது கருத்தை வெளியிட்டான்: இதனுல், அத்தினபுரி செல்லுதல் தக்கதன்றென வீமன் மறுத்தவாறு,

ஒரீஇ - ஒருவி: சொல்லிசையளபெடை. (25)

**26. அருச்சுனன் கூறுதல்: நகுலசகதேவரும் அவன் கருத்தினையே ஆமோதித்தல்.**

நேர லார்தமைத் தேறலும்
நேர்பவர்த் தேறலா மையுமன்னர்
சீர லாவென வரசநீ
தியிற்சொலுஞ் சீருணர்ந் தியாமோம்பும்
பார லாதுவந் திடானிடம்
படருவ பண்பல வெனச்சாபப்
போர லாதுஞற் றிடான்சொல
விளைஞரும் போதுத றகாதென்றார்.

(இ-ள்) (பின்னர்) சாபப்போர் அலாது உஞற்றிடான் - விற் போர்தவிர ஏனைய போர்முறை செய்யாதவனாகிய அருச்சுனன், (தருமனை நோக்கி) நேரலார் தமை தேறலும் - நேர்மையில்லாத பகைவர்களை நம்புதலும், நேர்பவர்த் தேறலாமையும் - நேர்மை யுடைய நண்பர்களை நம்பாமையும், மன்னர் சீர் அலா என - அரசர்களுக்குச் சிறப்பாகா என்று, அரச நீதியில் சொலும் சீர் உணர்ந்து - ராஜ நீதியில் சொல்லுகின்ற முறைமையினை யறிந்தே, யாம் - நாம், ஓம்பும் பார் அலாது - புரக்கின்ற பூமியைக் கவர்த லல்லாது, உவந்திடானிடம் - மகிழ்ச்சி கொள்ளாதவனாகிய துரியோதனனிடம், படருவ(து) - (அழைப்புக்கிணங்கிப்) போவது, பண்பு அல(து) - நற்செயலாகாது, என-என்று, சொல - சொல்ல, (அதனைக் கேட்டு) இளைஞரும் - தம்பியராகிய நகுலசகதேவரும், போதுதல் - நாம் போவது, தகாது-கூடாது, என்றார் - என்று கூறினார்கள்; (எ.று).

"தேரான்தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும், தீரா விடும்பை தரும்" என்றது குறளும். பாரலாது உவந்திடான் - பூமியைப் பறிப் பதிலேயே கருத்துடையவன் என்றபடி. படருவ பண்பல-படருவது பண்பலது: ஒருமையிற் பன்மை. சாபம் - வில், 'சாபப் போரலாது உஞற்றிடான்' என்றது வில்விசயனுக்காகி வந்த கருத்துடையடை கொளி: சூதுபோர்க்கிசையாதவன் என்ற கருத்தினது. உவந்தி டான் - எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர். (26)

**27. தருமன் சொற்படி அத்திஞபுரஞ்செல்ல அரசரும் அமைச்சரும் அரசமகளிரும் சேனேகளும் திரண்டு புறப்படுதல்.**

இந்த வாய்மைநன் றுயினு
மறுப்பதோ வீன்றவன் மொழிநாளே
வந்த தாதைபி னேகுவ
லென்றறன் மகன்முர சறைவித்தங்
கந்த மாநக ரரசரு
மமைச்சரு மணங்கஞர் களுந்தேரூர்ந்
தந்த மாவும்வெம் பரிகளு
மாள்களுந் தான்வரப் புறப்பட்டார்.

(இ-ள்) இந்த வாய்மை - தம்பியர்கள் கூறிய வார்த்தைகள், நன்றுயினும் - ஏற்றுக் கொள்ளத் தக்கனவேயாஞலும், ஈன்றவன் மொழி மறுப்பதோ - பெற்ற தாதையின் கட்டளே வார்த்தையை மறுத்து மீறி நடப்பதோ? (தகுதியன்று: ஆகவே) நாளே - நாளேய தினமே, வந்த தாதை பின் - (நம்மை அழைத்துப் போக) வந்த சிறிய தந்தையாகிய விதுரன் பின்ஞல், ஏகுவல் - செல்லப் போகிறேன், என்று - என்று நிச்சயித்து; அறன்மகன் - தரும புத்திரன், அங்கு - அந்த இந்திரப்பிரத்தத்து, முரசு அறைவித்து - முரசு முழக்கித் தெரிவித்து (ப் பின்னர்) அந்த மாநகர் அரசரும் அமைச்சரும் அணங்கஞர்களும் - அந்தச் சிறந்த நகரிடத்துள்ள மன்னர்களும் மந்திரிமார்களும் அரசமகளிரும், தேர் ஊர்ந்து - தேர்களிலேறி வர, அந்தம் மாவும் - அழகு செய்யப்பட்ட (அலங் கரிக்கப்பட்ட) யானேகளும், வெம் பரிகளும் - கொடிய குதிரைகளும் ஆள்களும் - காலாட்படையினரும், தான்வர - தம்மைச் சூழ்ந்து வர, புறப்பட்டார் - (அத்திஞபுரத்திற்குப், புறப்பட்டார்கள்; (எ.று).

அந்தம் - அழகு. மா - யானே: கோலஞ் செய்யப்பட்ட யானே கள் என்றபடி. 'தந்தம் மா' - எனப்பிரித்தல் நேரிதன்று. அறன் மகன் - நான்கனுருபு தொக்கது. (27)

**28. நாற்படைகளின் செலவு வருணனே.**

வரைந டந்தன நடந்தன
தேரினம் மண்ணிழிந் ததிர்மேக
நிரைந டந்தன நடந்தன
வாரண நெடுங்கட றனிலார்க்குந்

திரைந டந்தன நடந்தன
வாம்பரி சிலம்புவிட் டரிசாலந்
தரைந டந்தன நடந்தனர்
வீரர்போ தகநடந் துயர்வெய்த.

(இ-ள்) தேர் இனம் - தேர்களின் கூட்டங்கள், வரை நடந்தன-மலைகள் நடந்து வந்தன என்று சொல்லும்படி, நடந்தன- வந்தன: மேகநிரை - மேகங்களின் வரிசை, மண் இழிந்து - பூமியில் இறங்கி வந்து, அதிர் - பேரொலியோடு, நடந்தன - நடந்து வந்தன என்று சொல்லும்படி, வாரணம் - யானைக் கூட்டங்கள், நடந்தன - வந்தன: நெடும் கடல்தனில் ஆர்க்கும் திரை - பெரிய கடலிலே ஆரவாரிக்கின்ற அலைகள் (வரிசையாக), நடந்தன - நடந்து வந்தன என்று சொல்லும்படி, வாம் பரி - தாவிப் பாய்கின்ற குதிரைகள், நடந்தன - வந்தன: வீரர் - காலாட்படை யினர், போதகம் - யானைகள், நடம் - (தமது) மகிழ்ச்சிக் கூத்து, துயர்வு எய்த - துன்பம் அடையும்படி, சிலம்புவிட்டு - மலைக் குகை களை விட்டு, அரி சாலம் - சிங்கக் கூட்டங்கள், தரை நடந்தன - தரையிலே நடந்து வந்தன என்று சொல்லும்படி, நடந்தனர் - நடந்து வந்தனர் ; (எ.று).

'நடந்தன நடந்தன' என்று இரட்டித்து வந்ததனிடையே 'போல' என்ற உவமவுருபு தொக்கது. தேருக்கு மலையும், யானைக்கு மேகமும், குதிரைக்குக் கடலினலையும், வீரர்க்குச் சிங்கமும் உவமை யாக் கூறப்பட்டன. வரை மேகநிரை திரை நடந்தன என்ற விடத்து இல்பொருளுவமையணி காண்க. சாலம் - கூட்டம்: வட சொல். நடம் - கூத்து. போதகம் துயர் வெய்தியது - சிங்க நடைக்கு அஞ்சி. போதகம் - பத்து வருஷத்து யானைக்கன்று.

(28)

**29. ஐவரும் தேரிலேறியும் பாஞ்சாலி சிவிகையிலும் வர அரசமகளிரும் காவலரும் உடன்வருதல்.**

தேரி னிற்கவி ஐவரும்
தரளவொண் சிவிகையிற் பாஞ்சாலி
காரி னிற்பொலி குழலியர்
பிடிமிசை காவலர் பலர்தேர்மேற்
பாரி னின்றெழுந் தூசினன்
சுடரையும் பரைக்கொடித் திரள்போர்ப்பக்
காரி யங்கடை முகிலினுங்
கடலினுந் துவைப்பசென் றனரம்மா.

(இ-ள்) கவின் ஐவரும் - அழகு பொருந்திய பஞ்ச பாண்டவர் கள், தேரினில் - தேர்களில்: (ஏறிச் சென்றனர்:): பாஞ்சாலி - திரௌபதி, தரள ஒண் சிவிகையில் - முத்துக்களினால் விளங்கும் பல்லக்கினில்: (ஏறிச் சென்றனள்): காரினில் பொலி குழலியர் - மேகம்போல் கரிய கூந்தலையுடைய அரசமகளிர், பிடிமிசை - பெண் யானைகளின் மேல் : (ஏறிச் சென்றனர்): காவலர் பலர் - மன்னர்கள் பலர், தேர் மேல் - தேர்களின் மேல்: (ஏறிச் சென்றனர்:): (இங்ஙன மாகவே) பாரினின்று - தரையினின்று, எழும் - மேலே கிளம்பிய, தூசு - துகள் (புழுதி), இனன் சுடரை (போர்ப்ப) - சூரியனின் ஒளியைச் சுற்றி மறைக்க, உம்பரை - மேலிடத்தை (ஆகாசத்தை), கொடித்திரள் போர்ப்ப – துவசச்சீலைத் தொகுதிகள் முற்றிலும் மறைக்க, கார் இயம் - அச்சத்தை விளைவிக்கின்ற வாச்சியங்கள், கடை முகிலினும் - யுகாந்த காலத்துக் காளமேக முழக்கத்தையும், கடலினும் - (பொங்குகின்ற) கடலோசையினும் விஞ்சி, துவைப்ப - பேரொலி செய்ய, சென்றனர் - (அவர்கள் யாவரும் அத்தினாபுரி நோக்கிச்) செல்லலாயினர்; (எ.று). அம்மா-வியப்பிடைச் சொல். மகளிர் பெண்யானை மேலும் சிவிகையின் மேலும் ஏறிச் செல்லுதல், மரபு.

தேரினில் சிவிகையில் பிடிமிசை தேர்மேல்-சென்றனர் என்றும்; தூசு சுடரைப்போர்ப்ப, கொடித்திரள் உம்பரைப்போர்ப்ப, இயம் துவைப்ப - சென்றனர் என்றும் இயையும். கார்-அச்சம். இன் - உறழ் பொருவு. (29)

30. சேனைகளுடன் தம்பியர் நால்வரும் நான்கு பக்கத்திலும் வரத் தருமன் செல்லுஞ் சிறப்பு.

திசைக ணான்கினு மன்னரு
மமைச்சருஞ் சேனையுஞ் சூழ்போத
விசையன் பின்வர முன்னர்மா
ருதிசெல விறலின்மத் திரைமைந்தர்
பிசகி லாதிரு மருங்குற
யாவரும் பிறங்குதா ரகைபோலும்
வசையி லாதவன் யாகபத்
தினியொடு மதியெனும் படிசென்றான்.

(இ-ள்) திசைகள் நான்கினும் - நான்கு திக்குக்களிலும், மன்னரும் - அரசர்களும், அமைச்சரும் - மந்திரிமார்களும், சேனை யும் - படைகளும், சூழ்போத - (தம்மைச்) சூழ்ந்து வர, விசையன்-

அருச்சுனன், பின்வர - பின்னணியாக வர, முன்னர் - முன்னணியாக, மாருதி - வீமசேனன், செல - போக, விறலின் மத்திரை மைந்தர் - பெருமையையுடைய நகுலசகதேவர் இருவரும், பிசகு இலாது - (சிறிதும்) பிழைபடாது, இரு மருங்குற - இரு பக்கங்களிலும் (வலம் இடம்) வர, (இப்படி) யாவரும் - அனைவரும், பிறங்கு தாரகை போலும் - விளங்குகின்ற நட்சத்திரங்களைப் போலே இருந்தனர்; (அவர்களுக்கு நடுவே) வசையிலாதவன் - பழிப்பற்ற தருமபுத்திரன், ய்ாகபத்தினியொடு - திரௌபதியுடன், மதியெனும்படி - சந்திரனென்று ஒப்புச் சொல்லும்படி, சென்ருன்—; (எ.று).

தருமபுத்திரன் யாவரினும் பிரதானனுய்ச் சிறத்தலால் அவனுக்குச் சந்திரனையும், மற்றையோர்க்கு நட்சத்திரங்களையும் உவமை கூறினர்; தம்பியர் நால்வரையும் பெரிய தாரகைகளாகவும், சேனைகளைச் சிறிய தாரகைகளாகவும் கருதுக. 'பத்நீ'-வைதிக காரியங்களில் தனது கணவனுடனிருந்து உதவுபவளென்று பொருள் படும்; தருமர் இராசசூயயாகஞ் செய்யும்போது துணைவியாயிருந்ததனல், திரௌபதியை 'யாகபத்தினி' என்ருர். (30)

### 31. தருமபுத்திரன் தீச்சகுனங்கள் நேரவும் நிற்காமல் செல்ல வொருப்படல்.

துன்னி மித்தமும் நெறியிடைப்
பற்பல தோற்றிய தஃதோர்ந்து
பன்னி மித்தநூல் வல்லவர்
தடுத்துநீ படருத றகாதென்றே
சொன்னி மித்தமும் பிழைபடப்
பயந்தவன் சொற்புரந் திடருனே
நன்னி மித்தமென் றுதிட்டிரன்
தாரொடு நடந்தனன் துணிந்தம்மா.

(இ-ள்) நெறியிடை - போகும் வழியில், துர் நிமித்தமும் - தீச்சகுனங்களும், பற்பல தோற்றியது - பலப்பல தோன்றின: அஃது ஓர்ந்து - அவற்றினை ஆராய்ந்து, பல் நிமித்த நூல் வல்லவர் - நிமித்தநூல் பலவற்றிலேயும் வல்லவராகிய நிமித்திகர்கள், தடுத்து - (தருமன் மேற்செல்லுவதைத்) தடுத்து, 'நீ—, படருதல் தகாது - மேலே செல்லுதல் கூடாது', என்றே - என்று, சொன்ன - சொல்லிய, நிமித்தமும் - (வாய்ச்) சகுனமும், பிழைபட - பயனின்றிப் போகும்படி, உதிட்டிரன் - தருமபுத்திரன், 'பயந்தவன் சொல் புரந்திடல்

தானே நன்னிமித்தம்- பெற்ற தந்தை சொல்லைப் பாதுகாத்தல்தான் சிறந்த நல்ல சகுனமாகும்', என்று - என்று கூறி, தணிந்து - சாந்தத்தோடு, தாரொடும் - சேனையோடும், நடந்தனன் - மேற் செல்லலாயினான்; (எ.று) அம்மா - ஈற்றசை: வியப்பிடைச் சொல்லுமாம்.

பித்ருவாக்கிய பரிபாலனமே சிறந்த நன்னிமித்தம் என்று சொல்லித் துன்னிமித்தங்களை விலக்கியபடி, 'யாரொடும்' என்றும் பாடம். (31)

**32. யாவரும் ஒரு சோலையிற் சேர்ந்து நீர் விளையாட்டு முதலியன நிகழ்த்துதல்.**

நீடு வார்சிலை மைந்தரு
மாதரு நெறியிலோர் பொழிலெய்தி
ஆடு வார்மலர்த் தடப்புன
லலர்பறித் தணிகுவார் கனியெங்குந்
தேடு வாரினி தருந்துவார்
வேடைக டீர்குவார் பலகீதம்
பாடு வார்திறம் பேசுவார்
சிறுநகை பரப்புவார் களிகொள்வார்.

(இ-ள்) நீடு வார்சிலை மைந்தரும் - மிக நீண்ட வில்லையேந்திய ஆடவரும், மாதரும் - பெண்டிரும், நெறியில் ஓர் பொழில் எய்தி - வழியேயுள்ளதோர் சோலையையடைந்து, மலர் தடம் புனல் ஆடுவார் - பூக்கள் நிறைந்த தடாகத்தின் நீரில் விளையாட்டு நிகழ்த்திக் குளிப்பர்: (பின்னர் கரையேறிவந்து), அலர்பறித்து அணிகுவார் - மலர்களைப் பறித்துச் சூட்டிக் கொள்வர்; (பின்பு) எங்கும் - எல்லாவிடங்களிலும், கனி - பலவகைப் பழங்களையும், தேடுவார்—; (தேடிக்கொண்டு வந்து) இனிது அருந்துவார் - சந்தோஷத்தோடு உண்பார்கள்: (அதனால்) வேடைகள் தீர்குவார் - வெப்பத்தாலான களைப்புத் தீர்வர்கள்; (களைப்புத் தீரவே) கீதம் பல பாடுவார் - பல வகைப் பாடல்களையும் பாடுவார்கள்; திறம் பேசுவார் - பலபடி சம்பாஷிப்பர்: சிறுநகை பரப்புவார் - புன்சிரிப்புச் செய்து மகிழ்வர்; (இங்ஙனம் பலவாறு) களிகொள்வார் - ஆனந்திப் பார்கள்; (எ.று).

புனல் விளையாட்டு, பூக்கொய்தல், உண்டாட்டு முதலியன கூறல் பெருங்காப்பியத்திற் கிலக்கணமாதலின், அதற்கேற்ப அவை இங்கே கூறப்பட்டன என்க. இச்செய்யுளில் **தன்மை நவிற்சியணி** படக் கூறிய நயம் ஓர்க. (32)

**33. ஐந்திணை நிலங்களையும் கடந்து அத்தினபுரியின் புறச்சோலையில் தங்குதல்.**

இந்த வாறயர் வோர்மரு
　　தங்கடந் தெய்திமுல் லையிலாயர்
தந்த பாலளை பருகிப்போய்க்
　　குறிஞ்சியிற் சவரர்தேன் றரமாந்தி
வெந்த பாலையுந் தண்செய
　　நெய்தலின் மேவிதண் டுளிவாரி
சிந்த வேடைதீர்ந் திபநகர்க்
　　கருகொரு செழும்பொழி லுழிச்சார்ந்தார்.

(இ-ள்) இந்தவாறு - இந்தவிதமாக, அயர்வோர் - ஆனந்தித் திருந்தவர்கள், மருதம் கடந்து-மருதநிலத்தைத் தாண்டி, முல்லையில் எய்தி–முல்லை நிலத்தையடைந்து அங்கு, ஆயர்தந்த-இடையர்கள் கொடுத்த, பால் அளை பருகி-பாலையும் வெண்ணெயையும் அருந்தி, (பின்பு) குறிஞ்சியில் போய் - குறிஞ்சி நிலத்தின் வழியே போய், (அங்குச்) சவரர் தேன் தர - வேடர்கள் (மலைத்) தேனைத்தர, மாந்தி-அத் தேனைப் பருகிக் களித்து, (பின்பு சென்ற) வெந்த பாலையும்-வெப்பமாயிருந்த பாலை நிலமும், தண்செய-குளிர்ந்திருப்ப, (அதனைக்கடந்து) நெய்தலின் மேவி - நெய்தல் நிலத்தையடைந்து, (ஆங்கு) வாரி - கடலினீர், தண் துளி சிந்த - குளிர்ச்சி பொருந்திய நீர்த் திவலைகளைத் தூர்விச் சிதற, வேடை தீர்ந்து-வெப்பத்தாலாகிய களைப்பு நீங்கி, இப நகர்க்கு அருகு - அத்திநுபுரத்துக்குச் சமீபத்தி லுள்ள, ஒரு செழும் பொழில் உழி சார்ந்தார் - ஒரு செழிப்பான சோலையிடத்து வந்து சேர்ந்தார்கள் ; (எ. று).

ஐந்திணை நெறியளாவல் சான்றோர் கவிக்கோர் லட்சண மாதலின் அதற்கேற்பக் கூறுதல் கவிமரபு: அம் மரபு பற்றி இங்கும் கூறப்பட்டது. மருதம் முல்லை குறிஞ்சி பாலை நெய்தல் என்ற முறை வைப்பில் கடந்தமை கூறினர். மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்; முல்லை-காடும் காடு சார்ந்த இடமும்; குறிஞ்சி-மலையும் மலை சார்ந்த இடமும்; பாலை-நீரற்ற நிலப்பகுதி: (குறிஞ்சியும் முல்லையும் கலந்தது பாலை.) நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும். ஆயர்- இடையர்: முல்லை நிலத்தவர். சவரர் - வேடர், குறவர்: குறிஞ்சி நிலத்தவர். இபம் - அத்தி, யானை. இபநகர் - அத்திநுபுரி என்பதன் பரியாயம். உழி - ஏழனுருபு : இடப் பொருளது. (33)

வேறு

**34. யானை குதிரைகளை மரங்களிற் கட்டி யாவரும் இளைப்பாறுதல்.**

படங்குக ளடித்தடல் பலம ரங்களிற்
கடங்கலுழ் கரிபரி களைத்த ளைந்துகா
அடங்கலும் பரிசன ரமரத் தந்தம
திடங்களின் மாதரோ டியாரும் வைகினர்.

(இ-ள்) படங்குகள் - கூடாரங்கள், அடித்து - அமைத்து, அடல் - வலிமையையுடைய, பல மரங்களில்—, கடம் கலுழ் கரி - மதஜலத்தைப் பெருக்குகின்ற யானைகளையும், பரிகளை - குதிரை களையும், தளைந்து - பிணித்துக்கட்டி (இளைப்பாறும்படி செய்து), கா அடங்கலும் - சோலை முழுவதிலும், பரிசனர் அமர - உடன் வந்த பரிவாரங்கள் தங்கியிருப்ப, யாரும்-பிறரனைவரும், மாதரோடு- தங்கள் பெண்டிர்களோடு, தந் தமது இடங்களில் - தங்கள் தங்களுக்கென வகுத்த இடங்களில், வைகினர் - தங்கி யிளைப் பாறினர்கள், (எ.று).

படங்கு - கூடாரம்: ஆங்காங்குத் தங்கி வசிக்கும்படி வஸ்திரங் களினால் மாளிகைகள் போல அறைகள் முதலியன அமைத்துக் கட்டிக் கொள்ளும் பாசறை விடுதி.

இதுமுதல் ஏழுகவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (34)

**35. பாசறையின் சிறப்பு.**

நஞ்சினுங் கொடியவ னடைகண் டூர்புறத்
தஞ்சிவந் திந்திரை யடைந்து ளாளெனப்
பஞ்சவர் பாசறை பல்வ ளங்களும்
விஞ்சிய வளகையின் விளங்கிற் றுலரோ.

(இ-ள்) நஞ்சினும் கொடியவன் நடை கண்டு - விஷத்தைக் காட்டிலும் கொடியவனாகிய துரியோதனனின் தீயொழுக்கத்தைப் பார்த்து, இந்திரை - இலக்குமிதேவி, அஞ்சி - (அவனூரிலிருப் பதற்குப்) பயந்து, ஊர்ப்புறத்து வந்து அடைந்துளாள் - அவனூருக்குப் புறம்பே (புறஞ்சோலையில்) வந்து சேர்ந்துள்ளாள், என - என்று எண்ணும்படி, பஞ்சவர் பாசறை - பாண்டவர்கள்

தங்கியுள்ள படைவீடானது, பல் வளங்களும் விஞ்சி-பல வளப்பங்களும் செறிந்து, அ அளகையின் - அந்தக் குபேரபட்டணமாகிய அளகாபுரிபோல, விளங்கிற்று - பொலிவுற்றிருந்தது; (எ.று) ஆல், அரோ - ஈற்றசைகள்.

தருமபுத்திரனது படைவீடு பல்வளங்களும் செறிந்திருந்தது என்பது கருத்து. நடை - ஒழுக்கம். இந்திரை - இலக்குமி : செல்வமகள். அளகையின் - இன், ஒப்புப் பொருளது. இனி, உறழ் பொருளது எனினுமாம். (35)

### 36. பாண்டவர் வரவுகேட்டுத் துரியோதனுதியர் மகிழ்தல்.

அரவினை யுயரிய வரச னைவர்தம்
வரவினை விதுரனே வலினு ணர்ந்தினன்
தருமகன் மாதுலன் தம்பி தன்னெடு
மருவிய வுவகையை வகுக்கற் பாலதோ.

(இ-ள்) அரவினை உயரிய அரசன் - பாம்புக் கொடியை யுயரத்தூக்கிய துரியோதனன், ஐவர்தம் வரவினை-பஞ்சபாண்டவர்களின் வருகையினை, விதுரன் ஏவலின் உணர்ந்து - விதுரனது கட்டளையினுல் அறிந்து, இனன் தரு மகன் - சூரிய புத்திரனுகிய கர்ணன், மாதுலன் - மாமனுகிய சகுனி, தம்பி - தம்பியாகிய துச்சாதனன், தன்னெடு - இவர்களோடு, மருவிய - பரிமாறிக் கொண்ட, உவகையை - மகிழ்ச்சிப் பெருக்கை, வகுக்கற் பாலதோ- சொல்லுந் தரத்ததோ ? (எ.று).

தருமபுத்திரன் முதலியோர் வந்த செய்தியைக் கேள்வியுற்ற துரியோதனுதியர் 'இனிச் சூதாடி அவரை எளிதில் வென்றுவிடலாம்' என்ற கருத்தினுல் மிக்க மகிழ்ச்சியடைந்தனர் என்க. இனன் தருமகன் - சூரியனருளால் தோன்றியவன் என்றபடி. பாலதோ - ஓகாரம் எதிர்மறை. (36)

### 37. சூரியாஸ்தமனம்.

பகலெலாங் காய்ந்தவன் பழுவத் தெய்தியும்
அகல்கிலா தின்னமும் அழற்றுகின் றேனென்
றிகலுடைத் தருமன்றூ றியப்பு மென்றினன்
அகநினைந் தேகல்போ லத்த மாயினன்.

(இ-ள்) இனன் - சூரியனானவன், - 'பகல் எலாம் காய்ந்து - பகல் நேரமெல்லாம் தகித்து, அவன் பழுவத்து எய்தியும் - அந்தத் தருமன் தங்கியிருக்கின்ற சோலையினிடத்து (நான்) வந்தும், அகல்கிலாது - சீக்கிரம் போகாமல், இன்னமும் - இனியுங்கூட, அழற்றுகின்றேன் - அவனைத் தகிக்கின்றேன்', என்று - என்று (வாய்விட்டுச்) சொல்லி, (இனி) இகல் உடை தருமன் - (என்னிடத்து) மாறுகொள்ளும் தருமன், தூறு இயம்பும் - பழிப்புச் சொல்லுவான், என்று அகம் நினைந்து - என்று மனத்திலெண்ணி, ஏகல் போல் - போகுபவன் போல, அத்தம் ஆயினான் - அஸ்தமனமானான்; (எ.று).

சூரியன் இயல்பிலே அத்தமிக்க, அதற்கு ஒரு காரணம் அது தானே தன்னுட் கூறிக் கொண்டது போலக் கூறியது - **ஏதுத்தற்குறிப்பேற்றவணி,** பழுவம்-காடு; இங்கே புறச்சோலை. இகல்-மாறுபாடு: மனவேற்றுமை. தூறு - பழிச்சொல். போல - தற்குறிப்பேற்ற உவமவுருபு. (37)

## 38. சந்திரோதயம்.

துன்மதி யினரொடு சூத மாடுவான்
நன்மதி யுடையநீ நடப்ப தோவெனச்
சொன்மதி சொலவரு துணைவன் போலவே
வின்மதி யவன்சுடர் விளங்கத் தோன்றினான்.

(இ-ள்) நன்மதியுடைய நீ - நல்ல புத்தியையுடைய நீ, துன் மதியினரொடு - அற்ப புத்தியையுடைய சகுனி துரியோதனாதியரோடு, சூதம் ஆடுவான் - சூதாட்டத்தையாடும் பொருட்டு, நடப்பதோ - (உன் நகரிலிருந்து புறப்பட்டு அத்தினபுரிக்கு) நடந்து வருவதோ, என - என்று, மதிசொல் சொல வரு துணைவன் போல - புத்திமதியான வார்த்தைகளைப் புகட்ட வந்த நண்பனைப் போல, வில் மதியவன் - ஒளியுடைய சந்திரன், சுடர் விளங்க - நிலா வெளிச்சம் விளங்கும்படி, தோன்றினான் - உதயமாயினான்; (எ.று).

இச்செய்யுளிலும் **ஏதுத்தற்குறிப்பேற்றவணி** காண்க. கவறு (சூது) ஆடல் திருநீக்கப்பட்டார் தொடர்பு என்றார் வள்ளுவர்: "கவறாடல் . . . செம்மை நினையாமை பூண்டார் நெறி" என்றார் புகழேந்தியும். சொன்மதி - மதிசொல் என மாறுக. நட்பின்பயன் 'மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டாதலின்'; 'துணைவன் போலவே' என உவமை அமைத்த நயம் பாராட்டத்தக்கது. வில் - ஒளி: இனி வளைவு எனினுமாம். சுடர் - நிலாவொளி. (38)

### 39. இரவு கழிதல்.

பொருந்திரை கடலமு தனைய போனகம்
அருந்தினர் பாடினர் ஆடி னூர்பதி
பிரிந்தனர் வருந்தினர் பேதை மாரொடும்
பொருந்தினர் துயின்றனர் போக மாற்றியே.

(இ-ள்) திரை பொரும் கடல் அமுது அனைய போனகம் - அலைகள் மோதுகின்ற கடலிடத்துக் கடைந்தெடுத்த தேவாமிர்தம் போல் இனிய உணவு வகைகளை, அருந்தினர் - உண்டனர்; (பிறகு) பாடினர் ஆடினூர்-பாடியும் ஆடியும் களித்தனர்: (இஃது இங்ஙனுக) பதி பிரிந்தனர் வருந்தினர் - தத்தம் கணவரைப் பிரிந்த மகளிர் (பிரிவினுல்) வருத்தமுற்றனர்: (அதற்கு மாருக) பேதைமாரொடும் பொருந்தினர் - தத்தம் மனைவியரோடு வந்த கணவன்மார்கள், போகம் ஆற்றி - இன்பம் அநுபவித்து, துயின்றனர் - (பின்னர்) உறங்கினூர்கள்; (எ.று).

பிரிந்தனர், பொருந்தினர் - வினையாலணையும்பெயர்கள். உண வினைச் 'சாவா மருந்து' என்றூர் வள்ளுவனூரும். (39)

### 40. சூரியோதயமாக, பாண்டவர்கள் அத்தினுபுரி சேர்தல்.

சூதினூற் புவிகொளச் சுயோத னன்விடுந்
தூதினு னெனச்சுடர் தோற்றஞ் செய்தபின்
நீதிநான் மறைக்கட னிரப்பி யைவரும்
போதினுன் வகுக்கரும் புரஞ்சென் றெய்தினூர்.

(இ-ள்) சுயோதனன்-துரியோதனன், சூதினுல் புவி கொள - (வஞ்சனைச்) சூதாட்டத்தினுல் பூமியாட்சியைக் கைக்கொள்ளும்படி, விடும் தூதினுன் என-விடுத்த தூதுவன் (இவன்) என்னும்படி, சுடர் - சூரியன், தோற்றம் செய்தபின் - உதயமான பின்பு, ஐவரும்- பஞ்சவரும், நீதி-தக்க நெறிகளையுபதேசிக்கின்ற, நான்மறை-நான்கு வேதங்களிலும் விதிக்கப்பட்டுள்ள, கடன் நிரப்பி-காலைக் கடன் களாகிய விரதாநுட்டானங்களைச் செய்து முடித்து, (பின்பு) போதினுன் - பிரமதேவனுலும், வகுக்க அரும் - சிருட்டிப்பதற்கு அரிய, புரம்-அத்தினுபுரத்தை, சென்று எய்தினூர் - போய் அடைந்தார்கள், (எ.று).

முதலிரண்டடிகளில் தற்குறிப்பேற்ற உவமையணி. என - உவமவுருபு, கடன்-காலைக் கடன்கள். (40)

## வேறு

### 41. பாண்டவர்கள் திருதராட்டிரனை வணங்குதல்.

தரும பத்தினி தன்னொ டைவரும்
அரசி னிற்புகுந் தடிவ ணங்கலும்
மருகி தன்னைதன் மனைவி பால்புக
உரைசெய் தைவரோ டுவனி தோதுவான்.

(இ-ள்) ஐவரும்-பாண்டவரைவரும், தருமபத்தினி தன்னொடு-திரௌபதியோடு, அரசின் இல் புகுந்து - அரச அரண்மனையிற் புகுந்து, அடி வணங்கலும் - திருதராட்டிர மன்னனது பாதங்களில் பணியவும், உவன் - அந்தத் திருதராட்டிரன், மருகி தன்னை - தன் மருமகளாகிய திரௌபதியை, தன் மனைவிபால் புக உரைசெய்து - தன் மனையாளாகிய காந்தாரியினிடத்துப் போகும்படி சொல்லி, ஐவரோடு - பாண்டவரோடு, இது ஓதுவான் - கீழ் வருபவற்றைக் கூறுவானாயினான்; (எ.று).

பாண்டவர் அரண்மனையினுட் சென்று பெரிய தந்தையாகிய திருதராட்டிரனை வணங்க, அவன் திரௌபதியை வாழ்த்திக் காந்தாரியிடம் அனுப்பினான். உவன் - சுட்டுப்பெயர்.

இதுமுதல் எட்டுக்கவிகள் -முதற்சீரும் மூன்ருஞ்சீரும் மாச்சீராகவும், ஏனைய இரண்டு சீர்களும் விளச்சீர்களாகவும் வந்த கலி விருத்தங்கள். (41)

### 42-44:- இதுமுதல் மூன்று கவிகள்—ஒரு தொடர். திருதராட்டிரன் அன்பு தோன்றக் கூறியவை.

திசைகள் வென்றதும் திறைகொ ணர்ந்ததும்
விசைய முற்றதும் வேள்வி செய்ததும்
அசைவி லாண்மையும் அன்பி னும்பிமார்
இசைவி னேதகேட் டின்ப மெய்தினேன்.

(இ-ள்) திசைகள் வென்றதும் - (நீங்கள்) திக்கு விசயஞ் செய்ததும், திறை கொணர்ந்ததும்-(ஏராளமாகத்) திறைப்பொருள்கள் பெற்று வந்ததும், விசையம் உற்றதும்-(பலவகை) வெற்றிகளைப் பெற்றதும், வேள்வி செய்ததும்- இராசசூய யாகத்தைச் (சிறப்புறச்) செய்ததும், அசைவு இல் ஆண்மையும் - அசைக்கமுடியாத பராக்கிரமத்தைக் கொண்டிருந்தமையையும், உம்பிமார் - உன் தம்பிமார்

களாகிய துரியோதனனாதியர், அன்பின்-அன்புகொண்டு, இசைவின்-மனமொருப்பட்டு, ஓத - சொல்ல, கேட்டு - (என் காதுகள்) குளிரக் கேட்டு, இன்பம் எய்தினேன்-ஆனந்தம் அடைந்தேன் (எ.று).

இங்கே, துரியோதனனாதியரைத் திருதராட்டிரன் 'உம்பிமார்' என்றது - யாவரினும் பெரியவனான தருமபுத்திரனையே பிரதான மாக்கிக் கூறுவதனாலென்க. (42)

43 ஏர்த்த னோட டலெய்து செல்வமும்
பார்த்தி டாமுனம் பாண்டு பொன்றினான்
கீர்த்தி தன்னையே கேட்டுங் கேள்வியன்
போர்த்த கண்ணினன் பொற்பு நோக்கலேன்.

(இ-ள்) ஏர்தனோடு - அழகினோடு, அடல் - (உங்கள்) வலிமையையும், எய்து செல்வமும் - (நீங்கள்) அடைந்துள்ள செல்வச் சிறப்பையும், பார்த்திடா முனம்-பார்த்துக் களித்திடா முன்னமேயே, பாண்டு - (என் தம்பியாகிய) பாண்டு மன்னவன், பொன்றினான் - இறந்து போனான்; (நானோ) கீர்த்தி தன்னை - உங்கள் புகழை, கேட்கும்-பிறர் சொல்லக் கேட்டு மகிழும், கேள்வியன் - காதினைப் படைத்தவன்: போர்த்த கண்ணினன்-மூடிய கண்ணையுடையவன் (குருடன்); (ஆகவே) பொற்பு - உங்கள் இயற்கையழகை, நோக்க லேன்-பார்க்கக் கூடியவனல்லேன்; (எ.று).

உங்கள் சிறப்புக்களைப் பிறர்சொல்லச் செவியினாற் கேட்டறிந்து மகிழ்கின்றேனேயல்லாமல் கண்ணினால் நேரிற்காணும் பாக்கியம் பெற்றிலேன் என்று பாண்டவர்பக்கல் அன்புடையான்போலத் திருதராட்டிரன் பசப்புமொழி கூறினனென்க. இத்தன்மை, 'விரகி னெஞ்சினான்' என்ற பின் வருந் தொடரினால் (செ: 45) நன்கு விளங்கும், ஏர்-அழகு. 'ஏர்தனோடு' என்பது வலித்தல் விகாரம் பெற்று 'ஏர்த்தனோடு' என வந்தது. தனோடு-தன்னோடு என்பதன் தொகுத்தல். கேள்வி-காது. போர்த்த-மூடிய. பொற்பு - இயற்கை யழகு. (43)

44. முன்னி னம்புவி முழுது நும்பிமார்
தன்னொ டாள்கெனத் தானு ரைத்துநும்
அன்னை தன்னொடென் னத்த னைப்பணிந்
துன்னி னைஞரோ டுறுகென் றேவினான்.

(இ-ள்) முன் - முன்னர், நின் அம்புவி முழுதும் - (உனக்குக் கொடுக்கப்பட்ட) நிலவுலகமுழுவதையும், நும்பிமார் தன்னொடு-உன்

தம்பிமார் நால்வருடன், ஆள்க என-ஆண்டு வருவாயாக என்று, தான் உரைத்து-திருதராட்டிரன் சொல்லி, நும் அன்னை தன்னொடு-உம்முடைய தாய் முறையினளான காந்தாரியுடனே, என் அத்தனைப் பணிந்து - என்னுடைய தந்தையாகிய வீடுமனையும் நமஸ்கரித்து, (பின்பு) உன் இளைஞரோடு - உன் தம்பியர் நால்வருடன், உறுக-பொருந்தியிருப்பாயாக, என்று - என்று சொல்லி, ஏவினன்-(அவர்களை) அனுப்பினன்; (எ.று).

திருதராஷ்டிரன் மந்திரி முதலானரோடு ஆலோசித்துத் தருமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்த பின்பு, அவன் இந்திரப் பிரத்த நகரைக் கண்ணன் நிருமிக்க அங்கிருந்து ஆண்டு வந்ததை ஈண்டு நினைக. அதனால்தான் 'முன் நின் அம்புவி என்றது. ஆள்கென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (44)

### 45. காந்தாரியைப் பணிந்து, பின் பாண்டவர்கள் வீடுமனை வணங்கித் தாம் வந்த காரணத்தைச் சொல்லுதல்.

விரகி னெஞ்சினன் விடைகொ டன்னையைப்
பரவி யல்குலாள் பயில வீடுமன்
சரணி றைஞ்சிவஞ் சகர்நினைந்ததும்
அரச ழைத்ததும் ஐவ ரோதினர்.

(இ-ள்) விரகின் நெஞ்சினன் - தந்திரமான உபாயங்களை நினைக்கும் மனத்தையுடையனை திருதராட்டிரனது, விடைகொடு - விடையைப் பெற்றுக்கொண்டு, அன்னையை - தாய் முறையினளான காந்தாரியை, பரவி - துதித்து, (பின்பு) அல்குலாள் பயில - திரௌபதி அங்கேயே தங்கியிருக்க, ஐவர் - ஐந்து பேரும், வீடுமன் - பீஷ்மனது, சரண் இறைஞ்சி - பாதங்களை நமஸ்கரித்து, (அவரிடத்து) வஞ்சகர் நினைத்ததும் - துரியோதனனுள்ளிட்ட துட்ட சதுட்டயர் எண்ணமிட்டிருப்பதையும், (அதற்கேற்பவே) அரசு அழைத்ததும் - திருதராட்டிரன் அழைப்பு விடுத்ததையும், ஓதினர் - சொன்னர்கள்; (எ,று).

பயிலுதல் - தங்குதல்: ''புலவர் பயிலுந் திருப்பனையூர்'' என்றது தேவாரம். (635,6) ஐவர் - தொகைக்குறிப்பு. 'அழைத்ததும்' என்றது இலக்கணையால் திருமுகம் விடுத்ததைக் குறிக்கும். (45)

### 46. அதற்கு வீடுமன் தனது கருத்தைக்கூற, பாண்டவர்கள் துரோணன் முதலியோரை வணங்கி, விதுரன் மாளிகை சேர்தல்.

ஊறி ழைக்கினும் உள்ள துண்டெனக்
கூற வீடுமன் குமர ராரியர்
மாறி ருடொழா மன்வி தூரனில்
ஏறி யுண்டிசெய் தினிதி ருந்துளார்.

(இ-ள்) (அதற்கு), வீடுமன்—, ஊறு இழைக்கினும் - தீமை விளைவித்தாலும், உள்ளது உண்டு - விதியினுல் அநுபவிக்க வேண்டிய நன்மை வந்தே தீரும், என - என்று, கூற - சொல்ல, குமரர் - பாண்டவர்கள், ஆரியர் - அந்தணர்களாகிய துரோணன் அசுவத்தாமன், கிருபன் முதலியோரது, மாறு இல் தாள்தொழா - குற்றமற்ற பாதங்களை நமஸ்கரித்து, (பின்) மன் - பெருமைதங்கிய, விதுரன் இல் - விதுரனது மாளிகையில், ஏறி - புகுந்து, உண்டி செய்து - (அவரிட்ட) உணவையுண்டு, இனிது இருந்துளார் - சுகமாகத் தங்கியிருந்தார்கள்; (எ.று).

பாண்டவர்கள் இராச்சியம் முதலியவற்றையிழந்து மிக வருந்தும்படி துரியோதனுதியர்கள் பலவகையாக முயற்சி செய்தும் முடிவில் பாண்டவர்களே துரியோதனுதியர்களை வென்று அரசு பெற்று இனிது வாழ்வாரென்பது, வீடுமனுட் கோள்: அவ்வாறே மேல் நிகழ்தல் காண்க. 'ஊறு இழைக்கினும்' என வந்ததனுல், 'உள்ளது' என்பதற்குத் தீமையெனப் பொருள் கொள்ளாமல் வரக்கூடிய நன்மையென்றே பொருள் கொள்ளப்பட்டது. ஆரியர் - பூஜிக்கத் தக்கவர் என அந்தணர்க்காகியது. துரோணன் உள்ளிட்ட மூவரையும் ''மறைத்தலைவர்'' என்ருர் வில்லியும். மன் - பெருமை.

விதுரன் துரியோதனனிடத்திலே பழகுபவனுயிருந்தும் நன்னெறியிற் செல்வது காரணமாகப் பாண்டவரிடத்தில் ஆதி தொடங்கியே மிக்க அன்புடையவனுய் அரக்கு மாளிகையினின்று தப்புவித்தல் முதலிய பேருபகாரங்களைச் செய்து வந்தனனுதலால், அவர்கள் அவ்விதுரனிடத்து அன்பு கூர்ந்து அவன் வீட்டிற் சிறிதும் வேறுபாடு கருதாது உணவுண்டு மகிழ்ந்தனரென்பது கூறப்பட்டது. மாறில் + தாள் + தொழா = மாறிருடொழா: ''னலமுன் றனவும் ணளமுன் டணவும் ஆகும் தநக்கள் ஆயுங்காலே'' என்பது விதி. (46)

**47. சூரியன் அத்தமிக்க, சந்திரோதயமாக, திரௌபதியும் விதுரனது மாளிகையை வந்தடைதல்.**

அத்த மித்திர னான பின்பிருண்
மொய்த்த தொண்மதி முளைத்த போதுள
மொத்த வன்பரின் முரச கேதுழி
கொத்த லர்க்குழல் குறுகி துஞ்சினாள்.

(இ-ள்) மித்திரன் - சூரியன், அத்தன் ஆன பின்பு - அத்த மித்தவனான பின்னர், இருள் - இருட்டு, மொய்த்தது - நெருங்கியது: ஒண்மதி முளைத்த போது - ஒளிபொருந்திய சந்திரன் உதயமான போது, உளம் ஒத்த அன்பரின் - மனமொத்த சிநேகிதர் போல, கொத்து அலர்க்குழல் - திரௌபதியானவள், முரசகேது உழி - தருமனிடத்தை, குறுகி - நெருங்கிவந்து, (பின்பு) துஞ்சினாள் - தூங்கினாள்; (எ.று)

மித்திரன் - சூரியன். முரசகேது - முரசக் கொடியேந்திய தருமன். கொத்து-பூங்கொத்து. அலர்-மலர்கின்ற, குழல்-கூந்தல், கூந்தலையுடையாளுக்கு இங்கு ஆகுபெயர். இவள் கூந்தற்பரிசத் தால் பூங்கொத்து அலரும் என்றபடி. அன்பரின் - இன், உவம வுருபு. கேது - கொடி: கொடியையுடையானுக்கு ஆகிவந்தது.

(47)

**48. சூரியோதயமானபின், தருமபுத்திரன் தம்பியருடன் காலைக்கடன் கழித்துத் தானமீந்து இனிதிருத்தல்.**

துயிலு ணர்ந்தெழு சுடர்ப ணிந்தறம்
பயிலு நெஞ்சினன் பற்ப லானமும்
இயல்பி னாற்றியங் கிளைஞர் தம்மொடு
மயில னாளொடும் வைகும் வேலையில்.

(இ-ள்) அறம் பயிலும் நெஞ்சினன் - தருமம் தங்கும் மனத்தினனாகிய தருமபுத்திரன், துயில் உணர்ந்து - தூக்கத்தினின் றெழுந்து, எழு சுடர் பணிந்து - சூரியநமஸ்காரம் செய்து, (பிறகு) பற்பல் தானமும் இயல்பின் ஆற்றி - பலப்பல தானங்களையும் முறைப் படியே கொடுத்து, அங்கு - அந்தப் புறஞ்சோலையில், இளைஞர் தம்மொடும் - தம்பியர் நால்வரோடும், மயிலனாளொடும் - திரௌபதி யோடும், வைகும்-தங்கியிருக்கின்ற, வேலையில்-சமயத்தில்; (எ.று).

மயில் - மகளிர் சாயலுக்கு ஒப்பு. பல்+பல்=பற்பல். "அகரம் ஏக லகரம் றகரமாகலும்" என்றது விதி. (நன்னூல், உயிரீறு: 20) பற்பல்+தானம்=பற்பருனம்: னலமுன் றனவும்' என்பது விதி. (நன்னூல்: மெய்யீறு: 34) (48)

வேறு

**49. துரியோதனன் சபாமண்டபத்தில் எல்லாரும் திரள வீற்றிருத்தல்.**

தாதை தாதை சிறிய தாதை
தனதி ளைஞர் மாதுலன்
கோதி லாத கன்ன ளுதி
குருவி ரோண னவன்மக
ஞதி யாய பேர்க ளோடு
மாச னத்தின் மாதுச
மீத ராப டைத்த வேந்தர்
வேந்தி ருந்து ளானரோ.

(இ-ள்) தாதை - தந்தையாகிய திருதராட்டிரனும், தாதை - அவனுக்குத் தந்தை முறையாகின்ற வீடுமனும், சிறிய தாதை - சிற்றப்பஞகிய விதுரனும், தனது இளைஞர் - தனது தம்பியாகிய தொண்ணூற்றென்பதின்மரும், மாதுலன் - மாமஞகிய சகுனியும், கோது இலாத கன்னன் - குற்றம் இல்லாத கர்ணனும், ஆதி குரு - கிருபனும், வில் துரோணன் - வில்லாசிரியராகிய துரோணனும், அவன் மகன் - அவன் மகஞகிய அசுவத்தாமனும், ஆதியாய - முதலாகிய, பேர்களோடும்-பலபேர்களோடும், மா துசம் மீது அரா படைத்த -(தனது) பெரிய கொடியின்மீது பாம்பு வடிவம் எழுதப் பட்ட,வேந்தர் வேந்து - மன்னர் மன்னஞகிய துரியோதனன், ஆசனத்தில் - சிம்மாசனத்தில், இருந்துளான் - வீற்றிருந்தான்; (எ.று) அரோ-ஈற்றசை.

ஆதிகுரு-கிருபன்: இவர்தான் பாண்டவர் துரியோதனுதியர்க்கு முதல் வில்லாசிரியராய் இருந்தவர். துசம்-துவசம் என்பதன் சிதைவு. வில் + துரோணன் = விரோணன் : 'னலமுன் றனவும்' என்பது விதி. அவன்மகன்-நான்கனுருபு தொக்கது. அரா - பாம்பு கன்னனை 'கோதிலாத' என்றது, சூதுபோர் கூடாது என்றதாலே.

இதுமுதல் இருபத்தொரு கவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாக வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (49)

### 50. துரியோதனன் கட்டளையிட, பிராதிகாமி பாண்டவரை யழைக்க ஏகுதல்.

பிரிவு ருத சாரர் தம்மில்
பிரிதி காமி யன்றனை
அரச ழைத்து மண்ட பத்தி
னழகு காண வைவரை
விரைவி னிற்கொண் டடைதி யென்று
விடைகொ டுப்பச் சென்றவன்
தரும ராச னடிப ணிந்து
தானு ரைப்ப தாயினான்.

(இ-ள்) பிரிவு உருத சரார் தம்மில்-தன்னை விட்டுப் பிரியாத ஒற்றர்களுள், பிரிதிகாமியன் தனை - பிராதிகாமியை, அரசு - துரியோதனன், அழைத்து - தன்னருகே வரவழைத்து, மண்ட பத்தின் அழகு காண - (நம்) சபாமண்டபத்தின் நேர்த்தியினைக் காண்பதற்காக, ஐவரை-பஞ்சபாண்டவரை, விரைவினில் கொண்டு அடைதி-சீக்கிரமாக உடனழைத்துக் கொண்டு இங்கே வருவாய், என்று - என்று கட்டளையிட்டு, விடை கொடுப்ப - விடைகொடுத் தனுப்ப, அவன்-அந்தப் பிராதிகாமி, சென்று - (அங்ஙனமே) போய், தருமராசன் அடி பணிந்து - தரும புத்திரனுடைய பாதங் களில் வணங்கி, தான் உரைப்பது ஆயினான் - தான் வந்த செய்தியைச் சொல்லலாயினான்; (எ.று).

சாரர்-ஒற்றர், பிரிதிகாமி = பிராதிகாமி-இவன் துரியோதனனது சாரதி. (50)

### 51. பிராதிகாமி துரியோதனனது கட்டளையைத் தெரிவிக்க, தருமபுத்திரன் திரௌபதியைக் காந்தாரியிடம் அனுப்பிவிட்டுத் தான் துரியோதனனது சபையைச் சேர்தல்.

வேந்த! சொன்ன மண்ட பத்தின்
மேன்மை காணு வானுமை
ஏந்தல் கொண்டி மைப்பி னெய்த
வேவி னானென் றேதலுங்

காந்த ழற்கண் வந்த மின்னைக்
கண்பு தைத்த வன்னைபாற்
சேர்ந்தி ருப்ப வுய்த்துக் காலன்
சேயு மன்ற மேயினான்.

(இ-ள்) வேந்த!-(தரும) ராசனே! சொன்ன-சொர்ணமயமான, மண்டபத்தின் - சபாமண்டபத்தின், மேன்மை-அழகுச் சிறப்பினை, காணுவான்-பார்த்து ரசிக்கும்படி, உமை-உம்மை, ஏந்தல் - எங்கள் அரசனாகிய துரியோதனன், கொண்டு - என்னோடு உடனழைத்துக் கொண்டு, இமைப்பின் எய்த-ஓரிமைப்பொழுதில் (வெகு சீக்கிரமாக) வந்து சேரும்படி, ஏவினான் - எனக்குக் கட்டளையிட்டனுப்பி யுள்ளான், என்று ஓதலும்-என்று (பிராதிகாமி) சொன்னவுடனே, காலன் சேயும்-யமதருமராசனுடைய புதல்வனாகிய தருமனும், காந்து அழற்கண் வந்த மின்னை-சொலித்தெரிகின்ற ஓமாக்கினியினின்று பிறந்த திரௌபதியை, கண் புதைத்த அன்னைபால் சேர்ந்திருப்ப உய்த்து-தன் கண்ணையும் ஆடையால் கட்டி மறைத்துக்கொண்ட (கற்பினிற்சிறந்த) தாய்முறையினளான காந்தாரியிடம் ஒருசேர விருப்ப அனுப்பி, (பின்பு) மன்றம் ஏயினான் - சபாமண்டபத்தை யடைந்தான்; (எ.று).

வேந்த-விளி, சொன்னம்-சொர்ணம் : பொன். இனி, சொன்ன-துரியோதனன் சொல்லியனுப்பிய எனினுமாம். காணுவான் - வானீற்று வினையெச்சம். உமை -'உம்மை என்பதன் தொகுத்தல். ஏந்தல்-ஆண்பாற் சிறப்புப் பெயர். மின் - உவமவாகுபெயர். 'கண் புதைத்த அன்னை' என்ற விடத்து அறியவேண்டிய விவரம் :— பதிவிரதா தருமத்தை மேற்கொண்டு கட்புலனால் வரு மின்பத்தைத் தன் கணவன் போலவே தானும் அனுபவியாதிருத்தல் வேண்டி ஆடையைப் பலமடிப்பாக மடித்து அதனால் தன் கண்களைக் கட்டி மறைத்துக்கொண்டு கண் பார்வையிலளாயினள் காந்தாரியென்பது, (51)

### 52. தருமன் பெரியோர்களை வணங்கி ஆசனத்தில் வீற்றிருத்தல்.

கடல்வ றழ்ந்த நாளி னுந்தன்
கருணை மாறு முதவன்
அடலி ளைஞர் தம்மொ டெய்தி
யன்பொ டத்தன் வீடுமன்

கொடிய வில்வி தூர ஞாதி
குரவ ரைப்ப ணிந்தொளி
விடும டங்க லாச னத்தின்
மீதி ருந்தி தோதுவான்.

(இ-ள்) கடல் வறழ்ந்த நாளினும் - கடல் நீர் வற்றிப்போன காலத்தும், தன் கருணை மாறு உருதவன்-தன் தயையில் ஒரு சிறிதும் வற்றிப்போகாது பூர்ணமாயிருக்கும் தருமன், அடல் இளைஞர் தம்மொடு எய்தி - வலிமையையுடைய தம்பியரோடு வந்து, அன்பொடு-விசுவாசத்துடன், அத்தன்-திருதராட்டிரன், வீடுமன் -, கொடிய - வளைந்த, வில்விதூரன் - வில்லையுடைய விதுரன், ஆதி - முதலாய, குரவரைப் பணிந்து-பெரியோர்களை நமஸ்கரித்து, (பிறகு) ஒளிவிடு மடங்கல் ஆசனத்தின் மீது இருந்து - பிரகாசிக்கின்ற சிங்காசனத்தின் மேலே வீற்றிருந்து, ஓதுவான் - கூறுவானாயினான்; (எ.று) தருமன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

சமுத்திரம் வற்றினாலும் தருமனாகிய கருணாசாகரம் வற்றாது என்றபடி, நாளினும், உம்மை - எதிர்மறை. கொடுமை - வளைவு, மடங்கல்-சிங்கம் : பிடரிமயிர் மடங்கியிருப்பதுபற்றி வந்த காரணக் குறி. (52)

### 53. துரியோதனன் கட்டிய மண்டபத்தைத் தருமன் வியந்து கூறல்.

இத்தி றத்த மண்ட பத்தி
னெழிலி லக்க ணங்களும்
ஒத்த மைந்த மண்ட பங்க
ளும்ப ரிம்ப ராதிய
எத்த லத்து மில்லை யென்ன
வேபு கழ்ந்து ரைத்திடும்
உத்த மன்ற னக்கி லங்கு
முரக கேதி தோதுவான்.

(இ-ள்) இத்திறத்த - இப்படிப்பட்ட, மண்டபத்தின் - சபா மண்டபத்தின், எழில் இலக்கணங்களும் - அழகும் லட்சணங்களும், ஒத்து அமைந்த மண்டபங்கள்-நிகராகப் பொருந்தியுள்ள மண்டபங்கள், உம்பர் இம்பர் ஆதிய எத்தலத்தும் இல்லை - மேலுலகம், இப்பூவுலகம் முதலாய எவ்விடத்தும் இல்லை, என்னவே புகழ்ந்து

உரைத்திடும் - என்று சிலாகித்துக் கூறிடும், உத்தமன் தனக்கு - தருமபுத்திரனுக்கு, இலங்கும் உரககேது - விளங்குகின்ற நாகக் கொடியேந்திய துரியோதனன், இது - இவற்றை, ஓதுவான் - கூறுவானுயினன்; (எ.று) துரியோதனன் கூறியதை மேலைக் கவியிற்காண்க.

மேலுள்ள தேவலோகத்துச் சுதன்மையினும், இவ்வுலகத்து எல்லா மண்டபங்களினும் இம்மண்டபமே சிறந்தது எனத் துரியோதனன் புதிதாகக் கட்டிய சபாமண்டபத்தைத் தருமன் வியந்தனனென்க, (தேவலோகத்து மண்டபம் சுதன்மை எனப் பெயர்பெறும்). உத்தமன் - தருமன்: தீங்கு செய்பவர்க்கும் நன்மை செய்பவன் உத்தமனுவன். (53)

### 54. துரியோதனன் தருமனைச் சூதாடத் தூண்டுதல்.

தேச கத்தி னெய்தி யுண்டி
செய்யு மட்டு மாமனும்
மாச கத்தி லாத நீயு
மாக போது போகவன்
மாச கத்தில் வல்லி ருவர்ம
திக்க வாடு மென்னவவ்
வாச கத்தை யுட்கொ ளாது
மறலி மைந்த னுரை செய்வான்.

(இ-ள்) தேசு - ஒளிபொருந்திய, அகத்தின் எய்தி - மாளிகையினுட் சென்று, உண்டி செய்யும் மட்டும் - போனகம் அருந்தும் வரையில், மாமனும் - சகுனியும், அகத்தில் மாசு இலாத நீயும் - மனத்தில் குற்றம் நீங்கிய நீயும், ஆக—, இருவர் - இருவரும், வன் மா சகத்தில் மதிக்க - வலிய பெரிய உலகத்திலுள்ளோர் பாராட்டும்படி, போது போக - பொழுது போக்கு விளையாட்டாக, வல் ஆடும் என்ன - சூதாட்டம் ஆடுக என்று துரியோதனன் கூற, மறலி மைந்தன் - தருமபுத்திரன், அ வாசகத்தை உட்கொளாது - அவன் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல், உரை செய்வான் - பதில் கூறுவானுயினன்; (எ.று).

தேசு - தேஜஸ்: ஒளி. வல் - சூதாடுகருவி: அது கொண்டு ஆடும் ஆட்டத்திற்காகியது. மறலி மைந்தன் - நான்கனுருப்புதொக்கது. (54)

## 55. தருமன் சூதாட உடன்படாமை தெரிவிப்பது.

வெகுள னண்பு விடுதல் சூது
விழைதல் மற்றொ ருத்தர்தம்
புகரு ரைத்தல் சூள்பி ழைத்தல்
புகரி தென்ன நூலெலாம்
பகரு கின்ற தொருவி வல்சௌ
பலனோ டாட லென்கொலோ நும்
அகநி னைந்த பொருளு ரைக்கி
லளிப்ப னிம்ப ரென்னவே.

(இ-ள்) வெகுளல் - கோபித்தல், நண்பு விடுதல் - (கொண்ட) சிநேகத்தை விடுதல், சூது விழைதல் - சூதாட்டத்தை விரும்புதல், மற்றொருத்தர் தம் புகர் உரைத்தல் - வேறொருவருடைய குற்றத்தைச் சொல்லுதல் (புறங் கூறுதல்), சூள் பிழைத்தல் - சொன்ன சபத வார்த்தையை (நிறைவேற்றாது) தப்புதல், (இவையனைத்தும்), இது புகர் என்ன - ஒவ்வொன்றும் மாசாகும் என்று; நூல் எலாம் பகருகின்றது ஒருவி - தரும நூல்களெல்லாம் சொல்லுகின்ற விதியினைக் கைவிட்டு நீங்கி, சௌபலனோடு - சகுனியோடு, வல் ஆடல் என்கொல்-சூதாடுதல் எதன் நிமித்தம்? நும் அகம் நினைந்த பொருள் உரைக்கில் - நீ மனத்தில் நினைத்திருக்கின்ற பொருளைக் கூறுவையானால், இம்பர் - இப்பொழுதே (இவ்விடத்திலேயே), அளிப்பன் - கொடுப்பேன், என்ன - என்று கூற; (எ-று);— 'சகுனியீது பேசுவான்' என அடுத்த கவியோடு தொடரும்.

சூதாட்டத்தைத் தீதென்று இகழ்ந்து சொல்லத் தொடங்கிய தருமபுத்திரன் அதற்கு இனமாயுள்ள மற்றைச் சில குற்றமான செயல்களையும் உடன் கூறினான்: இது - ஒப்புமைக்கூட்டவணி. சூள் - சபதம், உறுதிமொழி. சகுனி வஞ்சனைக்கிடமான சூதாட்டத்தில் மிகவும் வல்லவனாதல் பற்றி அவனோடு சூதாடித் தீயவழியால் இழவாமல், வேண்டுமென்ற கேட்ட பொருள்களை மனப்பூர்வமாகக் கொடுத்து இழத்தலே நன்று என்று தருமன் தனக்குச் சூதாடுங் கருத்து இல்லாமையை நன்கு வெளியிட்டனனென்க. தன்னை எவ்வாற்றாலாயினும் பொருளையிழந்து கெடுமாறு செய்வதே துரியோதனன் கருத்து என்பதை "நும் அகம் நினைந்த பொருளுரைக்கில்" என்பதால் விளக்கினான். அளிப்பன் - தன்மை யொருமை வினைமுற்று: அன் - விகுதி. (55)

## 56. சகுனி வார்த்தை.

இரு கவிகள்—ஒரு தொடர்.

பீடு ருத சகுனி யீது பேசு
வான் வல் லாடுவான்
நாடு ருர்க ளில்லை யாடல்
நன்மை யாகு மன்பொடும்
ஆடு வார்க ளாண்மை யல்ல
ததனில் வஞ்ச மிலையறந்
தேடு வானை யார ழைப்பர்
தீய வஞ்ச முண்டெனில்.

(இ-ள்) பீடு - பெருமை, உருத - (தன்னிடத்துப்) பொருந்துதல் இல்லாத, சகுனி—, ஈது பேசுவான் - இங்ஙனம் சொன்னான் : "வல் ஆடுவான் - சூதாட்டத்தையர்டுவதற்காக, நாடுருர்கள் இல்லை - அதனை விரும்பித்தேடி வாராதவர்கள் (உலகத்தில்) இல்லை: ஆடல்-சூதாடுதல், நன்மையாகும்-நன்மையே பயக்கும் (தீமையாகாது) : (ஆதலால் எல்லோரும்) அன்பொடும் - விசுவாசத்தோடு, ஆடுவார்கள் - விளையாடுவார்கள் : அதனில் - அந்தச் சூதாட்டத்தில், ஆண்மை அல்லது - அறிவின் திறமுண்டல்லது, வஞ்சம் இலை - கபடம் சிறிதும் இல்லை : தீய வஞ்சம் உண்டு எனில் - அதனில் தீமையும் வஞ்சனையும் இருக்குமானால், அறம் தேடுவானை - தருமத்திலேயே ஊற்றமுள்ள தருமனை, யார் அழைப்பர்-எவர் அழைப்பார்? (ஒருவரும் அழையார்); (எ.று).

நாடுதல் - விரும்பிவருதல். பாச்சிகைகளின் மூலமாய் விழும் பந்தயங்கட்கு ஏற்பக் காய்களைத் தக்கபடி அறைகளில் அடைக்கும் அறிவுத்திறத்தினாலேயே வெற்றியையடைய வேண்டிய இச் சூதாட்டத்தில் யாவரும் பார்க்க ஆடும்போது வஞ்சகம் செய்ய வழியில்லை யென்றும், இப்படி வஞ்சகமில்லாத இவ் வாட்டத்தில் ஏதோ வஞ்சனையுளதென்று போக்குச் சொன்னால், அறந்தேடும் இவனை வலிவிற் சூதாட அழைப்பார் ஒருவருமில்லை யென்றும், சகுனி வெகு தந்திரமாகக் கூறினனென்க. நாடுருர்கள் - நாடாதவர்கள் : பன்மைப் பெயர். தேடுவான்-வினையாலணையும் பெயர். (56)

**57. மேலும் சகுனி கூற, அருச்சுனன் மனம் வருந்தும்படி கர்ணன் சில கூறுதல்.**

உன்னெ டெற்கும் வெற்றி தோல்வி
யொக்கு மாடி லாடவர்
இன்ன லென்ன வுன்னில் வல்லை
யேக லாமு லோபிபோல்
என்ன வோத மன்ன னொன்றி
யம்பி டாதி ருப்பவும்
கன்ன னின்ன விசய னுள்ளங்
கன்று மாறு கூறுவான்.

(இ-ள்) 'ஆடில்-சூதாட்டத்தில், உன்னெடு எற்கும்-உனக்கும் எனக்கும், வெற்றி தோல்வி ஒக்கும் - வெற்றியோ தோல்வியோ ஒத்திருப்பதே: (அங்ஙனிருப்ப) ஆடவர் - ஆண்களாயிருப்பவர், வல்லை இன்னல் என உன்னில் - சூதாட்டத்தைத் துன்பந்தருவ தொன்று என நினைக்கின், (அவர்கள்) உலோபிபோல்-அழுக்கனைப் போல, ஏகலாம் - (தங்கள்) இருப்பிடத்திற்குப் போகலாம்', என்ன ஓத - என்று (சகுனி) சொல்ல, மன்னன் - தருமன், ஒன்று இயம்பிடாது இருப்பவும் - மாருக ஒரு வார்த்தையும் கூருது சும்மா இருந்திடவும்,— கன்னன் - கர்ணன், விசயன் உள்ளம் கன்று மாறு - அருச்சுனன் மனம் கோபிக்கும்படி, கூறுவான் - சொல் வாருயினுன்; (எ.று).

சூதாடுகையில் வெற்றி தோல்விகள் ஒருதலையன்ருதலால், நம்மிருவருள் அவை யார்க்கேனும் உண்டாகலாம். ஆகையால், நான் வஞ்சனை வழியால் உன் பொருளைக் கவர்தற்குச் சிறிதும் வழியில்லையே! அப்படியிருக்க, நீ உலோபிபோல் பின் வாங்கு வானேன்? என்று தருமனுக்குச் சூதாட்டத்தில் ஆவேசமுண்டாகு மாறு சகுனி கூறினுன். லோபீ - வடசொல்: செல்வத்தை இறுகப் பிடிக்குந் தன்மையுள்ளவன். (57)

**58. கர்ணன் வார்த்தை.**

சூதெ டுத்து பொருத லஞ்சி!
சோரிப் போரில் வாகையாம்
மாதெ டுத்த லெங்ங னுந்தன்
மாந கர்க்கு மீள்கெனக்

கோதே டுத்து ரைத்த வங்கர்
கோனைப் பற்கு னன்வெகுண்
டூதெ டுத்து ரைத்து ளானவ்
விழிபு ளங்கொ ளாமலே.

(இ-ள்) சூது எடுத்து - சூதாடுகருவியாம் பாச்சிகையைக் கையிலெடுத்து, பொருதல் – விளையாடுதலாம் போருக்கு, அஞ்சி! - பயந்துள்ளவனே! (நீ) சோரிப் போரில் - குருதி சொட்டும் மோது போரில், வாகையாம் மாது எடுத்தல் - வெற்றி மகளைத் தழுவுதல், எங்ஙன் - எப்படி இயலும்? (இயலாது): (ஆகவே) உந்தன் - உன்னுடைய, மா நகர்க்கு-இந்திரப்பிரத்த நகருக்கு, மீள்க என - திரும்பிப் போவாயாக, என-என்று, கோது எடுத்து உரைத்த-பழிச் சொல்லெடுத்துக் கூறிய, அங்கர் கோனை - கர்ணனை, பற்குனன் - அருச்சுனன், வெகுண்டு-கோபித்து, அ இழிபு உளம் கொளாமலே- அந்தக் கர்ணன் கூறிய இழிந்த வார்த்தைகளை உள்ளம் பொறுக்காமலே, ஈது - கீழ்வரும் இவ்வார்த்தைகளை, எடுத்து - உரத்த குரலில், உரைத்து உளான் - கூறுவாருயினுன்; (எ.று).

பிராணபாயத்திற்குச் சிறிதும் இடமில்லாது செல்வக் கேட்டிற்கு மாத்திரம் இடமான இவ்விளையாட்டுச் சூதுக்கே அஞ்சிப் பின் வாங்குகிற நீ செல்வக் கேட்டோடு பிராணபாயத்திற்குங் காரண மான மோது போரைத் தைரியத்தோடு செய்யத் திறமற்றவனென்பது திண்ணம்: இவ்வாறு நீ க்ஷத்திரிய தருமமாகிய இருவகைப் போரிலும் பின்வாங்குவதனுல் இவ்வரச மண்டபத்தில் நில்லாது உனக்கு ஏற்ற தம்பிமாரோடு ஊரிற்புக் கொளித்துக் கொண்டிருத் தலே நினக்குத் தகுதியென ரோஷமுண்டாகுமாறு தருமனைநோக்கிக் கர்ணன் கூறினன் என்க. அஞ்சி - விளிப்பெயர். இ-ஆண்பாற் பெயர் விகுதி. பொருதல் அஞ்சி - பொருதற்குப் பயப்படுபவனே! என்று பொருள். சோரி - இரத்தம். ஆகவே, சோரிப்போர் - மோதுபோர் ஆயிற்று. வெற்றியை மகளாக உருவகித்தல் கவிமரபு. மீள்கென - அகரவீறு தொகுத்தல். உளங்கொளாமல் - உளம் பொருமல் என்றபடி. (58)

### 59. அருச்சுனன் கர்ணன்மீது வெகுண்டு கூறி எய்ய வில்லெடுத்தல்.

மண்ட பஞ்செய் தெமைய ழைத்து
வல்லெ டுத்த விரகினைக்
கண்ட டாதி தென்று ரைத்த
காவ லன்றன் மேல்வசை

கொண்டு ரைத்த வலவன் மைந்த!
கூறு வாயி னுவினை
விண்டி டத்து ணிப்ப லென்ன
வில்லெ டுத்து ளானரோ.

(இ-ள்). மண்டபம் செய்து - சபாமண்டபத்தையெழுப்பி, எமை - எங்களை, (அதன் அழகினைக்காண) வாருங்கள் என்று, அழைத்து - (இங்கே) வரவழைத்து, (பின்னர்) வல் எடுத்த விரகினைக் கண்டு - சூதாடு கருவியை (ஆடுமாறு) எடுத்துக் கொண்டு வந்த சூழ்ச்சியினைப் பார்த்து, இது அடாது என்று உரைத்த - இத்தகைய (இழிந்த) போக்கு தகாது என்று அறமுரைத்த, காவலன் தன்மேல் - மன்னனாகிய தருமராசன்மீது, வசைகொண்டு உரைத்த - பழிச் சொற்களைக் கொண்டு இழிவு கூறிய, வலவன் மைந்த! - தேர்ப்பாகன் மகனே! கூறு வாயின் நாவினை - (இங்ஙனம்) கூறிய உன் வாயினிடத்துள்ள நாக்கினை, விண்டிட - இரண்டு துண்டாக வீழ, துணிப்பல் - துண்டித்து விடுவேன், என்ன - என்று கூறி, வில் எடுத்துளான் - (அம்பு தொடுத்து விட) வில்லைக் கையில் எடுத்தான்; (எ.று). அரோ - ஈற்றசை.

வலவன் - தேர்ப்பாகன். துணிப்பல் - தன்மையொருமை வினை முற்று. (59)

**60. தருமன் அருச்சுனனையடக்கிச் சூதாட உடன்படுதல்.**

உருத்தெ ழுந்த நரனை யெம்பி
யுளம்பொ றுத்தி ருக்கவென்
றிருத்தி யென்னெ டாடி வென்ற
தியாவர் மாம வஞ்சநின்
கருத்தி சைந்த சூதி னுடல்
காண லாகு மவாவென
துருத்தி யென்ன வுயிர்ப்பெ ழுந்து
தோன்ற லுந்தொ டங்கினன்.

(இ-ள்) உருத்து - கோபித்து, எழுந்த - (சண்டைக்கு) மேலெழுந்த, நரனை - அருச்சுனனை, (தருமன்) 'எம்பி - என் தம்பியே! உளம் பொறுத்திருக்க - மனம் பொறுத்திருப்பாயாக', என்று - என்று சொல்லி, இருத்தி - அடக்கி, (பின்பு), மாம! - மாமனே!

என்னெடு ஆடி வென்றது யாவர் - என்னோடு போராடி வென்றவர் யாவர் (எவருமிலர்): (ஆகவே) வஞ்ச நின் கருத்து இசைந்த - வஞ்சகமான உன் மனதிற்குப் பொருந்திய, சூதின் ஆடல் காண லாகும் அவா - சூதாட்டத்தையாடிப் பார்க்கும் ஆசையுடையேன், என - என்று கூறி, தோன்றலும் - தருமபுத்திரனும், துருத்தி என்ன உயிர்ப்பு எழுந்து - உலைத் துருத்தியென்னும்படி பெருமூச்சு விட்டு, தொடங்கினுன் - சூதாட ஆரம்பித்தான்: (எ.று).

'என்னெடு ஆடி வென்றது யாவர்' என்று தருமன் கூறியதற்குக் காரணம் - 'யான் போர்த் திறமையில்லாமற் சும்மாவிருக்கின்றே னென்று நினையாதே: யான் போர் புரியத் தொடங்கினுல் எனக்கு முன் அஞ்சாது எதிர் நின்று பொருபவர் ஒருவருமிலர்' என்பதைப் பெற வைத்தற்கு என்க. உயிர்ப்பெழுதல் - ரோஷங் கொண்டமை தெரிப்பது. வென்றதியாவர் - குற்றியலிகரம். அவா - அவா உடை யேன் என்றபடி. என்ன - உவமவுருபு. 'ஆகும் வாவென' என்றும் பாடம் (60)

### 61. தருமனும் சகுனியும் சூதாடும் பொருட்டு ஆசனத்திலிருத்தல்.

நின்னை வெல்லி லொட்டம் நல்கு
நீய வன்ற னைவெலின்
மன்ன! யான ளிப்ப லென்ன
மன்னு ரைப்ப தன்மனுந்
தன்னி ருக்கை யொருவி வேறு
தவிசி ருப்ப புவிபெற
உன்னி மாமன் திக்கி டங்க
ளோர்ந்து நேர மர்ந்துளான்.

(இ-ள்) நின்னை வெல்லில் - உன்னை மாமன் வென்று விடு வாராகுல், ஒட்டம்-பந்தயமாக வைத்தபொருளை, நல்கு-நீ கொடுத்து விடு : நீ—, அவன்றனை வெலின் - அந்த மாமனை வென்று விடு வாயாகுல், மன்ன!—தருமராசனே! யான் அளிப்பல்-அவருக்குப் பதிலாக நான் (பந்தயமாக வைத்த) பொருளைக் கொடுத்து விடு வேன், என்ன-என்று (பந்தயம் வைப்பதில்) நியமஞ் செய்து, மன்-துரியோதனன், உரைப்ப-சொல்ல, தன்மனும்-தருமபுத்திரனும், தன் இருக்கையை ஒருவி-தான் இருந்த சிங்காதனத்தை விடுத்து, வேறு தவிசு இருப்ப - வேறு ஓராசனத்தில் பொருந்தியிருப்ப, மாமன் - சகுனி, புவிபெற உன்னி-இராச்சியத்தை அடையவேண்டுமென்று எண்ணி, திக்கு-குற்றமற்ற திசை எது என்றும், இடங்கள்-வெற்றித்

தானங்கள் எவை யென்றும், ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து, நேர் அமர்ந்துளான்-நேராகப் பொருந்த இருந்தனன்; (எ.று).

துரியோதனன் சகுனிக்காகத் தான் பந்தயம் வைக்க உடன்பட்டான் என்பதறிக.

சகுனி தருமபுத்திரனது இராச்சியத்தைக் கவரவேண்டுமென்று எண்ணமிட்டு, அதனால் அவன் தோல்வியடையும்படி தான் வெற்றித்தானத்தை யறிந்து அத்திசைப்புறமாக நேரே பொருந்தி யிருந்தனனென்றவாறு, இருவர் மாறுபட்டுத் தொழில் செய்யும் பொழுது தாம் இருவரும் இருக்கும் நிலவெல்லையைச் சதுரமாகவும், அச் சதுக்கத்தில் மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளும் முறையே இருப்பனவாகவும் கொண்டு, எதிரியுள்ள இடத்திற்குத் தானுள்ள இடம், 4, 7, 9, 11 இத்தானங்களுள் ஒன்ருய் அமையுமாறு இருந்து தொழில் செய்தால் வெற்றியுண்டாகுமென்பது சோதிட நூல்களிற் காண்க. ஒட்டம்-பந்தயமாக வைக்கப்படும் பொருள்; அம்-செயப்படுபொருள் விகுதி. (61)

**62-64. இதுமுதல் மூன்று கவிகள்-தருமன் பல பொருள்களையும் சூதாடி யிழந்தமையைக் கூறும்.**

முத்தின் மாலை தருமன் வைப்ப
முடிவ ணங்கி லானொளி
நத்தி ரத்ன வாரம் வைப்பச்
சகுனி தன்ம னும்முவந்
தத்தி வெண் மருப்பி னொளி
யடிவ குத்த பலகைமேல்
சுத்த வெள்ளை கவறு கொண்டு
சூத டுக்கி யாடினர்.

(இ-ள்) தருமன்—, முத்தின் மாலை வைப்ப - (தான் கழுத்தி லணிந்திருந்த) முத்துமாலையைப் பந்தயமாக வைக்க, முடி வணங்கிலான் - துரியோதனனுடைய, ஒளி நத்து - ஒளியை வெளி விடுகின்ற, இரத்தின ஆரம் - இரத்தின மாலையை, சகுனி—, வைப்ப - பந்தயப் பொருளாக (மாறு) வைக்க, தன்மனும் உவந்து - தருமனும் மகிழ்ந்து, அத்தி வெண்மருப்பின் ஒளி - யானைத் தந்தத் தாற் செய்யப்பட்டு ஒளி வீசுவதும், ஆளி அடி வகுத்த-சிங்கத்தின் கால்களையுடையதுமாய் அமைக்கப்பட்ட, பலகை மேல் - சூது

பலகையின் மேல், சூது அடுக்கி-காய்களை நிறுத்தி, சுத்த வெள்ளை கவறு கொண்டு - சுத்தமாக வெண்ணிறமான பாச்சிகைகளைக் கொண்டு, ஆடினர் - விளையாடினார்கள்; (எ.று)

சிங்கந்தாங்கிய கால்கள் அமைந்ததாய் யானைத் தந்தங் கொண்டு செய்யப்பட்ட அறை கீறிய சூதுபலகையின்மேல் காய் களைப் பரப்பித் தருமனும் சகுனியும் வெண்ணிறப் பாச்சிகை கொண்டு உருட்டி ஆடினர் என்க. சூது அடுக்குதல் - சூதாடு காய்களை நிறுத்துதல்: ஒரு பக்கத்தில் செந்நிறமான காய்களையும் மற்றொரு பக்கத்தில் நீலநிறமான காய்களையும் ஆடும் இருவரும் வைப்பது மரபு. சூது - காய்களுக்கு இலக்கணை. கவறு - பாச்சிகை. (62)

63. மாமன் வென்று நித்தி லத்தின்
மாலை கொள்ள மைத்துழாய்த்
தாமன் நல்கு தேர்கு றித்து
தரும னுட சௌபல
நாமன் அந்தத் தேரை மன்ன
னன்று வப்ப வென்றுழி
கோமன் அஞ்ச லித்தி டாமல்
கூறி யொட்ட மாடினான்.

(இ-ள்) மாமன் வென்று - சகுனி வெற்றி பெற்று, நித்திலத்தின் மாலை கொள்ள - முத்து மாலையைக் கைக் கொள்ளவே, தருமன்—, மை துழாய் தாமன் நல்கு - திருத்துழாய் மாலையையணிந்த கருநிற முடைய கிருஷ்ணன் (முன்னர்க்) கொடுத்த, தேர் குறித்து - தேரை ஒட்டமாகக் குறித்து, ஆட - விளையாட, சௌபல நாமன் - சகுனி, மன்னன் அன்று உவப்ப - துரியோதனன் அப்போது மகிழ்ச்சி கொள்ளும்படி, அந்தத் தேரை—, வென்றுழி - வென்ற போது, கோமன் - அரசர்களுக்கரசனாகிய தருமன், அஞ்சலித்திடாமல் - (சூது போதும் என்று) கை கூப்பியெழுந்திடாமல், ஒட்டம் கூறி - (மேலும்) பந்தயப் பொருள்களைக் கூறிக் கொண்டு, ஆடினான் - விளையாடினான்; (எ.று)

திரௌபதியைப் பாண்டவர்கள் மணஞ் செய்துகொண்ட பின்னர்க் கண்ணன் அவர்கட்குத் தேர் முதலியவற்றை வெகுமான மாக அனுப்பினனென வியாசபாரதம் கூறும். 'இழத்தொறும் காதலிக்கும் சூது' ஆகலின், மேலும் ஒட்டங் கூறியாடினான் தருமன் என்க. 'அஞ்சலித்திடாமல்' என்றது உலக வழக்குப் பற்றி: "ஒரு கும்பீடிட்டுப் போகாமல்" என்ற பொருளது. (63)

64. ஆடு போது தேர்க ளோடு
மானை வாசி யாளையுங்
கூடு போக மாத ரேவல்
கொண்டி யற்று வோரையும்
நாடு மூரு மரசொ டின்னு
நவிலு கின்ற பொருளையும்
நீடு மாசைச் சகுனி வெல்ல
நிருப னுக்க ளித்துளான்.

(இ-ள்) ஆடு போது - இருவரும் சூதாடும்போது, தேர்களோடு—, ஆனை வாசி ஆளையும் - யானை குதிரை காலாட்படைகளையும், போகம் கூடு மாதர் - இன்பத்திற்குரிய பெண்டிரையும் ஏவல் கொண்டு இயற்றுவோரையும் - ஏவன் மகளிரையும், ஊரும் - ஊர்களையும், நாடு - நாடுகளையும், அரசொடு - அரசாட்சியோடு, இன்னும் நவிலுகின்ற பொருளையும்-மற்றும் பேசப்படுகின்ற செல்வப் பொருள்களனைத்தையும், நீடும் ஆசை சகுனி வெல்ல - மிக்க பேராசை கொண்ட சகுனி மாமன் வென்று, நிருபனுக்கு அளித்துளான் - துரியோதன ராசனுக்குக் கொடுத்தனன்; (எ.று)

ஆனை - யானை : மரூஉ. (64)

65. தம்பியரைப் பந்தயப் பொருளாக வைத்து ஆடுமாறு தருமனைக் கேட்கும்படி துரியோதனன் சகுனியைத் தூண்ட அவனும் ஆடித் தோற்றிழத்தல்.

ஒழிவி லாத பொருள்கொ டுத்து
முட்கி லாத தருமனோ
டிழிவி லாத விளைஞர் தம்மை
யினிகு றித்தி யென்றரா
வெழுது கேத னோத மாம
னிளைஞர் தம்மை வையென
வழுவி லானு மந்த வாறு
வைத்தி ழந்து ளானரோ.

(இ-ள்) ஒழிவிலாத பொருள் கொடுத்தும் - அபரிமிதமான செல்வப் பொருள்களைக் கொடுத்த பின்னரும், உட்கு இலாத - (சிறிதும்) மனவொடுக்கமில்லாத, தருமனோடு—, 'இழிவு இலாத

இளைஞர் தம்மை-சிறந்த தம்பிமார்களை, இனி குறித்தி-இனி பந்தயப் பொருளாகக் குறிக்கலாம்', என்று—, அரா எழுது கேதன் -பாம்புக் கொடியையுடைய துரியோதனன், ஓத - சொல்ல, (அதனால் தூண்டப்பட்ட) மாமன் - சகுனியும், இளைஞர் தம்மை வை என - தம்பிமார்களைப் பந்தயமாக வைத்து ஆடுவாய் என்று சொல்ல, அந்தவாறு - அவன் கூறியபடியே, வழுவிலானும் - குற்றமற்ற தருமனும், வைத்து—, இழந்துளான் - (அவர்களையும்) தோற்று நின்றான்; (எ.று) அரோ-ஈற்றசை.

சகுனி தருமபுத்திரனது பொருள்களையெல்லாம் வென்றதும், துரியோதனன், 'இனிச் சூதாட்டத்தை நிறுத்திவிடக்கூடும்' என்ற எண்ணத்தினால் அவ்வாறு நிறுத்தி விடாதிருக்கும்படி தம்பியரையே பந்தயப் பொருளாக வைக்குமாறு கேட்கச் சகுனிக்குக் குறிப்பாக வுணர்த்தினன் என்க. குறித்தி, வை-முன்னிலை யொருமை வினை முற்றுக்கள். (65)

**66. தருமன் தன்னையும் வைத்து ஆடித்தோற்க, சகுனி திரௌபதியைப் பொருளாக வைக்கும்படி கூறுதல்.**

நினைகு றித்தி யென்று வஞ்ச
நெஞ்ச னோத விஞ்சறன்
தனைகு றித்தி ழப்ப மாமன்
றம்பி மாரோ டடிமையா
யினைகு றிக்க வினிநி னைப்ப
தென்னை மன்ன துருபதன்
மினைகு றித்தி யெனவி தூரன்
விழியி லானொ டுரைசெய்வான்.

(இ-ள்) வஞ்சநெஞ்சன் - சகுனி, நினை குறித்தி - உன்னையே ஒட்டமாக வைத்து ஆடுவாய், என்று ஓத - என்று (தருமனை) நோக்கிச்சொல்ல, விஞ்சறன் - தருமன், தனை குறித்து இழப்ப - தன்னையே வைத்து ஆடி இழக்கவே, (அது கண்டு) மாமன்-சகுனி, (அவனைநோக்கி) 'தம்பிமாரோடு - உன்னுடைய தம்பியர் நால் வருடன், அடிமையாயினை - நீயும் தோற்று எங்கட்கு அடிமையாய் விட்டீர்: இனி-இனிமேல், நினைப்பது என்னை-ஆலோசிப்பது என்ன இருக்கிறது? மன்ன-தருமராசனே! துருபதன் மினை-திரௌபதியை, குறித்து - பந்தயப் பொருளாக வைத்து ஆடுவாய், என - என்று (குத்தலாகக்) கூற, (அது கேட்டு) விதூரன்-விதுரன்; விழியிலானொடு-குருடனாகிய திருதராட்டிரனோடு, உரை செய்வான் - கூறு வானாயினான், (எ.று).

மிச்சமாய் நின்ற திரௌபதியையும் பந்தயம் வைத்துச் சூதாடு மாறு சகுனி தருமனைத் தூண்டினனென்க. மின் - மின்னலைப் போன்ற திரௌபதிக்கு உவமவாகுபெயர். விஞ்சறன் - அறன் விஞ்சி நிற்பவன் எனத் தருமனுக்காகியது. விதூரன் - நீட்டல் விகாரம். (66)

**67-68. இதுமுதல் இரண்டு கவிகள்-ஒருதொடர் : விதுரன் மனம் பொருமல் திருதராட்டிரனிடத்துச் சில கூறுதல்.**

கரும மொன்று நினைய லாது
கருதி டார்கள் கருதினுந்
தரும மன்றி தென்று ரைக்கில்
தனையர் நின்சொ லொழிவரோ
பெரும மன்னர் தாய மாட
பேதை மாரை வைப்பரோ
அருளி லுன்கண் ணுத லெங்கள்
அறிவி லாமை யாகுமே.

(இ-ள்) கருமம் ஒன்று - இத்தகைய அக்கிரமச் செய லொன்றை, நினை அலாது - உன்னையல்லாமல், (பிற நிருபர்) கருதிடார்கள் - நினைத்தலேனுஞ் செய்யமாட்டார்கள்: கருதினும் - அங்ஙனம் (நீ) நினைத்தாலும், இது தருமம் அன்று என்று உரைக்கில் - இந்தச் செயல் தருமமாகாது என்று சொல்வாயானால். தனையர் - நின் மைந்தர், நின் சொல் ஒழிவரோ-உன் வார்த்தையை மீறுவரோ? (யோசிப்பர்) : (மற்றும்) பெரும - பெரியோனே ! மன்னர் - அரசர்கள், தாயம் ஆட - சூதாட, பேதைமாரை - மகளிரை, வைப்பரோ - (பந்தயப் பொருளாக) வைப்பதுண்டோ ? (வைக்கமாட்டார்): (ஆகவே) அருள் இல் உன் கண் - தயை யில்லாத உன்னிடத்தில், ஆதல் - நாங்கள் பொருந்தி வசித்திருத் தல், எங்கள் - எங்களுடைய, அறிவிலாமையாகும் - புத்தி யில்லாமையேயாகும்; (உன் மீது குற்றஞ் சொல்வதிற் பயனில்லை யென்றபடி); (எ.று).

இது வரையில் மனம் பொறுத்திருந்த விதுரன், மகா பதிவிரதையும் பாண்டவர்க்கேயுரிய பத்தினியும் பட்டமகிஷியுமாய் அந்தப்புரத்திலே யிருக்குந் தன்மையளுமான திரௌபதியையும் பந்தயம் வைக்குமாறு சொன்ன சொல் தன் மனத்தை வருத்தவே,

நிஷ்டூரமாக இவ்வாறு கூறத் தொடங்கினுன். நாங்கள் உன்னைச் சேர்ந்திருப்பது எங்களது அறிவீனமேயாகும் என்று தம்மைப் பழித்துக் கூறும் முகத்தால் விதுரன் திருதராட்டிரனைப் பழித்தன னென்க. இச்செய்யுளினிற்றடி-ஒருவரது நிந்தையால் மற்றொருவரது நிந்தையை வெளிப்படுத்துகிற வஞ்சப்பழிப்பணியின் பாற்படும். (67)

68. தனது மைந்த ரின்ப மெய்த
தம்பி மைந்தர் துன்புற
நினது சிந்தை தன்னி லெண்ணி
னீதி யாவர் பாலதோ
மனதெ வர்க்கு நாச காலம
வந்த போது பேதமாம்
அனைய தன்மை நின்கண் மேய
தழிவை யெங்ங னொழிவையே.

(இ-ள்) தனது மைந்தர் இன்பம் எய்த - தன்னுடைய புத்திரர்கள் மகிழ்ச்சியடையவும், தம்பி மைந்தர் துன்பு உற - (தன்) தம்பியின் புத்திரர்கள் துன்பத்தையடையவும், நினது சிந்தை தன்னில் எண்ணில் - உனது மனத்தில் (நீயே) எண்ணுவையானுல், நீதி யாவர் பாலதோ?-நியாயம் யாவரிடத்தில் (இனி) காணப்படுவதோ? எவர்க்கும் நாச காலம் வந்த போது - யாவர்க்கும் கேடுகாலம் கிட்டும்போது, மனது பேதமாம் - மனம் மாறுபடும்: அனைய தன்மை - அப்படிப்பட்ட மனமாறுபாடு, நின்கண் - உன்னிடத்து மேயது - (இப்போது) பொருந்தியுள்ளது: (ஆகவே) அழிவை எங்ஙன் ஒழிவை - (உனக்கு வரப்போகும்) கேட்டினை எப்படித் தவிருவாய்; (எ.று)

பாண்டவர்களிடத்து அன்பில்லாவிடினும் நீதிமுறையையாவது பார்க்க வேண்டுமென விதுரன் கூறினுன். ''விநாசகாலே விபரீத புத்தி:'', 'கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே' என்பவை மூன்ருமடிக்கு மேற்கோளாகத் தக்கவை. (68)

69. சகுனியின் விருப்பத்தின்படியே தருமன் சூதாடித் திரெளபதியைத் தோற்றல்.

என்ன பின்ன வன்னு ரைப்ப
விருக ணென்னப் புலனிலாக்
கன்ன னென்ன மன்னன் வைகக்
கருணை வள்ளல் மாதுலன்

சொன்ன சொற்கி டைந்தி டாது
சூத மாட துரோபதை
தன்னை சொன்ன தாயம் வீழச்
சகுனி வென்று ளானரோ.

(இ-ள்) என்ன - என்று, பின்னவன் உரைப்ப - தம்பியாகிய விதுரன் சொல்ல, இருகண் என்ன - இரண்டு கண்களும் (குருடாய்) பார்வையில்லாமை போல, புலன் இலா கன்னன் என்ன - கேட்டறியும் அறிவும் இல்லாத காதுகளையுடையவன் (செவிடன்) என்று சொல்லும்படி, (கேட்டும் வாளா பதில் ஒன்றுஞ் சொல்லாமல்), மன்னன் வைக - திருதராட்டிரன் இருப்ப, (அப்போது) கருணை வள்ளல் - தருமபுத்திரன், மாதுலன் சொன்ன சொற்கு இடைந்திடாது - மாமனாகிய சகுனி சொல்லிய வார்த்தைக் குப் பின் வாங்காமல், சூதம் ஆட - சூதாட்டமாட, சகுனி—, சொன்ன தாயம் வீழ - குறித்துச் சொல்லிய பந்தயம் உருண்டுவிழ, (அதனால்) துரோபதை தன்னை - திரௌபதியை, வென்றுளான் - வென்றவனாயினான்; (எ.று) - அரோ - ஈற்றசை.

விதுரன் இடித்துக்கூறிய சொற்களுக்குத் திருதராட்டிரன் சிறிதும் செவிகொடாது இருந்ததனால், கண்ணில்லாமையோடு செவியும் இல்லாதவன் என வருணித்துக் கூறுமாறிருந்தது அவன் நிலைமை என்பது முன்னிரண்டடியின் கருத்து. புலனிலாக் கன்னன்-செவிடன் : (கன்னன் - கர்ணன் : கர்ணம்-காது). சகுனி சொற்படியே தருமபுத்திரன் திரௌபதியைப் பந்தயம் வைத்துத் தோற்றானென்க. சகுனி சொன்ன சொல்-'துருபதன் மினைக் குறித்தி' யென்றது, (செ. 66). (69)

வேறு

**70-72. இதுமுதல் மூன்று கவிகள்—குளகம் : தருமன் முழுவதுந்தோற்றதைக் கண்டு சபையிலுள்ளோர் இரங்கிக் கூறுவன.**

சொன்னவை முழுதுந் தோற்றுஞ்
சோர்வுறு தறம்பு ரப்போன்
மன்னுழி மனதங் காற்று
வருந்திமன் னவையோர் மன்னன்

இன்னரு ளில்லான் பொல்லான்
இரங்கிலன் உறவைச் சற்றும்
உன்னலன் பவம்பொ றுத்தா
னொருவினன் மனுநூ லென்றும்.

(இ-ள்) அறம்புரப்போன்-தருமபுத்திரன், சொன்னவை முழுதும் தோற்றும்-பந்தயப்பொருளாகச் சொல்லி வைத்தவை அனைத்தையும் இழந்தும், சோர்வுறுது மன்னுழி - மனந்தளராமல் இருந்த விடத்து, மன் அவையோர் - அரச சபையிலிருந்தவர்கள், அங்கு - அப்போது, மனது ஆற்று வருந்தி-(தங்கள்) மனங்கள் பொறுதபடி வருத்தமுற்று, மன்னன் - திருதராட்டிரன், இன் அருள் இல்லான்- இனிய கருணையில்லாதவன்; பொல்லான் - பொல்லாதவன் : இரங்கிலன்-(சற்றும்) மனவிரக்கங்கொண்டானில்லை: சற்றும் உறவை உன்னலன் - சிறிதேனும் உறவென எண்ணிப்பார்த்திலன் : பவம் பொறுத்தான் - பாவத்தைச் சுமக்கின்றுன் : மனுநூல் ஒருவினன் - மனுதர்மசாத்திரத்தை (அதன்படி நடவாமல்) விலக்கினுன், என்றும் - என்று கூறியும்; (எ.று). இஃது மேலைச்செய்யுளில் வந்துள்ள 'என்றும்' என்பதனேடு தொடரும்.

முழுதும் தோற்றும் சோர்வுறுததென்னென்னில் - எல்லாம் வினைப்பயனென்றே கருதிச் சுக துக்கங்களை ஒரு நிகராகப் பாவிப்பவன் தருமனுதலின்.

இதுமுதல் பன்னிருகவிகள்-பெரும்பாலும் ஒன்று நான்காஞ்சீர் கள் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரிய விருத்தங்கள்.** இவற்றில் மூன்று ஆருஞ்சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (70)

71. வசைபுகழ் அரசுக் கிந்த
மாமனே மறலி யென்றும்
விசையன்கண் சேந்த தன்றி
வீமனிங் கெழுமோ வென்றும்
அசைவிலா வறத்தின் மைந்தன்
அறம்பிழைத் திடுமோ வென்றும்
இசைகுழல் கிளவி தன்கற்
பெனுந்தழ லவியா தென்றும்.

(இ-ள்) வசை புகழ் அரசுக்கு - பழிச்சொல்லில் புகழ்பெற்ற துரியோதனனுக்கு, மாமனே - இந்தச் சகுனியே, மறலி என்றும்-(உயிர் வாங்கும்) யமனுவான் என்று கூறியும், விசையன் கண் சேந்தது அன்றி-அருச்சுனன் (கோபத்தால் தனது) இரண்டு கண் களும் சிவக்கப்பெற்றதோடு அல்லாமல், இங்கு - இவ்விடத்து, வீமன் - வீமசேனனும், எழுமோ - (கோபங்கொண்டு) போர்க்கு எழுவனே, என்றும் - என்று கூறியும், அசைவு இலா - சோர்த வில்லாத, அறத்தின் மைந்தன் - தருமபுத்திரனும், அறம் பிழைத் திடுமோ - தருமத்தினின்று தவறிவிடுவனே? என்று-என்று கூறியும், இசைகுழல் கிளவி தன்-புல்லாங்குழலிசை போன்ற இனிய பேச்சினை யுடைய திரௌபதியினது, கற்பு எனும் தழல் - பதிவிரதா தருமம் என்கின்ற நெருப்பு, அவியாது - தணியாது (எதிரிகளை அழித்தே விடும்), என்றும்-என்று கூறியும்; (எ.று) இஃது மேலைச் செய்யுளில் வந்துள்ள 'என்றும்' என்பதனேடு தொடரும்.

சகுனி இவ்வாறு மாயச் சூதாடித் தருமனைத் தோற்கச் செய்தது துரியோதனனது நாசத்துக்குக் காரணமாகுமென்று கருதி 'அரசுக் கிந்த மாமனே மறலி' என்ருர்கள். இதுவரையில் தருமனுடைய சொற்குக் கட்டுப்பட்டு அடங்கியிருந்த வீமன் இப்பேரவமானத் திற்குச் சிறிதும் மனம்பொருது சினங்கொண்டு போர்க்கு எழக் கூடும் என்பது கருதி 'வீமனிங்கெழுமோ' என்ருர். சேந்தது - சிவந்தது என்பதன் மரூஉ. குழல் - குழலினிசைக்கு ஆகுபெயர். குழல்கிளவி-உவமைத்தொகை. கிளவி - கிளவியையுடையாளுக்கு ஆகுபெயர். (71)

72. தந்தைவாய் திறவான் மைந்தர்
தமதுவாழ் வழித்தான் சீர்த்தி
நந்தவே மரபி னேர்க்கு
நாட்டினன் பழியை யென்றும்
அந்தகன் அவன்மேற் குற்ற
மறைவதிங் கென்னை யென்றும்
இந்தவா றிரங்கி யாரு
மிருந்துழி யிருந்தி சைத்தார்.

(இ-ள்) தந்தை வாய் திறவான் - திருதராட்டிரனே வாயைத் திறந்து அறம் பேசான்: தமது மைந்தர் வாழ்வு அழித்தான் - தன்னுடைய புத்திரர்களுடைய வாழ்வினைக் கெடுத்து விட்டான்: மரபினேர்க்கு - தன் குருகுலத்தின் வழிவந்தோர்க்கு சீர்த்தி - மிக்க புகழ், நந்தவே - ஒடுங்கவே, பழியை—, நாட்டினன்

நிலை பெறச் செய்தான், என்றும் - என்று கூறியும், அந்தகன் - (தந்தையோ) குருடன்: அவன்மேல் இங்கு குற்றம் அறைவது என்னை - அவன் மேலே இப்போது இவ்விடத்துக் குற்றத்தைச் சொல்வது என்ன பயனுடைத்து, என்றும் - என்று கூறியும், இந்த வாறு - இந்த விதம், யாரும் - சபையிலுள்ளோர் அனைவரும், இருந்துழி யிருந்து - இருந்த விடத்திலேயே உட்கார்ந்து கொண்டு, இசைத்தார் - சொல்லினுர்கள்; (எ.று).

சீர்த்தி - மிகுபுகழ். இங்ஙனம் அந்தந்த அரசர்கள் தாம்தாம் இருந்த இடத்திலிருந்தபடி தமக்குட் சொல்லிக் கொண்டிருந்தார் களேயன்றி எவரும் எழுந்து துரியோதனனுக்கு மாருக ஒன்றுஞ் செய்ய மாட்டிற்றிலரென்பது பெறப்பட்டது. (72)

### 73. துரியோதனன் வீடுமனைப் பார்த்துக் கூறிய செருக்குமொழி.

விரகரோ டெண்ணி யண்ணல்
வீடுமன் றனைப்பார்த் தைய
தருமன்செய் பவமோ மாமன்
றுன்செய்புண் ணியமோ நால்வர்
கருதிய மதியோ வந்தக்
கணிகைதன் விதியோ விங்ஙன்
மருவிய விளைவென் றியாரும்
வருந்துமா றிகழ்ந்து சொன்னுன்.

(இ-ள்) அண்ணல் - துரியோதனன், விரகரோடு எண்ணி - (துஷ்டசதுஷ்டர்களில் தன்னை யொழிய நின்ற) வஞ்சகர்களாகிய சகுனி, துச்சாதனன், கன்னன் என்ற மூவரோடும் ஆலோசித்து, வீடுமன் தனைப் பார்த்து - பீஷ்மனை நோக்கி, ''ஐய-பெரியோரே! தருமன் செய்பவமோ - தருமபுத்திரன் (முற்பிறவியிற்) செய்துள்ள தீவினையோ! (அன்றி) மாமன்தான் செய் புண்ணியமோ - சகுனி (பூர்வஜன்மத்திற்) செய்த நல்வினைப்பயன்தானே! (அல்லது) நால்வர்-(தருமனெழிந்த வீமன் முதலிய) மற்றைத் தம்பியர் நால் வரும், கருதிய-பெருமிதம் உடையவராகத் தங்களை மதித்த, மதியோ-எண்ணந்தானே! (அன்றி) அந்தக் கணிகை தன் விதியோ-அந்தப் பொதுமகளாகிய திரௌபதியின் தலைவிதியோ! இங்ஙன்-இவ்வாறு; மருவிய-ஏற்பட்ட, விளைவு-முடிவு, என்று—, யாரும் வருந்துமாறு-எல்லோர் மனமும் புண்பட்டுத் துயருறும்படி, இகழ்ந்து - இகழ்ச்சி யாக, சொன்னுன்—: (எ.று).

மாற்றுச்சமைக்கப்பட்ட பளிங்கு மண்டபத்தில் தடுமாறிய தன்னைத் திரௌபதியும் வீமன் முதலிய நால்வரும் சிரித்துப் பரிகசித்தது தன் மனத்திலுறுத்த அதுகாரணமாகச் சூதாடி இப்போது தான் வென்று நின்ற நிலையில் அந்தத் திரௌபதியையும் வீமன் முதலிய நால்வரையும் இவ்வாறு இகழ்ந்து கூறினன் என்க. ஐவருக்கும் உரிய மனைவியாயிருப்பது கொண்டு திரௌபதியைக் "கணிகை" என்ற பெயரினால் இழித்துக் கூறினான். (கணிகை - பொதுமகள்). அண்ணல்-இழிவுப்பற்றியது. ஓகாரங்கள்-விகற்பப் பொருளன. (73)

### 74. வீடுமன் நீதி கூறவும் கேளாமல் துரியோதனன் விதுரனை நோக்கிக் கூறத்தொடங்குதல்.

நரபதி கொடிய வாய்மை
நதிமகன் வினவி நம்பி
மரபினுக் கியற்கை யன்று
மதித்திடா திகழ்தல் செற்றம்
ஒருவுகென் றுரைப்பக் கேளா
துரககே துருத்தங் குள்ளார்
வெருவிட விரங்கிச் சோரும்
விதுரனோ டினைய சொல்வான்.

(இ-ள்) நரபதி - துரியோதனனது, கொடிய வாய்மை - (இகழ்ந்து பேசிய) கொடிய வார்த்தைகளை, நதிமகன் - வீடுமன், வினவி - கேட்டு, (அவனை நோக்கி), நம்பி - சிறந்தோய்! மதித்திடாது இகழ்தல் - (ஒருத்தரையொருத்தர்) கௌரவிக்காமல் இகழ்ந்து பேசுவது, மரபினுக்கு இயற்கை அன்று - நமது குரு வமிசத்தினர்க்குப் பொருந்திய இயல்பு ஆகாது: (ஆகவே) செற்றம்- (இப்போது உண்டான) கோபத்தை, ஒருவுக - (இனிமேலும் வளர விடாது) விட்டிடுவாயாக, என்று உரைப்ப - என்று (நன்மதி) சொல்லவும், உரககேது - துரியோதனன், கேளாது - செவியிற் கொள்ளாமல், உருத்து - மிகவும் கோபித்து, அங்கு உள்ளார் வெருவிட-அங்கிருந்த சபையோர் அஞ்சும்படி, இரங்கிச் சோரும் விதுரனோடு - மனம் வருந்தித் தளர்ந்து கொண்டிருந்த விதுரனைப் பார்த்து, இனைய சொல்வான் - இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வானாயினன்; (எ.று) - அவற்றை மேலைக்கவிகளிற் காண்க.

நம்பி - இகழ்ச்சிக் குறிப்பினது; இனி, தான் கூறப்போகும் நன்மதியைக் கேட்க வேண்டுமேயென்ற கவலையினால் உயர்த்திப்

பேசியவாறுமாம். பாண்டவர்களும் நமது குலத்தைச் சேர்ந்தவராதலின், அவர்களை யிழித்துக் கூறுதல் தகுதியன்றென்பது, இரண்டாமடியின் கருத்து, உரககேது - பாம்புக் கொடியோன். ஒருவுகென்று - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். இனைய - குறிப்பு வினையாலணையும் பெயர். உள்ளார் வெருவிடச் சொல்வான் என இயையும். (74)

**75-76. இரண்டு கவிகள் ஒருதொடர்—துரியோதனன் விதுரனை நோக்கிக் கூறுவன.**

சரதநல் விரதன் சூதாற்
றனித்தனி நமக்குத் தோற்ற
இரதமும் களிறு மாவு
மிருந்துள பொருள்கள் யாவுஞ்
சுரதவங் கனையாரோடு தூதரைக்
கொணரச் சொன்மின்
வரததோ ரணங்க ளொல்லை
மாநகர் நாட்டச் சொன்மின்.

(இ-ள்) நல் விரதன்-நல்ல தருமபுத்திரன், சூதால்-சூதாட்டத்தினிடத்து, நமக்கு - நம்மிடத்தில், தனித்தனி சரதம் தோற்ற - தனித்தனியாக (ஒட்டம் வைத்து) நிச்சயம் தோற்றுப்போன, இரதமும் - தேர்களையும், களிறும் - ஆண் யானைகளையும், மாவும் - குதிரைகளையும், (மற்றும்) இருந்துள பொருள்கள் யாவும் - (அவன்பால்) இருக்கின்ற பொருள்கள் எல்லாவற்றையும், சுரத அங்கனையாரோடு - இன்பத்திற்குரிய பெண்களோடு (ஒரு சேர), கொணர - (இங்கே என்னிடம்) கொண்டுவரும்படி, தூதுரை சொன்மின் - தூதர்க்குக் கட்டளையிட்டுச் சொல்லுவீர் : (மேலும்) வரத - சீரியோனே! ஒல்லை - விரைவிலே, தோரணங்கள் -(மாவிலை முதலியவற்றாலாகிய) தோரணங்களை, மாநகர் - பெரிய அத்தினபுரி முழுவதும், நாட்ட-கட்டியலங்கரிக்கும்படி, சொன்மின்-சொல்லுவீர்; (எ.று).

துரியோதனன் தருமனுடைய சதுரங்கசேனைகளையும் கவர்ந்து வரக்கூறியதோடு பிற செல்வங்களையும் அழகிய மகளிரையும் ஒரு சேரக் கவர்ந்து கொணரும்படி தூதர்க்குக் கட்டளையிடும்படி கூறினான். நகரைத் தோரணங்கட்டியலங்கரிக்கச் சொன்னது, தான் பெற்ற வெற்றியைக் கொண்டாடுதற் பொருட்டென்க. சுரத அங்கனையார் - போகமாதர். (அங்கனை-பெண்). ஒல்லை - விரைவு குறிக்கும் இடைச்சொல். சொன்மின்-முன்னிலை ஏவல் வினைமுற்று, தோரணம்-வடசொல். (75)

76. நால்வருந் தொழும்ப ராக
நவிலுமி னவையோர் காண
கோல்வரும் விழியி னுளைக்
கொணர்ந்திடப் புகன்மி னென்று
மேல்வருஞ் செய்கை யோரான்
விளம்பலும் விதுரன் றன்மன்
பால்வருஞ் செல்வம் சூதாற்
பறிப்பது வலியோ வாழ்வோ.

(இ-ள்) (மற்றும்) நால்வரும் - வீமன் முதலிய நான்கு பேரும், தொழும்பராக - அடிமைகளாகுமாறு, நவிலுமின் - சொல்லுவீர்: அவையோர் காண - சபையோர் (தமது கண்களால்) பார்க்கும்படி, கோல் வரும் விழியினுளை - அம்புபோற் கூரிய கண்களையுடைய திரௌபதியை, கொணர்ந்திட - இங்கு அழைத்துவர, புகன்மின் - சொல்லுவீர், என்று - என்று (இவ்வாறு), மேல் வரும் செய்கை ஓரான் - மேலே நிகழப்போகின்ற சம்பவங்களை ஆராயாதவனாய், விளம்பலும் - (துரியோதனன்) கூறவும், (அவனை நோக்கி) விதுரன், தருமன் பால் வரும் செல்வம் - தருமனிடத்துள்ள ஐசுவரியங்களை, சூதால் பறிப்பது - சூதாட்டத்தின் விளையாட்டால் கவர்வது, வலியோ - (மன்னவர்க்கு) வல்லமையாகுமோ ? (வீரமாகுமோ?) ; வாழ்வோ - (அவற்றைக் கொண்டு) வாழ்க்கை நடத்துவதும் (மங்களகரமான) வாழ்க்கையாகுமோ? (ஆகாது); (எ.று).

துரியோதனன் தனக்கு மூத்தோனாகிய தருமனை அடிமையாகச் சொல்வதற்கு வாய்கூசி, இளைஞராகிய வீமன் முதலியோரையே அடிமைகளாக்கச் சொல்லினனென்க. அன்றியும், துரியோதனன் தான் இராசசூய யாகத்திற்குச் செல்லுகையிற் பளிக்கு மண்டபத்தில் இடறி விழுந்த போது தன்னைப் பரிகசித்த வீமன் முதலிய நால்வரிடத்தே மிக்க கறுக் கொண்டுள்ளானென்பதையும் இதனால் அறியலாம். இனி, நீ மாயச் சூதாட்டத்தில் வென்றுபறிப்பது வீரத்திற்கும் மங்கள வாழ்விற்கும் ஏற்றதன்று என்று விதுரன் எடுத்துக் காட்டினனென்க. கோல் - அம்பு. வரும் - உவமவுருபு. கோல்வரும் விழியினுள் என்றது - தவறாது அம்புபோல் அழிப்பள் என்ற கருத்தையுட்கொண்டிருத்தலால், **கருத்துடையடைகொளி யணியாம்.** ஓரான் - முற்றெச்சம். பால் - ஏழனுருபு. ஓகாரங்கள் - எதிர்மறை. (76)

**77-80, இதுமுதல் நான்கு கவிகள்—ஒரு தொடர் : விதுரன் அறிவுரை கூறியன.**

சொன்னவை புரிந்திட் டாலுந்
துரோபதை தன்னைப் புன்மை
பன்னுத லொழிவை யாகிற்
பண்ணவர் கற்பம் வாழ்வாய்
அன்னவ டன்னை முன்னர்
அவமதித் திடுவா னுள்ளத்
துன்னிநீ கேட்ட சொற்கீங்
கொத்ததுன் னெண்ண மென்ருன்.

(இ-ள்) சொன்னவை புரிந்திட்டாலும் - (நீ) சொன்னபடியே செய்வதானுலும், (ஒன்று கேள்): துரோபதை தன்னை - (கற்பினுக் கணியாம்) திரௌபதியை, புன்மை பன்னுதல் - இழிவுபடுத்துஞ் சொற்களைச் சொல்லுதலை, ஒழிவையாகில் - விட்டிடுவாயானுல், பண்ணவர் கற்பம் வாழ்வாய் - தேவர்களது ஆயுளளவும் அழியாது (நீடுழிகாலம்) வாழ்ந்திருப்பாய்: நீ—, முன்னர் - முன்னமேயே, அன்னவள் தன்னை - அந்தத் திரௌபதியை, அவமதித்திடுவான் - இழிவுபடுத்தும் பொருட்டு, உள்ளத்து உன்னி - மனத்திலே தீர்மானித்து, கேட்ட - சொன்ன, சொற்கு - சொல்லுக்கு, ஒத்தது- ஏற்றதாயிருப்பது, இங்கு - இப்போது, உன் எண்ணம் - உன்னு டைய கருத்து, என்ருன் - என்று விதுரன் (இடித்துச்) சொன்னுன்; (எ.று)

தருமபுத்திரனது எல்லாப் பொருள்களையும் நீ கைப்பற்றினுலும், மகாபதிவிரதையான திரௌபதியைக் குறித்து இழிசொற்கள் கூறுதலை மாத்திரம் தவிர்ந்திடு: இதனுல், உனக்கு மிக்க க்ஷேம முண்டாகுமென்று விதுரன் துரியோதனனுக்கு அறிவு கூறின னென்க. "சொன்னவை புரிந்திட்டாலும்" என்பதிலுள்ள உம்மை - அவ்வாறு புரிதலும் தகாததேயென்ற பொருளைக் காட்டும். கற்பம் - கல்பம்: வடசொல்: நெடுங்கால வெல்லை. தேவர்கள் அமரராதலின், அவர்களது வாழ்ச்சியான கற்பகாலம் ஆயுள் நெடுமைக்கு எடுத்துக் கூறப்பட்டது. பண்ணவர் - தேவர்கள். **நீ கேட்ட சொல்** - நீ சொன்ன இழிசொல்: 'கணிகை' (செ: 73) என்பது: செவியின் புலத்தை நாவின் மேலேற்றிக் 'கேட்ப' என்ருர். இது, ஒருவகை உபசார வழக்கு. 'புலன்மாறி வந்தது' என்க: **'செவிகைப்பச்** சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்' என்ற இடத்துப் போல (குறள்.39.9). 'கணிகை' (பொதுமகள்) என்று

இழித்துரைத்ததற்கேற்பவே உன் எண்ணமும் தீயதாய் இழித் துரைக்கத்தக்கதாய் உள்ளது என்ருன் விதுரன். (77)

78. வருவதோர்ந் திடுவான் மீட்டு
மைந்தனுக் கிரங்கிச் சொல்வான்
நிருதர்மாய்ந் தரச ராக
நிலமகட் பரம்பொ ருமற்
குரவனுக் குரைப்ப விண்ணேர்
குழுவொடும் வனம்புக் காழிப்
பரமனுக் கிசைப்பக் கேட்டுப்
பார்மகள் சோர்வு நோக்கி.

(இ-ள்) வருவது ஓர்ந்திடுவான் - பின்னுல் நிகழப்போவதை முன்னரே அறிந்தவனுதலின், (விதுரன் மீட்டும் - மேலும், மைந்தனுக்கு இரங்கி - துரியோதனனுக்காகப் பச்சாத்தாபப்பட்டு, சொல்வான் - கூறுவானுயினுன் : ''நிருதர் மாய்ந்து அரசர் ஆக - அசுரர்களெல்லாரும் (திருமாலாற்) கொல்லப்பட்டுப் பின்னர் (பூவுலகில்) அரசர்களாகப் பிறக்க, நிலமகள் - பூமிதேவி, பரம் - அவர் களுடைய பாரத்தை, பொருமல் - தாங்க வல்லமையில்லாமல், குரவனுக்கு உரைப்ப-பிரமதேவனுக்குச் சொல்லி முறையிட, (அப் பிரமன்) விண்ணேர் குழுவொடும் வனம் புக்கு - தேவர்களின் கூட்டத்தோடு சேர்ந்து துளசி வனம் புகுந்து (பின்னர்) ஆழிப் பரமனுக்கு இசைப்ப - (திருப்பாற் கடலிற் பள்ளிகொண்டிருக்கும் மகாவிஷ்ணுவுக்குச் சொல்ல, கேட்டு - (அக் கடவுள்) அவர்கள் முறையீட்டைச் செவியேற்று, (பின்பு அங்கே வந்துள்ள) பார்மகள் - பூமிதேவியின், சோர்வு நோக்கி - தளர்ச்சியினைப் பார்த்து; (எ.று).— 'வருந்தல்... ...நின் பரந்தவிர்த்திடுவல்' என மேலைக் கவியிற் குளக மாய் இயையும்.

இரண்டு மூன்ரும் அடிகளாற் காணவேண்டிய விவரம் பின் வருமாறு :—''பூமிதேவி மிகுந்த பாரத்தினுல் துன்பமுற்று மகா மேருபர்வதத்திலிருக்கின்ற தேவசபையிற் சேர்ந்து, பிரமதேவன் முதலான தேவர்கட்கெல்லாம் வந்தனஞ் செய்து, 'ஓ தேவர்களே! முன்பு மகாசமர்த்தரான ஸ்ரீமகாவிஷ்ணுவினுலே சங்கரிக்கப்பட்ட காலநேமி முதலிய பல அசுரர்களும் இப்பொழுது பூலோகத்தில் அரச வம்சங்களிலே பிறந்து இரவும் பகலும் குடிமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டு கொடுமைசெய்து திரிகிருர்கள் : அவர்களுடைய திரளான சேனைகள் என்மேல் இருப்பதனுலே நான் மிக்க பாரத்தைச் சுமக்கும் வருத்தமுடையவளாய் என்னையும் சுமக்கச் சக்தியற்றவளாயிருக்கின்றேன் : இந்தச் சங்கதியை உங்களுக்கு

விண்ணப்பஞ் செய்தேன் : ஆதலால் நீங்கள் என்மேல் அன்பு கூர்ந்து நான் மெலிவடைந்து பாதாளஞ் சேராதபடி என் சுமையை இறக்கியருளவேண்டும்'' என்று விஞ்ஞாபனம் செய்தாள் என்பது, தேவ சபையிலே பூமிதேவி பொதுவாக எல்லாத் தேவர்களையும் நோக்கிக் கூறியிருக்கவும், தலைமை பற்றி 'குரவனுக் குரைப்ப' என்று இந்நூலாசிரியர் கூறினர்; ஆயினும், எல்லாத் தேவர்களையும் நோக்கிப் பூமிதேவி கூறினளென்பதே இவ்வாசிரியர் கருத்தென்பது ''விண்ணோர் குழுவொடும் புக்கு ''எனப் பின் வந்த தொடரினால் விளங்கும். அசுரர்களில் இன்னர் இன்ன அரசராகப் பிறந்தனரென்ற விவரம் வியாசபாரதத்தில் அம்சாவதரணபர்வத்திற் பரக்கக் கூறப் பட்டிருக்கின்றது. குரவனுக்கு உரைத்தது-படைத்தற்கடவுளாதல் பற்றி. வனம் - துளசி. ஆழி-திருப்பாற்கடல்: கூப்பீடு கேட்கும் இடம் என்பர். (78)

79. வருந்தனின் மருங்கிற் றோன்று
மன்னரை யொருங்கி றுத்துன்
பரந்தவிர்த் திடுவ லென்னப்
பருவர லொழித்த னந்தன்
சிரந்தனிற் கிடந்த பார்மேற்
செனித்தன னரசாய் நம்மிற்
பொருந்தின னொருவ னாகப்
பொழியருட் கரிய மேகம்.

(இ-ள்) வருந்தல் - 'நீ வருந்த வேண்டா : நின் மருங்கில் தோன்றும் மன்னரை - உன்னிடத்துப் பிறந்துள்ள அரசர்களை, ஒருங்கு - ஒருசேர (எல்லாரையும் ஸமூலமாக), இறுத்து - அழித்து, உன் பரம் தவிர்த்திடுவல் - உன்னுடைய பாரத்தைப் போக்கிடு வேன்', என்ன - என்று சொல்லி, பருவரல் ஒழித்து - (அந்தப் பூமிதேவியின்) துன்பத்தை நீக்கி, (மற்றும்), அனந்தன் சிரம் தனில் கிடந்த பார்மேல் - ஆதிசேடன் தலையின் மேல் (அவன் தாங்க அதனால்) தங்கியுள்ள பூமியின் மேல், அரசாய் செனித்தனன் - அரசனாக அவதரித்துள்ளான்: (மேலும் அவன்) நம்மில் ஒருவனாக பொருந்தினன்-நமக்குள்ளே (நெருங்கிய) ஒருவனாக இருக்கின்றான்: (அவன்தான் யாரெனில்) அருள் பொழி கரிய மேகம் - கருணையைப் பெய்கின்ற காளமேகமாகிய கிருஷ்ணனுவன்; (எ. று).

பிரமதேவன் விண்ணப்பித்ததனால் பூமிதேவியின் குறையை யறிந்த திருமால் தானே பூமியில் வசுதேவனது மனைவியாகிய தேவகியின் கருப்பத்தில் தோன்றித் துஷ்ட நிக்கிரகஞ்செய்து பாரத்தைப் போக்குவதாக வாக்களித்து அப்பூமிதேவியின்

குறையைப் போக்கினன் என்பது அறிய வேண்டுவது, வருந்தல் - அல்லீற்று எதிர்மறை முன்னிலை வினைமுற்று. தவிர்த்திடுவல் - தன்மையொருமை வினைமுற்று. அருள்பொழி கரிய மேகம் - உருவகம். (79)

80. நீயதற் கேற்ற தீமை
நினைத்தபி னிரங்கி நொந்தியான்
மாயுநங் குலங்க ளென்று
மதிநினக் குரைத்தேன் மைந்த!
நேயமா யைவ ரோடு
நேர்ந்துவாழ்ந் திடுமி னென்று
தூயவ னுரைப்பத் தன்கை
சுயோதன னெறிந்து நக்கான்.

(இ-ள்) நீ அதற்கு ஏற்ற தீமை நினைத்தபின் - நீ அந்த மகாவிஷ்ணு சங்கற்பித்ததற்கேற்றபடியே கொடுமைகளைச் செய்ய நினைத்திருப்பதால், யான் - நான், இரங்கி - (உனக்காகப்) பச்சாத்தாபப்பட்டு, நொந்து-மனம் வருந்தி, "நம் குலங்கள் மாயும் என்று-நமது அரசகுலங்கள் முற்றும் (சங்கரிக்கப்பட்டு) அழிந்தொழியும் என்று, மதி - நல்ல புத்திமதியை, நினக்கு - உனக்கு, உரைத்தேன் - (காதுகொள்ளும்படி) சொல்லினேன் : (ஆகவே) மைந்த! - புதல்வன் முறையினனாகிய துரியோதனனே! (நீ) ஐவரோடு நேயமாய் நேர்ந்து-பாண்டவர் ஐவரோடும் சிநேகமாய் உடன்பட்டு, வாழ்ந்திடுமின் - வாழ்வாயாக, என்று—, தூயவன் - விதுரன், உரைப்ப-சொல்ல, (அதனைக் கேட்ட) சுயோதனன்-துரியோதனன், தன் கை எறிந்து-தன் கைகளைக் கொட்டி, நக்கான்-(இகழ்ச்சியாகச்) சிரித்தான்; (எ.று).

துஷ்டநிக்கிரகஞ் செய்தற்பொருட்டே திருவவதரித்த திருமால் இவ்வாறு பலமுறைகேடுகளைப் புரியும் உன்னையும் உன்னைச்சார்ந்த அரசகுலங்களையும் அழிப்பது திண்ணமாதலின், நான் கவல்கின்றேன் : ஆதலால், நீங்கள் இருதிறத்தாரும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும் என்று விதுரன் துரியோதனனுக்கு நற்புத்தி கூறினனென்க. சிற்றப்பனாதலின் 'மைந்த!' என விளித்தான். விதுரன் கூறியவற்றை அஸம்பாவிதமான கட்டுக்கதையென்று கொண்டு துரியோதனன் கைகொட்டிச் சிரித்துப் பரிகசித்தனனென்க. ஐவர்-தொகைக்குறிப்பு. நகுதல் பரிகாசம் பற்றியது. நொந்தியான் - குற்றியலிகரம் : அலகுபெறவில்லை. (80)

81. பிராதிகாமி திரௌபதியினிடஞ் செல்லாமலே மீண்டுவந்து துரியோதனனிடத்துக் கூறத் தொடங்குதல்.

பிதாவையங் கிகழ்ந்து மைந்தன்
பிரிதிகா மியனை நீபோய்
உதாசன னுழிவந் தானை
யுளையென வவனு மேகி
நிதானமோர்ந் தவள்பா லெய்தா
நெறியிடை மீண்டு வந்து
கதாயுத விஞ்ஞை வல்லோன்
கருத்தினுக் கேற்பச் சொல்வான்.

(இ-ள்) மைந்தன்-(சிரித்து) துரியோதனன், பிதாவை-விதுரனை, அங்கு-அந்தச்சபையிடத்து, இகழ்ந்து-பரிகசித்து, பிரிதிகாமியனை-தனது தேர்ச்சாரதியை, (நோக்கி) நீ போய்—, உதாசனன் உழி வந்தானை - அக்கினியினின்று பிறந்த திரௌபதியை, உளை - அழைத்துவா, என - என்று கட்டளையிட, அவனும் ஏகி - அந்தச் சாரதியும்போய், நெறி இடை - நடு வழியில், நிதானம் ஓர்ந்து - நேர்மையை எண்ணிப்பார்த்து, அவள்பால் எய்தா - அந்தத் திரௌபதியிடம் செல்லாமல், மீண்டு வந்து - திரும்பிவந்து, கதாயுத விஞ்ஞைவல்லோன் கருத்தினுக்கு ஏற்ப - துரியோதனனுடைய மனத்தில் 'இவன் சொல்வது உண்மையே' என்று எண்ணமுண்டா கும்படி, சொல்வான்-கூறுவானாயினன்; (எ.று).

பிராதிகாமியானவன் துரியோதனன் கருத்துப்படி அக்கிரமஞ் செய்தற்கு அஞ்சி, நேர்மையை எண்ணிப்பார்த்து, திரௌபதி யினிடஞ் செல்லாமலே திரும்பித் தனது ஆலோசனையினாற் கற்பனை செய்து துரியனும் நம்புமாறு சில வார்த்தை கூறலாயினனென்க. பிரிதிகாமி - பிராதிகாமி என்பதன் சிதைவு: அச்சொல்லின் மேல் 'அன்' விகுதியேறிவந்தது. பிராதிகாமி-துரியோதனன் தேர்ச்சாரதி. உளைத்தல் - அழைத்தல் (திவாகரம்). நிதானம்-நேர்மை. எய்தா-எதிர்மறைவினையெச்சம்; ஆ - எதிர்மறைகுறித்தது. விஞ்ஞை - விஞ்சை : (வித்தை) என்பதன் போலி. துரியோதனன் கதா யுதத்தில் வல்லவன். (81)

## வேறு

### 82. பிராதிகாமியின் வார்த்தை.

எனைதோற் றதற்பின் றனையேயோ
　　விறைதோற் றதற்பி னெனையோ
முனைதோற் றிடுமப் பொருளன்றி
　　முறையிற் பின்னர் தோற்றபொருள்
தனையோ கவர்வ தஃதெவர்க்குந்
　　தகுமோ வென்று டாழ்குழலென்
றனையோன் கூறக் கொடியோனு
　　மனுசன் றனைப்பார்த் தறைகின்றான்.

(இ-ள்) எனை தோற்றதற்பின் - (முன்னே சூதில்) என்னை (ப்பந்தயமாகவைத்து)த் தோற்றிழந்தபிறகு, தனையேயோ - தன்னை (ப்பந்தயமாக்கி)த் தோற்றிழந்தாரோ? (அன்றி) இறை தோற்றதற் பின் - (முதலிலே) தம்மைத் தோற்றுவிட்டுப்பிறகு, எனையேயோ - என்னை (ப்பந்தயமாக்கி)த் தோற்றிழந்தாரோ? முறையில் - முறைமைப்படி நோக்கின், முனைத் தோற்றிடும் அ பொருளன்றி - முதலில் (சூதாட்டத்தில்) தோல்வியடைந்து இழந்த அந்தப் பொருள்களே யல்லாமல், பின்னர் தோற்ற பொருள் தனையோ கவர்வது - (தன்னைத் தோற்றுவிட்ட) பின்பு (பந்தயமாக வைத்து) இழந்த பொருளையோ கைப்பற்றுவது? (அஃது நேரிதாகாது): அஃது - அப்பொருளைக் கைப்பற்ற வேண்டுமென்று எண்ணுதலும், எவர்க்கும் தகுமோ? - எப்படிப்பட்டவர்க்கும் தகுதியுடைய செயலாகுமோ? (தகுதியன்றே!), என்றாள் - என்று முறையிட்டாள், தாழ்குழல் - திரௌபதி, என்று - என்று இவ்வாறு, அனையோன் கூற - அந்தப் பிராதிகாமி கொண்டு கூற, (அதனைக்கேட்ட) கொடியோனும்-கொடிய துரியோதனனும், அனுசன் தனைப் பார்த்து-தன் தம்பியாகிய துச்சாதனனை நோக்கி, அறைகின்றான்-சொல்வா னாயினான்; (எ.று).

தருமபுத்திரன் சூதாடித் தன்னைத் தோற்றபின்பு திரௌபதி யைத் தோற்ற செய்தியை அருகிலிருந்து கண்ட பிராதிகாமி, 'தரும புத்திரன் தன்னைத் தோற்ற பிறகு இழந்த திரௌபதியைத் துரியோத னன் கவர்தல் நியாயமன்று' என்று அறிந்தவனாதலால், - "தருமன் தன்னைத் தோற்று என்னைத் தோற்றானோ? அன்றி, என்னைத் தோற்றுத் தன்னைத் தோற்றானோ? என்ற விஷயம் முதன்முதல்

தெரிய வேண்டும்'' எனத் திரௌபதி வினவியதாகத் தானே கற்பித்துக் கூறினனென்க, இவ்வாறுதான் கூறினுல், துரியோதனன் தான் செய்வது முறையன்றென்று உணர்ந்து பின் வாங்கித் திரௌபதியை ராஜசபையில் அழைத்து மானபங்கஞ் செய்யாது விட்டிடக் கூடுமென்பது, பிராதிகாமியின் உட்கோள். தன்னைத் தோற்றபிறகு தன்னுரிமையையிழந்த தருமபுத்திரன் திரௌபதியை வைத்தாடுதற்கே உரிமையில்லாதவனுதலால் அவ்வாறு பந்தயமாக வைத்து ஆடின ஆட்டமே செல்லாது என்பது உணர வேண்டுவது. தாழ்குழல் - வினைத்தொகையன்மொழி.

இதுமுதல் இருபத்தாறு கவிகள் - மூன்ருஞ்சீரும் ஆருஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகி வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (82)

### 83. துரியோதனன் திரௌபதியைக் கொணரும்படி துச்சாதனனுக்குக் கட்டளையிட, அவன் அவளிருந்த இடத்தை அணுகிக் கூறத் தொடங்குதல்.

துச்சா தனநீ யைவர்க்குஞ்
சுரத மினிதி னருள்வாளை
இச்சார் பினிலுற் றவர்நகைப்பா
னீர்த்து விரைவி னெய்துகென
நச்சா டரவி னுருத்துரைப்ப
நமன்போ லவனு நடந்தீன்ற
மெச்சா யகத்தி லிருந்தாளை
விசையோ டெய்தி யிவைசொல்வான்.

(இ-ள்) துச்சாதன - துச்சாசனனே! நீ—, ஐவர்க்கும் சுரதம் இனிதின் அருள்வாளை - பஞ்சபாண்டவர்க்கும் கலவியின்பத்தை யினிமையாகக் கொடுக்கும் பொதுமகளை (திரௌபதியை), இ சார்பினில் உற்றவர் நகைப்பான் - இந்தப் பக்கத்தில் நம்மோடு பொருந்தியிருப்பவர்கள் (கைகொட்டிச்) சிரிக்கும்படி, ஈர்த்து - இழுத்துவந்து, விரைவின் எய்துக என - சீக்கிரத்தில் (இவ்விடம்) அடைவாய் என்று, நச்சு ஆடு அரவின் உருத்து - விஷப்பாம்பு போலே சீறி, உரைப்ப-சொல்ல, அவனும்-அந்தத் துச்சாசனனும், நமன்போல் நடந்து - யமனைப் போலே (கொடுமைதோற்ற) நடந்து, ஈன்ற - தன்னைப்பெற்ற, மெச்சு - (பிறராற்) புகழப்படுகின்ற, ஆய்-தாயாகிய காந்தாரியின், அகத்தில் - அந்தப்புரத்தில், இருந்தாளை-

இருந்த திரௌபதியை, விசையோடு எய்தி - வேகமாகக் குறுகி, இவை சொல்வான் - இவ்வார்த்தைகளைக் கூறுவானாயினான்; (எ.று) - அவற்றை அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

ஐவர்க்கும் பொதுவான மனைவியாயிருக்கிற அவள் பலபேர் கூடிய அரச சபையில் நாணமின்றி வருதற்கு உரியவளேயென்பான் "ஐவர்க்குஞ் சுரதமினிதின் அருள்வாளை உற்றவர் நகைப்பான் ஈர்த்து விரைவின் எய்துக" என்றான். துச்சாதனன்-துச்சாஸனன்: கொடிய கட்டளையையுடையானெனப் பொருள்படும் வடசொல். நச்சாடரவு - நாகப்பாம்பு, நல்லபாம்பு. ஆய் - தாய்: காந்தாரியை 'மெச்சு ஆய்' என்றது - கட்புலனால் வரும் இன்பத்தைத் தன் கணவன் போலவே தானும் அனுபவியாதிருத்தல் வேண்டி ஆடையைப் பல மடிப்பாக மடித்து அதனால் தன் கண்களை மறைத்துக் கட்டிக் கொண்டு கண்பார்வையிலளாயினளாதலின் என்க. நமன் - யமன்: போலி. நகைப்பான் - பானீற்று வினையெச்சம். எய்துகென - அகரவீறு தொகுத்தல். அருள்வாளை, இருந்தாளை - வினையாலணையும் பெயர்கள். (83)

### 84-85. இதுமுதல் இரண்டுகவிகள்—துச்சாதனன் வார்த்தை.

அரசத் தமும்பல் விதப்பொருளும்
அனுசர் தமையு மவன்றனையும்
முரசத் துவச னிழந்திழந்தான்
முடிவி லுனையு முறையிதுவே
சரசத் துடனை வரைத்தழுவுந்
தகையாய்! நாணந் தானென்னே
பிரசத் தொடைமன் னவர்காணப்
பேசா தென்பின் வருவாயே.

(இ-ள்) முரசத்துவசன் - தருமபுத்திரன், அரசு அத்தமும் - (தனக்குரிய) பாதிராஜ்யத்தையும், பல்விதப் பொருளும்-அதனோடு சேர்ந்த பல விதமான அரச ஐசுவரியங்களையும், அனுசர் தமையும்- தம்பியர் நால்வரையும், அவன் தனையும் - தன்னையும், இழந்து - (சூதில் பந்தயமாக வைத்துத்) தோற்று, முடிவில் - இறுதியில், உனையும் - (மனைவியாகிய) உன்னையும், இழந்தான் - (பந்தயமாக வைத்துத்) தோற்றான்: இதுவே முறை - இங்ஙனம் தோற்றதுவே சரியான முறையாகும்: (ஆகவே) சரசத்துடன் - இனிமையோடு,

ஐவரைத் தழுவும் தகையாய் - ஐந்து கணவன்மாரையும் தழுவியின் புறுகின்ற தகுதியுடையவளே! (உனக்கு) நாணம் தான் என்னே - வெட்கம் என்பதொன்றுண்டோ ? (எனவே) பேசாது - மறு வார்த்தை சொல்லாமல், பிரசம் தொடை மன்னவர் காண - தேன் பெருகும் மாலையையணிந்துள்ள அரசர்கள் (தமது கண்களால் கண்டு இகழ, என் பின் வருவாய் - என் பின்னே வரக் கடவாய் (எ.று).

'முறையிதுவே' என்றது—துச்சாதனன், திரௌபதி கூறியதாகப் பிரதிகாமி கூறிய ஆட்சேபத்திற்குப் போலிச் சமாதானங் கூறியபடி. ஒருத்தியே ஐவரையும் மணம் புணர்ந்து பதிவிராதருமங் குலைந்து நாணமற்றிருக்கிற நீ என்பின்னே வருதற்குப் பின்வாங்கக் காரண மில்லையே யென்பது பின்னிரண்டடிகளாற் பெறவைத்தபடி. அத்தம் = அர்த்தம் : பாதி. நாணம் - தகாதவற்றில் உள்ளம் ஒடுங்குதல் : "உயிரிற் சிறந்தன்று நாணே" என்றது தொல் காப்பியம். இதனையறியாது துச்சாதனன் பிதற்றுகிருன் என்பதறிக. (84)

85. பொன்னைச் சிரித்த பொற்புடையாய்!
பொறையோ னவையற் புதநோக்கு
மன்னைச் சிரித்த வுனைச்சிரிக்க
மன்பே ரவைக்கு வருகென்று
மின்னைச் சிரித்த நுண் ணிடையார்
வெய்யோ னென்ன வெறுத்துதனைப்
பின்னைச் சிரித்த லறியான்கைப்
பிடித்தா னீதி பிழைத்தானே.

(இ-ள்) பொன்னைச் சிரித்த பொற்பு உடையாய் - பொன்னின் நிறத்தைச் சிரிக்கின்ற (பொன்னைக் காட்டிலும் மிக்க பேரொளியைக் கொண்ட) அழகினையுடையவளே ! பொறையோன் - பொறுமைக் குணமுடைய தருமனின், அவை - சபா மண்டபத்தின், அற்புதம் - அதிசயமான நேர்த்தியை, நோக்கும் - கண்டுவந்த, மன்னை - துரியோதனராசனை, சிரித்த - பரிகசித்து (ப் பற்காட்டி)ச் சிரித்த, உனை-உன்னை, சிரிக்க - (நாங்கள்) சிரித்து இகழும்படி, மன் பேர் அவைக்கு வருக - அரசர் குழுமியுள்ள பெரிய ராஜசபைக்கு வரு வாயாக, என்று—, மின்னைச் சிரித்த நுண் இடையார்-மின்னலைப் பரிகசிக்கின்ற நுண்ணிய இடையையுடைய பெண்டிர், தனை - தன்னை, வெய்யோன் என்ன வெறுத்து - கொடியவன் (பாதகன்) என்று பழித்து அருவருத்து, பின்னை-(தனக்குப்) பின்புறத்தே, சிரித்தல் -

பரிகசித்துச் சிரித்தலை, அறியான் - தெரிந்து கொள்ளாதவனாகிய துச்சாதனன், கைப்பிடித்தான் - கையைத் தொட்டுப் பிடித்திழுக்க லாயினான் : (அதனால்) நீதி பிழைத்தான் : தருமநெறி தவறிய வனானான்; (எ.று).

முதலடியிலும் மூன்றாமடியிலும் 'சிரித்த' என்றது - உவமவாசக மாய் நின்றது. கொடியவன் என்ற வெறுப்பினால் நேர்முகம் பாராது தன் பின்புறத்தே பெண்டிர் பரிகசித்துச் சிரிப்பதையும் அறியாத மூடன் துச்சாசனன் என்ற நீசன் என்பது கருத்து. 'வருகென்று கைப்பிடித்தான்' என இயையும். வருகென்று - அகரவீறு தொகுத்தல், அறியான் - வினையாலணையும் பெயர். இனி 'தனைப் பின்னைச் சிரித்தலறியான்', என்பதற்கு - தன்னை மேலும் சிரித்தலை யறியாதவனாய்' என்று பொருள் கூறினுமாம். (85)

**86. துச்சாதனனாற் கைப்பிடித்து இழுக்கப்பட்ட திரௌபதி காந்தாரியினடி வீழ்ந்து வேண்டுதல்.**

வருவா யெனப்பா தகன்றொடவே
மறுத்தே வலைவாய் மானென்ன
வெருவா கலங்கா மெய்ந்நடுங்கா
விழிநீர் மல்கா வெய்துயிரா
திருவாய் திறவா மிகவரத்தா
திகையா வொருநூற் றுவர்தமையோர்
கருவாய்ப் பெறுமா தவமாமி
காவாய் எனத்தாள் மேல்வீழ்ந்தாள்.

(இ-ள்) வருவாய் என பாதகன் தொடவே - என்பின்னே வருவாயாக என்று கூறிப் பெரும்பாவியாகிய துச்சாதனன் தொட்டிழுக்கவே, மறுத்து - (அவனுடன்) செல்ல மறுத்து, (திரௌபதி) வலைவாய் மான் என்ன - (வேடருடைய) வலையிற் சிக்கிய மான்போல, வெருவா - பயந்து, கலங்கா - நெஞ்சு கலங்கி, மெய் நடுங்கா - உடம்பு நடுங்கி, விழி - கண்களிலிருந்து, நீர் மல்கா - கண்ணீர் பெருக, வெய்து உயிரா - உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, மிக வரத்து ஆ(க) திகையா - எல்லை மீறி (த்தன்மேல் அவன்) வருதலாக (அதனைக்கண்டு) திகைத்து; திருவாய் திறவா - அழகிய வாயைத் திறந்து, 'ஒரு நூற்றுவர் தமை - நூறுபேர்களை, ஓர் கருவாய் - ஒரு கருப்பத்திலே கொண்டு, பெறு - பெற்ற, மாதவம் - சிறந்த தவப் பேற்றையுடைய, மாமி - மாமியே! காவாய் - நீர் என்னைக் காப்பாற்று வீராக', என - என்று; தாள்மேல் - அவளது பாதங்களில், வீழ்ந்தாள் பணிந்தாள்; (எ.று).

வேடருடைய வலையிற் சிக்கிய மான் வெருண்டு தப்பும் வழியின்றிப் பதைபதைப்பதுபோல, துச்சாதனன் கையிற் சிக்கிய திரௌபதியும் தப்பியோடும் வகையின்றி மனம் வெருவினளென்க. என்ற-உவமவுருபு. வெருவா, கலங்கா, நடுங்கா, மல்கா, உயிர்ா; திறவா, திகையா — 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள். வரத்து - தொழிற்பெயர். ஆ-ஆக என்பதன் தொகுத்தல் : காய்ச்சீராதலின் தொக்குவந்தது. (86)

## 87. துச்சாதனன் பின்னே போமாறு காந்தாரி திரௌபதிக்குக் கூறல்:

தன்பா லணையா ளஞ்சலெனத்
    தடங்க ணருவி தான்மாற்ருள்
அன்பா லுன்னை மைத்துனர்கள்
    அழைத்தா லதற்கே னறவெருவித்
துன்பா லிரங்க லவணேகிச்
    சொற்றுன் னெண்ணந் துரோபதிபின்
பென்பால் வரலா மேகென்ருள்
    ளிருக ணில்லா னில்லவளே.

(இ-ள்) தன்பால் - தன்னிடத்து, அணையாள் - நெருங்கியருகிலிருக்கச் செய்யாள் : அஞ்சல் என-பயப்படாதே என்று சொல்லி, தட கண் அருவி தான் மாற்ருள் - விசாலமான கண்களிலிருந்து பெருகிவரும் கண்ணீரைத் தான் துடையாள் : (அவற்றுக்கு மாருக) அன்பால் உன்னை-அன்போடுகூட உன்னை, மைத்துனர்கள் - உன் உறவினர்ாகிய மைத்துனர்கள், அழைத்தால் - அழைக்கும்போது, அதற்கு-அந்த அழைப்புக்கு, அற வெருவி - மிகப் பயப்பட்டு, துன்பால் இரங்கல் ஏன்?-வருத்தத்தோடு மனம் வாடியிரங்குதல் என்ன காரணம்பற்றி? துரோபதி! (நீ) அவண் ஏகி-அந்தச் சபா மண்டபத்திற்குச் சென்று, உன் எண்ணம் சொற்று-உன் கருத்தினை (த்தெரிய)ச் சொல்லி, பின்பு - பிறகு, என்பால் - என்னிடத்து, வரலாம்—; (இப்போது), ஏகு - போவாய், என்ருள் - என்று கூறினுள் : (யாவளெனில்) இருகண் இல்லான் இல்லவள் - குருடனுகிய திருதராட்டிரனது மனைவியாகிய காந்தாரி : (எ.று).

காந்தாரி தான் மிக்க பதிவிரதையாயிருந்தும் தன் மருமகளாகிய திரௌபதியினிடத்து இரக்கங்கொள்ளாமலும் அவளது கண்ணீரைத் துடையாமலுமிருந்து 'உன்னை மைத்துனர்கள் அழைத்தால் ஏகி உன் எண்ணம் சொற்றுவா' என்று கூறி, அறத்திற்கு மாருக

நடந்தது, அவள் தன் மக்களிடத்துக் கொண்ட மிக்க அன்பினு லென்க. அணையாள் - அணவியாள் : தன்வினை பிறவினைப் பொருளில் வந்தது. துரோபதி-விளி : திரௌபதி என்பதன் சிதைவு. இருகண் - ஊனக்கண், ஞானக்கண் எனினுமாம் : 'இருகணில்லா னில்லவள்' என்ற தொடர் கருத்துடையடைகொளியணி. (87)

## 88. துச்சாதனன் திரௌபதியை இழுத்துக் கொண்டு போதல்.

போவென் றன்னை புகன்றிடலும்
புலிபோன் மகனும் புருடர்தமைத்
தேவென் றகங்கொள் கற்பனலைத்
தீண்டா தங்கைச் செண்டதனுல்
வாவென் றளகந் தனைப்பற்றி
வலித்த பொழுதம் மானன்னுள்
கோவென் றரற்றி நெறிக்கொண்டாள்
கொண்டா ரிருப்ப ரெனக்கொண்டே.

(இ-ள்) அன்னை - காந்தாரி, போ என்று புகன்றிடலும் - (துச்சாதனனுடன்) செல் என்று சொல்லவும், மகனும் - துச்சாதன னும், புலிபோல் - புலிபோல் உருமி, புருடர்தமை தேவு என்று அகம் கொள் கற்பு அனலை - பிற ஆடவர்களைத் தெய்வமென்று மனத்திற் கொள்ளும் கற்பாகிய நெருப்பினையுடையாளை, தீண்டாது - தொடாமலே, அம் கை செண்டு அதனுல் - (தனது) அழகிய கையிற்கொண்ட செண்டினுலே, வா என்று-என்னுடன் வா என்று உரப்பி, அளகம் தனைப்பற்றி வலித்த பொழுது - (அவளது) கூந்தலைப் பிடித்து இழுத்த போது, அ மான் அன்னுள் - மான் போன்றவளான அந்தத் திரௌபதி, கோ என்று அரற்றி - 'கோ' என்று கதறி, கொண்டார் இருப்பர் எனக் கொண்டு - '(தன்னை) மணந்து கொண்ட கணவர்கள் (அச்சபையில்) இருப்பார்கள்' என்று எண்ணி, நெறி கொண்டாள் - (அத் துச்சாதனன் செல்கின்ற) வழியே (தானும்) செல்லலானுள்; (எ.று).

காந்தாரி தனக்கு அனுகூலமாகச் சொல்லவே துச்சாதனன் தனது தாயின் அருகிலிருந்த திரௌபதியினைப் புலிபோல் உருமி நெருங்கித் தனது கைச்செண்டினுல் அவள் கூந்தலைப்பற்றி யிழுத்துக்கொண்டு செல்ல, அத்திரௌபதியும், தனது கணவர்கள் அச்சபையிலிருப்பதனுல் அவர்கள் தன்னைக்காக்கக் கூடுமென்று ஓரெண்ணங்கொண்டு அத் துச்சாதனனுடன் சென்றன ளென்பதாம்.

தாய்க்கேற்ற பிள்ளையென்பது முதலடியின் கருத்து. 'புலிபோல் பாய்ந்து' என்பது ஈண்டுப் பொருந்தாதாதலின், 'உருமி' என்றது. செண்டு - ஒருவகையாயுதம்: மாட்டி யிழுத்தற்கு உரியதென்ப. (கச்சிக் காமகோட்டத்துச் சாத்தன்கையில் இந்தச் செண்டாயுதம் இருப்பதை இன்றுங்காணலாம்). புலி உவமைக்கேற்ப மான் உவமை வந்தது. ''வல்லியம் மருங்குகண்டமானென மறுக்கமுற்று'' என்றார் கம்பரும். அங்கை-அகம் கை என்று பிரிந்து, உள்ளங்கை யென்றும் பொருள்படும்: ''அகமுனர்ச் செவிகைவரின் இடையன கெடும்'' என்பது நன்னூல். (மெய்: 19) கொண்டார் - வினையாலணையும் பெயர். (88)

## 89. இதுவும் அது.

அலங்க லுடனே கலந்தளக
மவனி புரள வார்க்குமளிக்
குலங்க ளெழுந்து மிசைச்சுழலக்
குறையா மானங் குலையபலக்
கலங்கள் சிதறக் கலைகலையக்
கண்ணீர் கலுழி கால்புதைப்பத்
தலங்கொள் புழுதி யுடல்போர்ப்பத்
தரைமே லிழுத்துத் தானடைந்தான்.

(இ-ள்) அளகம் - (திரௌபதியின்) கூந்தல், அலங்கலுடனே கலந்து - மாலையுடனே அவிழ்ந்து கீழ் விழுந்து, அவனி புரள - தரையிற் புரளவும், ஆர்க்கும்-ஒலிக்கின்ற, அளிக்குலங்கள் - (கூந்தன் மாலையைச் சார்ந்திருந்த) வண்டுக் கூட்டங்கள் மிசை எழுந்து - மேலெழுந்து, சுழல-சுழன்று பறக்கவும், குறையா மானம் குலைய - என்றும் கெடாதிருந்த (தனது) மானம் அழிந்திடவும், பல கலங்கள் சிதற-பல ஆபரணங்கள் சிதறவும், கலை கலைய - இடையிற் கட்டிய ஆடை கலைந்து தளரவும், கண்ணீர் கலுழி - கண்களிலிருந்து பெருக் கெடுக்கும் நீர் வெள்ளம், கால் புதைப்ப - கால்களை மறையச் செய்ய வும், தலம் கொள் புழுதி உடல் போர்ப்ப - தரையிற்கிடந்த புழுதித் துகள் உடம்பு முற்றும் படிந்து மூட, தரைமேல் இழுத்து-நிலத்திலே (அவளை) இழுத்துக்கொண்டு, தான் அடைந்தான் - அந்தத் துச்சாதனன் அரசசபையைச் சேர்ந்தான்; (எ.று).

பூமாலையுடனே கூடிய கூந்தல் கீழ்விழுந்து புரண்டதன்மை-துரியோதனுதியர்க்கு நேரப்போகும் உற்பாதமெனலாம். மானம் - பெருமை, வெட்கம். கலுழி-பெருக்கு. மூன்றுமடியில் மோனையழகு காண்க. (89)

### 90-97. இதுமுதல் எட்டுக்கவிகள்—திரௌபதியின் நிலையைக்கண்ட அந்நகரத்து மக்கள் வருந்துதலைக் கூறும்.

செண்டால் செண்டு முலைக்குழலைத்
தீயோ னிழுத்துச் சேறறனைக்
கண்டார் கண்ட கண்ணிரண்டுங்
கன்றும் படிதங் கைமோதிக்
கொண்டார் கொண்டத் துயரத்தைக்
குறைப்ப வுரைக்குங் கூர்விழிநீர்
விண்டார் விண்ட மலர்வதனம்
வியர்த்தா ரிதனை விளம்பிடுவார்.

(இ-ள்) செண்டால் - செண்டு என்னும் ஆயுதத்தால்; செண்டுமுலை - பூச்செண்டு போன்ற முலைகளையுடைய, குழலை - (கரிய) கூந்தலையுடைய திரௌபதியை, தீயோன் - துச்சாதனனாகிய் பாதகன், இழுத்துச் சேறல் தனைக் கண்டார் - இழுத்துக் கொண்டு வந்து அரச சபையைச் சேர்ந்ததைப் பார்த்த நகரமாக்கள், கண்ட - தாங்கள் பார்த்தற்குக் கருவியாயிருந்த, கண் இரண்டும் - இரண்டு கண்களும், கன்றும்படி - பதனழியும்படி, தம் கை மோதிக் கொண்டார் - தங்கள் கைகளினால் புடைத்துக் கொண்டார்கள்: கொண்ட அ துயரத்தை - (தாங்கள்) அநுபவித்த அந்தத் துன்பத்தை, குறைப்ப - சுருக்க முயல, (அது இயலாததை) உரைக்கும் - பறைசாற்றும், கூர்விழி நீர் - கூரிய விழிகளிலிருந்து பெருகுகின்ற கண்ணீரை, விண்டார் - சொரிந்தார்கள்: விண்ட - அலர்ந்திருந்த, மலர் வதனம் - தாமரை மலர் போன்ற முகம், (இது போது) வியர்த்தார் - வாடி வேர்த்தார்கள்: (இங்ஙனம் வருத்த முற்று அவர்கள் மேலும்) இதனை - இவ்வார்த்தைகளை, விளம்பிடுவார் - சொல்லுவாரானார்கள்; (எ.று). அவர்கள் விளம்பியவற்றை மேல் ஏழு கவிகளிற் காண்க.

தீயோன் திரௌபதியை யிழுத்துச் செல்ல, இப்படிப்பட்ட மகாசோகத்துக்குக் காரணமான செயலைத் தங்கள் கண்களாற் பார்க்க நேர்ந்த கொடுமைபற்றி, 'இவ்வருத்தத்தை ஏன் கண்டீர்கள்?' என்று தண்டித்தல் போல, அக்கண்களைத் தமது கைகளால் மோதுவாராயினரென்க. குறைத்தல் - சுருக்குதல். "குறைப்ப வுரைக்குங் கூர்விழி நீர்" என்றவிடத்து "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர், புன்கணீர் பூச றரும்" என்ற குறட் கருத்துக் காண்க. மலர் வதனம் வியர்த்தல் சோகத்தின் விளைவு.

செண்டு முலை - உவமைத் தொகை. குழல் - கூந்தலையுடையாளுக்கு ஆகுபெயர். முலைக் குழல் என அடையடுத்து வந்தபடி. இனி, 'முலை குழலை' என வல்லொற்றுமிகாமல் இருப்பின், உம்மைத் தொகையாய்ப் பொருள் விரிப்பினுமாம். சேறல் - தொழிற்பெயர்: செல் - பகுதி, தல் - விகுதி. கொண்ட + அத்துயரத்தை - கொண்டத் துயரத்தை: பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். ஒவ்வோரடியிலும் முதலிரண்டு சீர்களிற் பயிலும் சொல்லலங்காரம் காண்க. அதன்படி நோக்க 'வியர்த்தார் (வியர்த்து) இதனை விளம்பிடுவார்' எனவும் கொள்ளலாம்.) (90)

91. பிறந்து விடநேர் விழியுடனே
பிறந்த பயனைப் பெறலென்பார்
இறந்து விடினு மிவ்வுலகி
லிறவா திவன்செய் யிழிவென்பார்
மறந்து விடினு மிவன்வசைச்சொல்
மறவா தைவர் மனதென்பார்
துறந்து விடினு மிவனடைகள்
துறக்கப் பெறுவ தோவென்பார்.

(இ-ள்) (சிலர்) விடம் நேர் விழியுடனே பிறந்து(ம்)-விஷத்தையொத்த கண்களையுடைய துச்சளை யென்னும் பெண்ணோடு ஒரு சேரப்பிறந்திருந்தும், (இந்தத் துரியோதனுதியர்) பிறந்த பயனைப் பெறல்-(ஒரு பெண்ணை வருத்துதல் தகாது என்பதையுணராததால்) தாங்கள் பிறந்ததனாலாம் பயனைப் பெறவில்லை, என்பார் - என்று சொல்லுவார்: (இனி, சிலர்) இவன் செய் இழிவு-இந்தத் துச்சாதனன் செய்த இழிசெயல், இறந்துவிடினும்- அவன் செத்தாலும், இ உலகில் இறவாது - இந்தப் பூவுலகில் மறைந்தொழியாது (என்றும் நிலைத்து நிற்கும்), என்பார்—; (சிலர்) ஐவர் மனது - பாண்டவரைவருடைய நெஞ்சங்களும், மறந்து விடினும் - (இவர்கள் செய்த) கொடுமைகளையெல்லாம் மறந்தாலும், இவன் வசைச்சொல் மறவாது - இந்தத் துரியோதனன் சொன்ன 'கணிகை' என்ற பழிச்சொல்லை, மறவாது - மறக்காது (நினைத்துக்கொண்டேயிருக்கும்), என்பார்—; (சிலர்) துறந்து விடினும் - (ஐவர்) எல்லாவற்றையும் துறந்து விட்டாலும், இவன் நடைகள் துறக்கப்பெறுவதோ - இந்தத் துச்சாதனன் நடந்துகொண்ட தீயொழுக்க முறைகள் (பழி வாங்கப் படாது) துறந்து விடப்படுவனவோ?; என்பார்—; (எ.று).

திரௌபதி பெண்ணாதலால், 'பெண்ணுடனே பிறந்தும்' என்ற கருத்தில், 'விடநேர் விழியுடனே பிறந்தும்' என்றார்கள்: இது,

உலக வழக்கு நவிற்சியணியின் பாற்படும். 'பிறந்து' என்றதன்பின் உம்மை தொக்கது. பெறல் - அல்லீற்று எதிர்மறை முற்று : 'மகனெனல் என்ற விடத்துப்போல. நடைகள் - நடந்து கொண்ட தீயவகைகள். (91)

92. மின்ளு திடிவீழ்ந் தனவென்பார்
வீபரீ தத்தின் விளைவென்பார்
என்னும் உலக மினியென்பார்
இஃதோ தெய்வத் தியல்பென்பார்
அன்னாள் வினையோ வலிதென்பார்
அறமோம் புவதீங் கவமென்பார்
மின்னாள் நிறைபொன் ருதென்பார்
மெய்வேந் தறம்போய் விடாதென்பார்.

(இ-ள்) (சிலர்) மின்னுது - (வானம்) மின்னுதலில்லாமலேயே, இடி வீழ்ந்தன - இடிகள் (நிலத்தில்) வீழ்ந்தன, என்பார்—; சிலர் (இங்ஙன் நேர்ந்தது) விபரீதத்தின் விளைவு-(பின்னால் நிகழப்போகும்) மாறுபாட்டின் (கேட்டின்) சம்பவிப்பாகும், என்பார்—; (சிலர்) உலகம்-இந்தப்பூமி, இனி என் ஆம்-இனிமேல் என்ன பயனுடைத் தாகும்? (கொடு உலகமாகும்), என்பார்—; (சிலர்) தெய்வத்து இயல்பு-விதியின் போக்குத் தன்மை, இஃதோ-இத்தன்மைத்தோ?, என்பார்—; (சிலர்) அன்னாள் வினையோ - அந்தத் திரௌபதியின் ஊழ்வினையோ, வலிது-வலியது (கடினமானது), என்பார்-; (சிலர்) ஈங்கு-இந்தத் துரியோதன சபையில், அறம் ஓம்புவது - தருமத்தைப் பாதுகாப்பதென்பது, அவம் - வீண், (நற்பயனின்றிக் கழியும்) என்பார்—; (சிலர்) மின்னாள் நிறை - திரௌபதியினது கற்புத் திண்மை பொன்றாது - என்றும் அழியாது, என்பார்—; (சிலர்) மெய்வேந்து அறம்-தருமராசனின் தருமம், போய்விடாது-(நற்பயன் விளைவியாது) வீணேபோய்விடாது, என்பார்—; (எ.று.)

மின்னுது இடிவீழ்தல் உற்பாதமாகும். (உற்பாதமாவது-உலகத் திற்குப் பின்வருந்தீங்கைத் தமது நிகழ்ச்சியால் முன்னமே விளக்கு வது). உலகம் - உலகியல், உலகநியதி. தெய்வம் - விதி. வினை- ஊழ்வினை, கருமபலன். மின்னாள் - மின்னலைப்போல் ஒளிரும் திரௌபதி. மெய்வேந்து-தருமராசன் என்றதன் தமிழாக்கம் (92)

93. குலைந்த தரிவைக் குழலல்ல
கொற்ற வேந்தன் குலமென்பார்
அலைந்த தரிவை யகமல்ல
அதிபா தகன்செய் யரசென்பார்
கலைந்த தரிவைக் கலனல்ல
கபடன் மணமங் கலமென்பார்
தொலைந்த தரிவைக் கவினல்ல
தோன்றல் வதனச் சுடரென்பார்.

(இ-ள்) (சிலர்) குலைந்தது - அவிழ்ந்து வீழ்ந்தது, அரிவை - திரௌபதியினுடைய, குழல் அல்ல-கூந்தல் அன்று : (பின்னையெது என்னில்) கொற்றவேந்தன் குலம் - வெற்றி பெற்ற துரியோதன ராசனது வமிசமாகும், என்பார்—; (சிலர்) அலைந்தது-தடுமாறியது, அரிவை - திரௌபதியினுடைய, அகம் அல்ல - மனது அன்று: (பின்னையெது என்னில்) அதிபாதகன் செய் - பெரும் பாவியாகிய துரியோதனன் செய்கின்ற, அரசு - அரசாட்சியாகும், என்பார்—; (சிலர்) கலைந்தது - சிதறிப் போயது, அரிவை - திரௌபதியினுடைய, கலன் அல்ல - ஆபரணம் அன்று: (பின்னையெது என்னில்) கபடன் - வஞ்சனுகிய துரியோதனனது, மணமங்கலம் - மணவியினுடைய திருமாங்கலியம், என்பர்—; (சிலர்) தொலைந்தது-அழிந்து போயது, அரிவை - திரௌபதியினுடைய, கவின் அல்ல - அழகு அன்று; (பின்னையெது என்னில்) தோன்றல் - துரியோதனனது, வதனச் சுடர் - முகத்தினொளி, என்பார்—; (எ.று).

குலைந்தது குழல், அலைந்தது அகம், கலைந்தது கலன், தொலைந்தது கவின் என்ற மெய்தெரி பொருண்மேல் அன்மை விளம்பி, குலைந்தது குலம், அலைந்தது அரசு, கலைந்தது மண மங்கலம், தொலைந்தது வதனச் சுடர் எனத் திறம்பட நகரமக்கள் பேசிய திறம் பாராட்டற்பாலது. குழலின் குலைவை மறுத்து வேந்தன் குலம் குலைந்ததாகக் கூறியது - **அபநுதியணி.** இங்ஙனமே மேல் மூன்று அடிகளிலும் இந்த அபநுதியணி பயில்வதைக் காணலாம். குலம் குலைந்தது என்றது - தெளிவினால் எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. இங்ஙனமே, அரசு அலைந்தது, மணமங்கலம் கலைந்தது, வதனச்சுடர் தொலைந்தது என்றனவும் - காலவழுவமைதி. திரௌபதியின் கூந்தல் இப்பொழுது குலைந்தது, துரியோதனாதியர்கள் விரைவில் வேரோடழிதற்குக் காரணமாமென்பது முதலடியின் கருத்து. அரிவைக்கலன் - மங்கலநாண் எனினுமாம். (93)

94. மாமன் சகுனி வஞ்சனையும்
    மாமன் துரியோதனன் செருக்கும்
வீமன் பொறுக்கிற் பொருன்விசயன்
    வீமன் விதியென் னேவென்பார்
காமன் றனையன் வாரிதினங்
    காமன் கணைவேய்ந் தலங்கரிக்கப்
பூமன் றுகளே றியவளகம்
    பூமன் றுகளே றியதென்பார்.

(இ-ள்) மாமன் சகுனி வஞ்சனையும் - சகுனி மாமனின் கபட சூழ்ச்சியும், மா மன் துரியோதனன் செருக்கும் - பேரரசனாகிய துரியோதனனின் அகங்காரமும், வீமன் பொறுக்கின் - வீமசேனன் (ஒருகால்) பொறுத்தானாயினும், விசயன் பொருன் - அருச்சுனன் பொறுத்திருக்கமாட்டான்: வீ மன் - வீந்து போகும் (அழிந்து போகும்) மன்னனாகிய துரியோதனனின், விதி - தலைவிதி, என்னே- எத்தகையதோ?, என்பார்—; (சிலர்) கா மன் - (தேவலோகத்துக்) கற்பகச் சோலையின் தலைவனாகிய இந்திரனின், தனையன் - குமாரனாகிய அருச்சுனன், தினம் - நாடோறும், வாரி - (கூந்தலைச் சிக்குப் போக) வாரி, காமன் கணை வேய்ந்து - (பலவகைப்) பூக்களைச் சூட்டி, அலங்கரிக்க - அலங்காரஞ் செய்ய, (அதனால்) பூ மன் துகள் - அப்பூக்களிற் பொருந்தியுள்ள மகரந்தப் பொடிகள், ஏறிய அளகம் - படிந்து (வாசனை வீசுகின்ற திரௌபதியின்) கூந்தல், (இப்போது) பூ மன் துகள் - பூமியிலே (தரையிலே) பொருந்தியுள்ள புழுதிப் பொடிகள், ஏறியது - படிந்துள்ளது (என்னே), என்பார்—; (எ.று).

நான்கடிகளிலும் முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க. மாமன் - மா மன்; வீமன் - வீ மன்; கா மன் - காமன்; பூ மன் - பூ மன் எனப் பிரிதலில் சொல்நயம். கடையடியில் வந்துள்ள 'பூ' என்ற சொல் ஓரெழுத்தொருமொழியாய் பொருள் வேறுபாட்டால் மலரையும் பூமியையும் குறித்தது, 'மன்' என்பது அரசன், தலைவன் என்ற பொருளிலே முதல் மூன்றடிகளிலும், இறுதியடியில் மன்னுதல், பொருந்துதல் என்ற பொருளிலும் வந்துள்ளமை நோக்குக. வீ-வீதல்: அழிந்துபோதல். காமன் - மன்மதன் : அவன் கணையென்றதால் பூக்களைக் குறித்தது. மன்மதனுக்குப் புஷ்பங்கள் பாணங்களாகும். அவை தாமரைமலர், மாமலர், அசோகமலர், முல்லைமலர், நீலோற்பமலர் என்பன. (இவற்றின் தொழில் - முறையே உன்மத்தம், மதநம், சம்மோகம், சந்தாபம், வசீகரணம் என்பன. இவை செய்யும் அவத்தைகள் -

சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பன.) விசயன் கோதி வாரிமுடித்த கூந்தலுக்கும் புழுதி படியுமாறு நேர்ந்த விபரீதத்தை நினைந்து வருந்தினர் சிலர் என்க. பாண்டவரைவருள் உடல் வலிமையில் வீமசேனனும் விற்போர்த் திறத்தில் அருச்சுன னும் சிறந்தவர்களாதலால் இவ்விருவருள் ஒருத்தராவது மனம் பொருது சீறி உக்கிரங் கொண்டு பகையழிக்கக் கூடுமென்று சிலர் தமது மனத்திற் சிறிது தேறியவாறு. 'வீமன் பொறுக்கின்' என்ற தன் பின் உம்மை தொக்கது. தொக்க இந்த உம்மை - அவன் சிறிதும் பொறுக்க மாட்டானென்பதை விளக்கும். (94)

95. காவென் றடைந்தா டனையழைத்துக்
காவா தேவுங் காந்தாரி
ஆவென் றேங்கி வயிறலைத்திங்
கரற்றற் கோநா ளணித்தென்பார்
வாவென் றவரை யழைத்திவர்செய்
வஞ்சந் தனக்கு வசப்படுத்துங்
கோவென் றுரைக்கும் புலனில்லான்
கொடியார் தமக்குங் கோவென்பார்.

(இ-ள்) (சிலர்) கா என்று அடைந்தாள் தனை-என்னைக் காப்பாற்று வாயாக என்று அபயம் 'வேண்டித் தன்னையடைந்த திரௌபதியை, அழைத்து-அருகில் வரவழைத்து, காவாது-காப்பாற்றுமல், ஏவும் - (தன் மகனுகிய கொடிய) துச்சாதனனோடு செல்லும்படி யனுப்பும்; காந்தாரி—, ஆ என்று ஏங்கி - 'ஆ' என்று கதறி, வயிறு அலைத்து - வயிற்றிலே யடித்துக்கொண்டு, இங்கு - இந்த அத்தினபுரியில், அரற்றற்கு - கூவியழுதற்கு, ஓ - ஐயோ!, நாள் அணித்து - நாள் கிட்டிவிட்டது, என்பார்—; (சிலர்) 'வா என்று அவரை அழைத்து-(அத்தினபுரிக்கு மண்டபத்தினழகு காண) வருவீராக என்று அந்தப் பாண்டவரை அழைப்பித்து, இவர் செய் வஞ்சந் தனக்கு வசப்படுத்தும்-இந்தத் துரியோதனுதியர் செய்யும் கபட சூழ்ச்சிக்கு உள்ளாக்கும், கோ-அரசனுவான் இவன், என்று உரைக்கும்-என்று பழித்துரைக்கப்படும், புலன் இல்லான்-குருடனுகிய திருதராட்டிரன், கொடியோர் தமக்கும் - கொடிய பாதகர்களுக்கெல்லாமும், கோ - அரசனுவன், என்பார்—; (எ.று).

திருதராட்டிரனைக் காட்டிலும் கொடுங்கோல் மன்னன் இல்லை யென்றபடி. (95)

96. ஆகா திஃதென் றுரைத்திட்டால்
அவையோர் பெறுமோ அழிவென்பார்
ஏகா திருக்க விவ்வூரில்
இசையார் நல்லோர் இனியென்பார்
பாகார் மொழியாள் படும்பாடு
பார்க்க வென்னே பவமென்பார்
தோகாய்! அஞ்சல் இனிவாழ்வை :
துடைப்பாய் கொண்ட துயரென்பார்.

(இ-ள்) (சிலர்) அவையோர்-சபையிலுள்ளோர், இஃது ஆகாது என்று - இவ்வாறு சூதாடுதல் தக்கதன்று என்று, உரைத்திட்டால்-மறுத்துக் கூறியிருந்தால், அழிவு பெறுமோ - தருமராசன் இந்தக் கேட்டினைப் பெற்றிருப்பனோ?, என்பார்—; (சிலர்) இனி—, நல்லோர்-நல்ல குடிப்பிறந்தோர், ஏகாது - வேற்றூருக்குச் செல்லாமல், இவ்வூரில் இருக்க - இந்த அத்தினபுரியிலேயே வசிக்க, இசையார் - சம்மதியார், என்பார்—; (சிலர்) பாகு ஆர்மொழியாள் - வெல்லப் பாகுபோன்ற இனிய பேச்சினையுடைய திரௌபதி, படும்பாடு பார்க்க - அனுபவிக்கின்ற துன்பங்களைப் பார்ப்பதற்கு, என்னே பவம்-என்ன பாவஞ்செய்தோமோ? என்பார்—; (சிலர்) தோகாய்-மயில்போன்ற சாயலினையுடைய திரௌபதியே! அஞ்சல் - பயப் படாதே : இனி(து) - இனிதாக, வாழ்வை-வாழ்ச்சியினையடைவாய் : (ஆகவே) கொண்ட துயரம்-(இப்போது நீ) பெற்றுள்ள துன்பத்தை, துடைப்பாய்-ஒழிவாய், என்பார்—; (எ.று).

சபையிலுள்ள அரசர்களுள்ளிட்ட எல்லோரும் துரியோதன னுக்கு உடந்தையாயிராமல் ஒன்று சேர்ந்து ஆரம்பத்திலேயே 'இவ்வாறு சூதாடுதலைச் செய்தல் தகாது' என்று ஒரே குரலோடு தடுத்திருந்தால், தருமனுக்கு இத்தகைய கேடு நேர்ந்திராது என்பது முதலடியின் கருத்து. கொடுங்கோல் மன்னனான துரியோதனனது அத்தினபுரியில் வாழ்ந்தால் குலமகளிரைப் பிறர் தீண்டுதல் முதலிய பலவகை முறைகேடுகள் நிகழக்கூடுமென்று அஞ்சி, அவ்வூரிலுள்ள நற்குடிப்பிறந்தோர் 'இனி இவ்வூர் நமக்கு இருப்பன்று' என்று வேற்றிடம் பெயர்ந்து செல்வர் என்றார் சிலர். கொடுங்கோல் மன்னர் வாழுநாட்டிற், கடும்புலி வாழுங்காடு நன்றே என்பது நினைக. பவம்-பாவம். திரௌபதிக்கு நேர்ந்த துன்பங்கள் யாவும் இன்பமாய் மாறவேண்டுமென்று தமது வேண்டுகையைச் சிலர் ஈற்றடியால் தெரிவித்தனர். இனி-இனிது என்பதன் கடைக்குறை. தோகை-மயில் : மயில் போன்றாளுக்கு உவமவாகுபெயர். அச்சொல் விளியேற்றுத் 'தோகாய்' என வந்தது. அஞ்சல் - அல்லீற்று எதிர்

மறை முன்னிலை வினைமுற்று. வாழ்வை - முன்னிலை வியங்கோள் : துடைப்பாய்-முன்னிலையேவல். (96)

97. தன்பா லுள்ள பொருடோற்கத்
தருமன் றனக்கூழ் தானென்பார்
மன்பா லோடி முறையிட்டால்
மறஞ்செய் திடுமோ வெமையென்பார்
அன்பா லளிக்குங் கிருட்டினனெங்
ககன்றுன் வாரா தழகென்பார்
வன்பா தகனைத் தடுத்துதுயர்
மாற்றற் கிலரோ வலரென்பார்.

(இ-ள்) (சிலர்) தன்பாலுள்ள பொருள் தோற்க - தன்னிடத்துள்ள பொருள்களையெல்லாம் (பந்தயமாக வைத்துத்) தோற்பதற்கு, தருமன் தனக்கு ஊழ்தான் - தருமராசனுக்கு அவன் விதிவலிதான் காரணம், என்பார்—; (சிலர்) மன்பால் - துரியோதனராசனிடத்து ஓடி முறையிட்டால் - விரைவாக ஓடிச் சென்று முறையிடுவோமானால், எமை மறம் செய்திடுமோ - எம்மைக் கோபித்துக் கொள்வானோ?, என்பார்—; (சிலர்) (எப்போதும்) அன்பால் அளிக்கும் கிருட்டினன் - (பாண்டவர் பக்கல்) அன்பு கொண்டு அவர்களைப் பாதுகாக்கும் கண்ணபிரான், வாராது எங்கு அகன்றுன் - (இதுபோது) வாராமல் எங்குச் சென்றொழிந்தான்: அழகு - (அவன் செயல்) வெகு நேர்த்தியாயிருக்கின்றது! (நேரிதன்றே), என்பார்—; (சிலர்) வல் பாதகனைத் தடுத்து - வலிய கொடும் பாவியாகிய துச்சாதனனைத் தடுத்து, துயர் மாற்றற்கு - (திரௌபதியின்) துன்பத்தைப் போக்குதற்கு, வலர் - வல்லமைபடைத்த வலிய வீரர்கள், இலரோ-இல்லாது போயினரோ? என்பார்—; (எ.று).

ஊழ் - போகூழ் என்றபடி: (போகு ஊழ் - (எல்லாம்) போகுதற்குக் காரணமாகும் ஊழ்) மறம் - சினம்: கெடுதி. இனி கெடுதி செய்திடுமோ என்றும் உரைக்கலாம். இனி, 'வலர் இலரோ' என்பதற்கு - வலியர் ஒருத்தரும் இல்லையோ எனினுமாம். (97)

## 98. திரௌபதி அரச சபையைச் சேர்தல்.

இவ்வா றியம்பி நகர்மாக்கள்
இதயம் அலமந் திரக்கங்கொண்
டெவ்வா றுய்வே மெனவழும்போ
திறைபின் வலிப்ப விளங்கொடிபோற்
சவ்வா தணிந்தக் குழல்சோரத்
தரித்த தானை தான்சோர
வெவ்வாள் விழியிற் புனல்சோர வேந்த
னவை போய்ச் சார்ந்தனளே.

(இ-ள்) நகர்மாக்கள்-அத்திநபுர நகரத்துச் சனங்கள், இவ்வாறு இயம்பி-இவ்விதம் பலபடி (வாயாற்) சொல்லி, இதயம் அலமந்து-மனஞ்சுழன்று வருந்தி, இரக்கம் கொண்டு - நெஞ்சிரங்கி, எவ்வாறு உய்வேம்-இனி (நாம்) எவ்வாறு (கவலையின்றி) வாழப்போகிறோம், என-என்று, அழும்போது - கண்ணீர்விட்டு நின்றபோது, இறை பின்-துரியோதனராசனுக்குப்பின் பிறந்த தம்பியாகிய துச்சாதனன், இளங்கொடிபோல் வலிப்ப - இளையகொடியைப் பற்றி வலிய இழுப்பதுபோல் (திரௌபதியை) இழுக்க, (அதனால் அவளது) சவ்வாது அணிந்த அ குழல் சோர-நறுமணம் வீசுகின்ற அந்த (அழகிய) கூந்தல் அவிழ்ந்து வீழ்ந்து புரளவும், தரித்த தானை தான் சோர-உடுத்திருந்த ஆடை நெகிழ்ந்து குலையவும், வெம் வாள் விழியின் - கொடிய வாளாயுதம்போன்ற கண்களிலிருந்து, புனல் சோர-கண்ணீர் பெருகவும், வேந்தன் அவை போய்ச் சார்ந்தனள் - துரியோதனனது ராசசபையிற் போய்ச் சேர்ந்தாள்; (எ.று).

'புனல்சோர' என்ற விடத்து— "ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்", அல்லற்பட்டாற்று தழுத கண்ணீரன்றோ, செல் வத்தைத் தேய்க்கும் படை" என்பன இங்குக் காணத்தக்கவை. அலமந்து - அலமா பகுதி; "அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி" (தொல்: சொல்: உரியியல்: சூ: 14), பின் - பின் பிறந்தானுக்குக் காலவாகுபெயர். 'சோர' என்ற சொல் ஒரு பொருளிலேயே பலமுறை வந்தது - சொற்பொருட்பின் வருநிலையணி. (98)

**99. அச்சமயத்தில் எல்லாவரசரும் இரங்கித் தலைகவிழ, தருமன் அவள்முக நோக்கி வாளாவிருத்தல்.**

நிறைபார்த் தளிக்கு நெறியுடையாள்
நிருப னவையி னின்றிரங்குங்
குறைபார்த் திலமென் றரசவையோர்
கூபார்த் திருந்தார் கொடுமையெனும்
முறைபார்த் தழியு நிருபனவண்
முகம்பார்த் திருந்தான் முகிற்குருதி
உறைபார்த் துளித்த துடுப்பகலே
வொளிர்ந்த தெவரு முட்கிடவே.

(இ-ள்) நிறை-கற்பினை, பார்த்து - அதன் சிறப்பினையுணர்ந்து, அளிக்கும்-தன் கணவன்மார் ஐவருக்கும் வழங்குகின்ற, நெறியுடையாள் - விரதமார்க்கத்தினை மேற்கொண்டவளாகிய திரௌபதி, நிருபன் அவையில் நின்று இரங்கும்-துரியோதனராசனது சபையில் நின்று கொண்டு ஏங்குகின்ற, குறை பார்த்திலம் என்று- தாழ்ச்சியை (க்கண்ணால்) பார்க்கமாட்டோம் என்று, அரசவையோர் - ராஜ சபையிலிருந்தோர், கூ-பூமியை, பார்த்து இருந்தார்-(தலைகவிழ்ந்து) பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்; (இவர்கள் இப்படியிருப்ப), கொடுமை எனும் முறை பார்த்து அழியும் நிருபன் - கொடியமுறை யாயிற்றே இது என்று கண்ணால் பார்த்து நெஞ்சழியும் தருமராசன், அவள் முகம் பார்த்து இருந்தான் - அந்தத் திரௌபதியின் முகத்தைப் பார்த்தும் வாளாவிருந்தான் : (அப்போது) எவரும் உட்கிட-அனைவரும் அஞ்சும்படி, முகில்-மேகமானது, பார்-பூமியின் மேல், குருதி உறை துளித்தது - இரத்தமழையைப் பெய்தது : உடு - நட்சத்திரங்கள், பகலே - பகற் காலத்திலேயே, ஒளிர்ந்தது - பிரகாசித்தன; (எ.று).

தன் சம்பந்தமாக நாரத முனிவன் ஏற்படுத்திச் சென்ற நியமத்தின்படி யொழுகுபவளாதலின் 'நிறை பார்த்தளிக்கும் நெறி யுடையாள்' என்று திரௌபதியைக் குறித்தது. கு - பூமி: அஃது 'கூ' என நீண்டது. கூபார்த்திருந்தார் - தலை கவிழ்ந்திருந்தார் என்ற பொருளது: **பிறிதினவிற்சி.** நிருபன் முகம் பார்த்து இருந்தான் என்றதால் தருமனைக் காட்டியது: திருதராட்டிரனுக் காகாது. இந்த இடத்தில் வில்லிபாரதம் "கோனே நேர்பாடாயிருந் தான் குருடென்றுரைக்குங் கொடியோனே" என்றது. மேகங்கள் இரத்த மழை பொழிதலும், இரவில் விளங்க வேண்டிய நட்சத்திரங் கள் பகலிலே விளங்குதலும் – இனி, விரைவில் நேரக்கூடிய பெரும்

பொல்லாங்குகளை முன்னரே அறிவிக்குந் தீ நிமித்தங்களாம் 'பார்துளித்தது' என்பது 'பார்த்துளித்தது' என எதுகை நோக்கிச் சந்தி மிக்கது. (99)

**100. துஷ்டசதுஷ்டர்கள் தவிர யாவரும் துயருற்றிருக்கத் தம்பியர் நால்வரும் மிக்க சினங் கொள்ளல்.**

உற்பா தம்மிவ் வாறுபல
வுண்டா யிற்றங் கொழுக்கில்லாச்
சொற்பா தகரை யன்றிபிறர்
சோகித் திருந்தார் சுனசிமகன்
விற்பார்த் திட்டான் கதைதொட்டான்
வீம நகுல சாதேவர்
கற்பாந் தத்தி னழலினையுங்
கனற்றுங் கோபக் கனல்வளர்த்தார்.

(இ-ள்) இவ்வாறு - இவ்விதம், பல உற்பாதம் உண்டாயிற்று - பல தீநிமித்தங்கள் தோன்றின: அங்கு - அந்தச் சபையில், ஒழுக்கு இல்லா சொல் - நல்லொழுக்கமில்லாத பேச்சுக்களைப் பேசும், பாதகரை அன்றி - துட்டர் நால்வரைத் தவிர, பிறர் - ஏனைய அனைவரும், சோகித்து இருந்தார் - துயருற்று வருந்தியிருந்தார்கள்: (அப்போது) சினசி மகன் - இந்திரன் மகனாகிய அருச்சுனன், வில்-தனது (காண்டீபம் என்னும்) வில்லை, பார்த்திட்டான் - நோக்கினன்: வீமன்—, கதை - தனது (சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தை; தொட்டான் - கைவைத்துத் தொட்டான்: நகுல சாதேவர் - நகுல சகதேவர்களிருவரும், கற்பாந்தத்தின் அழலினையும் கனற்றும் - யுகாந்தகாலப் பிரளயாக்கினியையும் சுட்டெரிக்கும் படியான, கோபக்கனல் - சினமாகிய தீயினை, வளர்த்தார் - மிகுதியாகக் கொண்டார்; (எ,று).

''ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்'' என்பவாதலின், இவர்கள் நல்லொழுக்கமற்ற பாதகர் என்பதை ''ஒழுக்கில்லாச் சொல்'' என்று அடைகொடுத்துப் பெற வைத்தார். வீமன் கதை தொட்டதும் விசயன் வில்லைப் பார்த்ததும் - திரௌபதிக்குப் பெருந்தீங்கிழைத்த பகைவரை அவற்றால் அழிப்போமென்று குறிப்பித்தவாறும். ''வீமன் கதைமேற் கைவைக்க விசயன் சிலைமேல் விழிவைக்க'' என்றார் வில்லியும். (100)

**101. தருமபுத்திரன் அவர்களைச் சாந்தப்படுத்துதல்.**

தாவந் தணித்த சோணமழை
தனைப்போற் றருமன் றனதிளைஞர்
கோவந் தணித்தான் சுகதுக்கங்
கொளுவா மெவர்க்குங் கோகனக
மாவந் தமருந் திருச்சிலநாள்
வறுமை சிலநாள் வருங்கடல்சூழ்
பூவந் தவருக் கடுத்ததிது
பொறுத்தீ ரின்னம் பொறுமென்றே.

(இ-ள்) தாவம் தணித்த - சூரிய வெப்பத்தாலேற்பட்ட வேடையைத் தணியச் செய்த, சோண மழைதனை போல் - விடாப் பெருமழையைப் போல், தருமன்—, தனது இளைஞர் - தனது தம்பி மார்களுடைய, கோவம் தணித்தான் - சினத்தைத் தணிய வைத்தான் : எவர்க்கும் - யாவர்க்கும், சுகதுக்கம் - இன்பதுன்பங் களில், கொளுவு ஆம் - சிக்குதலுண்டாகும் : சிலநாள் - சிலகாலம், கோகனக மா வந்து அமரும் திரு - தாமரையிலெழுந்தருளியுள்ள இலக்குமி வந்து தங்குதலாலே செல்வம் (உண்டாகும்) : சிலநாள் - சிலகாலம், வறுமை - தரித்திரம், வரும் - வந்து தங்கும் : இது - இங்ஙனம் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவதென்பது, கடல் சூழ் பூ வந்தவருக்கு - கடலாற் சூழப்பட்ட பூமியில் வந்து பிறந்தார்க்கு, அடுத்தது - பொருந்துவதே: (ஆகவே) பொறுத்தீர் - (இதுவரை) அவன் செய்த கொடுமைகளைப் பொறுத்திருந்தீர்: இன்னம் பொறும்- இன்னும் பொறுத்திருப்பீர், என்று—, (கோவந் தணித்தான்), என முன்னர் இயையும்; (எ.று).

தாவம், கோவம் - தாபம், கோபம்: எழுத்துப்போலி. வெப்ப மிகுதியைச் சோணமாரி சொரிந்து தணிப்பது போலத் தம்பிமாரது சினத்தைத் தருமனது சாந்த மொழிகள் தணித்தன என்றார்: உவமையணி. சோண - விடாப் பெருமழை, கொளுவுதல் - பற்றிக் கொள்ளுதல், சிக்குதல், அகப்படுத்தல். ''செல்வம் சகடக்கால் போலவரும்'', ''நல்லாள், உடன்படின் தானேபெருகும் கெடும் பொழுதிற், கண்டனவும் காணக்கெடும்'' என்றவை இங்கு நோக்கத் தக்கன. கங்கையிற் கழுமரம் நாட்டியும், விஷமூட்டியும், வீமனைக் கொல்லத் துணிந்த காலத்திலும், அரக்கு மாளிகையிலிட்டுப் பாண்டவர்களையெல்லாம் கொல்லத் துணிந்த காலத்திலும், மற்றும் பல சமயங்களிலும் பொறுத்தார்களாதலால், 'பொறுத்தீர்' என்றும்,

''காலங்கருதியிருப்பர் கலங்காது, ஞாலங்கருதுபவர்'' என்றபடி தாம் வெல்லுதற்கு ஏற்ற காலம் வாய்க்குமளவும், அதனை எதிர் பார்த்துப் பொறுத்திருக்க வேண்டுமென்பது அரச நீதியாதலால், 'இன்னம் பொறும்' என்றும் தருமன் கூறினான். பொறுத்தீர் - பொறுத்திருந்தவர்களே! என விளியாகக் கொள்ளுதலும் ஒன்று. கோகனகம் - தாமரைமலர்: மா - இலக்குமி சசல செல்வத்திற்கும் அதிபதியாவள். (101)

### 102. திரௌபதியின் மிக்க துயரம்.

மண்ணீ ரெனமுன் னாலிளைஞர்
　　மறமுள் ளிருத்தி வைகுமுழி
புண்ணீ ரொழுக்கோ டுமதுடலம்
　　புரள்வீ ரெனக்காட் டுவபோலக்
கண்ணீ ரொழுகக் குழற்புரளக்
　　கலங்கி விழுந்து கதறியிடும்
பெண்ணீர் மையிற்குன் றாளையிறை
　　பின்னோன் இன்ன பிதற்றிடுவான்.

(இ-ள்) முன்னால் - தருமனாகிய தனக்கு முன்னால், இளைஞர் - தம்பியர், மண் நீர் என - பூமியின் கீழ் தண்ணீர் மறைந்திருத்தல் போல, மறம் உள் இருத்தி - வீரத்தை மனத் தடக்கிமறைத்து, வைகும் உழி - தங்கியிருந்தபோது,— புண் நீர் ஒழுக்கோடு-இரத்த நீர்ப்பெருக்கோடு, உமது உடலம் புரள்வீர்-உங்களுடைய உடல்கள் (தரையில் வீழ்ந்து) புரளப்போகின்றீர், என - என்று, காட்டுவ போல - துட்டசதுட்டர்களுக்கு (அவர்கள் கண்ணாற் காணும்படி) காட்டுவதுபோல, கண்ணீர் ஒழுக-கண்களிலிருந்து நீர் பெருக, குழல்புரள - கூந்தல் அவிழ்ந்து வீழ்ந்து புரள, கலங்கி விழுந்து கதறியிடும்-மனங்கலங்கி கீழ்விழுந்து கதறுகின்ற, பெண் நீர்மையின் குன்றாளை-பெண்களுக்குரிய நற்பண்புகளிற் சிறிதும் குறைபாடில்லாத திரௌபதியை. இறைபின்னோன் -துரியோதனராசனின் தம்பியாகிய துச்சாதனன், இன்ன - இப்படிப்பட்ட (கொடிய) சொற்களை, பிதற்றிடுவான்-உளறலானான்; (எ.று)—அவன் பிதற்றியதை மேலைச் செய்யுளிற் காண்க.

மண்ணீர் என-உவமையணி. பூகதமாகிய நீர்போல மனங்கத மாகிய மறம் என்றபடி. திரௌபதியின் கண்ணீரொழுக்கு - துரியோதனாதியர்க்குப் பின்னர் நிகழப்போகும் புண்ணீர் (இரத்த)

ஒழுக்கையும், அவளது கூந்தல் அவிழ்ந்து புரளுதல் - அவர்களது உடலங்கள் சிதைந்து தரையில் புரளுதலையும் முன்னரே காட்டும் குறிகள் போலிருந்தன என்றார்: நிதரிசனவணியின் பாற்படும். பெண்நீர்மையாவது - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மகடூஉக்குணம் நான்கும். அவற்றுள், நாணமாவது-செய்யத்தகாத வற்றில் உள்ளமொடுங்குதல்; மடமாவது - எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாது போலிருத்தல்: கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை எனவும்படும். அச்சமாவது - புதியதைக் கண்டவிடத்து அஞ்சுதல், பயிர்ப்பாவது - தன் கணவரல்லாத ஆடவரது ஆடை முதலியன தன்மேற்பட்டால் அருவருத்தல் : மற்றைய பெண் குணங்கள்யாவும் இந்நான்கில் அடக்கப்படும். கதறியிடும், இடு-துணைவினை. (102)

### 103. துச்சாதனன் கூறிய கடுமொழி.

தண்டார் மாமன் மைத்துனர்கள்
சதுமா மறையோர் தரணிபர்கள்
கொண்டா ரிருக்கக் குறையுனக்கென்
கோதாய்! விழிநீர் கொண்டிடுதல்
வண்டார் குழலின் கணிகையர்க்கு
வழக்கந் தானே மதனின்ப
முண்டார் கலுழ லேன்சொம்மா
ஒழுகிப் போரு யோவென்முன்.

(இ-ள்) கோதாய்! - பெண்ணே! தண் தார் மாமன் - குளிர்ந்த மாலையைத் தரித்த மாமனுராகிய திருதராட்டிரன், மைத்துனர்கள் - துரியோதனனுள்ளிட்ட தொண்ணூற்றென்பதின்மர், சதுமா மறையோர் - நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர், தரணிபர்கள் - அரசர்கள், (இவர்களோடு) கொண்டார் - (கைப்பிடித்துக்) கொண்ட கணவன்மார் ஐவர், இருக்க - (இவர்களெல்லோரும்) உன் அருகி லிருக்கையில், உனக்கு குறை என்? - உனக்கு என்ன குறை வந்து விட்டது? விழிநீர் கொண்டிடுதல் - (நினைத்தபோதே) கண்ணீர் பெருக்குதல், வண்டு ஆர் குழலின் கணிகையர்க்கு - வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய பொதுமகளிர்க்கு, வழக்கம் தானே - இயல்பாயிற்றே (அருமையானதன்றே) : மதன் இன்பம் உண்டார் - போக இன்பத்தையநுபவித்த பெண்டிர், கலுழல் ஏன் - அழுவது எதற்கு? சொம்மா ஒழுகிப்போருயோ - சும்மா உருகுகிருயோ? (பாசாங்கு பண்ணுதே), என்முன் -(எ.று).

இங்கு உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் உன்னை அவ்வாபத்தினின்றும் பாதுகாப்பதற்கு உனது மாமனும் உனது கணவன்மார்களும் பிறரும் இருக்கையில், நீ அழுதுவீணே பாசாங்கு செய்யவேண்டா எனத் துச்சாதனன் கடுமையாகக் கூறினனென்க. திரௌபதி காரணமின்றி அழுகின்றாள் என்னுஞ் சிறப்புப் பொருளை 'கணிகையர்க்கு விழிநீர் கொண்டிடுதல் வழக்கம்தானே' என்ற பொதுப்பொருள் சமர்த்தித்து நின்றது—**வேற்றுப்பொருள்வைப்பணியாம்.** மதன் - மன்மதன் : காமத்தை விளைவிக்குங்கடவுள். மதனின்பம் - மன்மத லீலைகளால் வரும் இன்பம், போகவின்பம், கலவியின்பம். 'சொம்மா ஒழுகிப் போருயோ'-உலகு வழக்குப்பற்றியது. சொம்மா-சும்மா, வாளா. போருயோ - போகிருயோ என்பதன் சிதைவு. இந்தப் பேச்சு 'ஒழுக்கில்லாச் சொற்பாதகர்' (செ : 100) என்றதை விளக்கி நின்றது. (103)

## 104. அதுகேட்டுத் திரௌபதி முறையிடுதல்.

பெரும்பா தகன்சொல் வசைக்கொன்றும்
பேசா திருந்த பேரவையைச்
சுரும்பார் குழலா டொழுதாட்கை
சோர்ந்தாள் கங்கா சுதனேயோ
இரும்பா நெஞ்ச மாமாவோ
இருக்கோர் முனிவீ ரோகடல்சூழ்
தரும்பா ருடைய வரசீரோ
தருமோ விஃதுந் தமக்கென்றாள்.

(இ-ள்) பெரும் பாதகன் சொல் வசைக்கு - கொடிய பாவியாகிய துச்சாதனன் சொன்ன பழிச் சொல்லுக்கு, ஒன்றும் பேசாது இருந்த - (மாறு) ஒன்றும் சொல்லாதிருந்த, பேர் அவையை-பெருஞ் சபையோரை நோக்கி, சுரும்பு ஆர் குழலாள் - வண்டுகள் ஒலிக்கப் பெற்ற கூந்தலையுடைய திரௌபதி, கை தொழுதாள் - கை கூப்பி வணங்கினாள்: சோர்ந்தாள் - மனம் ஏங்கினாள்: (பின்பு) கங்கா சுதனேயோ! - கங்கா தேவியின் புத்திரனே! இரும்பு ஆம் நெஞ்ச மாமாவோ! - இரும்புபோல் வலிய மனமுடைய மாமனே! இருக்கு ஓர் முனிவீரோ! - வேதங்களை ஆராய்ந்துள்ள முனிவர்களே!, கடல் சூழ்தரும் - கடலாற் சூழப்பட்டுள்ள, பார் உடைய - பூமியைத் தமதாகவுடைய, அரசீரோ! - அரசர்களே! உம் தமக்கு - (நீதிநெறி யறிந்த) உங்களுக்கு. இஃது - இங்ஙனம் மௌனமாயிருத்தல், தருமோ - பொருத்தமாகுமோ? (ஆகாது) என்றாள் - என்று கூறினாள்; (எ.று).

'இஃது' என்றது, - தருமபுத்திரன் தன்னைத் தோற்ற பின்பு பந்தயமாக வைத்ததனால் முறைமையாகச் சயிக்கப்படாத என்னைத் தீண்டக்கூடாத காலத்திற் பலர் கூடிய சபையிலே துச்சாதனன் வசைமொழி கூறி இழுத்துக் கொண்டு வருகையிலும் ஒன்றும் பேசாது மௌனமாயிருத்தலைக் குறிக்கும். கங்கா சுதன் - வீடுமன். சுதனேயோ - சுதன் என்பதன் விளி சுதனே! : அது புலம்பலில் ஓகாரம் பெற்று வந்தது. முனிவீரோ - முனிவர் என்பதன் விளி முனிவீர்! : அது புலம்பலில் ஓகாரம் பெற்று வந்தது. அரசீரோ - அரசு என்பதன் விளி அரசீர்! : அது புலம்பலில் ஓகாரம் பெற்று வந்தது. மாமாவோ - விளியுருபாக ஈறு கெட்டு அயல் நீண்டு, புலம்பலில் ஓகாரம் பெற்று வந்தது. ''புலம்பின் ஓவுமாகும்'' என்பது நன்னூல். இருக்கு - ரிக் முதலிய வேதங்கள்: ஓர்தல் - ஆராய்தல். சூழ்தரும், தா - துணைவினை. உந்தமக்கு - உமக்கு : தம் - சாரியை- (104)

### 105. வீடுமன்கூற, திரௌபதி சபையோரை நோக்கி நீதி கூறுமாறு வேண்டுதல்.

அழியா நிறையா டுயர்கண்டும்
அகஞ்சற் றிரங்கா வரசினையோய்!
மொழியா வசைமன் னவர்மொழிதல்
முறையோ நீயே மொழியென்றங்
கிழியா புகழ்வீ டுமன்சொலமா
திறைதோற் றெனையோ வெனைத்தோற்றோ
வழியா வதனைப் பெரியோரே!
வகுப்பீர் தோற்ற வாறென்றாள்.

(இ-ள்) அங்கு - அப்போது அவ்விடத்து, இழியா புகழ் வீடுமன் - இழிவுபடாத புகழை (என்றுமுடைய) பீஷ்மன், (துச்சாதனனை நோக்கி) அழியா நிறையாள் துயர்கண்டும் - அழிதலில்லாத கற்பு நெறியுடையளாகிய திரௌபதியின் துன்பத்தைப் பார்த்தும், அகம் சற்று இரங்கா அரசினையோய்! - மனஞ் சிறிதேனும் இரங்காத துரியோதனராசன் தம்பியே! மொழியா - (யாரும்) கூறாத, வசை - பழிமொழியாகிய கணிகை (பொதுமகள்) என்பதை, மன்னவர் மொழிதல் - அரச குலத்தவர் கூறுதல், முறையோ - தகுமோ? (தகாதே) என்று கூறி, (பின் திரௌபதியை நோக்கி), நீயே மொழி - நீயே உன் குறைகளை (ச்சபையில்) கூறித் தெரிவிப்பாய், என்று சொல - என்று கூற, மாது - (அந்தத்)

திரௌபதியும், 'பெரியோரே! - சான்றோர்களே! இறை தோற்று எனையோ - தருமபுத்திரர் தம்மைத் தோற்ற பின்பு என்னைத் தோற்றாரா? : (அன்றி) எனைத் தோற்றே - என்னைத் தோற்றபின்பு தம்மைத் தோற்றாரா? தோற்ற ஆறு அதனை - (அவர்) தோற்ற விதத்தை, வழியா வகுப்பீர் - முறைமையாகச் சொல்லுவீர்', என்றாள் - என்று வேண்டினாள்; (எ.று),

இதனால் வீடுமன் துச்சாதனனது தீச்செய்கையைத் தவிரக் கூறி, திரௌபதிக்குத் தேறுதலாகுமாறு அவையோரிடத்துக் குறை தெரிவித்துக் கொள்ளச் சொல்லினனென்க. அப்போது திரௌபதி கீழ்ப் பிராதிகாமி தன் பேச்சாகக் கற்பித்துக் கூறியது சரியாகுமாறு தானும் சபையோரை நோக்கி 'பெரியோர்களே! தருமர் தம்மைத் தோற்றபின்பு என்னைத் தோற்றனரா? என்னைத் தோற்றபின்பு தம்மைத் தோற்றனரா? இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் உண்மை வகுப்பீர் : தருமபுத்திரர் தம்மைத் தோற்பதற்கு முன்னமே என்னைத் தோற்றிருப்பின் என்னை அடிமையாகக் கொள்வதில் எனக்கு ஆட்சேபமில்லை; தருமபுத்திரர் தம்மைத் தோற்றபிறகு என்னைத் தோற்றிருப்பின் அடிமையாகிய தான் என்னைப் பந்தயம் வைத்து இழப்பதற்கு உரிமையில்லார். அப்போது என்னை அடிமையாக்கச் சிறிதும் 'முறைமையில்லை' எனத் தன் கருத்தை வெளியிட்டன ளென்க. முன்பு தன்னைத் தோற்றுப் பிறர்க்கு அடிமையாய் விட்ட வனுக்கு மண் பெண் பொன் முதலியவற்றின் உரிமையில்லை யென்னுங் கோட்பாட்டினால் இங்ஙனம் கூறினளென்க. மொழியா வசை - யாவரும் கூறுதற்குக் கூசும் வசைச்சொல்; 'கணிகை' என்பது. வழி - முறைமை. வகுப்பீர் - 'முன்னிலை வியங்கோள். (105)

**106-107. இரண்டு கவிகள்-விகர்ணன் சபையோரை நோக்கிக் கூறியன.**

கொந்தார் குழற்சொற் கோதாராய்
கொடியோன் றனக்கு மாகாராய்
சிந்தா குலமுற் றவையோர்சித்
திரம்போ லிருப்பத் திறல்விகர்ணன்
முந்தார் தோற்ற தெனக்கேட்டாள்
மொழிக்கொன் றேதா மூங்கையர்போல்
உந்தா ரறிவற் றிறைக்கஞ்சி
யுற்றீர் சொற்று லொழிவீரோ.

(இ-ள்) கொந்து ஆர் குழல் சொற்கு - தொகுதிப்பட்ட கூந்தலை யுடைய திரௌபதியின் வினவுக்கு; ஓதாராய் - (தக்கதென்ருவது தகாதென்ருவது) ஒன்றும் மறுமொழி கூருதவராய், கொடியோன் தனக்கும் - துரியோதனன் எண்ணத்திற்கும், ஆகாராய் - உடன் பட்டுக் கூருதவர்களாய், சிந்தாகுலம் உற்று - மனவேதனைப்பட்டு, அவையோர் - சபையிலிருந்தோர், சித்திரம்போல் இருப்ப-சித்திரப் பாவைபோல (ச்சிறிது அசைதலுமின்றி) உட்கார்ந்திருப்ப, (அதுகண்ட) திறல் விகர்ணன் - வலிமையையுடைய விகர்ண னென்பவன், (அச்சபையோரை நோக்கி), 'முந்துஆர் தோற்றது எனக்' கேட்டாள் - முன்னர்த் தோற்றது யாரை (தன்னையா, அல்லது தருமனையா) என்று வினவினுள் திரௌபதி : மொழிக்கு அந்தக் கேள்விக்கு, ஒன்று ஓதா - பதிலொன்றும் சொல்லாமல், மூங்கையர்போல் - ஊமைகளைப்போல், உந்து ஆர் அறிவு அற்று- தோன்றும் அறிவும் இல்லாமல், இறைக்கு அஞ்சி-துரியோதன ராசனுக்கு (அவன் கோபங்கொள்வான்) என்று பயந்து, உற்றீர்- (இருந்த இடங்களிலேயே) பொருந்தியிருக்கின்றீர் : சொற்ருல் - (பிரதியக்ஷமாய்க் கண்ட) நியாயத்தை எடுத்துக் கூறினுல், ஒழிவீரோ-அழிந்து போவீரோ? (அழியமாட்டீர்); (எ.று).

சபையிலிருந்தோர் அனைவரும் துரியோதனனிடத்து அச்சத் தால் முறைப்படி திரௌபதிக்குச் சார்பாகப் பேசுவதற்கு அஞ்சியும், மனச்சாட்சிக்கு மாருயிருத்தலால் துரியோதனனுக்குச் சார்பாகப் பேசுவதற்குப் பின்வாங்கியும், ஒரு வழியிலும் துணியாது மன வேதனைப்பட்டு, எழுது சித்திரம் போலத் திகைப்புற்றிருந்தார்க ளென்க, 'சொற்ருல் ஒழிவீரோ' என்றது - துரியோதனனுக்கு அஞ்சி மௌனமாயிராது நீதி கூற வேண்டுவது அவசியமென வற் புறுத்தியவாறு, கொந்து - கொத்து என்பதன் மெலித்தல். குழல் - ஆகுபெயர். சிந்தாகுலம் - வடசொல். ஓதா - ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம். சித்திரம் போல், மூங்கையர் போல் - உவமையணி. உந்துதல் - தூண்டுதல், செலுத்துதல். ஒழிவீரோ, ஓகாரம் - எதிர்மறை. (106)

107. முன்னுற் பொருளுந் தங்களையும்
முறையே தோற்று மொய்குழலைப்
பின்னுற் பொறையோன் ருேற்றிட்டான்
பிழையென் ருேது பேசீரோ

என்னு மன்னர் முகநோக்கி
யெல்லா ரிதயங் களுமகிழச்
சொன்னு னவரு மிவன்றனக்கே
தூயோ னெனும்பேர் சூட்டினரால்.

(இ-ள்) 'முன்னுல் பொருளும் தங்களையும் முறையே தோற்று - முதலின் (தங்கள்) பொருள்களையும் தங்களையும் முறைப்படியே (பந்தயப் பொருள்களாக வைத்துத்) தோற்று, பின்னுல் - பிறகு, பொறையோன் - தருமபுத்திரன், மொய்குழலை - திரௌபதியை (ப்பந்தயப் பொருளாக) வைத்து, தோற்றிட்டான் - தோற்ருன்: அஃது - அங்ஙனம் (உரிமையிழந்த நிலையில்) அவளைப் பணயம் வைத்து ஆடியது, பிழை - தவருகும், என்று—, பேசீரோ - நியாயஞ் சொல்ல மாட்டீரோ'?! என்னு - என்று, மன்னர் முக நோக்கி - அரசர்களின் முகத்தைப் பார்த்து, எல்லார் இதயங்களும் மகிழச் சொன்னுன் - எல்லாருடைய மனமும் மகிழும்படியாக (நீதி) எடுத்துக் கூறினுன்: (அப்பொழுது) அவரும் - அது கேட்ட அவர்கள் எல்லோரும், இவன் தனக்கே - இந்த விகர்ணனுக்கே, தூயோன் எனும்பேர் - 'யோக்கியன்' என்ற சிறப்புப் பெயரை, சூட்டினர்—; (எ.று) ஆல் - ஈற்றசை.

'எல்லார்' என்றதும், 'அவரும்' என்றதும் துஷ்டசதுஷ்டரொழிந்த மற்றவர்களையே குறிக்கும். துரியோதனனுக்கு மாருகப் பிறரெவரும் அஞ்சி எடுத்துக் கூருத நீதியை நடுவுநிலைமை குன்ருமற் சிறிதும் பின்வாங்காது அத் துரியோதனனது முன்னிலையிலேயே எடுத்துக் கூறிய பெருந்தகைமை பற்றி, விகர்ணனுக்கு எல்லாரும் ஏகமனதாய் 'துயோன்' என்று ஒரு பெரும் பெயர் சூட்டினரென்க. இதனுல், அவ்விகர்ணன் வார்த்தைக்கு அச்சபையோர் யாவரும் உடன்பட்டனரென்பது போதரும். தூயோன் - பரிசுத்தன்: யோக்கியன் என்றபடி. மொய்குழல் - வினைத்தொகையன்மொழி; ஆகுபெயருமாம். (107)

வேறு

**108-109. இதுவும், அடுத்த கவியும்—கர்ணன் விகர்ணனையும் சபையோரையும் நோக்கிக் கூறுவன.**

தூயவனென் றுருநாமஞ் சூட்டியபின்
தரணிமகன் ருேன்றற் பின்ருேன்
ஆயவனைப் பார்த்தறிவா லனைவரிலு
முயர்ந்தனையோ வரச நீதிக்

கேயவனே நினையொழிந்தா லிசைப்பவரற்
றேவழக்கிங் கியம்பென் றுன்னைக்
கூயவருண் டோவென்னக் கொதித்தவையோர்
தங்களையுங் குறித்துச் சொல்வான்.

(இ-ள்) தூயவன் என்று ஒரு நாமம் சூட்டியபின் 'யோக்கியன்' என்று ஒரு சிறப்புப் பெயரைச் (சபையோர்) சூட்டியபின்னர், தரணிமகன் - சூரிய புத்திரனுகிய கர்ணன், தோன்றல் பின்னேன் ஆயவனைப்பார்த்து-துரியோதனனுக்குத் தம்பியாகிய விகர்ணனைப் பார்த்து, அறிவால் (நீ) நல்லறிவினுல், அனைவரிலும் - எல்லாரைக் காட்டிலும், உயர்ந்தனையோ - சிறப்புற்றிருக்கின்றுயோ ? அரச நீதிக்கு - இராச நீதிக்கு, ஏயவனே - பொருத்தமுள்ளவனே? நினை ஒழிந்தால்-நின்னைவிட்டால், இசைப்பவர்-(இராச நீதியை எடுத்துப்) பேசுபவர், அற்றே - வேறொருவருமில்லையென்றே? : வழக்கு-இந்த நீதியை, இங்கு-இந்தச் சபையிடத்து, இயம்பு - அடுத்துச் சொல்லு வாயாக, என்று உன்னைக் கூயவர் உண்டோ - என்று உன்னை அழைத்தவர் யாரேனுமுளரோ ? என்ன - என்று இவ்வாறு கழறி, கொதித்து - கோபித்து, (பின்) அவையோர் தங்களையும் குறித்து - சபையோரனைவரையும் பார்த்து, சொல்வான் - கூறுவானுயினுன்; (எ. று) கர்ணன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

எல்லா வரசரினும் அறிவிற் குறைந்த சிறுவனுயும் இராசநீதி முற்று முணராதவனுயும் இருக்கிறநீ, உன்னைத்தனியே ஒருவருங் கேளாதிருக்கையில் 'நாம்நீதி கூருவிடின் வேறொருவரும் நீதி கூறுப வரில்லை' என்று தன்னைத்தானே நன்கு மதித்து வேறொருவருடனும் சிறிதும் கலந்து ஆலோசியாமல் நீதி கூறத் துணிந்தது அதிக் கிரமித்த செயலாமெனக் கர்ணன் விகர்ணனைக் கடுமையாகக் கூறினனென்க. ஓகாரங்கள் -எதிர்மறைப்பொருளன. தரணி என்ற வடசொல் - சூரியனது பரியாய நாமங்களிலொன்று : (இருளைக்) கடத்தற்குக் கருவியானவனென்றுவது, (வானத்தைக்) கடக்கின்றவ னென்றுவது இதற்குக் காரணப் பொருள் கூறுப. தோன்றல் - இகழ்ச்சிக் குறிப்பினது.

இதுமுதல் இருபத்திரண்டு கவிகள் — பெரும்பாலும் முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும், மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகி வந்த கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள்.

(108)

109. துல்லியசொல் லினமைக்குத் தோற்றமனை
யொடுமில்லாள் தொக்கா ளென்னீர்
இல்லியல்கொண் டில்லாளென் றிசைக்கும்பண்
பென்னுமிங் கிவனை நீவிர்
நல்லியனென் றுரைக்குமொழி நன்றுமுங்
களினல்லோர் ஞாலத் தியார்யான்
சொல்லியசொற் கெதிருண்டேற் சொன்மினென
வப்பொழுது தோன்றல் சொல்வான்.

(இ-ள்) துல்லிய சொல்லினன் - சுத்தமான (உண்மையான) சொற்களையே பேசும் தருமபுத்திரன், நமக்கு - எங்களுக்கு, தோற்ற மனையொடும் - தோற்றிழந்துகொடுத்த வீட்டினுெடும், இல்லாள் - அந்த வீட்டுக்குரியவளும் (மனைவியும்), தொக்காள் - அடங்கி யுள்ளாள், என்னீர் - என்று சொல்ல மாட்டேனென்கிறீர்கள் : இல் இயல்கொண்டு - 'இல்' என்ற சொல்லின் தன்மைகொண்டு, (அதற்கு) இல்லாள் என்று இசைக்கும்-'இல்லாள்' என்று பொருள் விரிக்கும், பண்பு-நேர்மை, என் ஆம் - என்ன ஆகும்? (பயனின்றிப் போகுமே) : இங்கு-இப்போது இவ்விடத்து, இவனை-இந்த (ச்சிறுவ ணுகிய) விகர்ணனை, நீவிர் - அரசர்களாகிய நீங்கள், நல்லியன் என்று உரைக்கும் மொழி தூயோன் (யோக்கியன்) என்று சொல்லு கின்ற வார்த்தை, நன்றும்-நன்ருயிருக்கிறது! உங்களின் நல்லோர்- உங்களைப்போல நல்லவர்கள், ஞாலத்து யார் - இந்த உலகத்தில் எவர் உளர்? (ஒருவருமிலர்) : யான் சொல்லிய சொற்கு எதிர் உண்டேல் - நான் கூறின வார்த்தைக்குமாருக நீதி வார்த்தை யுண்டாளுல், சொன்மின் - (எடுத்துக்) கூறுங்கள், என - என்று (கர்ணன் சபையோரை நோக்கிக்) கூற, அப்பொழுது - அந்தச் சமயத்தில், தோன்றல்-துரியோதனன், சொல்வான் - கூறலானுன், (எ.று).

மனையைத் தோற்றதில் அந்த மனைக்கு உரிய மனைவியும் அடங்கி விட்டவளாவள் என்பது கர்ணன் வாதம். இதனைத் தருமன் உடன்பட்டு ஏற்றுக் கொள்வன் என்ற கருத்தினை உள் வைத்துக் கர்ணன் **'துல்லிய** சொல்லினன்' என்று தருமனைக் குறித்தான் : (துல்லியம் - சுத்தம்) இஃது **கருத்துடையடை கொளியணி.** இனி, 'இல்' என்பது வீட்டையேயன்றி மனைவி யையும் குறிப்பதாதலை, ''இல்லவளுரிமை பன்னி குடும்பினி யில்லே யில்லாள்'', ''புகழ் புரிந்தில்லிலோர்க்கு'' என்பன முதலியவற்ருல் அறிக. (வடமொழியில் ''க்ருஹம்'' என்பது - வீட்டையும் மனைவி யையும் குறித்தல், இங்கே கருதத் தக்கது). தகுதியற்ற சிறுவனுக்கு

'நல்லியன்' (தூயோன்) என்று பெரும் பட்டப்பெயரைச் சூட்டிய சபையோர்களை இழித்துக் கூறுவான் 'உங்களின் நல்லோர் ஞாலத்தியார்?' என்றான். இது, எதிர்மறையிலக்கணையின் பாற் பட்ட பிறகுறிப்பு. கர்ணன் தான் கூறியதே தேர்ந்த நீதியென்று துரபிரமானங் கொண்டவனாதலால் இதற்கு மாறு கூறுதல் ஒருவர்க்கும் இயலாதென்ற கருத்துப்பட, 'எதிருண்டேற் சொன் மின்' என்றான். ஈண்டு நுண்ணிதின் ஆய்ந்தறிய வேண்டியது ஒன்று உளது: அஃது என்னையெனில் - எதிரெதிராக ஆடும்போது பந்தயமாக இருவரும் மனமொப்பிய பொருள்களே வெல்லப்பட்டன வாகவும் தோற்கப்பட்டனவாகவும் கொள்ளத்தக்கனவாதலால், அவ்வாறு தருமன் சகுனி என்ற இருவரில் ஒருவருடைய மனத் தாலும் முன்னர் எண்ணப்படாமலேயிருந்து தருமனுக்கு உரிமை யில்லாத காலத்தில் இருவரும் திரௌபதியைப் பந்தயமாக மன மொப்பியிருக்கவும், 'தருமன் தன்னைத் தோற்கு முன்னமே திரௌபதியை இழந்தவனாவன்' என்று கர்ணன் சாதிப்பது போலிச் சாதனையே யென்பது. என்னீர் - முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று. இல் - 'இல்' என்ற சொல். இயல் - அதன் தன்மை. உங்களின், இன்-உறழ் பொருவுமாம். ஞாலத்தியார் - குற்றியலிகரம். சொன்மின் - முன்னிலைப் பன்மை. (109)

**110. பாண்டவர் திரௌபதி என்ற இவர்களின் துகிலை உரியுமாறு துரியோதனன் துச்சாதனனுக்குக் கட்டளையிட, அப்போது விதுரன் கர்ணனைக் கண்டித்தல்,**

தம்பிதுச்சா தனவைவர் தமையும்வழக்
கொன்றுரைத்தா டனையு மாடை
உம்பிதனைத் தக்கோனென் றுவந்தவர் பார்த்
திடவுரிகென் றுரைத்த காலை
வெம்பிமன தினன்மகனை விதுரன் வெகுண்
டொருசார்பாய் விளம்பி னோர்க்குக்
கும்பியெனு நூலுணர்ந்துங் கோச்சவையி
லழிவழக்குக் கூறு நின்றாய்.

(இ-ள்) 'தம்பி துச்சாதன !—, ஐவர் தமையும் - பாண்டவரை வரையும், வழக்கு ஒன்றுரைத்தாள் தனையும் - வியவகாரம் பேசின திரௌபதியையும், உம்பிதனைத் தக்கோன் என்று உரைத்த வர் பார்த்திட - உன் தம்பியாகிய விகர்ணனை யோக்கியன் என்று கூறிய சபையினர் (தம் கண்கொண்டு) பார்க்கும்படி, ஆடை உரிக

என்று - வஸ்திரங்களை உரித்து விடுவாயாக' என்று, உரைத்த காலை - சொன்னபொழுது, விதுரன்—, மனது வெம்பி - மனங் கொதித்து, இனன் மகனை-சூரியபுத்திரனாகிய கர்ணனை, வெகுண்டு சினந்து,— "ஒரு சார்பாய் விளம்பினோர்க்கு - ஒரு பக்கமாய்க்கோடி (பட்சபாதம்) பேசினார்க்கு, கும்பி - நரகம்தான் கிட்டும், எனும் - என்று விதிக்கின்ற; நூல் உணர்ந்தும் - தருமசாத்திரம் தெரிந் திருந்தும், கோச் சவையில் – அரச சபையில், அழி வழக்கு கூறு நின்றாய்-தவறான வியவகாரத்தைச் சொல்லுகின்றாய்; (எ.று).

துரியோதனன் தன் எண்ணத்திற்கு மாறாகக் கூறிய விகர்ணனை 'தம்பி' என்று பொதுவாகக் கூறுவதற்கும் விருப்பமில்லாதவனாய், 'உம்பி' என்றானென்னலாம். சபையோர்கள் விகர்ணனைப்பற்றிய விஷயத்தில் அவனைப் பாராட்டியதன்மூலம் அநியாயங் கூறினமை யால், அவர்கட்கும் ஒரு மானபங்கமுண்டாம்படி அவர்கள் விருப்பத் திற்கு மாறாக அவர்கள் முன்பாகவே தருமபுத்திரன் முதலியோரது ஆடையை உரியுமாறு துரியோதனன் கூறினான். 'வழக்கு ஒன்றுரைத்தாள் தனையும்' என்றதனால், அவள் கொடு வழக்கு உரைத்ததற்கு இதுவே பயனென்றவாரும். மன்று ஓரஞ்சொன்னார் நரகம் புகுவர் என்பது நூல் துணிபு. "வேதாளம் சேருமே வெள்ளெருக்கு பூக்குமே......... மன்றோரஞ் சொன்னார் மனை" என்ற பாடலையும் ஒருசார் நினைக. இனன் – சூரியன். துரியோதனன் துச்சாதனனைத்துகிலுரியக் கட்டளையிட்டதாகக் கூறியிருப்பது வில்லி பாரதத்தையொட்டி யென்க: ஏனெனில், வியாசபாரதம் துகிலுரியுமாறு கர்ணனே துச்சாதனனுக்குக் கட்டளையிட்டதாகக் கூறும். அழிவழக்கு-கெடுவழக்கு, தவறான வழக்கு. உரைத்தாள் + தனை-உரைத்தாடனை. உரிகென்று-அகரவீறு தொகுத்தல். கும்பி— நரகம். (110)

### 111-114. இதுமுதல் நான்கு கவிகள் - ஒரு தொடர்: விதுரன் வார்த்தை.

நின்மனதின் படியொழுகி நின்றாரைக்
குரவரென நினைப்பை மேனாள்
தன்மனதின் படிநடந்த தமனியன்சேய்
பயந்தவிரோ சனனும் வேதஞ்
சொன்மனதி னோர்முனிவன் றோன்றலுநட்
டோர்முனியாற் றென்னூ லோர்ந்து
நன்மனதி னேடிருந்தோர் நகரின்பா
லோர்கொடியை நயந்து கண்டார்.

(இ-ள்) (கர்ண நீ) நின் மனதின்படி ஒழுகி நின்ருரை - உன் கருத்தின்படியே நடந்து வருகின்ற (துட்டர்கள்) மூவரையும், குரவர் என நினைப்பை-பெரியோர்கள் என நினைக்கின்ருய்: (பழைய இதிகாசமொன்று கூறுகிறேன் : கேட்பாயாக) : மேனுள் - முற் காலத்தில், தன் மனதின்படி நடந்த தமனியன் - தன் கருத்துச் சென்றபடியே ஒழுகிவந்த இரணியனுடைய, சேய் - மகனுகிய பிரகலாதன், பயந்த - பெற்ற, விரோசனனும் - விரோசனன் என்பவனும், வேதம் சொல் மனதின் ஓர் முனிவன் தோன்றலும் - வேதங்களையோதுகின்ற நெஞ்சினையுடைய ஒப்பற்ற ஆங்கிரஸ முனிவனின் புத்திரனுகிய ஸுதன்வா என்பவனும்; நட்டு - (ஒருவரையொருவர்) சிநேகித்து, ஓர் முனியால் தொன்னூல் ஓர்ந்து - ஒரு முனிவரால் பழைய வேதங்களையுணர்ந்தறிந்து, நன்மனதினேடு இருந்தோர் - நல்ல தூயமனதோடு இருந்தவர்கள், (இருவரும்) நகரின்பால்-தமது நகரத்திலிருந்த, ஓர் கொடியை - ஒரு பெண்ணை, நயந்து கண்டார் - விரும்பி (த்தம் கண்களாற்) பார்த்தனர்; (எ.று).

'நின்ருரை' என்றது - துட்டசதுட்டரில் தன்னையொழிந்த மூவரைக்குறித்தது. தன் மனதின்படி நடந்தவன் - தமனியன். தமனியன் – இரணியன் : பொன்னிறமுடையவன் என்ற காரணம் பற்றி வந்த பெயர். (தமனியம் - பொன்; ஹிரண்யம் - பொன்), இரணியன் மகன் - பிரகலாதன் : அவன்மகன் விரோசனன். விரோசனனென்ற அசுரனும், ஸுதன்வா என்ற அந்தணனும் நட்புக்கொண்டு நன்மனதினேடிருந்தனர் என்பது அறிக. நினைப்பை - முன்னிலை வினைமுற்று. கொடி - கொடிபோன்ருளுக்கு உவமவாகுபெயர். (111)

112. கண்டுமணம் பேசினரக் கன்னியறி
 வினிலுயர்ந்தோர் கடிசெய் தின்பம்
உண்டிடுமென் றனளறிவி லுயர்ந்தவனு
 நீயென்று முபையர் வாதங்
கொண்டிரணி யன்மகன்பாற் கூறினர்மற்
 றவனுரைக்கக் கூடா தேகி
ஒண்டவன்கா சிபற்குணர்த்த அவன்வழுவிற்
 பவம்பிறர்பா லுணர்கென் றுய்ப்ப.

(இ-ள்) கண்டு - (அந்தக் கன்னிகையைக்) கண்டு. மணம் பேசினர் - விவாகத்தைப் பற்றி (இருவரும்) சொல்லினர், (அதற்கு) கன்னி - அந்தக் கன்னிகை, அறிவினில் உயர்ந்தோர் - (உங்கள்

இருவரில்) ஞானத்தினுல் சிறந்தவர், கடிசெய்து - (என்னை) மணஞ் செய்து கொண்டு, இன்பம் உண்டிடும் என்றனள் - இன்பத்தை அநுபவிக்கட்டும் என்று கூறினள்: (அதனைக் கேட்டவுடன்) உபையர் - இருவரும், அறிவில் உயர்ந்தவனு நீ என்று-ஞானத்தில் (என்னைக் காட்டிலும்) சிறந்தவனு நீ என்று முரணி, வாதம் கொண்டு - வாதிட்டு, (பின்) இரணியன் மகன்பால் கூறினர் - பிரகலாதனிடம் (விஷயத்தைத்) தெரிவித்தனர்: அவன் - அந்தப் பிரகலாதன். உரைக்கக் கூடாது ஏகி - அவ்விருவர்க்கும் மறுமொழி கூறமுடியாது (அவ்விடத்தினின்று) சென்று; ஒள் தவன் காசிபற்கு உணர்த்த - மிக்க தவத்தைச் செய்த காசியப முனிவர்க்கு (விஷய முற்றும்) சொல்ல, அவன் - அந்தக் காசியபர், - 'வழுவில் பவம்' - 'நான் தப்பாக மறுமொழி சொல்ல நேரின் பாவமுண்டாகும்': (ஆகவே) பிறர்பால் உணர்க - பிறரிடத்துச் சென்று சொல்லித் தக்க மறுமொழித் தீர்ப்புத் தெரிந்து கொள்க,' என்று - என்று கூறி, உய்ப்ப - (அந்தப் பிரகலாதனை) அனுப்பிவிட; (எ.று). "ஊரணிகி" என மேலைக் கவியிற் குளகமாய்த் தொடரும்.

பிரகலாதன் மறுமொழி உரைக்கக் கூடாமைக்குக் காரணம் - அவனுக்கேற்பட்ட தருமசங்கடம். "கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாதவனுக்கும் தப்பாக மறுமொழி சொல்லுகிறவனுக்கும் மறுமையில் வரும் உலகங்கள் யாவை" என்பது அவனுக்கேற்பட்ட பிரசினை. இதனைக் கேட்டு உண்மையறியக் காசியபரிடம் சென்முன். அவர் "கேட்ட கேள்விக்கு மறுமொழி தெரிந்திருந்தும் விருப்பினு லாவது வெறுப்பினுலாவது அச்சத்தினுலாவது கேள்விகளுக்கு உத்தரஞ் சொல்லாமல் வழுவினவன் பல பாவங்களுக்கு ஆளாகிருன்" என்று மட்டும் கூறி, மேலும் உணரப் பிறர்பாற் செல்லுக என்று அனுப்பினுர் என்பது ஈண்டு ஈற்றிரண்டடிகளால் அறியவேண்டிய விவரம். உபையர் - வடசொல். (112)

113. ஊரணிகி தன்னறிவா றுபையர்பயில்
விஞ்சைதிற முசாவி யாராய்ந்
தேரணிதன் மகனென்று மிருபிறப்போன்
மகனென்று மிரண்டி லானுய்ப்
பேரணியு மிரணியன்சேய் பேரறிவின்
முனிமகனே பெரியோ னென்றும்
வாரணியு முலைக்கவனே வரனென்றுஞ்
சுரர்முதலோர் மதிக்கச் சொன்னுன்.

(இ-ள்) ஊர் அணிகி (அனுகி) - (பிரகலாதன்) தன்னூருக்கு வந்து சேர்ந்து, தன் அறிவால் - தன் சுய அறிவினைக் கொண்டு, உபையர் பயில் - (விரோசனன், ஸுதன்வா) இருவரும் கற்கின்ற, விஞ்சைதிறம் - வித்தைகளின் திறமையினை, உசாவி - வினக்கள் கேட்டு அறிந்து, (பின்னர்) ஆராய்ந்து - (இருவர் அறிவின் தரத் தினையும்) ஆய்ந்து பார்த்து, ஏர் அணி தன் மகன் என்றும் - அழகு பொருந்திய தன் புத்திரன் என்று விரோசனனையும், இருபிறப்போன் மகன் என்றும் - அந்தணனுகிய ஆங்கிரஸின் புத்திரன் என்று ஸுதன்வாவையும், இரண்டு இலானுய் - பேதம்பட நோக்காத வனுய், (பட்சபாதமின்றி) பேர் அணியும் இரணியன் சேய் - பிரசித்தி பெற்ற அந்தப் பிரகலாதன், பேரறிவில் முனிமகனே பெரியோன் என்றும் - அறிவு உயர்ச்சியில் ஸுதன்வாவே மிக்கவன் என்றும், (அதனுல்) வார் அணியும் முலைக்கு அவனே வரன் என்றும் - கச்சணிந்த முலையினையுடைய கன்னிகைக்கு அந்த ஸுதன்வாவே (கணவனுக) வரித்தற்குரியவன் என்றும், சுரர் முதலோர் மதிக்க - தேவர்கள் முதலானேரும் (தீர்ப்பினைப்) பாராட் டுப்படி, சொன்னுன் - வழங்கினுன்; (எ று)

'அனுகி' என்பது 'அணிகி' என எதுகை நோக்கி வந்தது. இனி, 'அணிமை' என்ற பண்புப் பெயர் விகுதி கெட்டு இங்ஙன் வந்தது எனினுமாம். இரண்டு இலான் - பேதம்பட நோக்குதல் இல்லாதவன்; நடுவுநிலைமையுடையான். முலை - சினையாகுபெயர். அசுரனுயிருந்தும் நடுவுநிலைமை தவருது தீர்ப்புச் சொன்னதை மதித்துச் சுரரும் பாராட்டினராதலின், அவர்களைத் தனியே விதந்து கூறினபடி. (113)

154. தேர்ந்தவரு மொருவழக்கைத் தெளிந்துரைக்க
மாட்டாமற் றியங்கா நின்ருர்
ஓர்ந்தவனீ நண்பனுக்கா யோரமுரைத்
தனையோயென் றுறுக்கா நின்ற
ஆர்ந்தவறி வினனைமுனிந் தரவுயர்த்தோன்
இளவலைப்பார்த் தனுச! தொண்டிற்
சேர்ந்தவர்தூ சுரிகெனவத் தீயனுமங்
குரிந்திடுவான் சேர்ந்த போதில்.

(இ-ள்) தேர்ந்தவரும் - நன்கு கற்றுத் தேர்ந்த காசியபர் போன்ருேரும், ஒரு வழக்கை - ஒரு வியவகாரத்தை, தெளிந்து உரைக்க மாட்டாமல் - ஆய்ந்து முடிவு கூற முடியாமல், தியங்கா நின்ருர் - திகைத்து நின்ருர்கள்: ஓர்ந்தவன் நீ - நீயும் ஆய்ந்து

பார்ப்பவன் தான்: (இருந்தாலும் இப்போது) நண்பனுக்கா - சிநேகிதனுகிய துரியோதனனுக்காக (ப்பரிந்து) ஓரம் உரைத்தனையே - பட்சபாதமாகப் பேசினுயே", என்று—, ஒறுக்கா நின்ற - கடிந்து கொண்ட, ஆர்ந்த அறிவினனை - நிறைந்த ஞானவானுகிய விதுரனை, அரவுயர்த்தோன் - துரியோதனன், முனிந்து - கோபித்து, (பின்னர்) இளவலைப் பார்த்து - துச்சாதனனை நோக்கி; "அனுச! - தம்பி! தொண்டில் சேர்ந்தவர் - அடிமைப்பட்டவர்களாகிய இப் பாண்டவர்களையும் அவர்தம் மனைவியையும், தூசு உரிக என - வஸ்திரங்களை உரித்து விடுவாயாக என்று கட்டளையிட, அ தீயனும் - அந்தத் துட்டனும், அங்கு - அப்போது அவ்விடத்து, உரிந்திடுவான் - (ஆடைகளை) உரியும் பொருட்டு, சேர்ந்த போதில் - நெருங்கிய சமயத்தில்; (எ.று). இது மேலைக் கவியில் வரும் 'அனிலன் மகன் ............ அழன்று' என்பதனேடு குளகமாய்த் தொடரும்.

ஓரம்-பட்சபாதம். ஒருபக்கம் கோடி யுரைத்தல். உரிந்திடுவான்-வானீற்று வினையெச்சம். (114)

### 115. சினங்கொண்ட வீமார்ச்சுனர்களைத் தருமன் தணித்தபின், ஐவரும் தமது உத்தரீயங்களைத் தாமே கொடுத்தல்

பொருமனிலன் மகனரசன் புகன்மொழிகேட்
டழன்றவையோர் புந்தி சோரத்
தருமன்விச யனைநோக்கித் தண்டினைநோக்
கிடநரனுந் தனுவை நோக்க
ஒருமனதி னிளையோரி னுருப்பமவித்
தணிமுரச முயர்த்தோன் ருமை
வருமருமத் துத்தரிகம் வாங்கியவன்
கேட்குமுன வழங்கி னுரே.

(இ-ள்) பொரும் அனிலன் மகன் - போர்செய்தலில் வல்ல வாயு புத்திரனுன வீமசேனன், அரசன் - துரியோதனராசன், புகன்ற மொழி கேட்டு - சொன்ன வார்த்தையினைக்கேட்டு, அழன்று - நெருப்புப்போலக் கொதித்து, அவையோர் புந்திசோர - சபையிலுள்ளோர் மனந் தளரும்படி, தருமன் விசயனை நோக்கி - தருமனையும் அருச்சுனனையும் (கண்ணுல்) பார்த்து, (பின்) தண்டினை நோக்கிட - தன்கதாயுதத்தைப் பார்த்திட, (அதே சமயத்தில் அதுகண்டு) நரனும் - அருச்சுனனும், தனுவை நோக்க - காண்டீபம் என்னுந் தன்

வில்லினைப் பார்க்க, (அப்போது) ஒரு மனதின் இளையோரின் - ஒருமித்த மனமுடையவர்களான தம்பிமாரின், உருப்பம்-கோபத்தை, அணிமுரசம் உயர்த்தோன் - அழகிய முரசக்கொடியை யுயரத் தூக்கிய தருமபுத்திரன், அவித்து-தணித்து, தாம் ஐவரும்-தாங்கள் ஐந்துபேரும் (ஒருசேர), மருமத்து உத்தரிகம் வாங்கி - மார்பிலிருந்த உத்தரீயங்களைக் களைந்து, அவன் - அத்துச்சாதனன்; கேட்கும் முனம்-கேட்பதற்கு முன்னாலேயே (முந்திக்கொண்டு), வழங்கினர்- கொடுத்தார்கள்; (எ.று).

வீமன் தருமனையும் விசயனையும் நோக்கியது - அவர்களது கருத்தையறிவதற்கு. தன் தண்டினை நோக்கியது - இப்பொழுது பகையைச் சங்கரித்து விடுவோமா என்ற குறிப்பினது; நரன் தனுவை நோக்கியதும் - சங்கரித்தற் குறிப்பினதே. தம்பியர்கள் தருமன்றன்னோடு மாறுபடாத மனமுடையவர்களென்பதை 'ஒரு மனதின் இளையோர்' என்பதால் குறித்தார். இனி 'ஒருமனதின் இளையோர்' என்பதற்கு - ஒத்த கருத்துடைய நகுலசகதேவர்கள் எனக்கொள்ளினுமாம். அஞ்ஞான்று அத்தம்பியர் நால்வரையும் கோபந்தணியுமாறு தருமன் சாந்தப்படுத்தினன் எனக்கொள்க. துச்சாதனன் வந்து கேட்டு வலியக் களைவதற்கு முன்னமே கௌரவமாகத் தாமே கொடுத்துவிடுவது நலமெனக்கருதித் தாமே தமது உத்தரீயங்களைக் களைந்து கொடுத்தனரென்க. இனி, 'தீயாரைக் காண்பதுவும் தீது' என்றபடி, அவன் தொடுதலும் தீதாதலின், தாமே கொடுத்தனர் என்னவுமாம். (Cp. Shakespeare If you touch pitch you will be defiled.) உத்தரிகம் = உத்தரியம்: உத்தரீயம் - வடசொல்: மேலாடை யென்று பொருள்படும்; (அரையாடை அந்தரீயம் எனப்படும்), (115)

**116. துச்சாதனன் திரௌபதியைத் துகிலுரிய ஈர்த்தபோது அவள் எம்பெருமானாகிய கிருஷ்ணனைத் தியானித்தல்.**

சொற்கலைவி லாருதவுந் தூசினைக்கொண்
டழன்மகத்திற் றோற்றஞ் செய்தாட்
பொற்கலையஞ் சாதுரிவான் புந்தியிலான்
றொட்டீர்த்த பொழுதி னேதும்
வற்கலைமா தவர்க்கரிய மாதவன்று
மரைப்பதத்தை மனங்கொண் டீரப்
பற்கலைமா மதிமுகத்தாட் பங்கயக்கை
சிரங்குவித்துப் பணிந்திட் டாளே.

(இ-ள்) சொற்கு அலைவு இலார் - புகழுக்குச் சலனம் இல்லாத ஐவரும், உதவும் - (தாமாகவே) வழங்கிய, தூசினைக்கொண்டு - உத்தரீயங்களைப் பெற்றுக்கொண்டு, (பின்) அழல் மகத்தில் - யாகாக்னியில், தோற்றம் செய்தாள் - பிறந்தவளாகிய திரௌபதியின், பொற்கலை - அழகிய ஆடையை, அஞ்சாது - சிறிதும் பயமில்லாமல், உரிவான் - கவரும்படி, புந்தியிலான் - அறிவிலியாகிய துச்சாதனன், தொட்டு - (அவளைத்) தீண்டி, ஈர்த்த பொழுதின் - இழுத்தபோது, ஓதும் - வேதங்களையோதுகின்ற, வற்கலை - மரவுரிதரித்த, மா தவர்க்கு அரிய - சிறந்த தவமுனிவர்களுக்கும் கிட்டுதற்கு அரிய, மாதவன் - (திருமாலாகிய) ஸ்ரீகிருஷ்ணனுடைய, தாமரைப்பதத்தை - செந்தாமரை மலர்போன்ற மெல்லிய பாதங்களை, மனம் கொண்டு - தனது இதயத்தில் பதியவைத்து, ஈரம் பல் கலை மா மதி முகத்தாள் - குளிர்ந்த பதினாறு கலைகளோடு கூடிய சிறந்த பூரண சந்திரன் போன்ற அழகிய முகத்தையுடைய திரௌபதி, பங்கயக் கை - தனது தாமரை மலர்போன்ற கைகளை, சிரம் குவித்து - தலைக்குமேலே குவித்துக் கூப்பி, பணிந்திட்டாள் - (அஞ்சலி செய்து) வணங்கினாள்; (எ.று).

துச்சாதனன் தனது துகிலை யுரியத் தொடங்கியபோது தன்னைப் பாதுகாக்க வேண்டிய கணவர் ஒருவர்க்கு ஐவராயிருந்தும் மாற்றார்க்கு அடிமைப்பட்டு பரதந்திரராய்த் தன்திறத்தில் துணைபுரிய வலியற்று வாளா கிடப்பதைக்கண்டு திரௌபதி, கூப்பியகையளாய், திருமாலாகிய ஸ்ரீகிருஷ்ணனது திருவடித்தாமரைகளிடத்துத் தன் கருத்தினைச் செலுத்திப் பணிபவளாயினளென்பது அறியவேண்டிய விவரம். 'மகத்தான ஆபத்து நேருங்காலத்தில் பகவானாகிய திருமால் தியானிக்கத் தகுந்தவனென்று வசிஷ்ட முனிவர் கூறி யுள்ளதை நினைத்துத் திருமாலைக் குறித்துத் திரௌபதி முறையிடுப வளானாள்' என்று வியாசபாரதம் கூறும்.

சொல் - புகழ். அலைவு - அலைதல். சொற்கலைவிலார் - அழியாப் புகழ் படைத்தவர்: பாண்டவர். மா தவர்க்கு அரிய மா தவன் - சொற் பொருள் நயம்காண்க. (மா தவர் - சிறந்த தவத்தோர்; மா தவன் - இலக்குமிக்குக் கணவன்: திருமால்) தாமரைப்பதம் - உவமைத்தொகை. ஈரம் - குளிர்ச்சி. பல்கலை - பலகலை, பதினாறு கலைகள்: பூர்ணசந்திரன். மதிமுகம், பங்கயக்கை - உவமைத் தொகைகள். வற்கலை - வல்கலா, வடசொல். (116)

**117. திரௌபதி எம்பெருமானையே ரக்ஷகனாகக்கொண்டு முறையிடுதல்.**

நற்றுவரைப் பதிவாச னுமமா
யிரவமுத நாவுக் கின்பாய்ச்
சொற்றுவரை யருவியெனத் துணைவிழியின்
நீர்வாரத் தோற்று மெண்ணம்
அற்றுவரை யோவியம்போ னகநெகிழப்
புளகரும்ப வன்பிற் கூவுஞ்
சிற்றுவரை யிதழாள்சொற் சென்றிசைத்த
தெம்பெருமான் செவியி னம்மா.

(இ-ள்) நல் துவரைப்பதி வாசன் - நல்ல துவாரகைநகரில் வசிப்பவனாகிய ஸ்ரீகிருஷ்ணனது, நாமம் ஆயிரம் அமுதம்-அமிழ்தம் போன்ற ஆயிரம் பேர்களையும், நாவுக்கு இன்பாய் சொற்று - நாக்குக்கு இன்பம் சுரப்பதாய்ச் சொல்லி, வரை அருவி எனத் துணை விழியின் நீர்வார - மலையினின்று வீழும் அருவிபோல இரண்டு கண்களினின்றும் நீர்சொரிய, தோற்றும் எண்ணம் அற்று-தோன்றும் யோசனையொன்றுமில்லாமல், வரை-எழுதப்பட்ட, ஓவியம்போன்று-சித்திரம்போல் அசைவின்றி. அகம் நெகிழ - மனம் கரைந்து உருக, புளகு அரும்ப-மயிர் சிலிர்க்கப்பெற, வன்பில் கூவும் - வலிய குரலில் கதறுகின்ற, சிறு துவரை இதழாள் சொல்-சிறியதுவரை (தானியம்) போன்ற நிறம்படைத்த அதரத்தையுடைய திரௌபதியின் சொல் (கோவிந்தா! என்பது), எம்பெருமான் செவியில் - ஸ்ரீகிருஷ்ணன் காதில், சென்று இசைத்தது - போய் ஒலித்தது; (எ.று). அம்மா-வியப்பிடைச்சொல்.

"துவாரகாநிலய!" என்று கூப்பிட்டதற்கு ஏற்ப 'நல்துவரைப்பதிவாசன்' என்றது. துவரை - துவாரகா: வடசொற்சிதைவு. நாமம் ஆயிரம்-சகஸ்ரநாமம். வன்பிற் கூவுஞ்சொல்—"**கோவிந்தா**" என்றது. வன்பு - வலிமை: 'உரக்க' என்றபடி. அம்மா-வியப்பு: அத்தினபுரியில் கதறியசொல் துவாரகையிற் கேட்டதனாலாய வியப்பு தெரிவிப்பது. சிறு + துவரை = சிற்றுவரை. துவரை யிதழாள் - உவமைத்தொகை. இச்செய்யுள் - **திரிபு** என்னுஞ் சொல்லணி. (117)

## 118. ஸ்ரீகிருஷ்ணன் திரௌபதிக்கு ஆடைசுரக்க அருள்புரிதல்.

முன்னாக மூலமென முறையிடக்காத்
தவன்மாதின் மொழிகேட் டியார்க்குந்
தன்னாகந் தெரியாமற் றங்கைமனப்
பங்கயத்திற் றான்வந் தெய்தி
மென்னாகக் கொடிபடைத்தோன் மெலியவொன்றுக்
கொன்றுருவம் வெவ்வே றாகப்
பன்னாகம் வளரவருட் பண்ணியவ
ளபிமானம் பரித்திட் டானே.

(இ-ள்) முன் - முற்காலத்து, நாகம் மூலம் என முறையிட - கஜேந்திரன் என்னும் யானை (முதலையினால் கவ்வப்பட்டு) "ஆதிமூலமே" எனக் கூவியழைத்து முறையிட, காத்தவன் - (அப்போது) அதனை (முதலை வாயினின்று விடுவித்துக்) காத்தவனாகிய திருமால், மாதின் மொழி கேட்டு - திரௌபதியின் சொல்லாகிய "கோவிந்தா!" என்பதனைச் செவியுற்று, யார்க்கும் - எவருக்கும், தன் ஆகம் தெரியாமல்-தன் திருமேனி (கண்ணுக்குத்) தெரியாதபடி, தங்கை மனப் பங்கயத்தில்-சகோதரி முறையினளான திரௌபதியின் இதய தாமரையில், தான் வந்து எய்தி - தான் (விரைய) வந்து அடைந்து, மெல் நாகக்கொடி படைத்தோன் மெலிய - மெல்லிய நாகத்தைக் கொடியிலே எழுதிக் கொண்டவனாகிய துரியோதனன் வாடும்படி, பல் நாகம் - பல நற்புடவைகள், ஒன்றுக்கொன்று உருவம் வெவ்வேறாக வளர - ஒன்றற்கொன்று தமது அமைப்பில் பல நிறங்களைக் கொண்டு தனித்தனியாகப் பெருகி வர, அருள்பண்ணி - கிருபை செய்து, அவள் - அத்திரௌபதியினது, அபிமானம் - தன்மதிப்பை (மானத்தை), பரித்திட்டான் - தான் தாங்கிக் காப்பாற்றினான்; (எ,று).

'நாகம்' என்ற ஒரேசொல் பல பொருளில் வந்தது, **சொற்பின் வருநிலையணி.** (நாகம் - யானை, பாம்பு, நற்றூசு). இரண்டாமடியில் 'தன் ஆகம்' எனப் பிரியும். ஆகம் - உடல், தெரியாமல் மனம் எய்தியது - அந்தர்யாமியாய் என்றபடி. "தங்கை", - அத்தையின் மருமகளைத் தங்கை முறையினளாகக் கொண்டு கூறியது: மற்றும், சுபத்திரையோடு ஒரு நிகராகப் பாவித்தமையுமாம். மனப்பங்கயம் - உருவகம்: மெல் நாகம் - எதிர்மறையிலக்கணையாக வன்மையைக் காட்டி வந்தது எனலாம். பரித்தல் - தாங்குதல். அவள் மானங் குலையாதபடி தான் தாங்கினான் என்றபடி. இனி, "மாதின் மொழி"

என்றவிடத்துக் காணவேண்டிய விவரம்:- மாதின் மொழி - ''கோவிந்தா'' என்று கூப்பிட்டது, (கோவிந்தன்—கோ - பசுக்களை, விந்தன் - காப்பாற்றினவன் என்று பொருள்.) எம்பெருமானுக்குச் சகஸ்ரநாமங்களிருக்கவும், கோவிந்தன் என்ற இப்பெயரால் விளித்தது—இந்திரன் விடாப்பெரு மழையைப் பொழிவித்தபோது தம்மாலும், தம்மைப் பாதுகாத்தற்கு உரிய இடையராலும் காக்க முடியாமல் தவித்து அலைகிற நிலையிலே பசுக்களையெல்லாம் யாதொரு குறைவுமின்றிக் கோவர்த்தன மலையைக் கொண்டு உனது பேரருளினாற் காப்பாற்றியது போலவே, என்னாலும் என்னைப் பாது காக்க வேண்டிய பர்த்தாக்களாலும் பாதுகாக்க முடியாமல் தவித்து அநந்யகதியாய் உன்னையே சரணமாக நம்பியிருக்கிற என்னை நீ பேரருள் கொண்டு காக்கவேண்டுமென்ற குறிப்பு பற்றியது. (இனி அரைகுலையத் தலைகுலைய அலமாக்கும்படியான முடிசூடின பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறாள்; 'கோவிந்த - நீ கோவிந்தாபிஷேகம் பண்ணிக் கோப்தாவாயிருக்க, ஒருவர் கூறை எழுவருக்குப் படி யிருப்பதென்? 'கோவிந்த - என்னுடைய ரட்சணத்துக்கு மலை யெடுக்க வேணுமோ? கண்ணாலே நோக்க அமையாதோ' என்ற வியாக்யான வாக்யங்கள் இங்குக் காணத்தக்கன). 'திரௌபதிக்கு ஆடை சுரந்தது கோவிந்தநாமமிறே' என்றதும் நினைக.

நாகம் மூலமென முறையிடக்காத்த கதை :— இந்திரத்யும்நன் என்னும் அரசன் அகஸ்தியர் சாபத்தால் யானையாய்ப் பிறந்தனனா யினும், முன்செய்த விஷ்ணு பக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாடோறும் ஆயிரந்தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்து வருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப் போய் இறங்கியபொழுது அங்கே பெரிய முதலையாய்க் கிடந்த ''ஹூஹூ'' என்னும் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திரன் ''ஆதிமூலமே'' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள் செய்தனனென்பதாம்.

மூலம் - ஆதிமூலம் என்பதன் முதற்குறை. கேட்டியார்க்கும் - குற்றியலிகரம். பல்+நாகம்—பன்னாகம் : 'னலமுன் றனவும்......... தநக்களாயுங்காலே' என்பது விதி. (118)

**119. துச்சாதனன் கைசலித்து நிற்க, திரௌபதியை அனைவரும் நன்குமதித்தலும், தேவர்கள் பூமழை பொழிதலும்.**

ஒன்றெனக்கொண் டுரிந்தோனு மோய்ந்துகரஞ்
சலித்திடவெண் ணெழிந்த வாசங்
குன்றெனவோங் கியகூடங் கொள்ளாமற்
குவிந்ததைக் கோடி போகிடச்
சென்றெடுத்து மாளாம திகைப்பகுலங்
கற்பிவற்றின் தெய்வ மிம்மா
தென்றெவரும் பணியபுகழ்ந் திமையோரும்
மலர்மழைபெய் திடநின் ருளே.

(இ-ள்) ஒன்று எனக்கொண்டு உரிந்தோனும் - ஒரு ஆடை (புடவை) தான் பூண்டுள்ளாள் என எண்ணி அதனையுரிந்த துச்சாதனனும், ஓய்ந்து - களைத்துப் போய், கரம் சலித்திட - கை யிளைப்படைந்து நிற்க, - எண் ஒழிந்த வாசம் - கணக்கற்ற வஸ்தி ரங்கள், குன்று என ஓங்கி - மலைபோல வுயர்ந்து, அ கூடம் கொள்ளாமல் - அந்தச் சபாமண்டபமும் இடங்கொள்ளாதபடி, கோடி போகிட குவிந்ததை - கோடியென்ற எண்ணையும் கடந்து போய்க் குவிந்த ஆடைகளை, சென்று எடுத்தும் - (வீரர்கள் பலர்) போய் எடுத்துக் கொண்டிருந்தும், மாளாமல் - முடிவுருமல் போகவே, திகைப்ப - அதிசயத்தால் திகைத்து நிற்ப - (அப்போது சபையிலிருந்த) எவரும் - அனைவரும், இ மாது - இந்தத் திரௌபதியே, குலம் கற்பு இவற்றின் தெய்வம் - மரபு, கற்புநிலை என்ற இரண்டினுக்கும் தெய்வம் போல்வாள், என்று பணிய - என்று பாராட்டி வணங்க, இமையோரும் - தேவர்களும், மலர் மழையைப் பெய்திட - பூமாரியைப் பொழிய, நின்ருள்—; (எ.று).

துச்சாதனன் ஓய்ந்தனனேயன்றி ஆடை சுரத்தல் ஓய்ந்திலது என்றவாறு. திரௌபதியைச் சாதாரணமானவளென்று எண்ணி யிருந்த சபையோர் அனைவரும், இப்பொழுது கண்கூடாக நிகழ்ந்த புதுமையைக் கண்டு அவளது மகிமையையுணர்ந்து, அத்திரௌபதி யைத் தெய்வமாகவே கருதிப் பணிந்தனர். தனது கற்புநிலையால் தானே மானங்காத்துக் கொண்டதனுல், திரௌபதியை "கற்பி னுக்குத் தெய்வம்" என்றும், துச்சாதனன் செய்த தீச்செயலால் தனது குலத்திற்கு வசைமொழி சிறிதும் நிகழாது புகழை மிகுவித்து நிற்றலால், 'குலத்திற்கும் தெய்வம்' என்றும் கூறினர். "தற்காத்துத்

தற்கொண்டாற்பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற திருக்குறள் இங்குக் கருதத்தக்கது. கற்பின் சிறப்பைக் கண்ட கொண்டாட்டத்தினல், இமையோர் பூமழை பொழிவாராயினர், இமையோரும் உம்மை - உயர்வு சிறப்போடு இறந்தது தழுவியது. வாசம் - வஸ்திரம்: வடசொல். மலர்மழை - புஷ்பவர்ஷம். (119)

### 120. திரெளபதியின் வருத்தத்தை நோக்கி வீமசேனன் சினந்து ஆயுதமெடுத்துத் துரியோதனுதியரைப் போருக்கு அழைத்தல்.

அண்டர்களும் வியந்திடுங்கற் பருந்ததிதங்
கஊப்பார்த்தங் கரற்றுந் துன்பங்
கண்டனிலன் மகஞற்ருக் கனன்றுகதை
தொட்டெமுஞேன் கழறும் வாய்மை
கொண்டடங்கி யிருந்தேமியாங் கொடி யீருங்
கஊப்பொருளாய்க் குறித்தோ மில்லை
மண்டமரெம் முடனியற்ற வருதீர்நூற்
றுவருமென வகுத்திட் டானே.

(இ-ள்) அண்டர்களும் - தேவர்களும், வியந்திடும் - அதிசயிக்கத்தக்க, கற்பு அருந்ததி - கற்பினில் அருந்ததியை நிகர்த்திடும் திரெளபதி, தங்களைப் பார்த்து - தன் கணவன்மார்களாகிய ஐவரையும் பார்த்து, அங்கு - அச்சபையில், அரற்றும் துன்பம் கண்டு - கதறுகின்ற துயரத்தைப் பார்த்து, அனிலன் மகன் - வாயு புத்திரஞன வீமசேனன், ஆற்ருக் கனன்று - பொறுக்க முடியாது கோபித்து, கதை தொட்டு - தன் (கையிலிருந்த) கதாயுதத்தைத் தொட்டு, எம் முஞேன் - எமது தமையஞகிய தருமபுத்திரன், கழறும் - சொன்ன, வாய்மை கொண்டு - வார்த்தைகளை உளத்திலேற்றி, யாம் அடங்கியிருந்தேம் - நாங்கள் பொறுத்துக் கொண்டு பொங்கியெழாமல் இருந்தோம்: கொடியீர் - துட்டர்களே! உங்களைப் பொருளாய் குறித்தோம் இல்லை - உங்களை ஒரு பொருளாகக் கொண்டு மதித்தோமில்லை: மண்டு அமர் எம்முடன் இயற்ற - நெருங்கிச் செய்கின்ற போரை எங்களோடு செய்ய, நூற்றுவரும் - நீங்கள் நூறுபேரும், வருதீர் - வாருங்கள்: என - என்று, வகுத்திட்டான் - அறை கூவிஞன் ; (எ.று).

''நாங்கள் போர்புரிந்து உங்களை இதுவரையிலும் அழிக்காதிருந்தது, தருமபுத்திரனது கட்டளைக்குக் கட்டுப்பட்டேயல்லாமல்

உங்களை வலிமையுடையோரென்று பிரமித்து உங்களை ஒரு பொருளாக எண்ணி அஞ்சியன்று: இப்பொழுது அவ்விடயம் தெற்றென விளங்குமாறு நீங்கள் நூற்றுவரும் ஒருங்கு சேர்ந்து எம்முன்னே போர்க்கு வாருங்கள்'' என வீமன் துரியோதனுதியரை அறை கூவினனென்க. கதை தொட்டது - போர்செய்யக்கருதி. இருந்தேமியாம் - ''தன்னொழிமெய்ம் முன் யகரம் வர இகரந் துன்னிற்று.'' (120)

### 121. திரௌபதியைத் தன்மடிமீது இருத்துமாறு துரியோதனன் துச்சாதனனுக்குக் கட்டளையிடுதல்.

அரற்றினையாட் கற்பினையும் அறுவைவளர்
விதத்தினையும் அறையும் வீமன்
உரத்தினையும் அறிந்திடலாம் உவளையெம்பி
யென்மடிமீ துறவை யென்று
சிரத்தினையஞ் சலிசெய்யான் செப்பலுமங்
கரிவையுளந் திடுக்கிட் டோதெம்
பரத்தினையும் மறவாளாய்ப் பலருநடுக்
குறவிதனைப் பகர்வ தானுள்.

(இ-ள்) 'அரற்று இனையாள் கற்பினையும் - கதறுகின்ற இந்தத் திரௌபதியின் கற்பின் திறத்தினையும், அறுவை வளர் விதத்தினையும்-(அவளது) ஆடை (அவிழ்க்க அவிழ்க்கக் குறைபடாமல்) மேன்மேல் வளர்கிற இரகசியத்தின் திறனையும், அறையும் வீமன் உரத்தினையும் - அறைகூவுகின்ற வீமனது வலிமையினையும், அறிந் திடலாம் - (ஒரு சேரக்) கண்டிடலாம்: 'எம்பி!—என் தம்பியே! உவளை-அந்தத் திரௌபதியை, என் மடிமீது உற வை-என்னுடைய தொடையின்மீது (இழுத்துக்கொண்டு வந்து) நன்கு பொருந்த இருக்க வைப்பாய்' என்று, சிரத்தினை அஞ்சலி செய்யான் - (அவள் மேன்மை யறிந்தும்) தனது தலையை வணங்காதவனுய், செப்பலும்-சொன்னவுடனே, அங்கு-அப்போது, அரிவை - அந்தத் திரௌபதி, உளம் திடுக்கிட்டு-மனம் நடுங்கி, ஓதும் எம் பரத்தினையும் மறவாளாய் - நான் தினந்தோறும் துதித்து ஓதுகின்ற என் பரம் பொருளான கிருஷ்ணனையும் மறவாதவளாய், பலரும் நடுக்கு உற-அந்தச் சபையிலிருந்த பல்லோரும் கேட்டு அஞ்சும்படி, இதனை - இந்தச் சாபத்தை, பகர்வதானுள் -சொல்லியிட்டாள்; (எ.று).

திரௌபதியின் கற்புநிலையைப் பின்னும் பரிசோதிக்கக் கருதியும், ஆடையுரிந்த காலத்து அதனை மேன்மேலும் சுரக்கச் செய்ததுபோல இப்பொழுது நான் செய்யும் இதற்கு அத்திரௌபதி என்ன பரிகாரஞ் செய்வாளெனக் காண நினைத்தும், வீரவாதம் பேசும் வீமன் நான் இவ்வாறு செய்தால் என்ன செய்வான் எனக் காணவெண்ணியும், துரியோதனன் திரௌபதியைத் தன் தொடைமீது இருத்துமாறு துச்சாதனனுக்குக் கட்டளையிட்டானென்க. மேன்மேல் தெய்வானுக் கிரகத்தால் ஆடை வளர்ந்தமையொன்றைக் கொண்டே திரௌபதி யினது மேன்மைகளையெல்லாம் அறிந்து அவளைத் தலையால் வணங்கியிருத்தல் வேண்டும் துரியோதனன்: ஆனால் அங்ஙனம் செய்தானில்லை என்பது கூறப்பட்டது. துரியோதனன் தனது துகிலையொதுக்கி இடத் தொடையைக் காட்டி அதில் இருக்குமாறு குறிப்பாலுணர்த்த, திரௌபதி சபித்தனள் என முதனூல் கூறும். ஸ்ரீகிருஷ்ணபகவானை 'ஓது எம் பரம்' என்று நூலாசிரியர் குறித்தது அவர் கிருஷ்ணன் மாட்டுக் கொண்ட காழ்த்த பக்தியைக் காட்டும். இது கவிக் கூற்று. பரம் - பரம்பொருள். கிருஷ்ணனை மறவாளாய் என்றது - அவன் அநுக்கிரகத்தினாலேயே தன் மானத்தைக் காத்துக் கொண்டாளாதலின், அவன் சகாயமிருந்தால் தனது கோரிக்கை இனிது முற்றுப்பெறுமெனக் கருதி, சாபமிடும்போதும் கிருஷ்ணனை மறவாது தியானித்தனள் என்பதையறிவுறுத்தற்கு என்க, உவள் - முன்நிற்பவள் எனச் சுட்டுப் பெயர். (121)

### 122. திரௌபதி துரியோதனனுக்கிட்ட சாபமும், அவள் துச்சாதனனைக் குறித்திட்ட சபதமும்.

இருந்திடுகென் றெனைச்சொறுடை யிகலோன்கைக்
கதையாற்பட் டிற்றான் புட்கள்
அருந்திடுமா றரசாவி யகல்கவெனச்
சபித்தெனையீர்த் தவையி னுடை
வருந்திடுமா றுரித்தானை மணிமௌலி
முடிதுணித்து மறலிக் காவி
விருந்திடுநா ளல்லாமல் விரித்தகுழல்
இனியெடுத்து வீக்கே னென்றாள்.

(இ-ள்) இருந்திடுக என்று - 'மடியிலேயிருந்திடு' என்று, எனை - (கற்பினுக்கருந்ததியாகிய) என்னை, சொல் - (காட்டிச்) சொன்ன, துடை - (இடத்) தொடையானது, இகலோன் - வலிய வீமசேனனது, கைக் கதையால் பட்டு - கைக் கொண்ட கதாயுதத்தினால்

அடிபட்டு, இற்று - நொருங்கி வீழ்ந்து, ஊன் - அந்த மாமிசத்தை, புட்கள் - பறவைகள், அருந்திடுமாறு - (வாயலகினுற் குத்தித்) தின்னுமாறு, அரசு - துரியோதன ராசனது, ஆவி - உயிரானது, அகல்க - பிரிந்து போகட்டும், என - என்று, சபித்து - சாபமீந்து,- (பின்னர் மேலும்) எனை - என்னை, ஈர்த்து - (தாயின் அந்தப்புரத்தி ருந்து) இழுத்து வந்து, அவையின் - அரச சபையிலே, வருந் திடுமாறு - நான் துயருற்று முறையிடுமாறு, ஆடை உரித்தானை - வஸ்திரத்தை அவிழ்க்க முயன்றவனை, (துச்சாதனனை). மணி மௌலி முடி துணித்து - மணிகள் பதித்த கிரீடத்தைச் சூடியுள்ள தலையைத் துண்டிக்கச் செய்து, மறலிக்கு - யமனுக்கு, ஆவி - அவனது உயிரை, விருந்திடு நாள் அல்லாமல் - விருந்தாக உணவூட்டும் நாளிலன்றி, இனி - இனி இன்றைப் பொழுது, விரித்த குழல் - நான் விரித்துவிட்ட இந்தக் கூந்தலை, எடுத்து - தொகுத்தெடுத்து, வீக்கேன் - முடிக்கமாட்டேன், என்றுள் - என்று பிரதிஜ்ஞை செய்தாள்; (எ.று).

சொல் துடை - காட்டிச் சொன்ன தொடை: எனவே, இடத் துடை முதனூலின்படி. சொல் + துடை = சொறுடை: "னலமுன் றனவும்.........ஆகும் தநக்களாயுங்காலே" என்பது விதி. இருந்திடு கென்று - வினைமுற்றின் அகரவீறு தொகுத்தல். அகல்கவென - வகரவுடம்படுமெய் பெற்று வந்தது. உரித்தானை-வினையாலணையும் பெயர். மறலிக்கு ஆவி விருந்திடுதல்-இறக்கச் செய்தல்: பிறிதின விற்சி. வீக்குதல்-கூட்டி முடித்தல். (122)

### 123. வீமசேனனது சபதம்.

பெண்ணீர்கொண் டிடுவாளைப் பேரவையி
    லவமதித்தோன் பேதை மார்கட்
கண்ணீர்கொண் டழவவனைக் கனிட்டரொடு
    மிகுத்தாடைக் களைந்தோ னங்கப்
புண்ணீர்கொண் டிடாதுகரப் புனலருந்தேன்
    வாவிகதை புடைத்து மீதாந்
தண்ணீர்கொண் டென்றுகந் தணிப்பலெனத்
    தண்டவனிச் சபதஞ் சொற்றுன்.

(இ-ள்) 'பெண்ணீர் (மை) கொண்டிடுவாளை-பெண்களுக்குரிய நாற்குணங்களையும் கொண்டிலங்கும் திரௌபதியை, பேரவையில் - பெரிய அரச சபையில், அவமதித்தோன் - அவமதித்துப் பேசிய

துரியோதனனது, பேதைமார்கள் - மனைவிமார்கள், கண் நீர் கொண்டு அழ-கண்கள் நீர் நிரம்பிவழிந்து அழும்படி, அவனை - அந்தத் துரியோதனனை, கனிட்டரோடும்-அவன் தம்பியர் தொண்ணூற்றென்பதின்மரோடும், இகுத்து-கொன்று, ஆடை களைந்தோன் அங்கம் - (அவர்களுள்) திரௌபதியின் வஸ்திரத்தைக் களைந்த வனுகிய துச்சாதனனது உடலின், புண்ணீர் கொண்டிடாது - இரத்தைப்பெருக்கை (அள்ளிக்) குடிக்காமல், கரப் புனல் அருந்தேன் - (எனது) கைகளால் (அள்ளி) நீரைப் பருகேன்: (அப்படி ஒருவேளை தாகம் எடுத்து அவசியமாக நீர் பருகநேர்ந்த பொழுது), வாவி - தடாகத்திலுள்ள நீரை, கதை புடைத்து-(என் கைக்) கதையால் மோதியடித்து, மீது ஆம் தண்ணீர் கொண்டு - மேலெழுந்து தெறித்துவிழுகின்ற நீர்த்துளிகளைக் குடிக்கும் நீராகக் கொண்டு பருகி, என் தாகம் தணிப்பல்-என் தாகத்தைத் தணித்துக் கொள்வேன்' என - என்று, தண்டவன் - கதாயுதமேந்தும் வீமசேனன், இ சபதம் சொற்ருன்-இந்தச் சபதத்தை (அவையோர் அறியச்) சொன்னுன்; (எ.று).

துரியோதனனைப் போலத் துச்சாதனனும் திரௌபதியின் விஷயத்திற் பெருந்தீங்குகளை நேரே செய்தனனுதலால், அத் துச்சாதனனைக் குறித்தும் வீமன் கடுங்கோபங்கொண்டு தனியே சபதஞ் செய்கின்ருன். துச்சாதனனைக் கொன்று அவனுடம்பினி ரத்தத்தைக் குடிப்பதற்கு முன்னம் கதையாற் புடைத்து அங்குத் தெறித்த நீரைப் பிராணுதாரமாகப் பருகுவதன்றி, கையால் நீரையெடுத்துப் பருகுவதில்லையென்று வீமன் சபதஞ் செய்தவாறு.

நீர் - 'நீர்மை' என்ற பண்புப்பெயர் விகுதிகெட்டு நின்றது. கொண்டிடுவாள் - கொண்டவள்: வினையாலணையும் பெயர். புண்ணீர்-இரத்தம். (123)

**124. அருச்சுனன் சகதேவன் நகுலன் இவர்களின் சபதம்.**

சொல்லாறங் களைப்பலகா றுணிப்பனெனுங்
    கன்னனையான் றுணிப்ப னென்று
வில்லால்வல் லவன்புகன்ருன் மிளிர்வாள்சா
    தேவனெடு விறன்மா வல்லோன்
வல்லாறங் களைவென்ற மாமன்சவு
    பலனுயிர்க்கு மறலி யாமே
அல்லால்வே றியாரென்ருர் அவையோரிச்
    சபதமெளி தல்ல வென்ருர்.

(இ-ள்) சொல்லால்-வாய்வீரப்பேச்சினுல், பலகால்-பலதடவைகள், தங்களை-பாண்டவர்களாகிய தங்களை, துணிப்பன் - துண்டித்திடுவேன், எனும்-என்று (செருக்குக்கொண்டு) பேசும், கன்னனை-கர்ணனை, யான்-நான், துணிப்பன் என்று-கொன்றிடுவேன் என்று, வில்லால் வல்லவன்-வில்லில்வல்ல அருச்சுனன், புகன்ருன்-சபதஞ்செய்தான் : (பின்னர்) மிளிர்வாள் சாதேவனெடு - ஒளிவிடுகின்ற வாளாயுதத்தைக்கொண்ட சகதேவனெடு, விறல் மா வல்லோன் - வலிமைபெற்ற குதிரைகளைச் செலுத்துந்தொழிலில் வல்லவனுகிய நகுலனும் (சேர்ந்து இருவருமாய்), வல்லால் தங்களை வென்ற - சூதாடு கருவியினுல் தங்களைத் தோல்வியுறச் செய்த, மாமன் - சகுனி, சவுபலன் - (அவன் மகனுகிய) உலூகன் இவர்களது, உயிர்க்கு-பிராணனைப் போக்குதற்கு, (முறையே) மறலி-யமனுகுபவர் யாமே அல்லால் வேறு யார் என்ருர் - நாங்கள் இருவருமேயன்றி வேறு யாவருளர் (எவருமிலர்) என்று சபதஞ்செய்தார்; அவையோர் - (இச்சபத மொழிகளைக் கேட்ட) சபையிலிருந்தோர், இ சபதம் - இத்தகைய சபத வார்த்தைகள், எளிதல்ல-அற்பமானவையல்ல : (மிகப்பெரிதாகும்), என்ருர் - என்று மனமிரங்கிச் சொன்னுர்கள்; (எ.று).

துரியோதனன் துஷ்டகாரியஞ் செய்தற்குப் பெருந்துணையாய் நின்றதனுலும், தன்னைப் பலகால் வீரவாதம் பேசிப் போர்க்கு அறைகூவியுள்ளதனுலும்; 'கர்ணனைப் போரிற்கொல்வேன்' என்று அருச்சுனன் சபதஞ்செய்தான் : தமக்கு நேர்ந்த இவ்வளவு பெருந்தீங்குக்கும் பிரதானனுய் நிற்றலால் 'சகுனியைக் கொல்வேன்' என்று சகதேவன் சபதஞ்செய்தான். மற்றெல்லாரிடத்திலுங் காட்டில் மாயச்சூதாடி வென்ற இச்சகுனியினிடத்திலேயே மிக்க கறுவுள்ளதனுல் அச்சகுனியைக் கொல்வதோடு நில்லாமல் அவன் வமிசத்தையே கருவறுக்குமாறு ''அவன் புதல்வனுகிய உலூகனைக் கொல்வேன்' என்று நகுலனும் சபதஞ்செய்தான். சகாதேவன் சகுனியைக் கொல்லுமாறு சபதங்கூறிய பின்னரே நகுலன் இவ்வாறு சபதஞ்செய்ததாக முதனூல் கூறும். 'சவுபலன்' என்ற வடமொழி சுபலனது புதல்வன் என்று பொருள்படுவதுபோல. சுபலனது பேரவெனன்று பொருள்படுவதற்கும் உரியதாதலாலும், சகுனியைக் கொல்வேனெனச் சகதேவன் சபதஞ்செய்ததாக வந்துள்ளதனுலும், சகுனியின் புதல்வனுன உலூகனென்பவனைக் கொல்வேனென்று நகுலன் சபதஞ்செய்ததாக முதனூலிற் கூறியுள்ளதனுலும், இச்சொல்லுக்கு இவ்வாறு பொருளுரைக்கப்பட்டது. இச்சபதம் எளிதல்ல என்றது—இவ்வாறு சபதஞ்செய்தது தகுதியே என்ற குறிப்பினது. நகுலன் அசுவசாஸ்திரத்தில் வல்லவன் ஆதலின், ''விறன்மாவல்லோன்'' எனப்பட்டான். மோது போர்போல் சூது போராதலின், 'வல்லால் தங்களை வென்ற மாமன்' என்ருன்.

சகதேவன் சகுனி மாமனுயிர்க்கு மறலி, நகுலன் சவுபலனுயிர்க்கு மறலி என முறையே இயைத்துப் பொருள்கொள்க. (124)

**125. திரௌபதி அழுதபோது நிகழ்ந்த உற்பாதங்கள்.**

உறைவான்பெய் யாததிர்ந்த துதயனையூர்
கோள்வளைந்த தோரி கூய
தறைவான்மீன் பகல்விழுந்த தயர்மகசா
லையிற்குருதி யாய தாழு
நிறைவான்பொய் கையும்வறந்த நிலநடுங்கிற்
றொளியிழந்த நிருப ராகங்
குறைவான சிற்றிடையாள் கோச்சபையி
லழுதுள்ளம் குலைந்த போதே.

(இ-ள்) குறைவான சிறு இடையாள் - தேய்ந்து போன சிறிய இடையையுடைய திரௌபதி, கோச்சபையில் - அரச சபையில், அழுது - புலம்பி, உள்ளம் குலைந்த போது - மனம் அழிந்த சமயத்தில், வான் - வானம், உறை பெய்யாது-மழையைச் சிந்தாது, அதிர்ந்தது - இடித்தது: உதயனை - சூரியனை, ஊர் கோள் - பரிவேடம், வளைந்தது - மண்டலமிட்டது: ஓரி - நரிகள், கூய - ஊளையிட்டன: வான்மீன் - நட்சத்திரங்கள், தறை - பூமி யின்மேல், பகல் விழுந்தது - கடும்பகற் பொழுதிலே உதிர்ந்தன: அயர் - (யாகஞ்) செய்கின்ற, மகசாலையில் - யாகசாலையின் பக்கங் களில், குருதி ஆயது - இரத்தம் பெருகலாயிற்று: ஆழும் - ஆழ்ந்து, நிறை - நீர் நிறைந்த, வான் பொய்கையும் - பெரிய குளங்களும், வறந்த - நீர் வற்றிப் போயின: நிலம் - பூமி, நடுங்கிற்று - நடுங்குத லுற்றது: நிருபர் ஆகம் - (இந்த உற்பாதங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த) (சபையிலுள்ள) அரசர்களுடைய உடம்புகள், ஒளி இழந்த - ஒளி குறையப் பெற்றன; (எ.று).

வானத்தில் மேகங்கள் தோன்ருதிருக்கையிலேயே இடி முழக்கந் தோன்றுதலும், சூரிய மண்டலமிடுதலும், நரிகள் ஊளையிடுதலும், பகற்பொழுதில் நட்சத்திரம் விழுதலும், யாகசாலையினிடங்களி லெல்லாம் இரத்தம் நிறைதலும், காரணமின்றிப் பொய்கை நீர் வற்றுதலும், பூகம்ப முண்டாதலும் - உற்பாதங்களாம். இவ்வாறு ஒன்றன்மேலொன்ருகப் பலவுற்பாதங்கள் ஒருங்கே தோன்றுவதைக் காணவே, சபையிலுள்ள அரசர்கள் மனத்திற் பேரச்சங்கொண்டு உடலொளி குறைந்தனரென்றவாறு. ஊர்கோள் - சூரியனிடத்தி லேனும் சந்திரனிடத்திலேனும் சுற்றி மண்டலமாகத் தோன்றுவது:

இது பரிவேஷம் எனப்படும். சந்திரனிடத்து உண்டாகும் ஊர் கோள் நன்மையைத் தருவதெனவும், சூரியனிடத்து உண்டாகும் ஊர்கோள் தீமையைத் தெரிவிக்கின்ற உற்பதமாமெனவும் நூல்கள் கூறும். ஓரி - கிழநரி. கூய - பலவின்பால் வினைமுற்று. தறை= தரை: எதுகை நயம் நோக்கி வல்லினமாயிற்று. (125)

### 126. திருதராட்டிரன் திரௌபதியைப் பொறுக்குமாறு வேண்டி வரங்கேட்கச் சொல்லுதல்.

தோற்றரிய வுற்பாதம் தோற்றிடயா
வரும்வெருவித் துயர்கொள் காலை
போற்றரிய கற்பினளைப் புலனில்லான்
பணிந்தென்றன் புதல்வர் செய்த
தாற்றரிய துயரேனும் அகங்கொள்ளேல்
மைத்துனர்தம் ஆட லென்று
மாற்றரிய பொருளேனும் வழங்குவல்கேள்
எனவவளும் மலர்க்கை கூப்பி.

(இ-ள்) தோற்றரிய - அரியவாகத் தோற்றுகின்ற, உற்பாதம் - தீ நிமித்தங்கள், தோற்றிட - தோன்றிடவே, யாவரும் - (சபையி லிருந்தோர்) அனைவரும், வெருவி – அச்சங்கொண்டு, துயர் (கொள்) காலை - துயரமுற்றபோது, புலனில்லான் - கட்புலனில்லாத வனாகிய (குருடனான) திருதராட்டிரன், போற்று அரிய கற்பினளைப் பணிந்து - கொண்டாடுதற்கரிய (மிக்க) கற்பினையுடையளாகிய திரௌபதியை வணங்கி, ‘என்றன் புதல்வர் செய்தது - என் பிள்ளைகள் செய்த கொடுஞ்செயல்கள், ஆற்றரிய துயரேனும் - பொறுக்க முடியாத துன்பங்களேயானாலும், (அவைகளை) மைத்து னர்தம் ஆடல் என்று - மைத்துனராம் உறவினர் செய்த பரிகாச விளையாட்டுச் செயல் என எண்ணி, அகம் கொள்ளேல் - மனத்தில் கொள்ளாமல் விட்டுவிடு: (இனி) மாற்றரிய பொருளேனும் - கொடுத்தற்கரிய பொருளாயிருப்பினும், வழங்குவல் - கொடுப்பேன்: கேள் - நீ கேட்பாயாக, என - என்று (நல்வார்த்தை) சொல்ல, அவளும் - அந்தத் திரௌபதியும், மலர்க் கை கூப்பி - தாமரைமலர் போன்ற தன் கைகளைக் குவித்துக் கூப்பி; (எ.று) - இது, மேலைக் கவியில் “தொண்டகல விடுத்தியென” என்பதனோடு குளகமாய்த் தொடரும்,

அரசர்கள் உள்ளிட்ட சபையோர் யாவரும் பலவுற்பாதங்களைக் கண்டதனால் மனம் நடுங்கி 'இவ்வூர்க்கு என்ன கேடு வருமோ?' என்று வெருவினர் என்க. 'பணிந்து' என்பதற்கு 'வணங்கி' என் பதைக் காட்டிலும் 'சமாதானப்படுத்தி' என்று கருத்துக் கொள்ளு தலே பொருத்தமுடைத்து: அதுவே முதனூலுக்கும் ஒத்ததாம்: ஏனெனில், மாமனாராகிய திருதராட்டிரன் திரௌபதியை வணங்கு வதாகக் கூறுவது சாலாது, இனி, தெய்வத்தன்மையைக் காட்டின ளாதலாலும், தான் செய்வது இன்னதெனத் தெரியாது திகைத்தன னாதலாலும், திருதராட்டிரன் திரௌபதியைப் பணிந்தனன் என்று கொள்ளுதலுமொன்று. மைத்துனர் - கணவருடன் பிறந்தவரும், மனைவியுடன் பிறந்தவரும், அத்தை மக்களுமாவர். இங்கே கணவனுடன் பிறந்தவர். மைத்துன முறைமையாற் பரிகசிக்கப் படுபவர் ஆடவர்களேயாதல் உலக வழக்காயிருப்பவும், அதற்கு மாறாகப் பெண்ணைப் பரிகசித்த துரியோதனனதியரது குற்றத்தைப் பொறுக்க வேண்டுகிற திருதராட்டிரன் திரௌபதியின் மனம் இரங்குமாறு மைத்துன முறையாற் பரிகாசஞ் செய்ததாகப் போலிச் சமாதானங் கூறினனென அறிக. (126)

### 127. திரௌபதி கேட்டுப்பெற்ற இருவரங்கள்.

மெய்யுடையான் தொண்டகல விடுத்தியென
வளித்தின்னும் வேண்டு கென்றான்
கையுடையா யுதத்தோடும் கனிட்டர்தொழூம்
பகற்றுகெனக் களித்தீந் தின்னும்
மையுடையாய் கேளெனமா தந்தணரா
கியவருணத் தறலே யன்ன
மொய்யுடையோ தியர்கேட்க முயல்வர்நூ
றிரண்டொன்று மூன்று மென்றாள்.

(இ-ள்) மெய் உடையான் - உண்மையே பேசும் தரும புத்திரனுடைய, தொண்டு அகல-அடிமை நீங்க, விடுத்தி - விடுதலை செய், என - என்று (வரம்) வேண்ட, அளித்து - (அவள் விரும்பிய படியே திருதராட்டிரன்) கொடுத்து, இன்னும் - மேலும், வேண்டுக என்றான் - வரம் கேட்பாயாக (கொடுக்கிறேன்) என்று கூறினான் : (உடனே திரௌபதி) கை யுடை ஆயுதத்தோடும் - தத்தம கைகளி லுள்ள படைகளோடும், கனிட்டர் - தம்பியர் நால்வருடைய, தொழும்பு - அடிமையை, அகற்றுக - நீக்குவீராக, என - என்று வேண்ட, களித்து - (அங்ஙனமே மகிழ்ந்து, ஈந்து - கொடுத்து, மையுடையாய் - மையெழுதப் பெற்ற கண்களையுடையவளே!

இன்னும் கேள் - மேலும் (வேண்டுவன) கேட்பாயாக, என - என்று சொல்ல, (அதற்கு அந்தத் திரௌபதி) அந்தணராகிய வருணத்து - பிராமணராகிய வருணத்திலே பிறந்த, அறலே அன்ன மொய் உடை ஓதியர் - கருமணல்போன்ற ஒழுக்கினையுடைய தொகுதிப் பட்ட கூந்தலையுடைய பெண்டிர், நூறு கேட்க முயல்வர் - ஒரு நூறு வரங்களைக் கேட்க முயலுவர் : (அங்ஙனம் கேட்கும்போதும் ஒன்று கூட குறையாமல் இருப்பதற்காக) ஒன்று இரண்டு மூன்றும் - ஒன்று, இரண்டு, மூன்று என விரல்விட்டு எண்ணிக்கேட்பர், என்றுள் - என்று கூறினுள்; (எ. று).

இனி, இறுதியடிக்கு நூறு, நூற்றொன்று, நூற்றிரண்டு. நூற்று மூன்று என எண்ணி மேலும் கேட்கமுயல்வர் என்றுமாம். க்ஷத்ரிய ஸ்திரீ கேட்பதற்குரிய இரண்டு வரங்களையும் திரௌபதி கேட்டாள் என்றபடி. அறலேயன்ன ஓதி என இயையும்: உவமையணி. மொய்-தொகுதி. அந்தணர் பெண்டிர் கேட்க முயல்வர் என்றது - தன்மை நவிற்சியின் பாற்படும் எனலாம். (127)

### 128 சூதில்தோற்ற பொருள்களை மீண்டும் பெறுமாறு பாண்டவர்க்குத் திருதராட்டிரன் அநுமதி தருதல்.

என்றவணங் கணங்காற்றி யிளவல்சுதர்
ஐவரையும் இனிதிற் புல்லி
ஒன்றறியேன் விளையாட்டென் றுற்றனனேற்
கிவ்விளைவென் றுரைத்தா ருண்டோ
குன்றனைய நெடும்புயத்தீர் கொடுஞ்சூதில்
இழந்தபொருட் கொண்மி னென்று
நன்றருளிச் சினமொருவி நயந்திடுமா
றின்சொல்பல நவின்று னன்றே.

(இ-ள்) என்ற - என்று கூறிய, அணங்கு - திரௌபதியின், அணங்கு - துயரத்தை, ஆற்றி - போக்கி, இளவல் - தனக்குத் தம்பியாகிய பாண்டுவின், சுதர் ஐவரையும் - ஐந்து புத்திரர் களையும், இனிதின் புல்லி - இனிமையுறத் தழுவி, ஒன்று அறியேன் - நான் முன்னம் ஒன்றுந் தெரிந்திலேன்: விளையாட்டு என்று உற்றன னேற்கு - விளையாட்டாக ஆடுகின்றீர்களென்றே எண்ணியிருந்த எனக்கு, இ விளைவு என்று - இவ்வாறு பெருந்தீங்கு நேரிடுமென்று, உரைத்தார் உண்டோ - ஒருவராயினும் சொன்னவர் உளரோ (எவருமில்லை): குன்று அனைய நெடும்புயத்தீர் - மலைகளைப் போல்

திண்ணிய பெருந் தோள்களையுடையவர்களே!; கொடும் சூதில் - கொடிய சூதாட்டத்தில், இழந்த பொருள் - நீங்கள் தோற்றிழந்த செல்வங்களனைத்தையும், கொண்மின் - (எனது அனுமதியின் படியே) பெற்றுக் கொள்ளுங்கள், என்று - என்று சொல்லி, நன்று அருளி - பெரிதும் கொடுத்து; (மேலும் அவர்கள்) சினம் ஒருவி - கோபம் நீங்கி, நயந்திடுமாறு - விரும்புமாறு, பல இன்சொல் - பல இனிய வார்த்தைகளை, நவின்றுன் - சொன்னுன்; (எ.று). அன்றே- ஈற்றசை.

'அணங்கணங்காற்றி' என்றவிடத்துச் சொன்னயம் காண்க. எனது மைந்தரும் நீவிரும் விநோதமாகச் சூதாடுகின்றீரென்று கருதியதனுல், நீங்கள் சூதாடுவதை நான் விலக்கவில்லை; இவ்வாறு பெரும் பொல்லாங்குக்குக் காரணமாம்படி சூதாடுகின்றீரென்பது எனக்குத் தெரிந்திருந்தால், நான் உங்களை ஆடவொட்டாது முன்னமே தடுத்திருப்பேன்; போனது போகட்டும்: இனி, நீங்கள் இழந்த இராச்சியம் முதலிய செல்வங்கள் அனைத்தையும் யான் அளிக்கப்பெற்று நலமுறுவீர் எனக் கூறித் தேற்றினன் திருதராட்டிரன் என்க. (128)

129. திருதராட்டிரன் பாண்டவர்க்கு முகமன் கூறுதல்.

என்றவத்தின் சுதரென்று மிளவல்தவச்
சுதரென்று மிரண்டி லாமல்
இன்றளவு மளித்திலனே இறந்தவன்யான்
இருந்தவன்பாண் டெனக்கொண் டூரைச்
சென்றடைமின் எனவிடுப்பச் சிறுவருமத்
தந்தைவிடை சிரங்கொண் டேகா
நின்றபொழு தென்புரிந்தான் நிருபனெனச்
சகுனியிதை நிகழ்த்த லானுன்.

(இ-ள்) (மேலும் திருதராட்டிரன்) என் தவத்தின் சுதர் என்றும் - எனது தவப்பேற்றினுல் பிறந்த புத்திரர்கள் (துரியோதனு தியர்) என்றும், இளவல் தவச்சுதர் என்றும் - தம்பியாகிய பாண்டு வின் தவப்பேற்றினுல் பிறந்த புத்திரர்கள் (தருமன் முதலாயினேர்) என்றும், இரண்டு இலாமல் - வேறு வேருகக் கருதும் பேதபுத்தி யில்லாமல், இன்றளவும்-இற்றை நாள் வரையிலும். அளித்திலனே- காப்பாற்றி வந்திருக்கின்றேனன்றே! (உண்மை கூறப்புகின்) (நீவிர்) இறந்தவன் யான் - திருதராட்டிரன் மாண்டு போனுன் :

இருந்தவன் பாண்டு - உயிரோடிருப்பவன் தந்தையாகிய பாண்டு மன்னனே, எனக்கொண்டு-என்று மனத்திற் பதியவைத்து, ஊரைச் சென்றடைமின் - (உமது) இந்திரப்பிரத்த நகரைப் போய்ச் சேருமின், என விடுப்ப - என்று (முகமன்) சொல்லி அனுப்ப முற்பட, சிறுவரும் - (அந்தப்) பாண்டவரைவரும், தந்தை விடை சிரம் கொண்டு - பெரிய தந்தையின் விடையினைத் தலைமேற் கொண்டு மதித்து, ஏகா நின்ற பொழுது - (அரச சபையைவிட்டுப்) போகுஞ் சமயத்தில், நிருபன் - திருதராட்டிர மன்னவன், என் புரிந்தான் - என்ன காரியஞ்செய்து விட்டான் (நாம் எண்ணியவெல்லாம் கெடுத்து விட்டானே), என - என்று (மனம் புழுங்கி), சகுனி—, இதை - இவ்வார்த்தைகளை, நிகழ்த்தலானன் - கூறலானான்; (எ.று)- சகுனி கூறியதை மேலைக் கவியிற் காண்க.

பாண்டுவும் நானும் சிறிதும் வேற்றுமை யில்லாதிருந்தோம்; அவ்வாறே நும்மிடத்தும் எனது மைந்தரிடத்திற் கொள்ளும் பேரன்பையே கொண்டிருக்கின்றேன்: இதுவரையில் உங்களைக் காப்பாற்றி வந்திருக்கின்றேன்: ஆகையால், உமக்குத் துன்பத்தை யுண்டாக்க வேண்டுமென்பது எனக்கு விருப்பமன்று: இப்பொழுதே நீவிர் திரௌபதியையும் அழைத்துக் கொண்டு நும்மூர்க்குச் செல்லுங்கள் எனத் திருதராட்டிரன் பாண்டவரைத் தேற்றி விடை கொடுத்தனனென்க. இப்பொழுது நீவிர் இங்கு இருப்பீராயின் துரியோதனதியர் உமது பொருளை மீண்டும் கவர முயலுவரென்று குறிப்பிப்பான் "ஊரைச் சென்றடைமின்" எனச் சொல்லி விடுத்தான். "இறந்தவன் யான் இருந்தவன் பாண்டு" என்றதால் தனக்கும் பாண்டுவுக்கும் சிறிதும் வேற்றுமையில்லை யென்றும், தன்னையே பாண்டுவாகக் கொள்ளும்படியும் கூறியபடி என்க. இரண்டிலாமை - பட்சபாதமில்லாமை. 'சுதர்' என்ற சொல்லுக்கு 'தவம்' என்ற அடையை இரண்டிடத்தும் பேதமில்லாமல் கொடுத்தமை - "இரண்டிலாமல்" என் மேல்வருவதைச் சமர்த்தித்து நின்றது. அளித்திலனே - எதிர்மறை இரண்டும் ஒருடன்பாட்டை வற்புறுத்தியது. (129)

வேறு

**130.** பாண்டவர்கள் தமது இராச்சியத்தைப் பெற்றுச் செல்வதைக் கண்ட சகுனியின் துர்ப்போதனை.

எண்ணியோர் கருமஞ் செய்யார்க்
கிடரென வுணர்ந்துஞ் செய்தீர்
பண்ணிய கணைபுண் ணுறும்
பகர்வசைக் கணைப்புண் ணுரு

திண்ணிய தண்டாற் பாம்பைச்
செகுத்திடா தடித்து விட்டால்
நண்ணிதீண் டாமற்போமோ
நன்குநீர் செய்த தென்றான்.

(இ-ள்) எண்ணி-ஆராய்ந்து பார்த்து, ஓர் கருமம் செய்யார்க்கு-ஒரு காரியத்தைச் செய்யாதவர்க்கு, இடர் என உணர்ந்தும்-துன்பம் ஏற்படும் எனத் தெரிந்திருந்தும், செய்தீர் - இத்தகைய காரியத்தைச் செய்துள்ளீர்கள்! கணை பண்ணிய - அம்பு துளைத்ததால் ஏற்பட்ட, புண் ஆறும்-காயம் ஆறிப்போகும்: (ஆனால்) பகர் வசைக்கணைப் புண்-வாயினாற் சொல்லிய பழிச்சொல்லம்பினால் உண்டாகிய புண், ஆரு – ஆறாது வடுவாகவே நிலைத்து நிற்கும் : (மற்றும்) பாம்பை-விஷமுள்ள பாம்பினை, திண்ணிய தண்டால் செகுத்திடாது - வலிய தடியினால்மோதிச் சாகும்படி செய்யாமல், அடித்து விட்டால் - (வெறுமனே மேலோட்டாக) அடித்து (உயிரோடு) விட்டிடுவாயானால், நண்ணி - (கருக்கொண்டு) கிட்டி, தீண்டாமல் - கடிக்காமல், போமோ -(சும்மா) போகுமோ? (போகாது) : நன்கு நீர் செய்தது - நீர் செய்த காரியம் நன்மையதாகுமோ (ஆகாது): என்றான்-என்று கூறினான்; (எ.று).

"எண்ணித்துணிக கருமந் துணிந்தபின், எண்ணுவ மென்ப திழுக்கு" என்ற குறளும், "தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே, நாவினாற் சுட்ட வடு" என்ற குறளும் இங்கு உணரத்தக்கது. பாண்டவர்கள் உங்களைத் தவறாது கொல்வரென்ற கருத்தைத் தெரிவித்தலால், 'திண்ணிய தண்டாற் பாம்பை செகுத்திடாதடித்து விட்டால் நண்ணி தீண்டாமற் போமோ?' என்ற வாக்கியம்—**பிறிது மொழிதலணியாம்.** 'நன்கு நீர் செய்தது' என்றது—**பிறகுறிப்பு.**

இதுமுதல் பதினொரு கவிகள்—பெரும்பாலும் ஒன்று நான்காஞ் சீர்கள் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட **அறுசீராசிரிய விருத்தங்கள்.** இவற்றில் மூன்று ஆறுஞ்சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும்.

(*130*)

**131. அதுகேட்ட துரியோதனனது கட்டளைப்படி துச்சாதனன் தருமனை நோக்கிக் கூறுதல். இதுவும், அடுத்த கவியும்—ஒரு தொடர்.**

அம்மொழி மருகன் கேட்டங்
கங்கர்கோன் பின்னே டெண்ணி
இம்மொழி யெம்பி நீசொற்
றிடுகென அவன்மெய் வேந்தைச்

செம்மொழி யுடையாய்! தோற்ற
சேனையும் பொருளும் எந்தை
தம்மொழி யதனுற் கொள்ளிற்
சரதமங் கிசையென் னுமே.

(இ-ள்) அ மொழி-சகுனி கூறிய அந்த வார்த்தையை, மருகன் கேட்டு - மருமகனுகிய துரியோதனன் செவியேற்று, அங்கர்கோன் - கர்ணனேடும், பின்னேடு-தம்பியாகிய துச்சாதனனேடும், எண்ணி- ஆலோசித்து, எம்பி-துச்சாதனனே! இ மொழி நீ சொற்றிடுக என- இந்த வார்த்தைச் செய்தியை நீ போய்ச் சொல்லுவாயாக என்று கட்டளையிட, அவன்-அந்தத் துச்சாதனன், மெய் வேந்தை-சத்திய விரதனுகிய தருமராசனை, (நோக்கி) செம்மொழியுடையாய்-செவ்விய வார்த்தைகளையே பேசுபவனே! தோற்ற-(பலபேர்கூடிய சபையில் முறைப்படியே) சூதாடித் தோற்ற, சேனையும் - படைகளும், பொருளும் - (பிற) செல்வங்களும், எந்தை தம்மொழியதனுல் கொள்ளின்-எமது தந்தையாகிய திருதராட்டிரன் வார்த்தையின் படியே நீர் கைக்கொள்வீராலுல், அங்கு-அப்போது, சரதம்-நிச்சய மாக, இசை என் ஆம் - புகழ் என்ன ஆகும்? (வசைதான் சித்திக்கும்); (எ.று).

தருமனுகிய நீ பொய் பேசுதலையே விரதமெனக் கொண்டிருந் தால் தோற்றிழந்த இராச்சியத்தைப் பறித்துக்கொண்டுவிடலாம் : நீயோ மெய்வேந்து, செம்மொழி பேசுபவன்: ஆகவே, எப்பொழுதும் சத்தியவிரதனுயிருப்பதனுல், பலருங்கூடிய சபையில் முறைப்படி சூதாடித் தோற்ற இராச்சியத்தையும், படைகளையும் பிற செல்வங் களையும் கைப்பற்றுதற்கு வகையில்லையே! அன்றியும், இராச்சியம் முதலானவற்றைச் சூதாடிச் செயித்தவர் நாங்களே யாதலால், இந்த இராச்சியம் முதலியவற்றை நாங்கள் உடன்பட்டுக் கொடுத்தால் மாத்திரம் உங்களுடையதாகுமேயன்றி எமது தந்தை கொடுக்க நீங்கள் பெற்றுக்கொள்ளுதற்கு நுமக்கு உரிமையில்லை : மற்றும் புகழன்றி வசையுண்டாகும் என்று துச்சாதனன் கூறியதாக விரித்துப் பொருள் காண்க. தருமபுத்திரனுக்கு 'சத்தியவிரதன்' என்று ஒரு பெயரிருத்தலால் 'மெய்வேந்து' என்றது. அங்கர்கோன்: பின்-உம்மைத் தொகை. பின்-பின் பிறந்த தம்பிக்குக் - காலவாகு பெயர். சொற்றிடுகென - அகரவீறு தொகுத்தல். எந்தை - என் தந்தையென்பதன் மரூஉ. (131)

132. ஆதலின் பொருள்கள் கொள்வ
தடாதறம் பிழைத்துக் கொள்ளக்
காதலுற் ருலும் நல்கேம்
கனற்கொடிக் கெந்தை முன்னர்
ஓதிய வரத்தாற் றெண்டொன்
றொருவிநா டகன்று கானம்
போதுவ தியற்கை யொல்லைப்
போதுமின் எழுமி னென்ருன்.

(இ-ள்) ஆதலின் - ஆகையால், பொருள்கள் கொள்வது - இராச்சியத்தையும் செல்வங்களையும் கைக்கொள்வதென்பது, அடாது - தருமமாகாது: (அங்ஙனன்றி) அறம் பிழைத்து - தருமந் தவறி, கொள்ள - கைக்கொள்ள, காதலுற்ருலும் - ஆசைப்பட்டாலும், நல்கேம் - (நாங்கள்) கொடுக்க மாட்டோம்: (ஆகவே) எந்தை - எமது தந்தையாகிய திருதராட்டிரன், கனல் கொடிக்கு - திரௌபதிக்கு, முன்னர் - முற்பட்டு, ஓதிய வரத்தால் - கொடுத்த இரண்டு வரங்களாலே, தொண்டு ஒன்று ஒருவி - (உங்களுக் கேற்பட்ட) அடிமையென்பதொன்றை மட்டும் விடுத்து நீங்கி (விடுதலை பெற்று), நாடு அகன்று - நாட்டை விட்டு, கானம் போதுவது - காட்டுக்குப் போதலென்பது, இயற்கை - தகுதியானதாகும்: (எனவே) ஒல்லை - சீக்கிரமாக, போதுமின் - செல்லுங்கள்: எழுமின் - (இப்பொழுதே) புறப்படுங்கள், என்ருன் - என்று துச்சாதனன் கூறினன்; (எ.று).

இராச்சியத்தையும் செல்வங்களையும் பெறுவதிலுள்ள பேராசையால் அறநெறி பிழைத்துப் பெற்றுக் கொள்வோமென்ருலும், நாங்கள் கொடுக்க மாட்டோம்: இப்பொழுது வேண்டுமானால், எமது தந்தை கொடுத்த வரங்களின்படி அவர்க்காக, உங்களை அடிமைத் தன்மையினின்று மாத்திரம் நீக்கி உரிமை பெற்றவர்களாகச் செய்கிருேம்: இனி, நீங்கள் எங்களிராச்சியத்தில் நில்லாது காட்டிற்குப் போய் வசியுங்கள். இந்த எமது இராச்சியத்தில் நீங்கள் இருப்பதுங் கூடாது என்று துச்சாதனன் கூறினன் என்க. கனல் கொடி - அக்னியினின்று தோன்றினவள்: கொடி - உவமவாகு பெயர். ஒல்லை - விரைவுக் குறிப்பிடைச்சொல். போதுமின், எழுமின் - முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள். (132)

### 133. அச் சொல்லைக் கேட்டுத் திருதராட்டிரன் ஆலோசிக்க, துரோணன் மறுமொழி கூறுதல்.

தன்மகன் உரைகேட் டீன்றோன்
　　தனதுளம் பேதித் தத்தன்
முன்மகன் விதுரன் வேத
　　முனிவரோ டாயும் போதில்
வின்மகன் அரசே! யெண்ணி
　　மேற்செய லிஃதென் றுன்றன்
பின்மகற் கரச நீதி
　　பிழைபடா துரைத்தி யென்றான்.

(இ-ள்) தன்மகன் உரைகேட்டு - தனது பிள்ளையாகிய துச்சாதனன் சொல்லியதைக் கேட்டு, ஈன்றோன் - அவனைப் பெற்ற திருதராட்டிரன், தனது உளம் பேதித்து - தனது மனம் மாறுபட்டு, அத்தன் - மூத்தோனாகிய வீடுமன், முன் மகன் - (தனது) மூத்த மகனாகிய துரியோதனன், விதுரன்—, வேத முனிவரோடு - துரோணாசாரியன் ஆகிய இவர்களோடு, ஆயும் போதில் - ஆராய்ந்து ஆலோசிக்கும் சமயத்தில், வில் மகன் - வில்லில் வல்ல துரோணாசாரியன், அரசே! - திருதராட்டிர மன்னரே! மேற்செயல் இஃது என்று எண்ணி - மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியம் இது என்று ஆய்ந்து (முடிவுகட்டி), உன்றன் பின்மகற்கு - உன்னுடைய இரண்டாவது பிள்ளையாகிய துச்சாதனனுக்கு, அரசநீதி - இராசதருமத்தை, பிழைபடாது - தவறுதலில்லாதபடி, உரைத்தி- சொல்லித் தெளியவைப்பாய், என்றான் - என்று கூறினான்; (எ.று).

முன்மகன்-துரியோதனன்: எனவே, பின்மகன் - அவனுக்குப் பின்பிறந்த துச்சாதனன் என்றபடி. வின்மகன் - வில்லில் வல்ல புருடன் (மகன் - புருடன்): எனவே துரோணனைக் காட்டிற்று. துட்டசதுட்டர் எங்களுடைய சொற்களை மதியாது இகழ்வராதலால், நாங்கள் இப்பொழுது சொல்வதிற் பயனில்லை. ஆகையால் அவர்கள் நன்மையையே கருதும் நீயே அரச நூன்முறைமை வழுவாது கூறினையானால், அவர்கள் மறுக்காது அங்ஙனமே ஒழுகுவர்: ஆகவே, இப்போது நீயே ஆலோசித்துக் கூறுவது தக்கது எனத் துரோணன் மறுமொழி கூறியவாறு. இச்செய்யுளின் முதற்சீர் நான்கினும் எதுகைநயம் காண்க. (133)

**134. திருதராட்டிரன் தருமபுத்திரனுக்கு இட்ட கட்டளை.**

குருவிஃது ரைப்ப மற்றோர்
கோமுறை வழுவி னேதம்
வருநினக் கென்றார் வேந்தர்
மன்னுதிட் டிரனை வென்ற
பொருளுத வார்கள் பின்புன்
புகழினுக் கொப்பக் கொள்க
முருகலர்த் தொடையாய்! வேந்தர்
முன்னர்செய் முறையோர்ந் தென்றான்.

(இ-ள்) குரு - துரோணாசாரியன், இஃது உரைப்ப - இந்தப்படி கூற, மற்றோர் - (சபையிலிருந்த) ஏனைய அரசர் அமைச்சர் முதலியோர், (திருதராட்டிரனை நோக்கி) கோ முறை வழுவின் - (நீ ஆராய்ந்து சொல்லுகையில்) அரச முறைமை தவறிக் கூறுவாயாயின், ஏதம் - பழிப்பு, நினக்கு - உனக்கு, வரும் - வந்து சேரும், என்றார்—; (அப்போது) வேந்தர்மன் - மன்னவர் மன்னனாகிய திருதராட்டிரன், உதிட்டிரனை - தருமபுத்திரனை (நோக்கி), முருகு அலர்த் தொடையாய்! - வாசனை வீசுகின்ற மலர்மாலையைத் தரிப்பவனே! (என் மைந்தர்கள்) வென்ற - தாங்கள் சூதில் (முறைப்படியே) வென்று கொண்ட, பொருள் - இராச்சியம் படை முதலிய செல்வங்களை, உதவார்கள் - (திருப்பிக்) கொடுக்க மாட்டார்கள் : (ஆகவே) முன்னர் வேந்தர் செய் முறை ஓர்ந்து - பூர்வீகத்தில் மன்னர்கள் செய்த முறைப்படியே (செய்யுமாறு) எண்ணி, பின்பு - பிறகு, உன் புகழினுக்கு ஒப்ப - உனது கௌரவத்திற்குத் தக்கபடியாக, கொள்க - (உனக்குரிய இராச்சியம் முதலிய பொருள்களையெல்லாம்) பெற்றுக் கொள்வாயாக, என்றான் - என்று கூறினான் ; (எ.று).

துரோணனது சொல்லையநுசரித்தே ஏனையோரும் 'நீதான் இப்பொழுது ஆராய்ந்து ஆலோசனை சொல்லத்தக்கவன் : ஆகவே, நீ சொல்லுகிற மொழி நீதிக்குச் சிறிதும் மாறுபடாதிருக்குமாறு ஆராய்ந்து சொல்லவேண்டும்' என்று திருதராட்டிரனுக்குக் கூறினர் என்க. வென்ற பொருள் என்றது-வென்றவர் (துரியோதனாதியர்) மீளக் கொடாமையைக் குற்றமென்று கொள்ளாதிருக்கவேண்டுமென்ற குறிப்பினது. மற்றும் இப்பொழுது இராச்சியமெல்லாம் என் வயத்தனவன்றித் துரியோதனாதியர் வயத்திலிருப்பதால் அவர்கள் உடன்பட்டுக் கொடுத்தால்தான் நீங்கள் பெற்றுக் கொள்ளலாமேயல்லாமல் அவர்கள் மீளக் கொடுத்தற்கு உடன்

படாதிருக்கையில் யான் என் செய்யலாமென்பான் 'வென்ற பொருள் உதவார்கள்' எனக் கூறினதாகக் கொள்ளினுமாம். நீ வனவாசஞ்செய்யென்று நேரே கூறுதற்குப் பின்வாங்கி மறைபொருளாக 'உன் புகழினுக்கொப்ப, வேந்தர்முன்னர் செய்முறையோர்ந்து கொள்க' என்றுங்கூறினன். முன்னர் வேந்தர் என்றது - இராமன் நளன் அரிச்சந்திரன் முதலியோரை. 'நீ காடு செல்' என்று கூற வேண்டியிருக்க அவ்வாறு கூருது 'உன் புகழினுக்கொப்ப முன்னர் வேந்தர் செய்முறை ஓர்ந்து கொள்க' எனக் கூறியது—**பிறிதினவிற்சியணி.** குருவிஃது - இச்சீரில் ஆய்தம் அலகுபெறவில்லை, கொள்க-முன்னிலை வியங்கோள். (134)

**135. திருதராட்டிரனது கருத்தைத் துரோணன் தருமனுக்கு விரித்துக் கூற, அவ்வார்த்தைக்கு வீடுமன் முதலியோர் உடன்பட்டுக் கூறுதல்.**
**இரண்டு கவிகள்—ஒரு தொடர்.**

என்றுமன் னுரையோர்ந் தாசா
　　னிராகவன் சரித மோதி
மின்னுசுப் புடனே நீவிர்
　　வெவ்வனத் தீரா றுண்டும்
மன்னுரு மாறி நாட்டோர்
　　வருடமு முறைந்தொ ழித்துப்
பின்னும தரசும் வாழ்வும்
　　பெறுவதே பெருமை யாமால்.

(இ-ள்) என்று-என்று கூறிய, மன் உரை ஓர்ந்து-திருதராட்டிர மன்னனது வார்த்தையின் பொருளையறிந்து, ஆசான் - துரோணாசாரியன், இராகவன் சரிதம் ஓதி - இராமபிரானது கதையையும் எடுத்துச்சொல்லி, நீவிர் - நீங்கள் ஐவரும், மின் நுசுப்புடனே - மின்னல்போன்ற நுண்ணிய இடையையுடைய திரௌபதியுடனே, வெவ்வனத்து-கொடிய கானகத்தில், ஈராறு ஆண்டும்-பன்னிரண்டு வருடங்களும், (பிறகு) நாட்டு-ஏதோ ஒரு நாட்டில், மன் உருமாறி-(ஒருவரும் அறியாவண்ணம்) பொருந்திய உங்கள் தோற்றம் மாறி, ஓர் வருடமும் - ஒருவருடகாலமும், உறைந்து - வசித்து, ஒழித்து - (இவ்வாறு பதின்மூன்று வருஷமும்) கழித்து, பின் -பிறகு, உமது அரசும் வாழ்வும் - உங்களது இராச்சியத்தையும் செல்வ வாழ்க்கையையும், பெறுவதே - (திரும்பப்) பெற்றுக்கொள்வதே, பெருமையாம்-பெருமையுடைய செயலாகும்; (எ.று) ஆல்-அசை.

'முன்னர் வேந்தர் செய்முறையோர்ந்து கொள்க' என்று திருதராட்டிரன் கூறினனுதலால், அதன் பொருள் விளங்குமாறு இராமபிரானது சரித்திரத்தைத் துரோணன் எடுத்துக் காட்டினன். அதாவது—''இராமபிரான் தனது தந்தையின் சொற்படியே தான் ஆளுதற்குரிய இராச்சியத்தைத் தன் பெரிய தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்துவிட்டு மற்றொரு தம்பியாகிய இலக்குமணனுடனும் தன் மனைவியாகிய சீதையுடனும் பதினான்கு வருடம் வனவாசஞ்செய்து மீண்டு வந்து அரசு புரிந்தனன்: அவ்வாறே நீயும் உனது தந்தையின் சொற்படியே உன் பெருந் துணைவராகிய துரியோதனாதியர்க்கு உனது இராச்சியத்தைக் கொடுத்துவிட்டு, உனது தம்பியரோடும் மனைவியோடும் காட்டிற் சிலவருடங்கள் தங்கியிருந்து பின்னர் மீண்டு வந்து இராச்சியத்தை அரசாளலாம்'' என்பது. நுசுப்பு - நுசுப்புடையாளுக்குச் சினையாகுபெயர். நுசுப்பு- இடை. ஓர்வருடம் உருமாறியென்றது - ஒரு வருடம் அஜ்ஞாத வாசம் செய்து என்றபடி. (135)

136. மாண்டகு முருவ மாறி
யொழுகுநாள் இவர்கள் உம்மை
ஈண்டுளா ரென்றோர்ந் திட்டா
லிவ்வணம் வனமீட் டெய்த
வேண்டுமென் றுரைத்தான்; கேட்ட
வீடுமன் முதலோ ரிச்சொற்
பூண்டுகொண் டடவி நீவிர்
போந்துமீண் டிடுமி னென்றார்.

(இ-ள்) 'மாண் தகு உருவம் மாறி - மாட்சிமை தங்கிய உங்கள் தோற்றத்தை மாற்றிக் கொண்டு, ஒழுகும் நாள் - அஜ்ஞாத வாசம் செய்து வரும் நாளில், இவர்கள் - இந்தத் துரியோதனாதியர், உம்மை - பாண்டவர்களாகிய உங்களை, ஈண்டு உளார் என்று ஓர்ந்திட்டால் - இங்கேயிருக்கிறார்களென்று (நிச்சயமாக) அறிந்து விட்டால், இ வணம் - இந்தப் பிரகாரமே, மீட்டு - மறுபடியும், வனம் எய்த வேண்டும் என்று - காட்டுக்குப் போகக் கடவீர்கள்', என்று உரைத்தான் - என்றுங் கூறினான் (துரோணன்): கேட்ட - (துரோணன் கூறிய வார்த்தைகளைக்) கேட்டுணர்ந்த, வீடுமன் முதலோர் - (பாண்டவர்கட்குப் பெரிய பாட்டனை) பீஷ்மன் முதலியோர், இச்சொல் பூண்டு - இந்த வார்த்தையைக் கொண்டாடி, (பாண்டவர்களை நோக்கி) நீவிர் - நீங்கள், அடவி

போந்து - காட்டுக்குச் சென்று உறைந்து, மீண்டிடுமின் - திரும்பி (இங்கு) வாருங்கள், என்ருர் - என்று கூறினுர்கள்; (எ.று).

கீழ்ச் செய்யுளில் 'மன்னுருமாறி நாட்டு ஓர்வருடமும் உறைவீர்' என்று கூறிய அஜ்ஞாத வாசத்தின் தன்மையை இச்செய்யுளில் துரோணன் விவரித்துக் கூறினுன். அஜ்ஞாதவாச காலத்திலே இவர்கள் உங்களைப் 'பாண்டவர்' என்று அறிந்து விடுவாராயின், அப்பொழுது நீங்கள் மீண்டும் முன்போலவே பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒரு வருஷம் அஜ்ஞாதவாசமும் செய்ய வேண்டுமென நிபந்தனை கூறியவாறு. இந்த நிபந்தனையைப் பீஷ்மன் முதலியோர் கொண்டாடியதற்குக் காரணம் என்னையெனில், - கீழ்த் துரியோதனன் தருமபுத்திரனை வென்ற பின்னர்த் துச்சாதனனைக் கொண்டு இராச்சியத்தை விட்டிட்டுக் காட்டுக்கே சென்று விடவேண்டுமென்று கூறியதனினும் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஜ்ஞாதவாசமும் செய்தால் மீண்டும் இராச்சியத்தைப் பெறலாம் என்ற இது, - பாண்டவர்களின் நன்மையை உத்தேசித்துக் கூறியதாயிருத்தலால் என்க. (136)

### 137. அடிமைத்தன்மையினின்று நீங்குமாறு சூதாட வேண்டுமென்று திரௌபதி கூற, தருமன் மறுசூதாட முனைதல்.

வண்டணி குழல்வி ரித்த
மாதுவே தியன்சொற் கேட்டு
தெண்டனிட் டடிமை யாங்கள்
தீர்ந்துகா னெய்தின் மீட்டும்
பண்டுபோற் பெறுவ தியாவும்
பண்பெனத் தரும னச்சொற்
கொண்டுவல் லொருக்கா லாடக்
கூறயா வருமி சைந்தார்.

(இ-ள்) வண்டு அணி-கை வளையல்களையணிந்து, குழல் விரித்த மாது - கூந்தலை விரித்த திரௌபதி, வேதியன் சொல் கேட்டு-அந்தணனுகிய துரோணுசாரியன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, தெண்டனிட்டு - நிலத்தில் வீழ்ந்து வணங்கி, யாங்கள் - நாங்கள், அடிமை தீர்ந்து-அடிமையாகுந்தன்மையினின்றும் நீங்கி, கான் எய்தின்-காடு சென்று (வருவோமாயின்), மீட்டும்-மறுபடியும், பண்டுபோல் - முன்னர் போலவே, யாவும் பெறுவது பண்பு என - அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்வது முறைமைநெறி என்று

சொல்ல, தருமன் - தருமபுத்திரன், அ சொல் கொண்டு - அந்தத் திரௌபதியின் வார்த்தையின்படியே, ஒருக்கால் - (மீட்டும்) ஒரு தடவை, வல் ஆடக்கூற - சூதாடுவதற்குச் சொல்லி அழைக்க, யாவரும்-அச் சபையிலிருந்தோர் அனைவரும், இசைந்தார்-சம்மதித் தார்கள்; (எ.று).

திருதராட்டிரன் சொற்படி இராச்சியத்தை மீளக் கொடுக்க வேண்டியிருக்க, அங்ஙனம் மீளக்கொடுத்தற்கு இசையாத துரியோதனாதியர், அந்தத் திருதராட்டிரனே திரௌபதிக்குக் கொடுத்த இரு வரங்கள் மூலம் பாண்டவர்களை அடிமையினின்று நீக்கவேண்டியிருக்க, அங்ஙனம் நீக்குவதற்கும் உடன்படாதவரே யாவராதலாலும், இனி வனத்திற்குச் சென்று குறித்த காலங் கழித்து மீண்டு வந்தபோது அடிமையாகிய உங்கட்குச் செல்வத்தில் உரிமையில்லை; நாங்கள் சம்மதித்து உங்களை அடிமையாதலி னின்றும் விடுவிக்கவில்லையே! எனத் துரியோதனாதியர் கூறுவர் களாதலாலும், திரௌபதி தங்களை அடிமையினின்று நீக்குமாறு சூதாடவேண்டுமெனக் கூறினளென்க. தருமனும் 'சூதாடி எமது அடிமைத் தன்மையைப் போக்கிக்கொள்வதே, இப்பொழுது செய்ய வேண்டிய காரியம்' என்று சொல்லி மீண்டும் சூதாடத் தொடங்க, முன்பு சூதாடும்போது சபையிலிருந்த அனைவரும் மீண்டும் சாட்சி யாகப் பார்க்க இசைந்தார்கள் என்பதாம். வண்டு - கைவளை. குழல் விரித்த மாதாயினும் கைவளையணிந்திருத்தலால், சுமங்கலி யென வற்புறுத்தியபடி, பெறுவதியாவும்-குற்றியலிகரம். (137)

**138. திரௌபதியின் மொழிப்படியே தருமபுத்திரன் கண்ணபிரானைப் போற்றித் தன் புண்ணியங்களைப் பந்தயம் வைத்து வெல்லுதல்.**

துவளிடை மொழியாற் றன்மன்
றுவரைமா தவனைப் போற்றித்
தவளவெங் கவறு வாங்கச்
சகுனியா தொட்ட மென்ன
நவையறு தன்மன் யான்செய்
நல்வினை யனைத்தும் என்று
கவறுகொண் டாடி மாயோன்
கருணையால் வென்று னன்றே.

(இ-ள்) துவள் இடை மொழியால்-ஒசிகின்ற இடையையுடைய திரௌபதியின் சொற்படியே, தன்மன் - தருமபுத்திரன், துவரை மாதவனை போற்றி - துவராகாபதியாகிய கண்ணபிரானைத் துதித்து, தவளம்-வெண்மை நிறம் பொருந்திய, வெம் - விரும்பத்தக்க, கவறு வாங்க-(சூதாடு கருவியாகிய) பாச்சிகையை எடுக்க, (அப்போது) சகுனி—, ஒட்டம் யாது என்ன-(வைக்கின்ற) பந்தயப்பொருள் எது என்று கேட்க, (அதற்கு) நவை அறு தன்மன்-குற்றமற்ற தரும புத்திரன், 'யான்செய் நல்வினை அனைத்தும்-நான் (இதுவரையிலுஞ்) செய்துள்ள எல்லாப் புண்ணியங்களுமே', என்று - என்று கூறி, கவறு கொண்டு ஆடி - பாச்சிகையை யுருட்டியாடி, மாயோன் கருணையால் - கண்ணபிரானின் திருவருளால், வென்றான் - சயித்தான்; (எ.று)—அன்றே, ஈற்றசை : தேற்றமுமாம்.

மாயோன் கருணையால் வென்றானென்றதால், கடவுளருளை முன்னிட்டுக் கொண்டு ஒரு காரியஞ்செய்பவர் வெற்றி பெறுவ ரென்பது பெறப்படும். சகுனி வைத்த ஒட்டம் - பஞ்சபாண்டவர் திரௌபதி இவர்களின் அடிமை. தருமன் வைத்த ஒட்டம் - தனது புண்ணியம். கண்ணபிரானருளால் தருமன் சூதாடி வென்றனன். இடை - இடையையுடையாளுக்குச் சினையாகுபெயர். மாதவனைப் போற்றுதலாவது - அவனது நாமங்களையேத்தித் தியானித்தல். வெங்கவறு - 'வெம்மை வேண்டல்' (தொல்: சொல்: உரி: 38).

(138)

### 139. தம்பிமார் முதலியவருடன் தருமபுத்திரன் பெரியோரை வணங்கி விடைபெற்றுக் காட்டிற்குச் செல்லுதல்.

வெற்றிகொள் தருமன் மைந்தர்
  வேள்விமா தனுச ரோடு
மற்றவ ரோடு மேலோர்
  மலர்ப்பதம் வணங்கி யாசி
பெற்றவை தணந்து கங்கை
  பெருகுநா டகன்று கானம்
உற்றன னகரி மாக்க
  ளுளம்பொரு திரங்கிச் சூழ.

(இ-ள்) வெற்றிகொள் தருமன் - (மறுசூதில்) சயித்த தரும புத்திரன், மைந்தர் - (தமது) புதல்வர்கள், வேள்வி மாது -

யாகாக்னியினின்று தோன்றிய திரௌபதி, அனுசரோடும் - தம்பியர் நால்வர் இவர்களோடும், மற்றவரோடும் - மற்றும் தன்னைச் சேர்ந்த பரிவாரங்களுடனும், மேலோர் - (திருதராஷ்டிரன், வீடுமன், முதலியவர்களான) பெரியோரது, மலர்ப்பாதம் வணங்கி - மெல்லிய மலர்போன்ற திருவடிகளை நமஸ்கரித்து, ஆசி பெற்று - (அவர்களது) நல்வாழ்த்துக்களைப் பெற்று, அவை தணந்து - சபையை விட்டு நீங்கி, கங்கை பெருகு நாடு அகன்று - கங்காநதி பாயப்பெற்ற குருநாட்டினைக் கடந்து, நகரி மாக்கள் உளம் பொருது இரங்கிச் சூழ - அத்திநபுரியிலுள்ள ஜனங்கள் (அவர்கள் பிரிவினுக்கு) மனம் பொறுமல் ஏங்கிச் சுற்றிலும் வர, கானம் உற்றனன் - காட்டிற்குச் சென்றனன்; (எ.று).

தருமபுத்திரன் பெரியோரிடத்து விடைபெற்று, விதுரனது விருப்பத்தின்படியே தாயான குந்திதேவியை அவ்விதுரன் மாளிகை யிலேயே விட்டிட்டு, தானும் தன் தம்பியர் நால்வரும், தமது மனைவியான திரௌபதியும், தமது புரோகிதராகிய தௌமிய முனிவருமாகக் காட்டிற்குச் சென்றனனென்ற வரலாற்றை முதனூலால் அறியலாம். மைந்தர் - உபபாண்டவர் ஐவர்: அவர்களாவார்- ப்ரதிவிந்த்யன், ஸுதஸோமன், ச்ருதகீர்த்தி, ஸதாநீகன், ச்ருத ஸேநன் என்பவர். மலர்ப்பதம் - உவமைத் தொகை. (139)

### 140. அப்பொழுது துட்டசதுட்டர்கள் தவிர மற்றையாவரும் வருந்துதல்.

நச்சராத் துவச னாதி
நால்வரு மன்றி மற்றோர்
பிச்சராய் மதிம யங்கப்
பின்றொடர் சனங்க ளோடு
மச்சரா தியர்வ ணங்கு
மலரடி கன்றச் சென்றான்
இச்சபா பர்வச் செய்யு
ளிருசதத் தைந்த தாமே.

(இ-ள்) நச்சு அரா துவசன் ஆதி நால்வரும் அன்றி - விஷம் பொருந்திய நாகக்கொடியோனாகிய துரியோதனன் உள்ளிட்ட (துட்டசதுட்டர்கள்) நால்வர்களைத்தவிர, மற்றோர் - ஏனைய அரசர்கள் அனைவரும், பிச்சராய்-பித்துப்பிடித்தவராய், மதி மயங்க- புத்தி தடுமாறினவர்களாய் இருப்ப, பின் தொடர் சனங்களோடும்- (தமக்குப்) பின்னே (பிரிய மனமில்லாமல்) தொடர்ந்து வருகின்ற

நகரத்துச் சனங்களோடும், (தருமராசன்) மச்சர் ஆதியர் வணங்கும்-மச்ச தேசத்து விராட மன்னர்போன்ருேர் பணியும், மலரடி - தாமரைமலர்போன்ற அழகிய பாதங்கள், கன்றச் சென்ருன் - (ஊன்றுதலாற்) செந்நிறமடைய நடந்து சென்ருன் : (இங்ஙனம்) இ சபா பர்வச்செய்யுள் - இந்தச் சபாபருவத்தின் மொத்தச் செய்யுளின் எண்ணிக்கை, இரு சதத்து ஐந்தது ஆம் - இருநூற்றைந்தாகும்; (எ.று) ஏ-ஈற்றசை.

'மலரடி கன்ற' என்றது-இதற்குமுன் இவ்வாறு நடந்துசெல்லும் பயிற்சியில்லாமையால் பாதங்கள் செந்நிறமடைந்தன என்று தெரிவித்தற்கென்க. விராடராசனது நாடாகிய மச்ச தேசத்தின் இராசதானியிலே அவ்விராடராசனைச் சார்ந்து பாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ்செய்தனரென்பதற்குத் தோற்றுவாயாக 'மச்சராதியர் வணங்கும்' என மச்சரைச் சிறப்பாக எடுத்தோதியது. பருவச் செய்யுளின் முழுத்தொகை கூறியது - இடைச்செருகல் நீக்குதற்கென்க. (140)

சூதுபோர்ச்சருக்கம் முற்றிற்று.

சபா பருவம் முற்றும்.

சுபம்.

# சபா பருவத்தின் அபிதான சூசிகையகராதி


அசுவத்தாமன் :—துரோணன் மகன், சூது-49.

அசோதை —கிருஷ்ணனை வளர்த்தவள், இராய-1

அருச்சுனன் —கவிக் கொடியோன், இராய-16; மகவான் மகன், 17; விதுகுலத்தவன், 17; வடக்குத் திக்கு விசயஞ் செய்தவன், 25, 28-31; உத்தர குருக்களைச் செயித்து விசயத் தம்பம் நாட்டினன், 30; இராயசூய வேள்வியில் சந்தனம் ஈதல் இவன் பொறுப்பு, 44; சாபப் போரலாது உஞற்றிடான், சூது-26; சுஞசி மகன், 100; சபதம் கூறியது, 124.

இந்திரன் —இவன் சிறப்பு, இராய-7; இவன் சபையளவு-6, அதன் பெருமை, 7.

இரணியன் —வைகுந்தத்துத் துவாரபாலகருள் ஒருவன், துருவாசமுனி சாபம் பெற்றன், இராய - 57, 58.

இரணியாக்கன் —வைகுந்தத்துத் துவாரபாலகருள் மற்றொருவன், இராய - 58.

இராவணன் —வைகுந்தத்துத் துவாரபாலகன் : துருவாசமுனி சாபம்; பெற்றவன்: இராய - 57, 59.

உலூகன் —சகுனியின் மகனுகிய இவனைக் கொல்வதாக நகுலன் சபதமிட்டான், சூது - 124.

கஞ்சன் —கம்சன்: துவாரபாலகனுயிருந்து துருவாசரால் சாபம் பெற்றவன், இராய-59. கண்ணனுக்கு மாமன், அவனுல் கொல்லப்பட்டவன், இராய - 46: சூது - 8.

கடோற்கசன் —வீமன் புதல்வன்; இலங்கையில் அரக்கர் கலங்கப் பொருது வீடணன்பாற் கவர்ந்து திறைகள் கொணர்ந்தான், இராய - 35.

**கண்ணபிரான்** —பூபாரந்தவிர்த்திட்டவன்; வசுதேவன் தேவகி சுதன்; நந்தன்மனமுவப்ப அசோதை வளர்க்க வளர்ந்தவன்; ஆயர் அகத்து அளையும் பாலும் பூங்கரத்தாற் கரந்து அருந்தியவன்; பொதுவியர் முன் நடித்தவன்—இராய-1; முராரி, 5; சரா சந்தனைக் கொன்றல் யாகம் இயற்றிடுதல் எளிது என்றான், 15; கருடக்கொடியோன், 16; எது குலத்தவன், 17; சராசந்தனுக்குப் பயந்து வடமதுரை விடுத்துத் துவரையில் ஒளித்தவன், 18; சராசந்தனைக் கொல்லுதற்கு வீமனுக்குக் குறி காட்டியவன்,21; சராசந்தன் வரலாறு கூறினன், 22-24; தருமன் திக்குவிசயஞ்செய்து பெற்ற திறைநிதி காட்ட மகிழ்ந்தவன், 40; மாமனாகிய கம்சனைக் கொன்றவன்; பூதனையைச் செற்றான்; இந்திர பூசையைத்தான் கொண்டனன்; வெற் பெடுத்திந்திரசாலஞ் செய்தவன்; பசு மேய்ப்ப வன்; அளைக்கரந்துண்டு ஆய்ச்சியரால் அடிகள் பட்டவன், 49; சிசுபாலனது நூறு பிழைகளைப் பொறுத்தான், 53; சிசுபாலனைச் சக்கரத்தால் தலை துணித்தனன், 56; துவாரகைமீளல், 60; மாமனையடுமாலாவன், சூது-8; குல்லைத்தாமன், 8; வற்கலைமாதவர்க்கரிய மாதவன், 116; துவரைப்பதிவாசன், 117; நாகம் மூலமென முறையிடக் காத்தவன், 118.

**கர்ணன்** —இராயசூயவேள்வியில் தானம், தியாகம் இரண்டிலும் பொறுப்பு, இராய-44, வெய்யவன்சேய், சூது-1; அங்கர்கோன், 3; தரணி (சூரியன்) மகன், 108; சொல்லால் பாண்டவர்களைப் பல கால் 'துணிப்பன்' என்பவன், 124.

**காசிபன்** —பிரகலாதன் வழக்குத் தீர்க்க இவரைக் கேட்டனன், சூது. 112.

**காந்தாரி** —கண்புதைத்த அன்னை, சூது-51; திரௌபதிக்கு மாமியாவள், 86; இருகணிலான் இல்லவள், 87.

**கிருபன்** —ஆதிகுரு, சூது-49.

**குந்தி** —பாண்டவர் தாய், இராய. 39; கண்ணன் இவள்டி பணிதல். 39.

**குந்திபோசன்** —வேள்விகாணிய வந்தான், இராய. 40.

**குபேரன்** —இயக்கர்கோமான், இருநிதியுடையோன்; சபைச் சிறப்பு, இராய. 8.

**கும்பகர்ணன்** —இராவணன் தம்பி: வைகுந்தத்துத் துவார பாலகரில் ஒருவன், துருவாசமுனி சாபம் பெற்ற வன்: இராய-57, 59.

**சகதேவன்** —சராசந்தன் மகன்; இவனை மூவரும் (கண்ணன் வீமார்ச்சுனர்) அரசாக்கினர், இராய - 24. வேள்வி காணவந்தான், 41.

**சகாதேவன்** —தெற்குத்திக்குவிசயஞ் செய்தவன், இராய - 25, 33-36; எழுகலிங்கம் வென்றவன். 34; வேள்வியில் வெற்றிலைபாக்கு ஈதல் இவன் பொறுப்பு, 44. மத்திரை மைந்தன், சூது - 30; சகுனியைக் கொல்வேனென்ற சபதம், சூது-124

**சகுனி** —இசை மங்குபவன், சூது-3; சூதால் பறிப்பதே உபாயம் என்றவன், 12; வல்லாடுதல் நன்மை என்றவன், 56; சௌபலநாமன்; 63; அரசுக்கு இவனை மறலியெனல், 71.

**சண்டகௌசிகன்**-இவன் அளித்த மாங்கனியைப் பிருகத்ரதன் தான் மணந்த இருமனைவியர்க்கும் பகிர்ந்து கொடுத்தான் : எனவே, சராசந்தன் இவனரு ளால் தோன்றியவனுவன், இராய-23.

**சராசந்தன்** —மகததேசத்துக் கிரிவிரச நகரினின்ருள்பவன், இராய-16; நரமேதம் ஆற்றிடுவான் மன்னரைச் சிறையிலடைத்தான், 15; அவனுக்குக் கூற்று வன் வீமன் ; 15 ; பிளவுபட்ட அவனுடைய உடற்கூறுகள் மீண்டும் பொருந்திவந்து எதிர்த் தல், 20; உடற்கூறுகளை வீமன் மாறியிட சரா சந்தன் இறந்தான். 21; பிருகத்ரதன் மகன், அசுராம்சமுடையவன், 22; இவன் பிறந்தபோது உண்டான இரு உடற்கூறுகளையும் பொருத்தி யவள் சரை என்னும் அரக்கி, அதனுல் இப் பெயர் பெற்றனன், 23-24;

**சரை** —அரக்கி; இவளால் உடற்கூறுகள் பொருத்தப் பட்டுப் பிறந்தவன் சராசந்தன் ; இப்பேரிட்ட வளும் இவளே; இராய-23, 24.

**சல்லியன்** —மத்திரதேசத்தரசன், வேள்வி காணிய வந்தான், 60; இவன் மேல் கண்ணன் படையெடுத்தான், சூது-8.

**சிசுபாலன்** —(சேதிநாட்டரசன்) கண்ணனை இகழ்ந்தனன், இராய-48-49; கண்ணனுக்கு அத்தைமகன், 52; (தாய் சுருதசிரவை: தகப்பன்-தமகோஷன்), -52; கண்ணன் விடுத்த சக்கரத்தால் தலை துணிந்துவிழ, உயிர் சோதியாய்க் கண்ணனது திருவடியிற்சேறல், 56. வைகுந்தத்துத் துவார பாலகருள் ஒருவன் : துருவாசமுனி சாபம் பெற்றனன், 57, 59.

**சித்திரரதன்** —விஞ்சையன், விசயனுக்கு ஐந்நூறு குதிரைகளை மகிழ்ந்து அளித்தவன், இராய-41; வேள்வி காணவந்தவன், 41,

**சித்திரவாகனன்** —வைகைத்துறைவன் : மக்களோடு வேள்வி காண வந்தவன், 40.

**சுருதசிரவை** —சிசுபாலன் தாய், கண்ணனுக்கு அத்தை, 52, 53.

**செனமேசெயன்** —பஞ்சவர்மேற்செயல் உரைக்கும்படி வைசம் பாயனனைக் கேட்டனன், இராய-2.

**தருமன்** —(பாண்டுமன்னன் சொன்னதாக நாரத முனிவன் தெரிவித்தபடி) இராயசூயயாகம் ஏழுநாள் செய் தான், இராய-45; யாகமுடிவில் அவபிருத ஸ்நானம் செய்தான், 46; சோடசதானங்கள் வழங்கினன், 46, வேள்விமுடித்துச் சம்பிரமத் தோடு வீற்றிருந்தான், 61; துரியோதனுதி யார்க்குச் சிறப்புச் செய்தான்; 63; சிரித்த இருவரையும் தெழித்தல், 65. சத்தியவிரதன், சூது-11; சூதாடுதலின் குற்றங் கூறினன், 23; பயந்தவன் சொற்புரந்திடல் நன்னிமித்தம் என்ற வன், 31; முரசகேது, 47, 84, 115; காலன் சேய், 51, 54; சூது விழைதல் புகர் என்றனன், 55; கொடுமையெனும் முறை பார்த்தழியும் நிருபன், 99; துல்லிய சொல்லினன், 109; மெய் யுடையான், 127; நவையற்றவன், 138; மச்சராதியர் வணங்கும் மலரடியுடையான், 140.

திருதராட்டிரன் —பஞ்சவர்க்கு மண்டபங்காண வரும்படி ஆவணம் எழுதியவன், சூது-21; போர்த்த கண்ணினன், 43; விரகின் நெஞ்சினன், 45; புலனிலாக் கன்னன் என்ன இருந்தவன், 69; கொடிய வர்க்கும் கோவாவன், 95.

